புலியூர்க் கேசிகன்
தெளிவுரை

நளவெண்பா

புகழேந்திப் புலவரின்

நளவெண்பா

புலியூர்க் கேசிகன்

தெளிவுரையுடன்

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை-1.

முதற் பதிப்பு : ஜூலை 1961.
இரண்டாம் பதிப்பு : நவம்பர், 1963.
மூன்றும் பதிப்பு : அக்டோபர், 1966.
நான்காம் பதிப்பு : ஜனவரி, 1970.

விலை ரூபா : 2-00
வெளியூரில் : 2-15

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை 14,

நளவெண்பா
தெளிவுரை

அமைகின்ற மனித வாழ்க்கையானது, அப்படியே ஒரே சீராகச் செம்மையுடன் சென்றுகொண்டிருக்கின்ற இயல்பினது அன்று. இதனிடையே, ஏற்றத் தாழ்வுகள் பல நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வந்துநேர்கின்றன. ஏற்றங்களால் இறும்பூது எய்திக் களிக்கின்ற பலரும், தாழ்வுகளை அடைய நேரும்போது பெரிதும் துயருற்று வாடுகின்றனர். வாழ்வு தாழ்வு என்பவை வாழ்க்கையின் நியதியே என்பதைத் தெளிவாக வகுத்துக் காட்டி, தாழ்வுற்ற போதும் கலங்காது வாழ்வின் மலர்ச்சியை எதிர்நோக்கிச் செல்லுகின்ற மனநிலை மக்களிடையே வளர்தல் வேண்டும். வாழ்வின் செம்மைக்கு உதவும் இந்த உண்மையை மிகவும் அருமையாக எடுத்துச் சொல்லும் சிறப்புடையது நளனின் கதையாகும்.

சூதிலே நாடும் நல்வாழ்வும் தோற்றுக், காட்டு வாழ்வினராகி அல்லலுற்று, முடிவில் கண்ணனைத் தூதனுப்பியும் வாழ்விற்கு வகைகாணாது, போரிட்டுப் பெறுதலன்றி வேறு வகையில்லை என்னும் நிலையில் வருத்தமுற்றிருக்கின்றனர் பஞ்ச பாண்டவர்கள். அவர்களுள், அருச்சுனன் பாசுபதம்

பெற்று வருவதற்குச் சென்றிருக்கின்ருன். போரைப் பற்றிய கவலையுடன், தன்னுடைய அணுக்கர் சூழ அமர்ந்திருக்கும் தருமனிடம் வியாசர் வருகின்ருர். தருமனைத் தேற்றுமுகத் தான் நளனது வரலாற்றையும் கூறுகின்ருர். அதனுல் தருமன் தெளிவு பெறுகின்ருன். இங்ஙனம் இந்தக் கதையின் தோற்றம் உரைக்கப்படும். தளர்ந்த தருமனுக்குத் தெளிவு தந்த இந்த வரலாறு, தளர்கின்ற பலருக்கும் தெளிவுதரும் என்பது உண்மையாகும்.

மேலும், கலியாகிய சனியின் தசையும், தசாபுத்தியும் நடைபெறுங் காலத்தில் இந்த நளசரிதையைப் படிப்பதனுல், வந்துறும் துயரங்கள் பலவும் எளிதாக விலகி நன்மை ஏற் படும் என்பதும், நம் முன்னேர்களது நம்பிக்கையாகும்.

இவ்வாறு, மக்களுக்குப் பல நல்ல நீதிகளை எடுத்துக் கூறு கின்ற இந்தக் கதையின் சிறப்பினை உணர்ந்த சான்ருேரான ஹர்ஷகவி என்பவர், இதனைச் சுவைபட 'நைஷதம்' என்னும் பெயருடன் வடமொழியிற் காவியமாக்கி உதவினர்.

நம் பண்டைய தமிழ்ச் சான்ருேர்கள், 'பிறநாட்டு நல்லறிஞர் நூல்களைத் தமிழிலே அமைத்துத் தருதல் வேண்டும்' என்னும் சிறந்த குறிக்கோளினைக் கொண்டிருந்த வர்கள். வடமொழியில் சுவைகனிந்த காவியமாகத் திகழ்ந்த 'நைஷதத்'தையும் அவர்கள் தமிழில் தருதற்கு முற்பட்டனர். அந்தத் தமிழாக்கத்தை வெண்பா யாப்பினுலே செய் தமைத்துத் தமிழர் உவக்கத் தந்த அருளாளர் புகழேந்திப் புலவர் என்னும் சான்ருேர் ஆவர்.

புகழேந்தியாரின் நளவெண்பா தமிழ்ச்சுவை கனிந் தொழுகும் நறுந்தேனுகித் தமிழறிஞரின் போற்றுதலைப் பெற்றுச் சிறந்தது. 'வெண்பாவிற் புகழேந்தி' என்ற புகழை யும் அதனை ஆக்கியோருக்குத் தந்தது.

தொண்டைநாட்டின் பொன்விளைந்த களத்தூரிலே பிறந்தவர் புகழேந்தியார். பாண்டியன் வரகுணனுக்கு

மிகவும் அன்புடையவராகி அவன் அவையினை அழகு செய்த துடன், அவன் செல்வ மகளுக்கு ஆசிரியராகவும் திகழ்ந்தவர். அவள் சோழனை மணந்துகொள்ள, அவளுடைய ஆராத விருப்பத்திற்கு இசைந்தவராகிச் சோனுடு போந்து, சோழனது அவைக்கண்ணும் வீற்றிருந்தவர்.

புகழேந்தியார் வாழ்ந்த காலம். தமிழின் பொற்கால மாகவே கூறத்தகும் ஓர் ஒப்பற்ற காலமாகும். கவிராட்சத ரான ஒட்டக்கூத்தரும், கவியரசரான கம்பரும், இடைக்கால ஔவையாரும், மற்றும் புலவர் பெருமக்களும் விளங்கித் தமிழின் சீர்மையை அந்நாளிற் பெருக்கி வந்தனர். சோழ னும் தமிழன்பினனுகத், தமிழ் அறிந்தாரைப் போற்றும் பண்பினனுகத் திகழ்ந்தனன். இதனுல், தமிழ் மணம் எங்கும் பரவித் தமிழ்நாட்டை இன்புறுத்திக் கொண் டிருந்தது. அந்தப் பொற்காலத்தே எழுந்த புகழேந்தி யாரின் நளவெண்பாவும், தன்னிகரற்ற தமிழமுதைத் தமிழர்க்கு நிலையாக ஊட்டிவரும் ஓர் ஒப்பற்ற கருவூலமாக மிளிர்கின்றது எனலாம்.

இவர் சிலகாலம் மள்ளுவ நாட்டைச் சார்ந்த சந்திரன் சுவர்க்கி என்பானின் ஆதரவில் வாழ்ந்திருந்தபோது, அவன் கேட்டுக் கொள்ளச் செய்ததே இந்த நூல் என்பார்கள். தம்பால் அன்புடைய சந்திரன் சுவர்க்கியைத் தம் நூலின் கண் தக்க இடங்களில் அமைத்து, இவர் பாடியிருப்பதனை யும் நாம் காணலாம்.

நளவெண்பாவின் நயத்தை நாட்டவர் பலரும் அறிந்து இன்புறவேண்டும் என்ற கருத்தினுல், தமிழ் ஆன்ருேர்கள் பலர், பெருமுயற்சியுடன் அச்சிட்டுப் பரப்பி வந்தனர். அவர் களுள் திரு. டி. சீனிவாசராகவாச்சாரியர் அவர்கள், நல்ல பதவுரையுடனும் திரு. சி. கெஸ்ட் என்பாரின் ஆங்கில ஆக்கத்துடனும் வெளியிட்டார்கள். அதன்பின், வித்துவான் ம. மாணிக்கவாசகம் பிள்ளையவர்களின் விருத்தியுரைப் பதிப் பும் வெளிவந்தது; மற்றும் பலரும் பல பதிப்புக்களைக் கொணர்ந்தனர்.

தமிழ் மாணவர்களாலும், அறிஞர்களாலும் போற்றிக் கற்கப்படுகின்ற இந்த நளவெண்பாவிற்கு ஒரு தெளிவுரை அமைப்பினைச் செய்து, குறைவான விலையிற் கிடைக்கும்படியாகச் செய்தல் வேண்டுமென்று விரும்பினேன். அந்த விருப்பத்தால் இதன் முதற்பதிப்பு ஜூன் 1961 இல் வெளிவந்தது.

தமிழன்பர்கள், இந்தத் தெளிவுரை அமைப்பினை விரும்பி வரவேற்பார்கள் என நம்புகின்றேன். இந்த நான்காம் பதிப்பினைத். தங்கள் வெளியீடாக வெளியிட்டு உதவும் பாரி நிலையத்தாருக்கு என் அன்பும் நன்றியும் உரியன.

புலியூர்க் கேசிகன்

உள்ளுறை

பக்கம்

பாயிரம் ... 9

1. சுயம்வர காண்டம்

1. கதை பிறந்த கதை ... 15
2. காதல் பிறந்தது ... 19
3. அன்னம் விடு தூது ... 30
4. சுயம்வரச் செய்தி ... 35
5. இந்திர தூதுவன் ... 42
6. நோய் மிகுந்த நெஞ்சம் ... 51
7. சுயம்வரக் காட்சி ... 64
8. மணமும் மகிழ்வும் ... 78

2. கலி தொடர் காண்டம்

1. கண்கவர் காட்சிகள் ... 85
2. ஊடலும் கூடலும் ... 92
3. மாவிநீத வாழ்வு ... 95
4. கலிமகன் சேர்தல் ... 97
5. சூதினல் தோற்ருன் ... 100

6. நாடகன்ற கோலம் ... 101
7. சிதறிய குடும்பம் ... 116
8. ஆடை அரிந்த செயல் ... 117
9. சூழ்ந்த பேரிருள் ... 121
10. பிரிகின்ற கொடுமை ... 127
11. துணையிழந்த தோகை ... 131
12. வேடன் எரிந்தான் ... 137
13. சேதிநாடு சேர்ந்தாள் ... 141
14. தேடிவந்த அந்தணன் ... 145
15. பிறந்தகம் அடைந்தாள் ... 149

3. கலி நீங்கு காண்டம்

1. நாகம் அளித்த பரிசு ... 153
2. அயோத்தி வாசம் ... 159
3. தேடிய மறையோன் ... 164
4. இரண்டாம் சுயம்வரம் ... 166
5. தேர் சென்ற சிறப்பு ... 169
6. வீமன் நகரில் ... 172
7. மக்களும் தந்தையும் ... 174
8. ஒன்றுபட்ட குடும்பம் ... 179
9. வாழ்வு பெற்றான் ... 184
வெண்பா முதற்குறிப்பு அகராதி ... 190

நளவெண்பா

பாயிரம்

கடவுள் வணக்கம்

விநாயகர்

நேசர் இதங்கூர நிலவலயம் தாங்குநளன்
மாசரிதங் கூற வருந்துணையாம் — ஈசன்
கரியா னனத்தான் கருதுபுகழ் பூண்ட
கரியா னனத்தான் கழல். 1

ஈசனாகிய சிவபெருமானும், கரியனாகிய திருமாலும், அன்னவாகனனாகிய பிரமனும் கருதிப் போற்றுகின்ற பெரும் புகழினைக் கொண்டிருப்பவன், யானைமுகத்தவனாகிய விநாயக பெருமான். அவன்பால் அன்புடையவர்களுக்கு நன்மைகள் மிகுதியாக வேண்டும். அதனைக் கருதி, இந்த மண்ணுலகத்தினை ஒரு காலத்தே தங்கி அரசியற்றியவனாகிய நளமகராசனின் பெருமைமிக்க வரலாற்றினைக் கூறப்போகின்றோம். அதற்கு, அந்த விநாயகப் பெருமானின் வீரக்கழல் விளங்கும் திருவடிகளே எமக்குத் துணையிருக்குமாக! [நிலவலயம்-நில மண்டிலம். வலயம்-வட்டம் இதங்கூர்தல்-நன்மை மிகுதிப் படுதல்.]

நம்மாழ்வார் வணக்கம்

நேசர் இதங்கூர நிலவலயம் தாங்குநளன்
மாசரிதம் கூற வருந்துணையாம் — பேசரிய
மாமகிழ்ம்மா றன்புகழாம் வண்தமிழ்வே தம்விரித்த
மாமகிழ்மா றன்தாள் மலர். 2

எடுத்துச் சொல்லுவதற்கும் அருமையானது; திருமகள் மகிழ்ச்சி கொள்ளுகின்ற திருமாலினது புகழாகியது; வளவிய தமிழ்வேதமாம், திருவாய்மொழி. அதனைப் பாடியருளியவர், பெருமை பொருந்திய மகிழமலர் மாலையினை உடையவராகிய 'மாறன்' எனப்படும் நம்மாழ்வார். அன்பர்கள் இன்புறும் வண்ணம், நிலமண்டிலத்தினைத் தாங்கிய நளனின் பெருமை மிக்க சரித்திரத்தினை எடுத்துரைக்க, அந்த நம்மாழ்வாரின் திருவடிமலர்கள் எமக்குத் துணையாய் இருக்குமாக.

மா-திருமகள்; பெருமை பொருந்திய. மூன்றுவது அடியில் வரும் 'மாறன்' என்பதை, மால்+தன் எனப் பகுத்துப் பொருள் கொள்க. மாறன்-நம்மாழ்வாரின் திருப் பெயர்களுள் ஒன்று; தீய வினைகளுக்கு மாறுபட்டவர் என்பது பொருள்.

திருமால் வணக்கம்

ஆதித் தனிக்கோலம் ஆனான் அடியவற்காச்
சோதித் திருத்தூணில் தோன்றினன்—வேதத்தின்
முன்னின்றான் வேழம் முதலே என அழைப்ப
என்னென்றான் எங்கட் கிறை. 3

ஆதிநாளிலே ஒப்பற்ற பன்றி வடிவினனாகி இவ்வுலகைக் காத்தவன் ; அடியவனாகிய பிரகலாதாழ்வானின் பொருட் டாக ஒளிமிக்க அழகிய தூணிடத்தே நரசிங்கமாக முந்நாள் வெளிப்பட்டவன்; வேதங்களின் முதன்மையான பிரணவப் பொருளாக அமைந்து நிலைபெற்றிருப்பவன்; களிறாகிய கஜேந்திரன் 'ஆதிமூலமே' என்று அழைக்கவும், 'என்னவோ' எனக் கேட்டுவந்து, அவனை முதலைப் பிடியினின்றும் காத் தவன் திருமால்; அத்தகைய கருணைகொண்டோனாகிய அவனே எமக்கும் இறையாவான்; அவ்னை யாம் வணங்குவோமாக.

கோலம்-பன்றி; வராகவதாரத்தைக் குறித்தது. வேதத் தின் முன் நின்றான்-வேதங்கட்கும் முற்படத் தானே அவற்றின் ஆதியாய் நின்றான் எனவும் உரைக்கலாம்.

சிவ பெருமான்

கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை
உலாவு சடைமேல் உறையும்—நிலாவை
வழியவார்த் தாலன்ன மாநீற்றர் நாகம்
கழியவார்த் தார்நமக்கோர் காப்பு. 4

தோகையுடைய மயிலினைப் போன்ற நீலவண்ணச் சாயலினை உடையவள் உமையவள்; அவள் வீற்றிருக்கின்ற ஒரு பாதியினை உடையவர் சிவபெருமான். கங்கையானது பாய்ந்தோடுகின்ற தம் சடாபாரத்தின் மேலாகத் தங்கியிருக்கின்ற நிலவின் ஒளி வெள்ளத்தினைத், தம் திருமேனியிலேயும் வழிய வார்த்துக்கொண்டாற்போல விளங்கும் திருவெண்ணீற்றினை அணிந்திருப்பவர் அவர். நாகப்பாம்புகளை மிகுதியாகத் தம் ஆபரணங்களாக அணிந்திருப்பவரும் அவர். அத்தகைய சிவபெருமானும் நமக்கு இணையற்ற காப்பாக விளங்குவாராக.

கலாபம்-தோகை. கலாப மயில்-பார்வதி தேவியைக் குறித்தது. கழிய-மிகுதியாக.

முருகப் பிரான்

நீல நெடுங்கொண்மூ நெற்றி நிழல்நாறிக்
காலை இருள்சீக்கும் காய்கதிர்போல்—சோலை
மணித்தோகை மேல்தோன்றி மாக்கடல்சூர் வென்றோன்
அணிச்சே வடியெம் அரண். 5

நீலவண்ணத்துடன் நெடுகப்படர்ந்திருக்கின்ற மேகங்களின் உச்சியிலே ஒளிபரப்பிக் கொண்டவனாகக், காலைப் பொழுதிலே எழுகின்ற, இருளினைப் போக்குகின்ற, வெம்மையினையுடையவன் கதிரவன், அவனைப்போலச் சோலையிடத்ததான நீலவண்ணத் தோகைமயிலின்மேல் எழுந்தருளிச் சென்று, பெருங்கடலிடத்தே சூரனை வெற்றிகொண்டோன் முருகப்பிரான். அவனுடைய அழகிய சிவந்த திருவடிகள் எமக்குப் பாதுகாவலாகும்.

மணி-அழகும் ஆம்; நீலமும் ஆம். சூர்-சூரபன்மன்! அவன் கடலிடை மாமரமாக நின்றபோது வென்றதனைக் குறித்தது இது. அரண்-பாதுகாவல்; இடையூறுகளினின்றும் பாதுகாப்பது என்பது கருத்து.

அவையடக்கம்

வெந்தறுகண் வேழத்தை வேரிக் கமலத்தின்
தந்துவினல் கட்டச் சமைவதொக்கும்—பைந்தொடையில்
தேன்பாடும் தார்நளன்றன் தெய்வத் திருக்கதையை
யான்பாடல் உற்ற இது. 6

பசுமையாகத் தொகுக்கப்பெற்ற மலர்க் கண்ணிகளிடத்தே வண்டினம் பாடிக்கொண்டிருக்கும் தாரினையுடையோன் நளன். அவனது தெய்வத்தன்மை பொருந்திய அழகிய கதையினை யான் பாடுவதற்கு ஈடுபட்டேன். இது, வெம்மையான ஆற்றலுடைய ஒரு வேழத்தினை, மணமுள்ள தாமரையின் நூலினலே கட்டுவதற்கு முயல்வதுபோன்ற அறியாமையுடைய செயலாகும். [எனவே, ஆன்றோர் பிழை காணிற் பொறுப்பாராக என்பது கருத்து]

நூலாசிரியர்

பாரார் நிடத பதிநளன்சீர் வெண்பாவால்
பேரார் புகழேந்தி பேசினன்—தாரார்
செழியனையும் சென்னியையும் சேரத் திறைகொள்
மொழியின் சுவையே முதிர்ந்து. 7

வேப்பந் தாரினை அணிந்தோனாகிய பாண்டியனையும்; ஆத்தி மாலையினை அணிந்தோனாகிய சோழனையும், ஒருசேரத் திறைகொள்ளும் தமிழ்மொழியின் சுவையினலே முதிர்ச்சியுடையதாகப், பூவுலகிற் சிறந்த நிடதநாட்டு மன்னவனாகிய நளனின் சிறப்பினை, வெண்பா யாப்பினலே, கீர்த்தி வாய்ந்தோராகிய புகழேந்திப் புலவர் எடுத்துக் கூறினர்.

புகழேந்தி, பாண்டியன் அவையிலும் சோழன் அவையிலும் தம் புலமையினற் சிறப்புற்றவர். அது குறித்து, அவர் மொழியின் தகைமை சோழபாண்டியரைத் திறைகொள்ளும் சிறப்புடையதாகும் என்கிருர் கவி. இதனைப் பாடியவர் புகழேந்தியார் அன்று; அவர் காலத்தவராகிய மற்ருெரு புலவரே பாடியிருக்க வேண்டும்.

1

சுயம்வர காண்டம்

1. கதை பிறந்த கதை

தருமன் வாட்டமுடன் இருந்தான்

பாண்டவரின் முன்தோன்றல் பார்முழுதும் தோற்றொருநாள்
ஆண்டகையே தூதுவனுய்ச் சென்றவனி—வேண்ட
மறுத்தான் இருந்தானை மண்ணெடும்போய் மாளப்
பொறுத்தான் இருந்தான் புலர்ந்து. 8

பஞ்சபாண்டவர்கள் ஐவருள்ளும் முதற்கண் தோன்றியோன் தருமபுத்திரன். அவன், தன் நாடு முழுவதையும் சூதினுலே தோற்றுவிட்டான்; ஆண்களுள் தலைசிறந்தோரினுகிய கண்ணபிரானே அவன் தூதுவனுகத் தேியாதனானிடம் சென்முன். சென்று, இழந்த பூமியைத் தருமாறு வேண்டினுன். அவன் வேண்டவும், அதற்கு மறுத்தவனுயினுன் துரியோதனன். அவனுடைய பெரிய படையெல்லாம் அவனுடைய நாட்டினேடும் அவனைவிட்டுப்போய், அவனும் மாண்டுபோகுமாறு, போர்நிகழ்த்தும் பொறுப்பினையும் மேற்கொண்டான் தருமபுத்திரன். அங்ஙனமாகிய அவன், ஒருநாள் மிகவும் வாட்டமுற்றவனுகக் காட்டிடத்தே இருந்தான். [பொறுத்தான்-பொறுப்பினை மேற்கொண்டான்; தருமபுத்திரன்; பொறுமையாளனும் ஆம்.]

வரும் தகையோர் கண்டனர்

நாட்டின்கண் வாழ்வைத் துறந்துபோய் நான்மறையோர்
ஈட்டங்கள் சூழ இருந்தானைக்— காட்டில்
பெருந்தகையைக் கண்டார்கள் பேரெழில்தோள் வேந்தர்
வருந்தகையர் எல்லோரும் வந்து. 9

தன் நாட்டினிடத்தே வாழ்ந்த அரசவாழ்வினைக் கைவிட்டுச் சென்று, நான்கு வேதங்களையும் பயில்வோரான முனிவர் கூட்டங்கள் தன்னைச் சூழ்ந்திருக்க அமர்ந்திருந்த பெருந் தகுதியுடையோனுகிய அந்தத் தருமபுத்திரனைப் பேரழகு பொருந்திய தோள்களை உடைய மன்னர்களுள்ளே வரத்தகும் தன்மையுடையோர் எல்லாரும், அக்காட்டினிடத்தே வந்து கண்டார்கள். ['வருந்தகையர்'-பாண்டவர்க்கு வேண்டியவரான அரசர்கள்]

வேத வியாசன் வந்தான்

கொற்றவேல் தானைக் குருநாடன் பாலணைந்தான்
எற்றுநீர் ஞாலத் திருள்நீங்க—முற்றும்
வழிமுறையே வந்த மறையெல்லாம் தந்தான்
மொழிமுறையே கோத்த முனி. 10

அலைமோதும் வெள்ளப்பெருக்கினையுடைய கடல்களாற் சூழப்பெற்றிருக்கும் இவ்வுலகத்தின் அறியாமையாகிய இருள் அனைத்தும் விலகுமாறு, முழுவதும் வழிமுறையே ஓதப்பட்டு வந்த வேதங்களை எல்லாம், சொல்லப்படும் இருக்கு யசுர் சாமம் அதர்வணம் எனத் திரட்டிச் சேர்த்த முனிவனாகிய வேதவியாசன், வெற்றிவேலினைக்கொண்ட படைஞரை யுடைய குருநாடனிடத்தே, அப்பொழுது தானும் வந்து சேர்ந்தான் ['மொழிமுறையே கோத்த' என்பதற்கு, அவ் வேதப் பொருளாக அமைந்த புராணங்களை முறைப்படுத்தி அமைத்தவன் எனவும் சொல்லுவர். கொற்றம்-வெற்றி. குருநாடு-குருகுலத்தார்க்கு உரிய நாடு.]

தருமன் வியாசனைப் போற்றினான்

மறைமுதல்வ நீயிங்கே வந்தருளப் பெற்றேன்
பிறவிப் பெருந்துயரம் எல்லாம்—அறவே
பிழைத்தேன்யான் என்றானப் பேராழி யானை
அழைத்தேவல் கொண்ட அரசு. 11

அந்தப் பெருமையுள்ள சக்கரப்படையினை உடையவனாகிய கண்ணபிரானையும் தன்பால் அழைத்துத் தனக்குத் தூதாகச் சென்று வருமாறு ஏவல் கொண்டவன் தருமராசன். அவன், 'வேத முதல்வனே! நீ இவ்விடத்தே வந்து எனக்கு அருள்செய்யப் பெற்றேன்! அதனாலே, என் பிறவிப் பெருந் துயரமெல்லாம் முற்றவும் நீங்கிப்போயினவனாக யான் உய்தியும் பெற்றேன்' என்று, அந்த வேதவியாசனை வரவேற்றுப் போற்றினான்.

பிறவிப் பெருந்துயர்-வினைகட்கு ஏற்ப அவ்வவற்றின் பயனை நுகர்விக்குமாறு மீண்டுமீண்டும் உயிர்கட்கு வந்து வாய்க்கும் பிறவிகளாகிய பெருந்துயரம்.

வருந்தியது ஏனோ என்றாள்

மெய்த்திருவந் துற்றாலும் வெந்துயர்வந் துற்றாலும்
ஒத்திருக்கும் உள்ளத் துரவோனே—சித்தம்

வருந்தியவா என்னென்றான் மாமறையால் உள்ளம்
திருந்தியவா மெய்த்தவத்தோன் தேர்ந்து, 12

பெருமைவாய்ந்த வேதஞானத்தினாலே தன் உள்ளத்திற் செம்மைபெற்ற, யாவரும் விரும்பும் உண்மைத் தவத்தோனாகிய அந்த வேதவியாசன், தருமபுத்திரனின் முகக் குறிப்பினை, ஆராய்ந்தான். "நிலையான செல்வங்கள் வந்தடைந்தாலும், வெம்மையான துயரங்கள் வந்தடைந்தாலும், விருப்பு வெறுப்பு ஆகியவையின்றி ஒரே தன்மைத்தாகவே இருக்கின்ற உள்ளப் பண்பினையுடைய வலிமையாளனே! நின் உள்ளமும் இப்போது கலக்கமடைந்திருப்பதற்குரிய காரணந்தான் என்னவோ?" என்று கேட்டான். [உரவு-வலிமை. திருந்துதல்-செம்மையாகுதல்; அறியாமை நீங்கித் தெளிவடைதல்.]

எம்பியைக் கயிலை போக்கினேன்

அம்பொற் கயிலைக்கே ஆகந் தரவணிவார்
தம்பொற் படைக்குத் தமியனா — எம்பியைமுன்
போக்கினேன் என்றுரைத்தான் பூதலத்தும் மீதலத்தும்
வாக்கினோர் இல்லாத மன். 13

இந்தப் பூவுலகத்தினிடத்தும், மேலுலகத்தினிடத்தும், வாய்மை உரைப்பதிலே தனக்கு ஒப்பான உறுதியுடையவர் பிறர் எவருமே இல்லாதபடிக்குச் சிறந்தோன் தருமபுத்திரன் என்னும் மன்னவன். "மார்பிடத்தே பாம்புகளை அணிபவரான சிவபிரானுடைய, பொன்னொளி சிறந்த பாசுபதாஸ்திரமாகிய படையினைப் பெற்றுவரும் பொருட்டாக, என் தம்பியாகிய அருச்சுனனை, அழகிய பொன்மயமான கயிலைமலைக்குத் தன்னந் தனியனாக யான் முன்னர்ப் போகச் செய்தேன்" என்று வியாசனுக்குச் சொல்லித், தருமன் வருந்தினான்.

தோள் இரண்டும் துணை

காண்டா வனந்தீக் கடவுளுணக் கைக்கணையால்
நீண்ட முகில்தடுத்து நின்றாற்கு — மீண்டமரர்
தாளிரண்டும் நோவத் தனித்தனியே ஓடியநாள்
தோளிரண்டும் அன்றோ துணை. 14

தீக் கடவுள் காண்டாவனத்தினை உண்ணுமாறு, தன் கைக்கணையின் வலிமையினாலே நெடுகிப் படர்ந்த மேகத்

தையும் முற்காலத்துத் தடுத்து நின்றவன் நின் தம்பி. அவனுடைய அந்த ஆற்றலுக்குப் புறமுதுகிட்டுத் தேவர்களும் தம் தாளிரண்டும் நோவும்படியாக அந்நாள் தனித் தனியே சிதறுண்டு ஓடினர். அந்நாளில், அந்த அருச்சுனனுக்கு அவனுடைய தோட்கள் இரண்டுமல்லவோ துணையாயிருந்தன! ['ஆகவே, அவனை நினைந்து வருந்தவேண்டியதில்லை; அவன் வெற்றியுடன் வருவான்' என்கிறார் வியாசர்.]

காரணம் யாதோ?

பேரரசும் எங்கள் பெருந்திருவும் கைவிட்டுச்
சேர்வரிய வெங்கானம் சேர்தற்கிக்—காரணம்தான்
யாதோவப் பாவென்றான் என்றுந்தன் வெண்குடைக்கீழ்த்
தீதோவப் பார்காத்த சேய். 15

"எங்களுடைய பேரரசினையும் பெருஞ் செல்வத்தினையும் கைவிட்டுச் சேர்ந்திருப்பதற்கும் அருமையுடையதான வெம்மையுடைய கானகத்தையும் யாங்கள் அடைந்தோமே! இதற்குக் காரணந்தான் யாதோ ஐயா?" என்று, தன் வெண்கொற்றக் குடைநிழலின் கீழாகத் தீமைகள் அனைத்தும் நீங்கிப்போகுமாறு உலகினைக் காத்த தரும புத்திரன், அவ் வியாசனிடம் மீண்டும் கேட்டான்.

மன்னர்க்கு இயல்பேகாண்

கேடில் விழுச்செல்வம் கேடெய்து சூதாடல்
ஏடவிழ்தார் மன்னர்க்கு இயல்பேகாண்—வாடிக்
கலங்கலைநீ என்றுரைத்தான் காமருவு நாடற்கு
இலங்கலைநூல் மார்பன் எடுத்து 16

"கெடுதலில்லாத மேலான செல்வமும் கேட்டினை அடையுமாறு சூதாடித் தோல்வியுறல், இதழ்விரிந்த தாரணியும் மன்னர்கட்கு என்றும் இயல்பே என்பதனை நீயும் அறிவாயாக; அதனால், நீயும் வாட்டமுற்றுக் கலங்காதிருப்பாயாக" என்று, சோலைகள் செறிந்திருக்கும் குரு நாட்டை உடையவனாகிய அத் தருமனுக்கு, விளக்கமுடன் அசைந்தாடும் பூணூலை உடைய மார்பினனாகிய வேத வியாசன் எடுத்துக் கூறினான்.

வேறு எவரும் உள்ளாரோ?

கண்ணிழந்து மாயக் கவருடிக் காவலர்தாம்
மண்ணிழந்து போந்து வனம்நண்ணி—விண்ணிழந்த

மின்போலும் நூல்மார்ப மேதினியில் வேறுண்டோ
என்போல் உழந்தார் இடர். 17

"வானம் இழந்துபோகவிட்ட மின்னலைப் போன்றதான பூணூலினை அணிந்திருக்கும் மார்பினை உடையோனே? அறிவாகிய கண்ணினை இழந்துபோய், வஞ்சனையுடைய சூதினை ஆடுதலிலே ஈடுபட்டுத், தம் நாட்டையிழந்து சென்று காட்டினை அடைந்திருந்து துன்புற்றவராகிய அரசர்தாம் என்னினும் வேறு எவரேனும் உள்ளாரோ?" என்று கூறித் தருமன் தன்னை மிகவும் நொந்துகொண்டான்.

கலியான் விளைந்த கதை

சேமவேல் மன்னனுக்குச் செப்புவான் செந்தனிக்கோன்
நாமவேல் காளை நளனென்பான்—யாமத்
தொலியாழி வையம் ஒருங்கிழப்பப் பண்டு
கலியான் விளைந்த கதை. 18

ஒப்பற்ற செங்கோலினையும் அச்சமூட்டும் வேலினையும் உடைய ஏறுபோன்றோனாகிய நளன் என்று கூறப்படுபவனுக்கு, யாமத்தினுங்கூட ஒலிக்கும் கடல் சூழ்ந்த தன் நாடெல்லாம் ஒருங்கே இழந்துபோகுமாறு முன்காலத்திலே கலிபகவானுடைய செயலினாலே வந்துநிகழ்ந்த கதையினைக், குடிகட்கு நலம் செய்தற்குரிய வேலினை ஏந்தியுள்ள மன்னனாகிய தருமபுத்திரனுக்கு, அந்த வேதவியாச முனிவன் அப்போது சொல்வானானான்: ['வேறு உண்டோ' எனக் கேட்டவனுக்கு, உண்டென்று, நளன் கதையை வியாசன் கூறுகிறான்.]

2. காதல் பிறந்தது

நாட்டின் சிறப்பு

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலும் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு. 19

கடலினாலே சூழப்பெற்றிருக்கும் இவ்வுலகத்து நல்ல நாடுகளினுள்ளே, முதன்மையுடையதாக எடுத்துக்கூறும்

சிறப்புடையதாகத் திகழ்ந்தது. நளனது நிடதநாடு. அழகிய தான கயல்மீன்கள் எப்புறமும் புரண்டு கொண்டிருக்கவும், குவளை மலர்களின் மொட்டுக்கள் தம் பிணிப்பவிழ்ந்து மலரவும், செவ்விய தேனையுடைய தாமரையின் பிணிப்புக்கள் அவிழ்ந்து அவையும் மலரவுமாக, அந்த நிடதநாடு நிலமகளின் அருட்பார்வையினைப் போன்று தோற்றும் தகைமையினை உடையதாயிருந்தது. [கயல்மீன்களின் பிறழ்ச்சியும் குவளைகளின் மலர்ச்சியும் கண்களுக்கும், தாமரையின் மலர்ச்சி முகமலர்ச்சிக்கும் உவமையாகக் கொள்க. நிலமகள் என்பதன்றிப், 'பூமடந்தை' என்பதற்குத், திருமகள் எனலும் ஆம். அப்போது, 'திருமகளின் அருள் நிரம்பியிருந்த நாடு' என்க.]

நகரின் சிறப்பு

கோதை மடவார்தம் கொங்கை மிசைத்திமிர்ந்த
சீதக் களபச் செழுஞ்சேற்றால்—வீதிவாய்
மானக் கரிவழுக்கும் மாவிந்தம் என்பதோர்
ஞானக் கலைவாழ் நகர். 20

கோதையினைக் கூந்தலிற் சூடியவராக விளங்கும் இளம் பெண்களுடைய, கொங்கைகளின் மேலாகப் பூசப் பெற்றிருந்த குளுமையான கலவைச் சாந்தாகிய செழுமையான சேற்றின் காரணமாகத், தெருக்கள் வழியே செல்லும் பெரிய யானைகளும் கால்வழுக்கி வீழுகின்றதும், மெய்ஞ் ஞானமாகிய கலை எங்கும் செழித்திருக்கின்ற நகரமாயிருப்பதுமாக, மாவிந்தம் என்று சொல்லப்படுவதொரு நகரம், அந்த நாட்டிடத்தே உள்ளது.

'ஞானக்கலை வாழ் நகர்' ஞானங்கட்கு அதிதேவதையான கலைமகள் நிலையாகத் தங்கியிருக்கும் நகரமும் ஆம். அப்போது, அறிவிலே செழுமையுற்ற நகரம் அதுவென்க. திருமகள் கடாட்சமுடைய நாட்டினிடத்தே, கலைமகள் வாழ்ந்திருப்பது போன்ற அறிவுச் செழுமையுடையதாகத் திகழ்ந்தது மாவிந்தநகரம் என்க.

மாடங்களின் சிறப்பு

நின்று புயல்வானம் பொழிந்த நெடுந்தாரை
என்றும் அகில்கமழும் என்பரால்—தென்றல்
அலர்த்தும் கொடிமாடத் தாயிழையார் ஐம்பால்
புலர்த்தும் புகைவான் புகுந்து. 21

வீசும் தென்றற்காற்ருனது அசைத்துக் கொண்டிருக்கும் கொடிகளையுடைய மாடங்களிடத்தே, தெரிந்தெடுத்த பொருத்தமான ஆபரணங்களை அணிந்தோரான பெண்கள் தம் கூந்தலுக்கு ஈரம் புலர்த்துகின்ற நறும்புகையானது, வானத்தே புகுந்து நிலை பெற்றிருப்பதனுல், வானத்து மேகங்கள் பொழிந்த நீண்ட மழைத்தாரைகள் யாவும் எக்காலத்தும் அகிற் கட்டையின் நறு மணத்தைக் கமழ்தலா யிருக்கும் என்று சொல்வார்கள்.

மக்களின் சிறப்பு

வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன
அஞ்சிலம்பே வாய்விட் டரற்றுவன – கஞ்சம்
கலங்குவன மாளிகைமேல் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு. 22

அந்த மாவிந்த நகரத்திலே கோணுவனவெல்லாம் கொடிய வில்களேயல்லாமல், மக்கள் மனங்கோணின ரென்பது கிடையாது; தளர்ந்து சோர்வனவெல்லாம் மகளிர்களின் மென்மையான கூந்தல்களேயல்லாமல் மக்களுள் எவருமே அல்லர்; வாய்விட்டு அரற்றுவன வெல்லாம் அழகிய காற்சிலம்புகளே அல்லாமல் மக்களுள் எவரும் அரற்றித் துயருறுபவர் அல்லர்; கலக்கம் அடைவன வெல்லாம் தண்ணீரேயன்றிக் குடிமக்களுள் எவரும் அல்லர்; நேர்வழியை விட்டுக் குறுக்கிட்டுச் செல்வதெல்லாம் மாளிகைகளின் மேல் விளங்கும் அழகியர்களின் கண்களே யல்லாமல், மக்களுள் வழிபிறழ்வார் யாரும் இலர்.

அவ்வூர் மக்கள் மனங்கோணுதலின்றியும், தளர்வும் சோர்தலும் இன்றியும், வாய்விட்டுப் புலம்பலின்றியும் கலங்குதலின்றியும், வழிபிறழ்தலின்றியும் வளமுடனும் செம்மையுடனும் விளங்கினர் என்பது கருத்து.

கல்லாருமில்லை! இல்லாரும் இல்லை!

தெரிவன நூல் என்றும் தெரியா தனவும்
வரிவளையார் தங்கள் மருங்கே—ஒருபொழுதும்
இல்லா தனவும் இரவே இகழ்ந்தெவரும்
கல்லா தனவும் கரவு. 23

அந் நகரத்தார் என்றும் தெரிவன எல்லாம் நல்ல நூற்களே! அவர்க்குத் தெரியாதிருப்பன, வரிகள் பொருந்திய

வளையணிந்தோரான மாதர்களின் இடையே! ஒரு சமயத்தும் இல்லாதிருப்பன இரத்தலாகிய ஒன்றே! இகழ்வுடன் ஒதுக்கி, எவரும் கல்லாமல் விட்டதும் வஞ்சனை என்பதே.

முரணையும் மாவிந்தமும்

மாமனுநூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி
தாமரையாள் வைகும் தடந்தோளான்—காமருபூந்
தாரான் முரணைநகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி. 24

தாமரையாளான திருமகள் நிலைபெற்றிருக்கும் பரந்த தோள்களை உடையவனும், அழகான பூமாலையினை அணிந்தோனும், பெரிதான மனுநூல் உலகிலே வாழ்ந்திருக்குமாறு வந்துதித்தோனுமாகிய, சந்திரன்சுவர்க்கி என்பானது முரணையம்பதிதான் என்று உலகாளும் வேந்தனாகிய நளமன்னனின் தலைநகரமான அந்த மாவிந்தநகரத்தையும் சொல்லலாம்.

புகழேந்தி, முரணைப்பதிச் சிற்றரசனான சந்திரன் சுவர்க்கியின் வேண்டுகோட்படியே இந்நூலை இயற்றினர். தம்மை ஆதரித்த வள்ளலை இதன்கண் சிறப்பிக்கின்றார். காமர்-விருப்பந்தருகின்ற. 'பார்'-நிடத நாட்டைக் குறிப்பது.

நளன் என்பான் ஒருவன்

ஓடாத தானை நளனென் றுளன்ஒருவன்
பீடாரும் செல்வப் பெடைவண்டோ—டூடா
முருகுடைய மாதர் முலைநனைக்கும் தண்தார்
அருகுடையான் வெண்குடையான் ஆங்கு. 25

சிறப்புமிகுந்த மாவிந்தநகரமாகிய அவ்விடத்தே, பகைவர்க்குப் புறமுதுகிட்டு ஓடாத ஆண்மையாற் சிறந்த படையினைக் கொண்ட நளன் என்பான் ஒருவன் இருந்தான். பெருமைபொருந்திய காதல்மிகுந்த தன் பெடையினோடும் வண்டானது ஊடல் கொண்டதனாலே, தேன் அருந்து வாரற்று உடைந்து வழிந்தோட, அஃது அருகிருக்கும் மாதர்களின் முலையிடங்களை நனைக்கின்ற குளிர்ந்த மாலையை அணிந்திருப்பவன் அவன். அரிய வெண்கொற்றக் குடையினையும் அவன் உடையவன். [பீடு-பெருமை. 'தேன் மாதர்முலைநனைக்கும்' என்றது, அவரை அவன் தழுவுதலால்.]

நளனின் செங்கோற் சிறப்பு

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறம்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு. 26

பூந்தாதுகள் சிந்திக்கொண்டிருக்கும் மாலையினை அணிந்தோனாகிய அந்த நளன், மாதர்கள் தம் அருகிலே வைத்து ஊட்டிவரும் பசுமையான கிளியும், அதனுடன் போராடும் இயல்புடைய பருந்தும் ஒரே கூட்டிலே ஒற்றுமையாகத் தம்முடைய பகையினை மறந்து வாழுமாறு, குளிர்நிலவு போன்ற தன் வெண்கொற்றக் குடைநிழலின் கீழாகச் சிறந்த அறங்கள் எல்லாம் நிலைபெற்றிருக்குமாறு, தன் நாட்டினை, ஒப்பற்ற முறையிலே காத்து வந்தான்.

வீதிவழியாகச் சென்றான்

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன்
பூனாடிச் சோலை புக. 27

இனிதான குவளை மலர்களிடத்தே யுள்ள தேனிலே ஆடி இன்புற்ற வண்டுகள், தம் சிறகுகளை உலர்த்திக்கொண்டிருக்கின்ற, நீர்வளமிகுந்த நிடதநாட்டிற்கு உரியவன் அந்த நளமகராசன். அவன், பூக்களைக் கொய்து வருதலை விரும்பிச் சோலையிற் சென்று புகும்பொருட்டாக, வளைவான வளையல்கள் விளங்கும் கையினரான பெண்களின் முகங்களாகிய நிலவினிடத்தே பூத்திருக்கும் அழகிய கண்களான நீலமலர்க் காட்டினிடையே புகுந்து, வீதிவழியாகச் சென்றுகொண்டிருந்தான். [வாங்குதல்-வளைதல். 'அவன் அழகினை மகளிர் கண்டு களிக்கும்படியாக அவன் சென்றான்' என்பது கருத்து.]

இளவேனில் எதிர்வந்தது

வென்றி மதவேடன் வில்லெடுப்ப வீதியெலாம்
தென்றல் மதுநீர் தெளித்துவர—நின்ற
தளவேனல் மீதலரும் தாழ்வரைசூழ் நாடற்கு
இளவேனில் வந்தது எதிர். 28

வளர்ந்த முல்லைக்கொடிகள் தினைத்தட்டையின்மீது பற்றிப் படர்ந்து மலர்ந்திருக்கின்ற, மலைச்சாரல்கள் சூழ்ந்

திருக்கும் நாடனாகிய அந்நளனுக்கு எதிராக, வெற்றி கொள்வோனாகிய மதனன் தன் கரும்பு வில்லினை எடுக்கவும் வீதியெல்லாம் தென்றல் மலர்த்தேனாகிய நீரினைத் தெளித்து வரவுமாக, இளவேனிற் காலமும் அவ்விடத்தே வந்து தோன்றியது. [மதவேடன் மதவேள்+தன் எனப் பிரித்துப் பொருள்கொள்க, மதுநீர்-தேனாகிய நீர். தளவு-முல்லை. ஏனல்-தினை. தாழ்வரை-மலைச்சாரல்; தாழ்ந்த மலைப்பாங்குகள்.

புழுதியவித்த பூந்தேன்

தேரின் துகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரின் புனல்நனைப்ப வேயடைந்தான்—கார்வண்டு
தொக்கிருந்தா லித்துழலும் தூங்கிருள்வெய் யோற்கொதுங்கிப்
புக்கிருந்தால் அன்ன பொழில். 29

மிருதுவான இருளானது வெய்யோனாகிய கதிரவனின் எதிரே வருதற்கு அஞ்சி ஒதுங்கியதாகப் புகுந்து கொண்டிருந்தது போன்ற மரசசெறிவு மிகுந்ததும், கரிய வண்டினம் தொகுதியாகக் கூடியிருந்து ஆரவாரித்துச் சுற்றித்திரிவதுமான பொழிலினிடத்தே, தான் செல்லும் தேர்ச்சக்கரங்களினிடையே எழுகின்ற புழுதியினைத் திருந்திய அணிகளையுடைய மகளிரின் அழகிய கூந்தல்களினின்றும் வழிகின்ற பூந்தேன் என்னும் நீரானது வீழ்ந்து அவிக்குமாறு சென்று, அவனும் அடைந்தனன். [வேரிப் புனல்-பூந்தேன்.]

அங்கே அன்னம் தோன்றிற்று

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலம்சிவப்ப—மாணிறத்தான்
முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு. 30

அந்தச் சோலையினிடத்தே, மாட்சியமைந்த அழகு படைத்தவனாகிய அந்த நளனின் முன்பாக, நீரிலே தோன்றும் தாமரையிடத்தே வாழ்வதான அன்னப்பறவை ஒன்று தன் உடலின் வெண்மை நிறத்தினாலே சோலையின் நிறம் வெண்ணிறமாகவும், நெடிதான தன் கால்களின் நிறத்தினாலே பொய்கையிடமெல்லாம் செந்நிறமாகவுமாக வந்திருந்து தோன்றிற்று.

பிடித்துத் தா என்றான்

பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலமேறி மென்கரும்பைக் – கோதிக்
கடித்துத்தான் முத்துமிழும் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா என்றான் பெயர்ந்து. 31

மென்மையான கரும்புகளை எருமை மந்தைகள் சென்று கடித்துக் குதப்பி அவற்றுள்ளிருக்கும் முத்துக்களை உமிழ்ந்து விடுகின்ற, கங்கைநீரால் வளமிகுந்த நிடதநாட்டினை உடையவன் நளன். அங்கிருந்த பணிப்பெண்களுள் ஒருத்தியை அவன் நோக்கிப் 'பேதாய்! அந்த இளையதான அன்னத்தினைத் தப்ப விட்டுவிடாதபடி சென்று பிடித்துத் தருவாயாக' என்று ஏவினான்.

பிடித்து வந்தனர்

நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே—நீடியநற்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து. 32

நெடிதானதும், நன்கு செழித்ததுமான கூந்தலையுடைய சேடியர்கள், அந்த அன்னத்தினைப் பிடிக்கக் கருதி, மயிலின் கூட்டமொன்று ஓடிச்சென்று வளைத்துக்கொண்டதுபோல அதனை வளைத்துச் சூழ்ந்துகொண்டு, தம் கையினாற் பற்றிக் கொணர்ந்து, தம் அரசனின் முன்பாகப் பணிவுடன் வைத்தார்கள்.

வருத்தமும் கலக்கமும்

அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே—அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு. 33

தெரிந்தெடுத்த வளையல்களை அணிந்தவரான அந்தச் சேடியர்கள், அன்னத்தினைப் பிடித்துக்கொண்டு போய்த் தன் மன்னவனான நளனின் முன்பாக வைத்ததுமே, அந்த அன்னம், தன்னுடைய சுற்றமாகிய மற்றைய அன்னங்களைத் தேடி வருத்தமுற்றது; எதிரேயிருந்த மன்னவனைக் கண்டு கலக்கமும் கொண்டது.

அஞ்சாதே அன்னமே!

அஞ்சல் மடவனமே உன்றன் அணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடயும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண் என்ருன் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். 34

மதுவுண்டு களிப்பனவாய வண்டுகள் மிகுதியாக மொய்த்துக்கொண்டிருக்கும் மாலையினை அணிந்திருந்தோனுகிய நளமன்னன், அன்னத்தின் அந்த அச்சத்தினைக் கண்டான். 'இளமையுடைய அன்னமே! உன்னுடைய அழகான நடையினையும், வஞ்சிக்கொடியினைப் போன்றவரான இம்மாதர்களின் சிறந்த நடையினையும் ஒப்பிட்டுப் பார்த்து, அவற்றுள் சிறந்தது எதுவெனக் காண்பதன் பொருட்டாகவே நின்னைப் பிடித்தது; அதனுல், நீ அஞ்சாதே' என்று கூறினுன்.

தடுமாற்றம் தீர்ந்தது

செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனியன்னம்—வெய்ய
அடுமாற்றம் இல்லா அரசன்சொல் கேட்டுத்
தடுமாற்றம் தீர்ந்ததே தான். 35

செந்தாமரை மலரினிடத்தே வீற்றிருக்கும் திருமகளைப் போன்ற சேடியானவள் பிடித்துக்கொணர்ந்த, அந்த ஒப்பற்ற அன்னமானது, கொடிதான கொலைசெய்யும் கருத்தில்லாத அரசனின் அந்தச் சொற்களைக் கேட்டுத், தானும் தன் மனக்கலக்கம் தீர்ந்ததாயிற்று.

பொருத்தம் தமயந்தியே!

திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே உன்றன்
இசைமுகந்த தோளுக்கு இசைவாள் – வசையில்
தமையந்தி என்ருேதும் தையலாள் மென்ருேள்
அமையந்தி என்ருேர் அணங்கு. 36

"எட்டுத் திக்குகளிலும் பரவிய வெண்கொற்றக் குடையினையுடைய தேர்வேந்தனே! உன்னுடைய புகழ்மிகுந்த தோள்களுக்குப் பொருத்தமானவள், 'மென்மையான தோள்கள் மூங்கிலைப்போன்று அழகியன' என்று சொல்லத்தக்க

வளும், தேவமகள் போன்றவளுமான, குற்றமற்ற தமையந்தி என்று சொல்லப்படும் தையலே யாவாள்'' என்று, அந்த அன்னம் அப்போது உரைத்தது.

யாவர் மகளோ!

அன்னம் மொழிந்த மொழிபுகா முன்புக்குக்
கன்னி மனக்கோயில் கைக்கொள்ளச் சென்னமாயில்
ஆர்மடந்தை என்றான் அனங்கன் சிலைவளைப்பப்
பார்மடந்தை கோமான் பதைத்து. 37

அன்னமானது சொல்லிய சொற்கள் செவி வழியாகப் புகுந்து மனத்தை அடைவதற்கு முன்பாகவே, அந்தத் தமையந்தி என்னும் கன்னியானவள் அவன் மனக்கோயிலுட் புகுந்து அதனைத் தன்வசமாகிக் கொள்ளவும், மன்மதன் தன் கருப்புச் சிலையினை வளைத்து அம்பினை ஏவவும், நில மகளுக்குத் தலைவனான அந்த நளமன்னவன் துடிதுடித்து "நீ சொன்ன அந்த மயிலனையாள்தான் யாவரது மடந்தையோ?'' என்று கேட்பானாயினான்.

விதர்ப்பன் பூங்கொடி!

எழுவடுதோள் மன்ன இலங்கிழையோர் தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை—உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயும் மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு. 38

'தூணினையும் வெற்றிகொள்ளும் திண்மையான தோள்களையுடைய மன்னவனே! ஒளிசிதறும் ஆபரணங்களை அணிந்த அந் நங்கையானவள், உழவர்கள் ஏரினைத் தூண்டிச் செலுத்த அந்த ஏரின் கொழுமுனையிலே சாய்ந்துபோன குவளைகள், அவர்கள் நீர்வடியும் மடையினை மிதிப்பத் தேனைப் பெருக்குகின்ற, மிக்க ஆரவாரத்தையுடைய நீர்வளமிகுந்த விதர்ப்ப நாட்டிற்கு உரியவனும், கொடையாளனுமாகிய, விதர்ப்பன் பெற்றெடுத்த ஒப்பற்ற பூங்கொடியாவாள்.'

பெண்மை அரசு!

நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு. 39

'நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு எனப்படும் நான்கு குணங்களுமே நால்வகைச் சேனைகளாகவும், ஐம்புலன்களுமே நல்ல அமைச்சர்களாகவும், ஒலிமுழங்கும் காற்சிலம்பே அழகிய முரசமாகவும், வேற்படையும் வாளுமே கண்களாக வும் கொண்டு, தன் முகமாகிய நிலாவட்டக் குடையின் கீழாகப் பெண்மை என்பதனையே அரசாளும் தன்மையுடனே, விளங்குபவள் அவள்.'

நூபுரங்கள் புலம்பும்!

மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற
மாட்டா திடையென்று வாய்விட்டு—நாட்டேன்
அலம்புவார் கோதை அடியிணையில் வீழ்ந்து
புலம்புமாம் நூபுரங்கள் பூண்டு. 40

'அவளின் இடையானது பருத்துயர்ந்த அவளது இளங் கொங்கைகளை முற்றவும் சுமந்து நிற்கும் வலிமையுடையது ஆகமாட்டாதென்று, அவளுடைய காலிலே விளங்கும் நூபுரங்கள், புதிய தேன் அலம்பிக் கொண்டிருக்கும் நீண்ட கூந்தலுடைய அவளின் இரு பாதங்களிலும் தாழ்ந்துகிடந்து, வாய்விட்டுப் புலம்பிக்கொண்டிருக்கும்.'

இடை நுடங்கும்!

என்றும் நுடங்கும் இடையென்ப ஏழுலகும்
நின்ற கவிகை நிழல் வேந்தே—ஒன்றி
அறுகால் சிறுபறவை அஞ்சிறகால் வீசும்
சிறுகாற்றுக் காற்ருது தேய்ந்து. 41

'ஏழு உலகங்களிடத்தும் நிலைபெற்ற வெண்கொற்றக் குடையினையுடைய வேந்தனே! 'ஆறு கால்களையுடைய சிறு பறவை' என்னும் வண்டானது, தன் அழகிய சிறகினாலே வீசும் மெல்லிய காற்றுக்கும் ஆற்றமாட்டாமல், அவளுடைய இடையானது மெலிவுற்றுத் துவண்டு கொண்டிருக்கும்.'

மலர்வாளி தீட்டும் இடம்!

செந்தேன் மொழியாள் செறியளக பந்தியின்கீழ்
இந்து முறியென் றியம்புவார்—வந்தென்றும்
பூவாளி வேந்தன் பொருவெஞ் சிலைசார்த்தி
ஏவாளி தீட்டும் இடம். 42

'மலரம்புகளையுடைய வேந்தன் மன்மதன். அவன், எக்காலத்தும் போர் செய்வதற்குரிய தன் கொடிய வில்லினைச் சார்த்தி வைத்துவிட்டுத், தன் அம்பின் வரிசைகளைத் தீட்டிக் கூர்மை செய்துகொள்ளும் இடம், செவ்விய தேன்போன்று இனிக்கும் பேச்சினளான அவளின் செறிவான முற்புறக் கூந்தல் வரிசையின் கீழாக விளங்கும் பிறைத்துண்டமாகிய நெற்றியே ஆகும்' என்று, அன்னம் சொன்னது.

நினைக்கவே ஆவி சோரும்

அன்னமே நீயுரைத்த அன்னத்தை என்னாவி
உன்னவே சோரும் உனக்கவளோ—டென்ன
அடைவென்றான் மற்றந்த அன்னத்தை முன்னே
நடைவென்றாள் தன்பால் நயந்து. 43

அந்த அன்னப் பறவையினையும் முன்னமேயே தன் நடையழகினாலே வெற்றி கொண்டவ்ளான தமையந்தியின்பால் விருப்பங்கொண்டு, 'அன்னமே! நீ சொல்லிய அந்த அன்னத்தை நினைக்கும்போதே என் உயிர் சோர்கின்றது. உனக்கு அவளுடன் எத்தகைய தொடர்போ? அதனைக் கூறுக' என்றான் நளன்.

நடை கற்கச் சென்றோம்

பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவள்தன்
மாமனைவாய் வாழும் மயிற்குலங்கள் – காமன்
படைகற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள் பாத
நடைகற்பான் வந்தடைந்தோம் யாம். 44

'மன்மதன் அவளுடைய கண்பார்வையினைப் பார்த்துத் தானும் படைதொடுக்கும் தொழிலினைக் கற்கும் பொருட்டாக அவளிடத்தே வந்திருந்தான். யாங்கள், அந்தப் பசிய தொடியுடையாளின் பாதத்து நடையினைக் கற்பது கருதி அவளிடத்தே சென்று சேர்ந்தோம். யாங்கள், மலர்களான வீடுகளிலே வாழ்கின்றபறவையினங்களாயினும், அவளுடைய பெரிய அரண்மனையிலே வாழும் மயிற்குலங்கள் போன்றோரான சேடியரைப்போன்று, அவளுடன் நெருக்கங் கொண்டுள்ளோம். [இப்படித் தமயந்திக்கும் தனக்குமுள்ள அடைவை அன்னம் நளனுக்கு உரைத்தது]

வாயுடையது என் வாழ்வு

இற்றது நெஞ்சம் எழுந்த திருங்காதல்
அற்றது மானம் அழிந்தநாண்—மற்றினியுன்

வாயுடைய தென்னுடைய வாழ்வென்றுன் வெங்காமத்
தீயுடைய நெஞ்சுடையான் தேர்ந்து. 45

அன்னம் கூறியவைகளை நளன் கேட்டான். அவன் நெஞ்சம் தடுமாற்றம் அடைந்தது. மிகுதியான காதலும் எழுந்தது. மானவுணர்வும் நீங்கிப் போயிற்று. நாணமும் அழிந்தது. கொடிய காமமாகிய தீயினைக் கொண்டிருந்த நெஞ்சத்தை உடைய அவன், தெளிவுற்று, 'இனி என்னுடைய வாழ்வு உன் வாய்ச்சொற்களின் இடமாகவே இருக்கின்றது' என்று, அந்த அன்னத்தை நோக்கிக்கூறினுன். [அன்னத்தைத் தமயந்திபால் தூதுபோக வேண்டுகின்றுன் என்பது கருத்து.]

3. அன்னம் விடு தூது

அன்னம் பறந்தது

வீமன் திருமடந்தை மென்முலையை உன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன் — சேம
நெடுங்குடையாய் என்றுரைத்து நீங்கியதே அன்னம்
ஒடுங்கிடையாள் தன்பால் உயர்ந்து. 46

"உலகமக்கட்கு நன்மை விளைக்கும் நெடிதான வெண் கொற்றக் குடையினை உடையவனே! வீமராசனின் அழகிய திருமகளான தமையந்தியின் மென்மையான மார்பகங்களை, உன்னுடைய அழகான பெருத்த தோள்களிடத்தே பொருந்து மாறு யான் செய்விப்பேன்" என்று உரைத்து, ஒடுக்கமான இடையினளான தமயந்தியிடத்தே செல்லும் பொருட்டாக வானத்து உயரே எழுந்து, அன்னமும் பறந்து போயிற்று.

வேந்தன் விம்மினுன்

இவ்வளவிற் சொல்லுங்கொல் இவ்வளவிற் காணுங்கொல்
இவ்வளவிற் காதல் இயம்புங்கொல் — இவ்வளவில்
மீளுங்கொல் என்றுரையா விம்மினுன் மும்மதம்நின்
ருளுங்கொல் யானை அரசு. 47

மூவகையான மதங்களும் நிலைபெற்று ஆட்சி செய்ய விளங்கும், கொலைத் தொழிலினையுடைய களிற்றியானைப் படையினையுடைய அரசனுன நளன், 'இத்தனை பொழுதில்

அன்னம் சென்றிருக்குமோ? இத்தனை நேரம் அவளைக் கண்டிருக்குமோ? இத்தனை நேரம் என் காதலை எடுத்துச் சொல்லியிருக்குமோ? இத்தனை நேரத்திற்குள் மீண்டும் வந்து கொண்டிருக்குமோ?' என்று, பலவாறுகச் சொல்லிச் சொல்லித், தமயந்தியை நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தான். [மும்மதம்-கன்ன, கபோல, பீஜ மதங்கள்]

ஆவி உருகினன்

சேவல் குயிற்பெடைக்குப் பேசும் சிறுகுரல்கேட்டு
ஆவி உருகி அழிந்திட்டான்—பூவின்
இடையன்னம் செங்கால் இளவன்னம் சொன்ன
நடையன்னம் தன்பால் நயந்து. 48

தாமரை மலரிடையே வாழ்கின்றதும், சிவந்த கால்களை உடையதுமான, அந்த இளைய அன்னப்பறவை சொல்லிய, நடையழகில் அன்னம் போன்றவளான தமயந்தியிடத்தே விருப்பங்கொண்டு, ஆண் குயில் தன் பேடையுடன் பேசும் சிறுகுரலினைக் கேட்டதுமே, நளன், தன் ஆவி உருகிப் போகச் செயலழிந்தவனும் ஆயினன்.

உள்ளம் கலங்கினன்

அன்னம் உரைத்த குயிலுக் கலசுவான்
மென்மயில்தன் தோகை விரித்தாட—முன்னதனைக்
கண்டாற்று துள்ளம் கலங்கினன் காமநோய்
கொண்டார்க்கிஃ தன்றே குணம். 49

அன்னப்பறவை சொல்லிய குயில்போலினிய குரலுடையாளுக்சாகத் தளர்வுற்று விளங்கிய நளன், மென்மைத் தன்மையினையுடைய மயிலானது தன் தோகையினை விரித்து ஆடிக்கொண்டிருக்கத், தன் முன்பாக அதனைக் கண்டு பொறுக்கமாட்டாது தன் உள்ளம் கலங்கியவனுயினன். காமநோய் கொண்டவர்களுக்கு இதுவல்லோ ஏற்படும் குணம்!

கொடியார் வாரீர்

வாரணியும் கொங்கை மடவார் நுடங்கிடைக்குப்
பேருவமை யாகப் பிறந்துடையீர்—வாரீர்
கொடியார் எனச்செங்கை கூப்பினன் நெஞ்சம்
துடியா நெடிதுயிராச் சோர்ந்து. 50

தமயந்தியின் நினைவினாலே தன் நெஞ்சம் துடிதுடிக்க நெடுமூச்செறிந்து தளர்வுற்றான் நளன். "ஏ பூங்கொடிகளே! இளமை உடையவளான தமயந்தியின் துவள்கின்ற இடைக்குச் சிறந்ததோர் ஒப்புமைப் பொருளாகுமாறு பிறந்துள்ளவர்களே! என்னருகே வாரீர்களோ!' என்று, பூங்கொடிகளைக் கண்டு மனம் சோர்ந்து, தன் செங்கைகூப்பி அழைத்தும் நின்றான் அவன்.

விடாய் ஆறேனோ?

கொங்கை இளநீரால் குளிர்த்தஇளஞ் சொற்கரும்பால்
பொங்குசுழி என்னும் பூந்தடத்தில் – மங்கைநறும்
கொய்தாம வாசக் குழல்நிழற்கீழ் ஆறேனோ
வெய்தாமக் காம விடாய். 51

"அவளுடைய கொங்கைகளாகிய இளநீர்களை அருந்தியும், குளிர்ச்சியான குதலைப் பேச்சுக்களாகிய சொற்கரும்புகளைச் சுவைத்தும், ஆர்வம் பொங்குகின்ற சுழியிடம் என்கின்ற அழகான மலர்ப்பொய்கையிலே ஆடியும், நறுமணமுள்ளதும் அப்பொழுதே கொய்து கட்டியதுமான மாலையணிந்துள்ள, இயல்பாகவே நறுமணமுள்ள கூந்தலின் நிழலின் கீழே தங்கியும், வெம்மைமிகுந்ததான இந்தக் காம வெப்பத்தினை யான் ஆற்றிக்கொள்ள மாட்டேனோ?" என்றும், அவன் ஏங்கினான்.

எதனை நாடினாய்?

மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய – நன்னுதலும்
தன்னுடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னுடல் சொல்லென்றாள் ஈங்கு. 52

மன்னவனாகிய நளன் தூதாக அனுப்பிய அழகிய உருவ எழிலுடன் விளங்குகின்ற அந்த அன்னப்பறவையானது, விதர்ப்பனது நாட்டிற்குச் சென்று, கன்னியாம் தமயந்தியின் அருகாமையிலும் போய்ச் சேர்ந்தது. நறிய நுதலையுடையளான அவளும், தன்னுடைய விளையாடல்களைக் கைவிட்டுத் தனிமையான ஒரு பக்கத்தினைச் சேர்ந்தாள். அவ்விடத்தே, அந்த அன்னத்தை நோக்கி, "இவ்விடத்தே எதனை விரும்பி நீ வந்தனையோ? அதனைச் சொல்க" என்றாள்.

உனக்கேற்ற வேந்தன்

செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்கும் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு. 53

"செம்மையான உள்ளத்தினை உடையவன்; தண்மையான இரக்கத்தினைக் கொண்டிருப்பவன்; செங்கோன்மையுடன் அரசியற்றி வருபவன்; இள மங்கையர்களுடைய உள்ளங்களைத் தம்பால் இழுக்கின்ற பரந்த தோள்களையுடையவன்; உண்மையாளனாகிய நளன் என்பவன். மேலுலகத்தும் சரி, இந்நானிலத்தும் சரி, ஆடவருள் உயர்ந்தோனாக விளங்குபவன் அவனே. உனக்குரிய வேந்தனாகத் தான் உளன் என்றும் அவன் சொல்லிக்கொண்டிருக்கின்றான்."

தேர்வேந்தர் ஒப்பரோ?

அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்தோள் வலியும்—நிறங்கிடந்த
செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு. 54

"அறநெறிகள் குடிகொண்டிருக்கும் நெஞ்சகமும், அருள் ஒழுகிக்கொண்டிருக்கும் கண்களும், வீரம் குடிகொண்டிருக்கும் திண்மையான தோளாற்றலும் உடையவன் அந்த நளன். அழகிய இடத்தினை உடையதான இந்தப் பெரிய உலகத்திலே, அந்த நளனுக்குச் செங்கண்ணனாகிய திருமாலே ஒப்புடையனாகமாட்டான் என்றால், பிற தேர்வேந்தர்கள் ஒப்புடையவர் ஆவார்களோ?" [இவ்வாறு அன்னம் உரைத்தது.]

ஒளியிழந்த வெள்ளைமதி

புள்ளின் மொழியினெடு பூவாளி தன்னுடைய
உள்ளம் கவர ஒளியிழந்த—வெள்ளை
மதியிருந்த தாமென்ன வாய்த்திருந்தாள் வண்டின்
பொதியிருந்த மெல்லோதிப் பொன். 55

வண்டினத்தின் தொகுதிகள் மொய்த்திருந்த மென்மையான கூந்தலையுடையவளும், திருமகளைப் போன்றவளுமான

தமயந்தி, அந்த அன்னப் பறவையின் சொற்களோடு சேர்ந்து மன்மதன் ஏவும் மலரம்புகளும் தன்னுடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டுவிடத், தானும் சாமம் எழப் பெற்றவளாகி, ஒளிகுறைந்த வெண்திங்கள் இருந்தது என்னும்படியாக வெளுத்துப்போய் அவ்விடத்தே வீற்றிருந்தாள். ('நளன் மீதில் எழுந்த ஆசையால் அவளுடைய பொன்னுடலம் வெளுத்தது' என்பார் இங்ஙனம் கூறுகின்ருர்.

பார்த்து மயங்கினுள்

மன்னன் மனத்தெழுந்த மையல்நோய் அத்தனையும்
அன்னம் உரைக்க அகமுருகி— முன்னம்
முயங்கினுள் போல்தன் முலைமுகத்தைப் பாரா
மயங்கினுள் என்செய்வாள் மற்று? 56

நளமன்னனின் உள்ளத்தே எழுந்த காமநோய் முழுவதையும் தமயந்திக்கு அன்னம் எடுத்துச் சொல்லியது. சொல்லவும், அவளும் உள்ளம் உருகியவள் ஆயினுள். முன்னமேயே அவனைத் தழுவி இன்புற்றவளே போலத், தன் முலை முகங்களைப் பார்த்துப் பார்த்து மயங்கினுள். அவள் வேறு என்னதான் செய்வாள்? [இது கவிக் கூற்று.]

ஆவி உவந்தளித்தாய்

வாவியுறையும் மடவனமே என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து. 57

நாடாளும் வேந்தனுகிய விதர்ப்பனின் மகளான தமயந்தி, காதலால் துடிதுடித்தாள். 'மலர்ப் பொய்கைகளிலே வாழுகின்ற, இளம் பருவத்து அன்னப்பறவையே! பூஞ்சோலையினிடத்தே இருப்பதாக நீ கூறிய அந்தத் தேர் வேந்தனுக்கு உன்னுடைய இந்த நிலைமையினையும் போய்ச் சொல்லுவாயாக. அங்ஙனம் நீ சொல்வாயாளுல், என்னுடைய உயிரினை எனக்கு விருப்பத்துடன் அளித்தனையாவாய்' என்ருள். ('உரையாயேல் என் உயிர் தரியாது' என்பது கருத்து.)

புயம் கச்சாகும்

மன்னன் புயம்நின் வனமுலைக்குக் கச்சாகும்
என்ன முயங்குவிப்பேன் என்றன்னம்—பின்னும்
பொருந்தவன்பால் ஓதிமலர்ப் பூங்கணைகள் பாய
இருந்தவன்பால் போன தெழுந்து. 58

'அந்த மன்னனின் தோள்களே நின்னுடைய அழகிய முலைகட்குக் கச்சாக விளங்கும் என்னும்படியாகத் தழுவுமாறு செய்விப்பேன்' என்று உறுதி கூறியதுடன், பின்னரும் அவள் மனம் பொருந்துமாறு, அன்பான சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, அன்னமானது வானத்து எழுந்து, மலரம்புகள் பாய்ந்து வருந்த இருந்தவனாகிய நளனின்பால் பறந்து போவதாயிற்று.

4. சுயம்வரச் செய்தி

வேறுபாடு உண்டு

கொற்றவன்தன் தேவிக்குக் கோமகள்தன் தோழியர்கள்
உற்ற தறியா உளநடுங்கிப் —பொற்றொடிக்கு
வேறுபா டுண்டென்றார் வேந்தனுக்கு மற்றதனைக்
கூறினாள் பெற்ற கொடி. 59

அரசகுமாரியாகிய தமயந்தியின் தோழியர்கள் அவளுக்கு உற்ற காமநோயினை அறியாதவர்களாக மன நடுக்கமுற்று, வீமராசனுடைய தேவிக்குப், 'பொற்றொடியான நின் மகளுக்கு இப்போது என்றுமில்லாதபடி வேறுபாடுகள் தோன்றியுள்ளன' என்று சொன்னார்கள். அதனைக் கேட்டதும், அவளைப் பெற்ற அத் தாயானவள், தன் நாயகனாகிய வேந்தனுக்குச் சென்று அதனைச் சொன்னாள்.

பெற்றவன் வந்தான்

கருங்குழலார் செங்கையினால் வெண்கவரிப் பைங்கால்
மருங்குலவ வார்முரசம் ஆர்ப்ப—நெருங்கு
புரிவளை நின்றேங்கப் போய்ப்புக்கான் பெற்ற
வரிவளைக்கை நல்லாள் மனை. 60

கருமையான கூந்தலையுடையவரான பணிப்பெண்கள், தம் சிவந்த கைகளில் வெண்ணிறமுள்ள சாமரைகளைக் கொண்டு, குளிர்ச்சியான காற்று வருமாறு இருபுறமும் வீசிக் கொண்டே வரவும், வாரால் கட்டப்பெற்ற முரசம் முழக்க மிடவும், நெருக்கமுற்றுச் சுழிந்துள்ள சங்குகள் நிலையாக ஓலி முழங்கவும், தான் பெற்ற வரிகளையுடைய வளைகள் விளங்கும் கைகளையுடைய நல்லாளான தமயந்தியின் மாளிகையுள் வீமராசனும் சென்று சேர்ந்தான்.

கோதை சுமந்த கொடி

கோதை சுமந்த கொடிபோல் இடைநுடங்கத்
தாதை திருவடிமேல் தான்வீழ்ந்தாள்—மீதெல்லாம்
காந்தாரம் பாடிக் களிவண்டு நின்றரற்றும்
பூந்தாரம் மெல்லோதிப் பொன். 61

தேனுண்டு களிப்பனவாகிய வண்டினங்கள், காந்தாரப் பண்ணினைப் பாடித் தன் மேலெல்லாம் மொய்த்துக்கொண்டு ஆரவாரிக்கும் பூமாலையினை அணிந்தவளும், மென்மையான கூந்தலையுடையவளுமான தமயந்தியாகிய அத் திருமகள் போல்வாள், கூந்தலைச் சுமந்திருக்கும் ஒரு பூங்கொடி போலத் தன் இடை துவளுமாறு தந் தந்தையின் திருவடி களின்மீது வீழ்ந்து வணங்கினாள்.

சோர்கின்ற பேரழகு

பேரழகு சோர்கின்ற தென்னப் பிறைநுதன்மேல்
நீரரும்பத் தன்பேதை நின்றாளைப்—பாராக்
குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தர் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளும் மணம். 62

'பேரழகு அனைத்தும் பொங்கி வழிகின்றதோ' என்னும் படியாகப், பிறை போன்ற நெற்றியின் மேலாக வியர்வுநீர் அரும்பி வழியத், தன்னை வணங்கி எழுந்து நின்ற, பேதைமை யுடைய தன் மகளைச் சூரியகுல வேந்தனாகிய வீமனும் பார்த் தான். பார்த்ததும், அரசாளும் வேந்தர்களை மலர்மாலை சூட்டி நாயகனாக ஏற்றுக்கொள்ளுகின்ற திருமணமரபினைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான்.

சுயம்வர நாள் மங்கைக்கு

மங்கை சுயம்வரநாள் ஏழென்று வார்முரசம்
எங்கும் அறைகென் றியம்பினான்—பைங்கமுகின்

கூந்தல்மேற் கங்கைக் கொழுந்தோடும் நன்னாடன்
வேந்தர்மேல் தூதோட விட்டு. 63

பசுமையான பாக்குமரங்களின் கூந்தற்பாளைகளின் மேலாகக், கங்கையாற்றின் வெள்ளத் திரள்கள் ஓடிக்கொண்டிருக்கின்ற நன்மைபொருந்திய நாட்டிற்கு உரியவனாகிய விதர்ப்பன், பிறநாட்டு மன்னர்கள்பால் தூதுவர்களை ஓடிச் செல்லுமாறு போகவிட்டான். "தமயந்தியின் சுயம்வரம் இற்றைக்கு ஏழாவது நாள்' என்று, எங்கும் முரசறைக" எனவும் ஆணையிட்டான்.

கோவேந்தர் கூடினர்

மாமுத்த வெண்குடையான் மால்களிற்றான் வண்டிசைக்கும்
தாமத் தரிச்சந் திரன்சுவர்க்கி—நாமத்தால்
பாவேய்ந்த செந்தமிழாம் என்னப் பரந்ததே
கோவேந்தர் செல்வக் குழாம். 64

சிறந்த முத்துப்போன்ற 'வெண்மைநிறம் பொருந்திய கொற்றக் குடையினை உடையவன்; பெரிய பட்டத்து யானையை உடையவன்; வண்டுகள் ஆரவாரிக்கின்ற மலர் மாலையை அணிந்தவன்; சிங்கவேறு போன்றவன், சந்திரன் சுவர்க்கி என்பவன். அவனுடைய பெயரினால் பாக்களை யாத்தமைத்த செந்தமிழ் என்று சொல்லுமாறு, நாடாளும் மன்னர்களின் கூட்டம் எல்லாம் விதர்ப்ப நாட்டிடத்தே வந்து ஏராளமாகப் பரவியது.

சந்திரன் சுவர்க்கி முரணை நகரச் சிற்றரசனாக இருந்தவன்; ஆசிரியரைப் புரந்தவன்; அவன் புகழ்ப் பெருக்கையே இங்குக் கூறுகின்றார்.

பூவேந்தர் வந்தடைந்தார்

செந்தடையும் வண்டுறைதார்ச் செய்யாள் வளர்மார்பன்
கந்தடையும் வேழக் கடைத்தலைவாய்—வந்தடைந்த
பூவேந்தர் தங்கள்கிளை பொன்னகரில் ஈண்டிற்றே
கோவேந்தன் மாதைக் குறித்து. 65

பூந்துகளிலே மொய்க்கின்ற இயல்புடைய வண்டுகள் மொய்த்திருக்கும் தாரினை அணிந்தவன்; திருமகள் வாழ்கின்ற மார்பினை உடையவன்; வீமராசன். கட்டுத்தறியினைச்

சார்ந்திருக்கும் வேழங்களையுடைய அவனது அரண்மனைத் தலைவாயிலினிடத்தே, வேந்தர் வேந்தனுன அவனுடைய மகளைக் குறித்துவந்து சேர்ந்திருந்த பூவேந்தர்களின் சுற்ற மெல்லாம், அழகிய அந்த நகரின் எம்மருங்கும் பரந்திருந் தனர்.

எங்கும் இனிதிருந்தார்

புள்ளுறையும் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமும் இனிதுறைந்தார்—தெள்ளரிக்கண்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்றன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு. 66

போர் வெற்றிகொண்ட வேலினையுடையான் விதர்ப்ப ராசன். அவன் செல்வ மகள், தெளிவாகச் செவ்வரிபரந்த கண்களை உடையவளும், திருமகளைப்போன்ற அழகினை யுடையவளும், பொன்னைப்போன்ற திருமேனியினை உடைய வளுமான தமயந்தியை மனத்தே கொண்டவராகப், பறவை கள் தங்கும் சோலைகளினுள்ளும், தாமரைத் தடாகங்களின் கரைகளினுமாக, மன்னவர் பலரும் இனிதாக வந்து தங்கி யிருந்தார்கள். ['உள்ளும் புறமும்' என்பதனைச் சோலைகளி னுள்ளும், வாவிகளின் புறத்தும் எனக் கூட்டிப் பொருள் கொள்க.]

மஞ்சோட வரும்

வழிமேல் விழிவைத்து வாள்நுதலாள் நாம
மொழிமேல் செவிவைத்து மோகச்—சுழிமேல்தன்
நெஞ்சோட வைத்தயர்வான் கண்டான் நெடுவானில்
மஞ்சோட அன்னம் வர. 67

அன்னப்பறவை திரும்பி வருகின்ற வழியின்மீதே தன் பார்வையை நிலைபெறுத்தி யிருந்தான் நளன். ஒளி பொருந்திய நெற்றியினையுடைய தமயந்தியின் பெயராகிய சொல்லின்மீதே தன் காதுகளைச் செலுத்தியிருந்தான். அவள்மீது கொண்ட மோகச்சுழலின் மேலாகவே தன் நெஞ் சத்தினை ஓடிக்கொண்டிருக்க வைத்து அயர்வு கொண்டிருந் தான். அப்போது, நெடிய வானிலே மேகங்கள் கலைந் தோடுமாறு, அன்னப்பறவை விரைவாக வருதலைக் கண்டான். [மஞ்சு-வெண்மேகம். அவை கலைந்தோடுதல், அன்னம் வந்த வேகத்தால் என்க.]

கேளா விருந்து

முகம்பார்த் தருள்நோக்கி முன்னிரந்து செல்வர்
அகம்பார்க்கும் அற்றேரைப் போல—மிகுங்காதல்
கேளா விருந்திட்டான் அன்னத்தைக் கேளாரை
வாளால் விருந்திட்ட மன். 68

தன் ஆணையினைக் கேளாதவராகிய பகைவேந்தர்களை, வாளினாலே எமனுக்கு விருந்திட்ட மன்னவன் நளன். அவன், செல்வரின் முகக்குறிப்பினைப் பார்த்தும், அவர்களுடைய அருட்பார்வையினை எதிர்நோக்கியும், அவர் முன்னிலையில் இரந்து வேண்டுவாராய் நின்றும், அவர்களுடைய உள்ளச் செவ்வியை எதிர்பார்க்கின்ற வறியவரைப்போலத், தன்னைப் போலவே தமயந்திக்கும் மிகுகின்ற காதலைப்பற்றிய செய்தியினை அன்னம் எடுத்துரைக்கத், தான் எளியனாக அதன்முன் இருந்து கேட்டுக்கொண்டிருந்தான்.

தேமொழிக்குத் தீதிலவே?

அன்னக் குலத்தின் அரசே! அழிகின்ற
என்னுயிரை மீள எனக்களித்தாய்—முன்னுரைத்த
தேமொழிக்குத் தீதிலவே என்றான் திருந்தாரை
ஏமொழிக்கும் வேலான் எடுத்து. 69

பகைவரது செருக்கினை அடக்குகின்ற வேலினைக் கைக்கொண்டிருப்பவன் நளன். அவன், அன்னம் சொன்னதைக் கேட்டதும், 'அன்னக் குலத்தின் அரசே! அழிந்துகொண்டே போகின்ற என்னுயிரினை மீளவும் எனக்கு மீட்டுத்தந்தாய். என்முன் நீ சொல்லிய அந்தத் தேன்மொழிக்கு, எத்தகைய தீதும் இல்லையே?' என்றான். [காதலால் தான் உருகியழிந்த நளன், தமயந்தியும் தன்பாற் காதல் கொண்டாளென அன்னம் சொல்லக் கேட்டதும், அவளுக்கும் 'தன் போலத் தீது ஏதும் நேரவில்லையே?' எனக் கவலையுடன் விசாரிக்கின்றான்.]

மொழிந்ததும் கழிந்ததும்

கொற்றவன்தன் ஏவலினல் போயக் குலக்கொடிபால்
உற்றதும் ஆங்கவள்தான் உற்றதுவும்—முற்றும்
மொழிந்ததே அன்னம் மொழிகேட் டரசற்கு
அழிந்ததே உள்ள அறிவு. 70

வெற்றிச் சிறப்புடைய நளமன்னனின் ஏவுதலினாலே சென்று, தமயந்தியாகிய குலக்கொடிபால் அடைந்ததும் அவ்விடத்தே அவளும் நளன்மீது காதல் கொண்டதும் ஆகியன பற்றிய செய்திகள் முழுவதையும், அன்னம், நளனுக்கு எடுத்துக் கூறியது. அன்னம் உரைத்த சொற் களைக் கேட்டு, நளராசனுக்கு முன் மயங்கிய போக எஞ்சி யிருந்த அறிவும் அப்போது மயங்கிச் செயலழிய லாயிற்று.

படுகரிபோல் கிடந்தான்

கேட்ட செவிவழியே கேளா துணர்வோட
ஓட்டை மனத்தோ டுயிர்தாங்கி—மீண்டும்
குழியில் படுகரிபோல் கோமான் கிடந்தான்
தழலில் படுதளிர்போல் சாய்ந்து. 71

அவளும் காதல் நோயுற்றாள் எனக்கேட்ட தன் செவி யின் வழியாகவே, தன்னைக் கேளாதேயே தன் உணர்வும் ஓடிப் போய்விட, உடைந்துபோன நெஞ்சத்துடனே தன் உயிரையும் சுமந்துகொண்டிருந்தான் நளன். மீளவும், எரி தழலிலே பட்ட தளிரைப்போல வாட்டமுற்றான். கொப்பத் திலே வீழ்த்தப்பட்டு மேலேறவியலாது தவித்துக் கிடக்கும் யானையைப்போல, நளனும் தான் பட்டுக்கிடந்த ஆசைப் படுகுழியினின்றும் கரையேற இயலாது வாடியிருந்தான்.

ஏதமிலாக் காட்சியர்

கோதை சுயம்வரநாள் கொற்றவனுக் குற்றுரைப்ப
ஏதமிலாக் காட்சியர்வந் தெய்தினார்—போதில்
பெடையோடு வண்டுறங்கும் பேரொலிநீர் நாடன்
அடையாத வாயில் அகம். 72

நளமன்னனை அடைந்து, தமயந்தியின் சுயம்வரநாளைப் பற்றிய செய்தியை அவனுக்கு அறிவிக்கப், பழுதற்ற காட்சி யுடையவரான தூதர்கள், மலர்களிடத்தே வண்டினம் தம் பெடையோடும் உறங்கிக் கிடக்கும் பேராரவாரத்தை யுடைய நீர்வளமிக்க நாடனாகிய அந்நளனுடைய, அடைத்த லில்லாத தலைவாயிலினிடத்தே வந்து அப்போது சேர்ந் தனர். [ஏதமிலாக் காட்சி-உண்மையைத் தெளிவுற உணரும் பழுதற்ற அறிவுநலம்.]

பொலிந்ததேர் பூட்டு

காவலன்தன் தூதர் கடைக்கா வலர்க்கறிவித்
தேவலிற்போய் ஈதென் றியம்புதலும்—மாவில்

பெலிபந்ததேர் பூட்டென்றான் பூவாளி பாய
மெலிந்ததோள் வேந்தன் விரைந்து. 73

வீமராசனின் அந்தத் தூதர்கள், தாம் மன்னவனைக் காண விரும்பிய செய்தியைக் கடைக் காவலர்க்கு அறிவித்து, மன்னனின் ஆணை பெற்றுச் சென்று கண்டு, தாம் அறிவிக்க வந்த செய்தி இதுவாகும் எனவும் சொல்லினர், மலரம்புகள் பாய, அதனால் மெலிந்த தோள்களை உடைய நளன், அதைக் கேட்டதும், குதிரைகளாற் சிறப்புற்ற தன் தேரினை விரைந்து பூட்டுக என்று, தன் தேர்ப்பாகனை உடனே ஏவினான்.

குவளை தேனூறும் நாடன்

கெட்ட சிறுமருங்குல் கீழ்மகளிர் நீள்வரம்பில்
இட்ட பசுங்குவளை ஏரடித்த—கட்டி
கரையத்தேன் ஊறும் கடல்நாடன் ஊர்க்கு
விரையத்தேர் ஊரென்றான் வேந்து. 74

தேரும் பூட்டப்பெற்றுத் தயாராயிற்று. அதன்மேல் அமர்ந்த நளன், 'ஒடுங்கிப் போயிருக்கும் சிறிதான இடையினையுடைய கடைசியர்கள், நீண்ட வரப்புகளிலே களையாகப் பறித்துப் போட்ட பசுமையான குவளை மலர்களினின்றும் ஏரடித்த கட்டி கரையுமாறு தேனூறிக் கொண்டிருக்கும் கடல் நாடனாகிய வீமனின் ஊருக்குத், தேரினை விரைவாகச் செலுத்துக' என்று பாகனை ஏவினான்.

நல்லுயிர் வாழும் நகர்

சடைச்செந்நெல் பொன்விளைக்கும் தந்நாடு பின்னாகக்
கடல்தானை முன்னாகக் கண்டான்—அடற்கமைந்த
வில்லியரும் பொன்தாம வீமன் திருமகளாம்
நல்லுயிரும் வாழும் நகர். 75

செந்நெற்பயிர்கள், சடை போன்ற அடர்த்தியான கதிர்களிலே பொன்போன்ற நெல்மணிகளை விளைக்கின்ற தன்னுடைய நிடதநாடு பிற்பட்டுப் போகவும், கடல்போன்ற தன் பெரும் படைகள் முற்படச் சென்றுகொண்டிருக்கவும் வழிகடந்து, போரிடற்கு என அமைந்த வில் வீரர்களும், அழகிய மலர்மாலை யணிந்த வீமராசனின் திருமகளாம் தன் நல்ல உயிரும் வாழ்ந்திருக்கும் நகரத்தினை, நளனும் சென்றடைந்து கண்டான்.

குலமுனிவன் அடைந்தான்

நெற்றித் தனிக்கண் நெருப்பைக் குளிர்விக்கும்
கொற்றத் தனியாழ்க் குலமுனிவன்—உற்றடைந்தான்
தேனாடும் தெய்வத் தருவும் திருமணியும்
வானாடும் காத்தான் மருங்கு. 76

(இங்கே இங்ஙனமாக) ஒப்பற்ற சிவபெருமானின் நெற்றிக்கண்ணாகிய அழலையும் குளிர்விக்கின்றதும், இசையிலே வெற்றிகொண்டு விளங்குவதுமான, ஒப்பில்லாத மகதி என்னும் யாழினைக் கைக்கொண்டு இசையுடன் வருபவன் சிறந்த தவமுனிவனாகிய நாரதன்; அம் முனிவன், வண்டினம் விரும்பிச் சேர்ந்திருக்கும் தெய்வத்தன்மையுடைய கற்பகதருவும், அழகிய சிந்தாமணியும், வானகத்து நாடும் என்பனவற்றைக் காத்துவரும் இந்திரனிடத்தே அப்போது சென்று சேர்ந்தான். [நாரத வீணைக்கு 'மகதியாழ்' எனவும் பெயர். திருமணி-சிந்தாமணி. தெய்வத்தரு-கற்பக விருட்சம்.]

5. இந்திர தூதுவன்

நாரதனார் முகம் நோக்கினன்

வீரர் விறல்வேந்தர் விண்ணாடு சேர்கின்றார்
ஆரும் இலரால் என் றையுற்று—நாரதனார்
நன்முகமே நோக்கினன் நாகம் சிறகரிந்த
மின்முகவேற் கையான் விரைந்து. 77

மலைகளின் சிறகுகளை அரிந்தவனும், மின்போலும் ஒளி வீசும் முனையினையுடைய வச்சிரப் படையினைக் கைக்கொண்டிருப்பவனுமாகிய தேவேந்திரன், 'வீரராகவும் ஆண்மையுடைய வேந்தராகவும் இந்த விண்ணகத்துக்கு வந்து சேர்கின்றவரான யாரும் இன்று வரவில்லையே!' என்று ஐயுற்று, அங்கிருந்த நாரதரின் நன்மைபொருந்திய முகத்தினை விரைந்து நோக்கினன். [நாகம்-மலைகள். இவை, முற்காலத்துச் சிறகுடன் இருந்தன வெனவும், இந்திரன் இவற்றைச் சிறகரிந்து செருக்கடக்கியதாகவும் புராணங்கள்

கூறும். அவனிடம் அகப்படாத, 'மைநாகபர்வதம்' மட்டும் கடலுள் புகுந்து ஒளிந்துகொண்டது என்பர்.]

சுயம்வரத்துக்குப் போயினர்

வீமன் மடந்தை மணத்தின் விரைதொடுத்த
தாமம் புனைவான் சயம்வரத்து – மாமன்னர்
போயினர் என்றான் புரந்தரற்குப் பொய்யாத
வாயினான் மாதவத்தோர் மன். 78

பொய் உரையாத வாயினை உடையவரும், பெருந்தவ முனிவர்கட்கு எல்லாம் மன்னனாகத் திகழ்பவருமாகிய அந்த நாரத முனிவர், இந்திரன் உரைத்ததைக் கேட்டு, 'வீமராசனின் மகளான தமயந்தியின் திருமணத்துக்காக வகுத்த மணச்செறிவுடன் கட்டிய மண மாலையினை அணிந்து கொள்ளக் கருதி, அந்தச் சுயம்வரத்திற்காகப் பெருமன்னர் எல்லோரும் குண்டினபுரத்துக்குப் போயுள்ளனர்'' என்று சொன்னார்.

காமன் திருவுக்குக் காப்பு

அழகு சுமந்திளைத்த ஆகத்தாள் வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை – மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீபம் மற்றவளே
காமன் திருவுக்கோர் காப்பு. 79

''அழகினைச் சுமந்து இளைத்துப்போயின உடலினை உடையவள்; வண்டினம் நெருங்கிப் பழகுகின்ற இயற்கை மணம் பொருந்திய கருமையான கூந்தலையுடைய பாவை போல்பவள்; இளங் களிறுகளையுடைய வீமராசனின் குலத்துக்கு ஓர் ஒப்பற்ற அணையாவிளக்குப் போன்றவள்; மேலும், மன்மதனுடைய செல்வத்திற்கே ஒரு பாதுகாப்பு எனவும் விளங்குபவள் அந்தத் தமயந்தி என்பவள்'' எனவும் நாரதர் கூறினார்.

மாலை குறித்து எழுந்தார்

மால்வரையை வச்சிரத்தால் ஈர்ந்தானும் வானவரும்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்—சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன் திருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து. 80

நாரதர் அப்படிச் சொல்லவும், செருக்கினால் மயக்கங் கொண்ட மலைகளைத் தன் வச்சிரப்படையினாலே சிறகரிந் தோனாகிய தேவேந்திரனும் பிற தேவர்களும், கோற்றொழி லினையுடைய வளைகளையணிந்த தமயந்தியின் சுயம்வர மண மாலையைக் கருதியவராகப், பெருமைபெருந்திய வானகத்தை விட்டு நீங்கி விதர்ப்பராசனின் திருநகரான குண்டினபுரத் துக்குச் செல்பவராக மண்ணகத்தை நோக்கி மகிழ்ச்சியுடனே புறப்பட்டார்கள்.

கெடுத்ததனைத் தேடுவான்

பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபாற் போயினதன்
சிந்தை கெடுத்ததனைத் தேடுவான்—முந்தி
வருவான்போல் தேர்மேல் வருவானைக் கண்டார்
பெருவானின் தேவர் பெரிது. 81

பசுமையான மாலையினை உடையவனும் வேற்படையினை ஏந்தியவனுமான வீமராசனின் மகளிடத்தே போயின, தன் மனத்தைக் காணாது விட்டுவிட்டுத் தேடுபவனாக, அனைவருக் கும் முற்பட வருபவனைப்போலத் தேரின்மேல் விரைவுடன் வந்துகொண்டிருந்த நளனைப் பெரிதான வானகத்தின் தேவர்கள் அனைவரும் சிறப்பாகக் கண்டனர்.

ஏவல் தொழிலுக்கு இசை

காவற் குடைவேந்தைக் கண்ணுற்ற விண்ணவர்கோன்
ஏவல் தொழிலுக் கிசையென்றான்—ஏவற்கு
மன்னவனும் நேர்ந்தான் மனத்தினான் மற்றதனை
இன்னதென் றோரா திசைந்து. 82

நாட்டினைச் செவ்வையாகக் காத்தருளும் வெண் கொற்றக் குடையினையுடைய வேந்தனான நளனைத், தேவேந் திரனும் கண்ணுற்றான். 'நான் ஏவுகின்ற ஒரு காரியத்தைச் செய்வதற்கு இசைவாயாக' என்று வேண்டினான். தன்உள்ளத் திலே அந்த ஏவல் இன்னதென உணராத நளனும், இந்திரன் கேட்டவாறே அந்தக் காரியத்தைச் செய்வதற்கு மனம் பொருந்தியவனாக இசைந்தான்.

மங்கைபால் தூதாகு என்றான்

செங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
எங்களிலே சூட்ட இயல்வீமன்—மங்கைபால்

தூதாக என்றுனத் தோகையைத்தன் ஆகத்தால்
கோதாக வென்றுனக் கோ. 83

"சிவந்த கண்களையுடைய மதயானைகளையும் தேர்களையும் உடைய வேந்தனே! இனிய மணமாலையினை எங்களிலே ஒருவருக்குச் சூட்டுமாறு, இயல்பிற் சிறந்த வீமராசனின் திருமகளிடத்தே, நீ எங்கட்குத் தூதாகச் செல்வாயாக" என்றுன் தேவேந்திரன். அதனைக் கேட்டதும் நளன், அந்தத் தமயந்தியின் நினைவைத் தன்னுள்ளத்துச் சாரமற்றதொன்றுக எண்ணித், தன் காதலையும் அப்போது வெற்றி கொண்டவனுயினுன். [கோது-சக்கை. தோகை-தமயந்தி.]

குழல்போல உழலும்

தேவர் பணிதலைமேற் செல்லும் திரிந்தொருகால்
மேவுமிளங் கன்னிபால் மீண்டேகும்—பாவிற்
குழல்போல நின்றுழலும் கொள்கைத்தே பூவின்
நிழல்போலும் தண்குடையான் நெஞ்சு. 84

இந்த உலகனைத்திற்கும் நிழல்போல விளங்கும் தண்மை வாய்ந்த வெண்கொற்றக் குடையினை உடையவன் நளன். அவன் மனமானது, தேவர்களின் பணியினை முதன்மையாகக் கருதி அதன்பாற் செல்லும்; ஒரு சமயம் அதனின்றும் திரிவுற்று, மீண்டும் இளங்கன்னியான தமயந்தியினிடத்தே மீளவும் செல்லும். இப்படியாகப், பாவினிடத்தே அதை இயக்குகின்ற மூங்கிற்குழல் போய்ப்போய் மீளுமாறுபோல, அவனுடைய மனமும் திரிந்து வருத்தமுறுவதாயிற்று.

காவல் கடக்குமாறு என்?

ஆவ துரைத்தாய் அதுவே தலைநின்றேன்
தேவர்கோ னேயத் திருநகரில்—காவல்
கடக்குமா றென்னென்றுன் காமநீர் ஆழி
அடக்குமா றுள்ளத் தவன். 85

காமமென்னும் நீர்ப்பெருக்கினையுடைய கடலையும் அடக்கும் திண்மைகொண்ட உள்ளத்தவனுன அந்த நளன், "தேவர்கோனே! நினக்கு ஆவதான ஒன்றினைச் சொன்னுய். அதனை முடிக்கவே யானும் முற்பட்டேன். ஆனுல், அந்த அழகிய நகரிலேயுள்ள காவல்களைக் கடக்கும் வழி யாதோ?" என்றுன்.

காணார் போய்க் காண்

வார்வெஞ் சிலையொழிய வச்சிரத்தால் மால்வரையைப்
போர்வெஞ் சிறகறுத்த பொற்றேளான்—யாருமுனைக்
காணார்போய் மற்றவளைக் காணென்றான் கார்வண்டின்
பாணாறும் தாரனைப் பார்த்து. 86

நெடிதான உயர்ந்த மைநாகம் என்னும் மலை ஒன்று மட்டும் நீங்கப், பிற மலைகள் எல்லாவற்றுடனும் போரிட்டுத் தன் வச்சிரப்படையினாலே, அவற்றின் சிறகறுத்துச் செருக் கடக்கிய அழகிய தோள்களையுடையவன் இந்திரன். அவன், நளன் கூறியதைக் கேட்டதும், கருநிற வண்டுகளின் பண் முழங்கிக்கொண்டிருக்கும் தாரினை அணிந்திருந்தோனாகிய அந் நளனைப் பார்த்து, ''யாரும் உன்னைக் காணமாட்டார்; நீ போய் அவளைக் கண்டு வா'' என்றான்.

பொன்னாடு போன்றதே

இசைமுகந்த வாயும் இயல்தெரிந்த நாவும்
திசைமுகந்தால் அன்ன தெருவும்—வசையிறந்த
பொன்னாடு போந்திருந்தாற் போன்றதே போர்விதர்ப்ப
நன்னாடற் கோமான்தன் நாடு. 87

பேராற்றல் கொண்ட விதர்ப்பமாகிய நல்ல நாட்டிற் குரிய மன்னனாகிய வீமராசனின் நாடானது, புகழ்களை எல்லாம் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிற வாயில்களை யும், இயல்புகள் தெரிந்து அமைக்கப்பெற்ற வீடுகளையும், எட்டுத் திக்குகளையும் அடக்கிக் கொண்டிருப்பனபோன்று விளங்கும் தெருக்களையும் உடையதாகக் குற்றமற்ற பொன் னாடே வானகத்திலிருந்து வந்திருந்ததைப்போன்று சிறப் புடன் விளங்கிற்று. [இது, நளன் குண்டினபுரத்துட் செல் வான், தனக்குட் கண்டு கூறுவதாக அமைந்தது.]

குவளையும் தாமரையும்

தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே—ஆங்கு
மதுநோக்கும் தாரானும் வாள்நுதலும் தம்மில்
பொதுநோக்கு எதிர்நோக்கும் போது. 88

எவருமறியாதபடி சென்று அந்தப்புரமாகிய கன்னி மாடத்தையும் நளன் அடைந்தான். தமயந்தியின் முன்னர்ச் சென்றும் நின்றான். அவ்விடத்தே—

வண்டினம் வந்துமொய்க்கும் தாரினனான நளனும், ஒளியுடைய நெற்றியினளான தமயந்தியும், தமக்குள் பொது நோக்காக ஒருவரையொருவர் எதிரெதிரே நோக்கிக் கண்டனர். கண்ட அந்த வேளையிலே தமயந்தியின் கண்களாகிய இனிதான குவளை மலர்களினிடத்தே, நளனுடைய செந்தாமரை மலர்போன்ற கண்கள் மலர்ந்தன. அதேபோன்று, அவன் கண்களாம் தாமரை மலர்களிடத்தே அவளுடைய கண்களாம் அழகிய குவளைமலர்களும் பூத்தன. (இருவர் கண்களும் காதலால் ஒன்றிலொன்று கலந்தன என்பது குறிப்பு.)

கற்பின் தாழ் வீழ்த்த கதவு

நீண்ட கமலத்தை நீலக் கடைசென்று
தீண்டும் அளவில் திறந்ததே—பூண்டதோர்
அற்பின்தாழ் கூந்தலாள் வேட்கை அகத்தடக்கிக்
கற்பின் தாழ் வீழ்த்த கதவு. 89

நளனுடைய நெடிதான தாமரைபோலும் கண்களை, நீல மலர்கள் போன்றதான தமயந்தியின் கண்கள் சென்று தீண்டிய அந்த அளவிலே, நீண்டு தொங்கும் கூந்தலுடையவளான தமயந்தியும், தன் விருப்பத்தை உள்ளேயே அடக்கி கொண்டு, கற்பு என்னும் தாழிட்டுப் பூட்டியிருந்த தன்மனக் கதவானது முன்பே கொண்டதோர் அன்பின் திறத்தினாலே திறந்துகொண்ட ஒரு நிலையினளும் ஆயினாள். [பூண்டதோர் அன்பு-உழுவலன்பு. அற்பு-அன்பு. மனத்தை அறையாகவும் கற்பைக் கதவாகவும் உவமித்தனர்.]

நெஞ்சு தடவும் நெடுங்கண்கள்

உய்ஞ்சு கரையேற ஒட்டுங்கொல் ஒண்டொடியாள்
நெஞ்சு தடவும் நெடுங்கண்கள்—விஞ்சவே
நீண்டதோ அங்ஙனே இங்ஙனே நீள்மலராள்
ஆண்டதோள் மன்னன் அழகு. 90

நளனுடைய நெஞ்சகத்தைத் தடவுகின்ற ஒளிமிக்க தொடியுடையாளின் நீண்ட கண்கள், மிகவும் அளவுகடந்து தான் அங்ஙனமே நீண்டுவிட்டனவோ? வெற்றித்திருமகள் ஆட்சி செலுத்தியிருக்கும் தோள்களையுடைய மன்னவனின் அழகு என்னும் கடல்தான், இனி அத் தமயந்தியையும் அதனின்றும் உயர்ந்து கரையேறுவதற்கு விட்டுவிடுமோ!

[அவள் அவன் மார்பழகையும் தோளழகையும் வைத்தகண் வாங்காது பார்த்தபடியே நின்ருள் என்பது குறிப்பு.]

அன்பைத் தடுத்த நாண்

மன்னுகத் துள்ளழுந்தி வாரணிந்த மென்முலையும்
பொன்னுணும் புக்கொளிப்பப் புல்லுவனென்—றுன்ன
எடுத்தபே ரன்பை இடையே புகுந்து
தடுத்ததே நாணும் தறி. 91

"கச்சணிந்த மென்மையான என் முலைகளும் பொற் சங்கிலியும், இம் மன்னவனின் மார்பிடத்தே உள்ளாக அழுந்திப் புகுந்து ஒளிந்து கொள்ளுமாறு இவனைத் தழுவுவேன்" என்று நினைத்துக் கொள்ளும்படியாக எழுந்த அவளுடைய பெரிதான காதலன்பை, நாணம் என்னும் கட்டுத் தறியானது இடையே புகுந்து அப்போது தடைசெய்து விட்டது [அவனை ஆசையால் தழுவத் துடித்தும், நாணத்தால் அங்ஙனம் செய்யாது நின்ருள் தமயந்தி' என்பது கருத்து.]

'உள்ளவா சொல்' என்ருள்

காவல் கடந்தெங்கள் கன்னிமா டம்புகுந்தாய்
யாவனே விஞ்சைக் கிறைவனே—தேவனே
உள்ளவா சொல்லென்ருள் ஊசற் குழைமீது
வெள்ளவாள் நீர்சோர விட்டு. 92

நாணம் தடைசெய்யவே, தமயந்தி, தன் கன்னிமாடத்தினுள் புதியனுகப் புகுந்த நளனைக் கடிந்துகொள்ளவும் தொடங்கினுள். அவ்ள் கண்கள் அப்போது நீர் சொரிந்தன. அசைந்தாடுகின்ற காதணிகளின்மீது கண்களினின்றும் வெள்ளம்போற் பெருகிய ஒளியுடைய நீரினைச் சோரவிட்டுக் கொண்டவளாகக், "காவல்களை எல்லாம் கடந்து எங்கள் கன்னிமாடத்தினுள்ளே புகுந்தனையே, நீதான் யாவனோ? வித்தியாதர உலகின் தலைவனே? தேவனே? உள்ளபடி உண்மையைச் சொல்லுவாயாக" என்ருள்.

நன்றும் சொன்னுன்

தீராத காமத் தழலைத்தன் செம்மையெனும்
நீரால் அவித்துக் கொடுநின்று—வாராத
பொன்னுடர் ஏவலுடன் போந்தவா சொல்லித்தன்
நன்னுடுஞ் சொன்னுன் நளன். 93

தீராத தன்னுடைய காமத்தீயினைத் தன்னுடைய செம்மையென்னும் உயரிய பண்பாகிய நீரினாலே அவித்துக் கொண்டு நின்று, அவ்விடத்தே வந்திராத பொன்னாட்டின ரான தேவர்களின் ஏவலுடனே தான் வந்த காரியத்தையும் நளன் அவளுக்குச் சொன்னான். அத்துடன், தன்னுடைய நல்ல நிடதநாட்டினையும் பற்றிச் சொல்லித் தான் யாரென் பதையும் விளக்கினான்.

புரவலனைச் சூட்டுவாய்

என்னுரையை யாதென் றிகழா திமையவர்வாழ்
பொன்னுலகம் காக்கும் புரவலனை—மென்மாலை
சூட்டுவா யென்றான் தொடையில்தேன் தும்பிக்கே
ஊட்டுவான் எல்லாம் உரைத்து. 94

தன்னுடைய மலர்மாலையி னிடத்தேயுள்ள தேனை வண்டினத்துக்கு ஊட்டிக்கொண்டிருப்பவனான நளன், தமயந் திக்குத் தான் வந்த வகையெல்லாம் எடுத்துச் சொன்னான். அதன்பின், "என் பேச்சினை யாதோவென்று இகழாதே: இமையவர் வாழும் பொன்னுலகத்தினைக் காக்கின்ற தேவர் கோமானையே சுயம்வரத்தன்று மென்மாலை சூட்டி, நின் நாதனாக நீ ஏற்றுக்கொள்வாயாக" என்று வேண்டினான்.

நின்பொருட்டால் சுயம்வரம்

இயமரம்நின் றார்ப்ப இனவளைநின் றேங்க
வயமருதோள் மன்னா வகுத்த—சுயம்வரந்தான்
நின்பொருட்டால் என்று நினைகென்றாள் நீள்குடையான்
தன்பொருட்டால் நைவாள் தளர்ந்து. 95

நீண்ட வெண்கொற்றக் குடையினை உடையவனான நளனின் பொருட்டாகவே மனமாழ்கி வருந்துவோள் தமயந்தி. அவள், அவன் உரைத்ததனைக் கேட்டதும் மிகவும் தளர்ச்சிகொண்டாள். "வெற்றி பொருந்திய தோள்களை யுடைய மன்னவனே! இசைக் கருவிகள் பலவும் நிலையாக ஆரவாரிக்கவும் சங்கத்தொகுதிகள் நிலையாக முழக்கமிடவும் வகுத்த இந்தச் சுயம்வரமே நின் பொருட்டாகத்தான் என்பதனை, நின் நினைவிற் கொள்வாயாக" என்றாள்.

அவையகத்தே எழுந்தருள்க

போதரிக்கண் மாதராள் பொன்மாலை சூட்டத்தான்
ஆதரித்தார் தம்மோ டவையகத்தே—சோதிச்
செழுந்தரள வெண்குடையாய் தேவர்களும் நீயும்
எழுந்தருள்க என்றாள் எடுத்து. 96

செந்தாமரைப் போதினைப் போலச் செவ்வரி பரந்திருக்கும் கண்களையுடைய அழகியாளான தமயந்தியானவள், 'ஒளியுள்ள செழுமையான முத்தினைப்போல விளங்கும்வெண் கொற்றக்குடையினை உடையவனே! அழகிய மலர்மாலையினைச் சூட்டுவதற்கு விரும்பியவரான பலரோடும், நின்னை விடுத்த தேவர்களும் நீயும் நாளை அவையகத்தே வந்து எழுந்தருள்க' எனவும் எடுத்துரைத்தாள். ['நீயும் வருக' என்றது, தன் எண்ணத்து உறுதியைக் காட்டியதுமாகும்.]

இந்திரனைத் தொழுதான் நளன்

வானவர்கோன் ஏவல் வழிச்சென்று வாணுதலைத்
தானணுகி மீண்டபடி சாற்றவே—தேன்முரலும்
வண்டார் நளன்போந்து வச்சிரா யுதற்றொழுதான்
கண்டார் உவப்பக் கலந்து. 97

வண்டினம் மொய்த்து ஆரவாரித்துக் கொண்டிருக்கும் வளமையான தாரினை அணிந்தோனான நளன், தேவர் கோமானின் ஏவலின் வழியே தமயந்தியைச் சேர்ந்து, தான் மீண்டுவந்த தன்மையைச் சொல்லுவதற்காகக், கண்டவர் யாரும் தம்முட் கலந்துபேசி மகிழ்ச்சிகொள்ளுமாறு சென்று, அந்த வச்சிராயுதத்தோனைத் தொழுதும் நின்றான். [கண்டார் கலந்து உவத்தல்-நளனைக் கண்ட தேவர்கள் உவப்புடன் தமக்குட் கலந்துபேசிக்கொண்டு ஆரவாரித்தல்.]

வன்மொழியும் மென்மொழியும்

விண்ணவர்தம் ஏவலுடன் வீமன் திருமகள்பால்
நண்ணு புகழ்நளனும் நன்குரைத்த—பெண்ணணங்கின்
வன்மொழியும் தேவர் மனமகிழத் தான்மொழிந்த
மென்மொழியும் சென்றுரைத்தான் மீண்டு. 98

தேவர்களுடைய ஏவுதலுடனே வீமராசனின் திருமகளிடத்தே சென்ற புகழ்மிக்க நளனும், தேவர்கட்கு மாலையிடு

மாறு தான் கூறிய மென்மையான உரைகளையும், பெண்களிற் சிறந்த அவளுடைய உறுதிமொழியினையும், தேவர்களின் மனம் மகிழுமாறு மீண்டுபோய் அவரிடத்தே சொன்னான்.

வரம் ஈந்தார்

அங்கி அமுதம்நீர் அம்பூ அணியாடை
எங்குநீ வேண்டினைமற் றவ்விடத்தே—சங்கையறப்
பெற்றாய் எனவருணன் ஆகண்டலன் தருமன்
மற்றோனும் ஈந்தார் வரம். 99

வருணனும் இந்திரனும் இயமனும் மற்றுத் தீக்கடவுளு மாகிய அந்நால்வரும், "நெருப்பு, அமுதம், நீர், அழகிய பூமாலை, அணிகலம், ஆடை ஆகிய இவைகளை எல்லாம், எந்த இடத்தில் நீ பெறவேண்டுமென விரும்புகின்றனையோ, அந்த இடத்திலேயே சந்தேகமறப் பெறுபவனாவாய்" என்று நளனுக்கு வரம் அளித்தார்கள்.

மனக் காவலர்

அங்கவர்கள் வேண்டும் வரங்கொடுக்கப் பெற்றவர்கள்
தங்களொடும் தார்வேந்தன் சார்ந்தனன்மேல்—மங்கை
வயமருவு கின்ற மணக்கா வலர்க்குச்
சயமரந்தான் கண்டதோர் சார்பு, 100

அவ்விடத்தே, அத் தேவர்கள், தாம் விரும்பிய வரங்களை எல்லாம் கொடுத்தனர். அவற்றைப் பெற்றுக்கொண்டு, அவர்கள் தங்களோடும், தமயந்திமேல் ஆர்வம் கொண்டிருக்கின்ற மணத்திற்கு வந்திருக்கும் மன்னர்களுக்குச் சுயம்வர மண்டபத்தை ஏற்படுத்திச் சார்ந்திருக்கும் இடமாக வைத்திருந்த இடத்தினை நோக்கிச்சென்று, அதனிடத்தே நளனும் ஒருசார் அமர்ந்திருந்தனன்.

6. நோய் மிகுந்த நெஞ்சம்

பின்போன வன்னெஞ்சு

தூதுவந்த காதலனைச் சொல்லிச் செலவிடுத்த
மாதுவந்து பின்போன வன்னெஞ்சால்—யாதும்
அயிர்த்தாள் உயிர்த்தாள் அணிவதனம் எல்லாம்
வியர்த்தாள் உரைமறந்தாள் வீழ்ந்து. 101

தேவர்களின் பொருட்டாகத் தன்னிடத்தே தூதுவனாக வந்த தன்னுடைய காதலனைத், தன் உள்ளத்துக் காதலைச் சொல்லிச் செல்லவிடுத்த தமயந்தியானவள், மகிழ்வுடனே தன்னைக் கைவிட்டு அவன் பின்னாகவே போய்விட்ட தன்னுடைய கொடிய உள்ளத்தின் காரணமாக, எல்லாவற்றையுமே ஐயுறலானாள்; பெருமூச்செறிந்தாள்; அழகிய முகமெல்லாம் வியர்வு அரும்ப நின்றாள்; சோர்ந்து வீழ்ந்து பேச்சற்றும் கிடக்கலானாள்.

உள்ளரிக்கச் சோர்ந்தாள்

உள்ளம்போய் நாண்போய் உரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம்போய் வேகின்ற மென்தளிர்போல் —பிள்ளைமீன்
புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை பூவாளி
உள்ளரிக்கச் சோர்ந்தாள் உயிர். 102

மீன் குஞ்சுகளைப் பறவையினங்கள் மேய்கின்ற விதர்ப்ப நாட்டு மன்னவனது மகளான தமயந்தியானவள், மலர்க் கணைகள் தன் உள்ளத்தை அரிக்க, உள்ளம் தன்வசமிழந்தும், நாணத்தைப் போகவிட்டும், உரைசோர்ந்தும், செவ்வரி படர்ந்த நெடிதான கண்களிலேயிருந்து வெள்ளமாகக் கண்ணீர் போய்க்கொண்டிருக்கவும், அழலிற்பட்டு வேகின்ற மென்மையான தளிரினைப்போல வாட்டமுற்றுத், தன் உயிரும் சோர்ந்துபோயின நிலையினள் ஆயினாள்.

ஆசை போகாதென்று அழிந்தாள்

பூவின்வாய் வாளி புகுந்த வழியேயென்
ஆவியார் போனாலும் அவ்வழியே —பாவியேன்
ஆசைபோ காதென் றழிந்தாள் அணியாழின்
ஓசைபோல் சொல்லாள் உயிர்த்து. 103

அழகிதான யாழிசை போன்ற இனிதான சொல்லினை யுடையவளான தமயந்தியானவள், ''மலரினாலான மன்மத பாணங்கள் புகுந்த துளைகளின் வழியாக என் உயிரே போய் விட்டதானாலும். அந்த வழியாகப் பாவியேனுடைய ஆசை மட்டும் போகவே போகாது' என்று கூறி நெடுமூச்செறிந்து, தன் அறிவும் மயங்கியவளாயினாள்.

விரிகதிரோன் சென்றடைந்தான்

வையம் பகலிழப்ப வானம் ஒளியிழப்ப
பொய்கையும் நீள்கழியும் புள்ளிழப்ப—பையவே

செவ்வாய அன்றில் துணையிழப்பச் சென்றடைந்தான்
வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு, 104

வையகமெல்லாம் பகற்பொழுதாகிய ஒன்றினை இழக்கவும், வானகமெங்கும் ஒளியினை இழக்கவும், பொய்கைகளும் நெடிதான உப்பங்கழிகளும் தம்மிடையே இருக்கும் நீர்ப்பறவைகளை இழக்கவும், சிவந்த வாயினவான அன்றில்கள் தம் துணைகளை இழக்கவுமாக, வெம்மை பொருந்திய விரிந்த கதிர்களை உடைய ஞாயிறுனவன், மெல்ல மெல்லச் சென்று மேலைத்திசை மலையிடத்தை அடைந்து மறையலானுன்.

குடபால்வரை மறைந்தாள்

மாயிரு ஞாலத் துயிர்காண வானரங்கில்
பாயிருள் என்னும் படாம்வாங்கிச்—சேய்நின்று
அறைந்தா ரணம்பாட ஆடிப்போய் வெய்யோன்
மறைந்தான் குடபால் வரை. 105

வெய்யவனுகிய கூத்தன், மிகப்பெரிதான மண்ணுலகத்து உயிர்த்தொகைகள் எல்லாம் காணுமாறு, வானவெளியாகிய கூத்தாடரங்கத்திலே பரந்துள்ள இருள் என்னும் திரைச் சீலையை இழுத்துவிட்டுத், தொலைவிலே நின்று வேதகோஷம் செய்வோர் உரத்த குரலிலே பாடத்தொடங்கக், கூத்தாடிச் சென்றவாறே மேற்றிசை மலையிடத்தேபோய் மறைந்தும் போயினுன்.

மெல்ல நடந்தது அந்தி

மல்லிகையே வெண்சங்கா வண்டுதே வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப – முல்லையெனும்
மென்மாலை தோளசை மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது. 106

மல்லிகையின் அரும்புகளையே வெண்சங்குகளாகக் கொண்டு வண்டினம் ஊதி முழக்கமிட்டன. சிறந்த கரும்பினுலாகிய வில்லினை உடையோனுன மன்மதன், மலர்க் கணைகளை ஆராய்ந்து எடுத்துக் கொண்டு வந்து, தன்னைப் பற்றிய உண்மையினைப் பேணுதற்குத் தொடங்கினுன். இப்படியாக, முல்லைமலர் என்னும் மென்மையான மாலையானது தோளிடத்தே கிடந்து அசைந்தாட, புல்லிய மாலைக்

காலமாகிய அந்திப்பொழுதும் மெல்ல மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தது. [அந்தியின் வருகையை, 'ராஜபவனி' யாகக் கவிஞர் உவமிக்கிறார்.]

அந்தி செய்த கலக்கம்

புற்கென்றார் அந்தி புனைமலர்க்கண் நீரரும்ப
நிற்கின்ற தந்தோ நிலங்காப்பான்—முற்கொண்டு
அடைகின்ற வேந்தர்க்கும் ஆண்டஞ்சி னோர்க்கும்
இடைநின்ற காலம்போல் இன்று. 107

மேற்சொன்ன அந்திப்பொழுதானது, காமநோயினாலே தம் உடல் பசலைகொண்டு விளங்குவாரது புனைதலுடைய குவளைமலர் போன்ற கண்களிலே நீர் அரும்புமாறு, நிலத்தினைக் காக்கின்றதொரு குறிக்கோளினை முன்னிறுத்திக் கொண்டு ஒரு நாட்டினை முற்றுகை இடுவாராய் வருகின்ற வேந்தர்களுக்கும், அவ்விடத்தே அரணுள்ளிருந்து அச்சத்துடன் இருப்போர்க்கும் இடையே நிலைபெற்றுள்ள தோர் கலக்கமிகுந்த காலத்தைப்போல, இப்போது நிலை பெற்றிருக்கின்றதே! ஐயகோ! [முற்றுகைக் காலத்து இரு சாரார்க்கும் ஏற்படும் கவலைகள் மிகுதியாகும். அது போன்றதோர் கவலையினை அந்தி தருவதாயிற்று என்பது கருத்து. இது கவிக் கூற்று.]

அழல் பெய்வான் வந்த பிறை

பைந்தொடியாள் ஆவி பருகுவான் நிற்கின்ற
அந்தி முறுவலித்த தாமென்ன—வந்ததால்
மையார்வேற் கண்ணாள் வனமுலைமேல் ஆரழலைப்
பெய்வான் அமைந்த பிறை. 108

மை தீட்டப்பெற்றதொரு வேலாயுதத்து முனையினைப் போன்று விளங்கும் கண்களையுடையவளான தமயந்தியின் அழகிய முலை முற்றத்திடத்தே, மிக்க நிலவொளியாகிய நெருப்புத் தணலைப் பெய்வதற்கென்றே அமைந்த நிலவும், பசுமையான வளையல்கள் அணிந்தவளான அவளுடைய உயிரினைக் குடிக்கும் பொருட்டாகப் பொருந்தியிருக்கின்ற அந்தி என்னும் கூற்றானது நகை கொண்டது என்றுசொல்லும் படியாக, வானிலே எழுந்து தோன்றிற்று. [அந்திப்போதைக் கூற்றுக்கு உவமையாக்கினார். அது முறுவலித்தல், தன் செயலின் வெற்றி உறுதியினாலே என்பது கருத்து. அது தமயந்திக்குக் காமநோயினை மிகுவிப்பது ஆயிற்று.]

நீணிலா என்னும் நெருப்பு

கூட்டுமைபோற் சிறந்த கூரிருளைக் கூன்கோட்டால்
கோட்டுமண் கொண்ட குளிர்திங்கள்—ஈட்டுமணிப்
பூணிலா மென்முலைமேல் போதச் சொரிந்ததே
நீணிலா வென்னும் நெருப்பு. 109

தம் கண்களுக்கு இடுவதன் பொருட்டாக நங்கையர்கள் கூட்டுகின்ற மையினைப்போலச் சிறந்த காரிருளினைத், தன் வளைவான கொம்பினுலே குத்தி வீழ்த்திக் கோட்டுமண் கொண்டது குளிர்ச்சியான நிலவு. சேர்த்துக் கோக்கப்படும் நவமணிகளினுலாகிய பூண் இல்லாதிருக்கும் தமயந்தியின் மென்மையான முலைகளின் மேலாகவும், அத் திங்கள் நெடிதான நிலவு என்னும் நெருப்பினை மிகுதியாகச் சொரிவதாயிற்று. ['பிறையினை' இங்கே ஆன் ஏற்றின் வளைந்த கொம்பிற்கு உவமையாக்கினுர். 'கூரிருளை வென்ற திங்கள், இருண்டமணியிலாத முலைமேலும் நிலாவழலைச் சொரிந்ததே' என, அதன் செயலினது பொருந்தாத் தன்மையினையும் கவி கூறுகின்ருர். நிலவு, பிறை நிலவு என்பதும் விளங்கும்.]

பிழைத்தால் வந்தேன் என்னும்

அன்னங்காள் நீங்களுமவ் வாதித்தன் தானும்போய்
மன்னும் படியகலா வல்லிரவில்—மின்னும்
மழைத்தாரை வல்லிருட்கும் வாடைக்கும் நாங்கள்
பிழைத்தால்வந் தேனென்னும் பேர். 110

"அன்னப் பறவைகளே! நீங்களும் அந்த ஆதித்தனும் போய்விட்டீர்கள்; செறிந்திருப்பது போன்று அகலாதிருக்கும் கடுமையான இரவுப்பொழுதும் வந்தது. மின்னலுடனே கூடிய மழைத்தாரைகள் வீழ்கின்றன. அதற்கும், கடுமையான இருளுக்கும், வந்துறும் வாடைக்கும் நாங்கள் தப்பிப் பிழைத்தோமானுல், 'வந்தேன்' என நீங்களும் என் பேரினைச் சொல்வீர்களாக. [இரவுக்கும் வாடைக்கும் ஆற்ருது தமயந்தி இங்ஙனம் புலம்புகின்ருள். விடியும் வரையும் உயிரோடிரேன் என்கிருள் அவள்.]

கொப்புளம் கண்ட குளிர்வானம்

செப்பிளங் கொங்கைமீர் திங்கட் சுடர்ப்பட்டுக்
கொப்புளங் கொண்ட குளிர்வானை—இப்பொழுதும்

மீன்பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ
தேன்பொதிந்த வாயால் தெரிந்து. 111

"குங்குமச் சிமிழினைப்போன்ற திரட்சியையுடைய இளையவான கொங்கைகளை உடைய தோழியரே! திங்களாகிய தீச்சுடர்பட்டுக் கொப்புளங்கள் எழுந்துள்ள குளிர்ச்சியான வானத்தினைத், தேன்போன்ற இனிய வாயூறல் நிரம்பியிருக்கும் உங்கள் வாயினாலே, 'தெளிவாக விண்மீன்கள் நிறைந்துள்ள வானகம்' என்கின்றீர்களே? அதுதான் என்னவோ சொல்வீராக?"

பொடியாடி கொன்றது பொய்!

கானுந் தடங்காவும் காமன் படைவீடு
வானுந்தேர் வீதி மறிகடலும்—மீனக்
கொடியாடை வையமெல்லாம் கோதண்ட சாலை
பொடியாடி கொன்றதெல்லாம் பொய். 112

கானகங்களும் அகன்ற சோலைகளும் எல்லாம் காமதேவனின் பாசறைகளாகும். வானம், அவனுடைய தேர் செல்லும் வீதியாகும். சுருண்டெறியும் அலைகளையுடைய கடல், அவனுடைய மீனக்கொடியினைக் கொண்டதான துகிலாகும். இந்த வையகமெல்லாம், அவனுடைய வில்லின் தொழிலைக்காட்டுகின்ற இடமாகும். இங்ஙனம் இருப்பதனால் நீறணிந்தோனாகிய சிவபெருமான் அவனைக் கொன்றது எனக் கூறுவதெல்லாம் பொய்க்கதையே யாகும் [அஃது உண்மையாயின், அவனுடைய ஆதிக்கம் இங்ஙனம் இருக்குமாறு எவ்வாறென அவள் புலம்புகின்றனள். பொடி–திருநீறு]

இரவின் உள்ளம் கொடியது

கொள்ளைபோ கின்ற துயிரென்னும் கோளரவின்
முள்ளெயிறோ மூரி நிலாவென்னும்—உள்ளம்
கொடிதிரா என்னும் குழையும் தழல்போல்
நெடிதிரா வாய்புலர நின்று. 113

'என் உயிர் கொள்ளைபோகின்றதே' என்பாள். 'வன்மை பொருந்திய பிறைநிலவானது கொடிய அரவினுடைய முள் போன்ற நச்சுப்பல்லோ?' என்பாள். 'இவ் இரவுப் பொழுதினது உள்ளமானது மிகவும் கொடுமையானது'

என்பாள். இங்ஙனமாகப் புலம்பிப் புலம்பி, நெருப்பினைப் போலச் சுட்டு வருத்துகின்ற நெடிதான இரவுப்பொழு தெல்லாம் வாய் புலம்பியவளாகத், தமயந்தி காம நோயினால் வாட்டம் கொள்வாளாயினாள்.

எரிகின்ற தென்னோ இரா?

வெங்கதிரோன் தன்னை விழுங்கிப் புழுங்கியோ
கொங்கை அனலிற் கொழுந்தியோ—திங்கள்
விரிகின்ற வெண்ணிலவால் வேகின்ற தேயோ
எரிகின்ற தென்னோ இரா. 114

'இந்த இரவுப்பொழுது ஏனோ என்னை மிகவும் சுடுகின்றதே? வெம்மையுடைய கதிரோனை விழுங்கியதனால் தன்னுள் கொதிப்பு ஏற்பட்டதனாலோ? அல்லது, என் கொங்கைகளிடத்தே எழுகின்ற அனலினாலே கொளுத்தப் பெற்றதோ? அல்லது, திங்கள் பரப்புகின்ற வெண்ணிலவினாலே வேகின்றதோ? என்ன காரணமோ? யாதோ அறியேனே?'

மதியம் கான்ற வெயில்

ஊழி பலவோர் இரவாயிற் றோவென்னும்
கோழி குரலடைத்த தோவென்னும்—ஆழி
துயிலாதோ என்னும் சுடர்மதியம் கான்ற
வெயிலால் உடலுருகா வீழ்ந்து. 115

மதியமானது சுடரிட்டு எரிக்கின்ற வெயிலினாலே தமயந்தி உடலுருகிச் சோர்ந்து வீழ்ந்தாள். 'ஊழிகள் பலவும் சேர்ந்து இந்த ஓர் இரவாக ஆயிற்றோ?' என்று வருந்தினாள். 'சாமக் கோழியும் கூவுவதற்கு இயலாது குரல் அடைத்துப் போயிற்றோ?' என்று சொல்லி ஏங்கினாள். 'கடலும் துயில்கொள்ளாதோ?' என்று சொல்லிக் கலங்கினாள். [இது கவிக் கூற்று.]

பொறுக்குமோ துயர்

ஆடி வரிவண் டருகே பறக்கவே
வாடி மெலிவாள் வனமுலைமேல்—ஓடிப்
பொறையாகச் சோர்வாள் பொறுக்குமோ மோகத்
துறைவாய்,அடங்காத் துயர்? 116

''வரிகளையுடைய வண்டானது பூந்தாதிலே ஆடியதாக அவளருகே வந்து பறக்கவே, அவளும் தன் காதலனை நினைந்து வாட்டமுற்று மெலிவாளாயினுள். அழகான முலைகள் ஏக்கத்தால் மேலெழுந்து விம்மியதாக, அதனைப் பொறுக்கவியலாப் பாரமாகக் கருதிச் சோர்வாளாயினுள். மோகம் என்னும் பாதையினிடத்தே சென்ற அவள், அடங்காத அத் துயரங்களை எல்லாம் பொறுப்பவளும் ஆவாளோ?'' [இது தோழியர் சொல்வது.]

பொர அளித்தான் கண்ணி

ஈர மதியே! இளநிலவே இங்ஙனே
சோர்குழலின் மீதே சொரிவதெவன்—மாரன்
பொரவளித்தான் கண்ணி உனக்குப் புலரா
இரவளித்தான் அல்லனோ இன்று. 117

''குளிர்ச்சியான மதியமே! மன்மதனுனவன் இன்று என்னைப் பொருதற்கென்று நினக்கு மாலைசூட்டி அனுப்பி வைத்தானே? மேலும், விடியாத இரவையும் நினக்குத் துணையாக அவன் அளித்தானும் அல்லனோ? இருந்தும், இவ்விதமாகத் தளர்ந்த என் கூந்தலின் மீதிலேயே இளநிலவினை நீ சொரிந்துகொண்டிருப்பதுதான் எக்காரணம் பற்றியோ? அதனைச் சொல்வாயாக.'' [ஈரம், இரக்கமும்; இளமை, இளம்பருவமும் ஆம். அவை உடைத்தாயிருந்தும் தன்னை வருத்துவதேன் என அவள் வருந்துகிருள்.]

தனியே தளர்கின்ருள்

தாங்கு நிலவின் தழல்போய்த் தலைக்கொள்ளத்
தேங்குழல்சேர் வண்டு சிறைவெதும்ப—ஓங்குயிர்ப்பின்
தாமங் கரியாத் தனியே தளர்கின்ருள்
யாமங் கரியாக இன்று. 118

நிலவின் தழலானது போய்த் தாங்கும் தலையினிடத்தேயும் வெப்பங் கொள்ளுமாறு செய்ய, மணமிக்க கூந்தலினிடத்தே சேர்ந்த வண்டுகளின் சிறகுகள் அதனுல் வெப்பங்கொள்ள, நெடிய சுடுமூச்சினுலே அணிந்துள்ள மாலையும் கரிந்துபோக, இந்நாள் யாமமே தனக்குச் சான்ருகக் கொண்டவளாகத் தமயந்தி தனிமையினுலே தளர்கின்ருளாயினுள்,

தானிருந்து தவம் செய்வாள்

மையிட்ட கண்ணருவி வார வளைசோரக்
கையிற் கபோலத் தலம்வைத்து—மெய்வருந்தித்
தேனிருந்த பூங்கணையே தீயாகத் தேமொழியாள்
தானிருந்து செய்வாள் தவம். 119

தேனென இனிக்கும் பேச்சினை உடையவளான தமயந்தி, மையிடப்பெற்ற தன் கண்கள் அருவியினைப்போல நீர் சொரிந்து கொண்டிருக்க, உடல் தளர்வதனுல் கைவளைகளும் கழன்று வீழக், கன்னத்தைத் தன் கையிடந்தே சாய்த்து வைத்துக் கொண்டவளாகத். தேன் பொருந்திய மலரம்புகள் எரிநெருப்பாகத் தன்னைச் சுட்டுவருத்த மெய்வருந்திய வளாகத், தவம் செய்வாள் ஆயினுள்.

பொதுமகளிர் இதயம் போன்றது

அள்ளிக் கொளலாய் அடையத் திரண்டொன்ருய்க்
கொள்ளிக்கும் விள்ளாத கூரிருளாய்—உள்ளம்
புதையவே வைத்த பொதுமகளிர் தங்கள்
இதயமே போன்ற திரா. 120

அன்றைய இரவுப்பொழுதானது கைகளாலே அள்ளிக் கொள்ளலாம் போன்ற தன்மையுடையதாய், அடைவாகத் திரட்சியுற்று ஒன்றுபட்டு விளங்கியது. தீக்கொள்ளிக்குங் கூடப் பெயர்ந்துபோகாத பேரிருளாயும் இருந்தது. தங்கள் உள்ளங்களை வஞ்சனையால் புதையுண்டதாகவே வைத்துள்ள பொதுமகளிரின் இதயங்களைப் போன்று, அந்த இரவும் மிகவும் இருண்டு விளங்கிற்று. [பொதுமகளிர் இதயத்தே தம்மைக் கூடியவர்பால் அன்பில்லாதது போலவே, இரவும் இரக்கமற்றதாய்த் திகழ்ந்தது என்பது கருத்து. ‘அள்ளிக் கொளல்’ செறிவுமிகுதியைக் காட்டுதற் பொருட்டுத் கூறியது.]

காவலர் போந்தார்

ஊக்கிய சொல்லர் ஒலிக்கும் துடிக்குரலர்
வீக்கிய கச்சையர் வேல்வாளர்—காக்க
இடையாமம் காவலர்கள் போந்தார் இருளின்
புடைவாய் இருள்புடைத்தாற் போன்று. 121

அத்தகைய இரவுப்பொழுதின் இடையாமத்திலே, ஊர் காவலர்கள் உரத்த குரல் எழுப்புவோராகவும், ஒலிக்கும் துடி முழக்கினை உடையவராகவும், அரையிற் கட்டிய கச்சையினை உடையவராகவும், வேலினைச் கைக்கொண்டோ ராகவும், இருளே உருவெடுத்து வந்தாற்போன்ற உருவின ராகவும், ஊரினைக் காவல்செய்யும் பொருட்டாக, வீதிகளிலே புறப்பட்டு வந்தார்கள்.

உலகு துயில் புக்கது

சேமங் களிறுபுகத் தீம்பாலின் செவ்வழியாழ்
தாமுள் ளிழைபுகுந்த தார்வண்டு—காமன்தன்
பூவாளி ஐந்திற் புகத்துயில் புக்கதே
ஓராது முந்நீர் உலகு. 122

களிறுகள் எல்லாம் தத்தம் கட்டுமிடங்களில் சென்று புகுந்தன. இனிதான முறையிலே செவ்வழிப் பண்ணினை எழுப்புகின்ற யாழ் எல்லாம் தத்தம் உள்ளுறைகளினுள்ளே புகுந்தன. தார்களிலே மொய்க்கின்ற வண்டுகள் காமனது மலரம்புகள் ஐந்தினுள்ளே புகுந்து துயில் கொண்டன. இவ்வாறுகக் கடல் சூழ்ந்த உலகமெல்லாம் இடையீடின்றித் துயிலிடத்தே புகுந்திருந்தன. [வண்டு, காமனது வில்லிற்கு உரிய நாணுதலின் இப்படிக் கூறினர்.]

பேயுறங்கும் நள்ளிரவு

ஊன்தின் றுவகையால் உள்ள வுயிர்புறம்பே
தோன்றும் கழுதும் துயின்றதே—தான்றன்
உரைசோரச் சோர உடல்சோர வாயின்
இரைசோரக் கைசோர நின்று. 123

பேய் ஒன்று புலாலைத் தின்றது. அந்த மகிழ்ச்சியினால் அதனிடம் உள்ள உயிரும் வெளிப்புறத்தே தோன்றுவது போல அது பெருமூச்சுவிட்டுக் கொண்டதாகத் தூங்கத் தொடங்கிற்று. அது தானுகவே பேசிக்கொண்டிருந்த பேச்சும் தளர்ந்துகொண்டே போயிற்று. உடலும் சோர்வுற்றது. வாயில் வைத்த ஊனுகிய இரையும் நழுவி விழலாயிற்று. கைகளும் செயலற்றுச் சோர்ந்தன. இப்படி யாக அந்தப் பேயும் நின்றுகொண்டே உறங்கும் நள்ளிரவு வேளை அதுவாகும். [கழுது–பேய். 'தான் தன் உரை' என்றது, ஊனுண்ட களிப்பால் அது தானுகவே பேசிக் கொண்டிருந்த சொற்கள்.]

அவிழ்ந்தது கண்ணீர்

அன்றில் ஒருகண் துயின்றொருகண் ஆர்வத்தால்
இன்றுணைமேல் வைத்துறங்கும் என்னும்சொல்—இன்று
தவிர்ந்ததே போலரற்றிச் சாம்புகின்ற போதே
அவிழ்ந்ததே கண்ணீர் அவட்கு. 124

அன்றிற் பறவையானது, ஒருகண் துயின்று, மற்றொரு கண்ணினைத் தன் துணையின்மீதுள்ள ஆசையினாலே அதன்பால் வைத்து உறங்கும் என்று சொல்வார்கள்; அந்தச் சொல்லும் இந்நாள் பொய்யாகிப் போய்விட்டதுபோல, அன்றிற் பறவையும், தன் துணையைக் கூப்பிட்டுக் கூவித் துயருறுகின்ற பொழுதிலே, தமயந்திக்கும் தனிமைத் துயரால் கண்ணர் கட்டவிழ்ந்து பெருகலாயிற்று.

இரவுக்கு இரையோ யான்?

ஏழுலகும் சூழிருளாய் என்பொருட்டால் வேகின்ற
ஆழ்துயரம் ஏதென் றறிகிலேன்—பாழி
வரையோ எனுநெடுந்தோள் மன்னவோ தின்னும்
இரையோ இரவுக்கு யான்? 125

"பாழி மலைதானோ என்னும்படியான வலிமையுள்ள உயர்ந்த தோள்களையுடைய மன்னவனே! ஏழுலகினையும் சூழ்ந்துகொள்ளும் பேரிருளாக என் பொருட்டாக வெந்து கொண்டிருக்கின்ற பெருந்துயரம் எதனாலோவென்று அறியாதுள்ளேனே? என் செய்வேன்? யான் இந்த இரவிற்குத் தின்னும் இரைதானோ? நீரே கூறுவீராக" என்று புலம்பினாள் அவள். [பாழி-வலிமையான மலைத் தொடர்; நன்னன் என்பானுக்குரியதாகச் சங்க நூற்களுள் குறிக்கப்பெறுவது. இந்நாளைய சவ்வாது மலைத் தொடர்களுள் ஒருபகுதி.]

வாடைக்கு ஆற்றாள்

கருவிக்கு நீங்காத காரிருள்வாய்க் கங்குல்
உருவிப் புகுந்ததால் ஊதை—பருகிக்கார்
வண்டுபோ கட்ட மலர்போல் மருள்மாலை
உண்டுபோ கட்ட உயிர்க்கு. 126

"வாள் வேல் முதலியவான எவ்விதமான படைக்கருவிகளுக்கும் அஞ்சிப் போயெழியாத கருமையான இருளினிடத்தே, அதனை ஊடுருவிக்கொண்டு புகுந்தது வாடைக்

காற்று. கருநிற வண்டானது தேனைப் பருகிவிட்டுக் கழித்துப் போட்டுவிட்டுப் போனதோர் மலரினைப்போல, மயக்கஞ் செய்கின்ற மாலைக் காலமானது, சாரத்தை யெல்லாம் உண்டுகழித்துப் போட்டுப்போன என் உயிருக்கு, அந்த வாடைக் காற்றும் ஒரு கூற்றாக வந்ததே!'' [வாடைக் காற்றுக்கு ஆற்றாதவளாகத் தமயந்தி இவ்வாறு வருந்தினாள்.]

நாணொடு நின்றழியும்

எழுந்திருக்கும் ஏமாந்து பூமாந் தவிசின்
விழுந்திருக்கும் தன்னுடம்பை மீளச்—செழுந்தரளத்
தூணோடு சேர்க்கும் துணையேதும் இல்லாதே
நாணோடு நின்றழியும் நைந்து. 127

காமநோயினால் இங்ஙனம் வாடிவருந்தும் தமயந்தியின் நிலை மேலும் கவலைக்கிடமாக ஆயிற்று. திடுமென எழுந்து நிற்பாள். அவனை வரக்காணாது ஏமாந்து அழகிய மாந்துளிர் போன்ற மென்மையான படுக்கையிலே சென்று விழுந்து கிடப்பாள். மீண்டும் தன்னுடலை வளவிய முத்துக்கள் பதித்திருக்கும் தூணோடு சேர்த்துக் கொள்வாள். இவ்வாறு, தனக்கொரு துணையும் இல்லாதவளாகி, நாணத்தோடும் நின்று வருந்தி, நெஞ்சம் அழிபவளானாள் அவள்.

தழலே உயிர்க்கும்

விரிகின்ற மெல்லமளி வெண்ணிலவின் மீதே
சொரிகின்ற காரிருள்போல் சோரும்—புரிகுழலைத்
தாங்கும் தளரும் தழலே நெடிதுயிர்க்கும்
ஏங்கும் துயரோ டிருந்து. 128

விரிவு கொள்ளுகின்ற மென்மையான அமளி என்னும் வெண்ணிலவின் மீதிலே சொரிகின்ற காரிருளினைப்போல, அவிழ்ந்து தொங்கிக்கிடக்கும் தன் சுருண்ட கூந்தலைத் தன் கையினாலே தாங்கிக்கொண்டு, அவள் தளர்வு கொள்வாள். நெருப்பாகவே நெடுமுச்சு விடுவாள். துயரத்தோடு படுக்கையுங் கொள்ளாமல் அதன்மேல் அமர்ந்திருந்து ஏங்கிக் கொண்டே இருப்பாள். [கூந்தல், கூட்டத்திடையே சோர்தல் இயல்பாதலால், அஃதன்றிச் சோர்ந்த தன் கூந்தலைத் தாங்கிக்கொண்டு, தமயந்தி நளனை நினைந்து வருந்தலாயினாள் என்பது குறிப்பு.]

ஏகாத இரவு

உடைய மிடுக்கெல்லாம் என்மேலே ஒச்சி
விடிய மிடுக்கின்மை யாலோ—கொடியன்மேல்
மாகாதல் வைத்ததோ மன்னவர்தம் இன்னருளோ
ஏகாத தென்னே இரா? 129

"தனக்குள்ள ஆற்றலை எல்லாம் என்மேலேயே செலுத்தி விட்டு விடிவதற்கு ஆற்றலில்லாமற் போனதனாலோ, அல்லது கொடியவனாகிய மன்மதனின்மீது பேரன்பினை வைத்துவிட்டதனாலோ, நளமன்னனது இனிதான அருளின் காரணத்தாலோ, இரவும் போகாதேயே இருக்கின்றது! அதுதான் எதனாலோ?"

மயங்கும் தெளியும்

மயங்கும் தெளியும் மனநடுங்கும் வெய்துற்று
உயங்கும் வறிதே உலாவும் - வயங்கிழைபோய்ச்
சோரும் துயிலும் துயிலாக் கருநெடுங்கண்
நீரும் கடைசோர நின்று. 130

சற்றே மயக்கங்கொள்வாள்; பின் அதனின்றுந் தெளிவும் அடைவாள். மனம் நடுக்கங் கொள்வாள்; வெப்பம் கொண்டு வருந்துவாள். வறிதாக உலாவிக்கொண்டிருப்பாள். விளங்கும் அணிகள் கழன்றுபோகச் சோர்வாள். துயில்தலையுடைய நீண்ட கருங்கண்களிற் கண்ணீரும் கடை சோரும்படியாகத் துயில் கொள்ளாத நிலையிலும் நிற்பாள்.

ஆருயிர்க்கு அரண் உண்டோ?

விழுது படத்திணிந்த வீங்கிருள்வாய்ப் பட்டுக்
கழுதும் வழிதேடும் கங்குல்—பொழுதிடையே
நீருயிர்க்கும் கண்ணோடு நெஞ்சுருகி வீழ்வார்தம்
ஆருயிர்க்கும் உண்டோ அரண்? 131

"விழுதாக ஊன்றி நிலைபெற்று விடுவதுபோலச் செறிந்திருந்த பேரிருளினிடத்தே அகப்பட்டுக் கொண்டாள் தமயந்தி. பேயும் வழிகாணாது தேடிக்கொண்டிருக்கும் இரவுப் பொழுதினிடையிலே, நீரினைச் சொரிகின்ற கண்களோடு, நெஞ்சம் உருகி மயங்கிக் கிடப்பவர்களது அரிதான உயிருக்கும் ஒரு பாதுகாவலுண்டோ? [இது கவிக் கூற்று.]

7. சுயம்வரக் காட்சி

பூசுரர்தம் கைம்மலரும் பூங்குமுத மும்முகிழ்ப்பக்
காசினியும் தாமரையும் கண்விழிப்ப—வாசம்
அலர்ந்ததேங் கோதையின் ஆழ்துயரத்தோடு
புலர்ந்ததே அற்றைப் பொழுது. 132

பூசுரர்களது கைகளாகிய மலர்களும் அழகிய குமுதமலர்களும் குவியவும், உலகமும் தாமரை மலரும் துயிலெழுந்து கண் விழிக்கவும், மணம் பரந்த தேன் பொருந்திய கோதையுடையவளாகிய தமயந்தியின் ஆழ்ந்த துயரத்தோடு கூடியதாக, அற்றைப் பொழுதும் புலர்ந்தது.

கதிரோன் தோன்றினன்

வில்லி கணையிழப்ப வெண்மதியம் சீரிழப்பத்
தொல்லை இருள்கிழியத் தோன்றினன்—வல்லி
மணமாலை வேட்டிடுதோள் வாளரசர் முன்னே
குணவாயில் செங்கதிரோன் குன்று. 133

பூங்கொடியாளான தமயந்தியின் மணமாலையினை அடைதலை விரும்பிய தோள்களை உடையவரான வாளாற்றல் மிக்க அரசர்களின் முன்பாகக், கரும்பு வில்லோனாகிய மதனவேள் தன் அம்புகளை இழந்து போகவும், வெண்ணிலவு தன் சிறப்புக்களை இழந்துபோகவும், தமயந்திக்குத் தொல்லையாகவே விளங்கிய இருளாகிய, பகை உடைபட்டுப் போகுமாறு, செங்கதிரோன் கிழ்த்திசைக்குன்றின் மேலாக எழுந்து தோன்றினன்.

தமயந்திக்குத் துன்பம் செய்வாரைக் காணின், அவள் மணமாலையினை விரும்பிவந்து கூடியிருந்த வாளரசர் பொறார்; ஆகவே இரவெல்லாம் அவளுக்குத் துயரிழைத்த மதனனும் மதியமும், இருளும் பொழுதுவிடியப் புறமுதுகிட்டன என்றனர்.

மன்னர் பலரும் வந்தார்

முரை செறிந்த நாளேழும் முற்றியபின் கொற்ற
வரைசெறிந்த தோள்மன்னர் வந்தார்—விரைசெறிந்த
மாலை துவள முடிதயங்க வால்வளையும்
காலை முரசும் கலந்து. 134

முரசு அடித்து அறிவிக்கப்பட்ட ஏழுநாட்களும் கழிந்த பின், வெற்றி பொருந்திய மலைபோன்ற தோள்களையுடைய மன்னாகள், மணச்செறிவுள்ள மாலைகள் தங்கள் மார்பு களிற் கிடந்து தவ்ளவும், திருமுடிகள் ஒளி செய்யவுமாக, வெண்சங்குகளும் கரலை முரசமும் கலந்து முழங்கச் சுயம்வர மண்டபத்தை நோக்கி வந்தார்கள்.

நடுவணைய வந்திருந்தான்

மன்றலந்தார் மன்னர் நடுவணைய வந்திருந்தான்
கன்று குதட்டிய கார்நீலம்—முன்றில்
குறுவிழிக்கு நேர்நாடன் கோதைபெருங் கண்ணின்
சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய். 135

கன்றுகள் வாயாற் குதட்டி உமிழ்ந்த கருங்குவளை மலர்கள், மனைமுற்றங்களிலே மகளிர்களது சிறுநோக்கத் திற்கு ஒப்பாகக் கிடக்கின்ற நாட்டினையுடையவன் நளன். தமயந்தியினுடைய அகன்ற கண்களிலே தோன்றும் சிறு நோக்கத்திற்குத் தவஞ்செய்து கொண்டிருந்தவனாகிய அவன், அழகிய தாரணிந்த மன்னவர்களுக்கு இடையிலே, தானும் சுயம்வரத்திற்கு வந்திருந்தான். [சேய்-முருகன்; அவன் போல் அழகன் நளன் என்பது குறிப்பு.]

அணங்கு வந்தாள்

நித்திலத்தின் பொற்றோடு நீலமணித் தோடாக
மைத்தடங்கண் செல்ல வயவேந்தர்—சித்தம்
மருங்கே வரவண்டின் பந்தர்க்கீழ் வந்தாள்
அருங்கேழ் மணிப்பூண் அணங்கு. 136

அரிதான ஒளியுடைய மணிகளாலான ஆபரணங்களை அணிந்த, அணங்குபோல்வாளான தமயந்தியானவள் நித்திலம் பதித்த பொன்னாலான தோடுகள் நீலமணியை வைத்திழைத்த தோடாகத் தோற்றும்படியாக, மைதீற்றிய அகன்ற கண்கள் காதளவுக்கும் சென்று கொண்டிருக்கவும், வெற்றி வேந்தர்களின் உள்ளமெல்லாம் இருபக்கத்தும் வந்து கொண்டிருக்கவும், வண்டுகளின் பந்தர்க்குக் கீழாகச் சுயம்வர மண்டபத்திற்கு வந்தனள்.

வெளிவழி புகுந்த கண்

பேதை மடமயிலைச் சூழும் பிணைமான்போல்
கோதை மடமானைக் கொண்டணைந்த—மாதர்

மருங்கின் வெளிவழியே மன்னவர்கண் புக்கு
நெருங்கினவே மேன்மேல் நிறைந்து. 137

பேதைத் தன்மையினை உடையதோர் இளமயிலைச் சூழ்ந்து வருகின்ற பெட்டை மான்களைப் போலத், தமயந்தியாகிய இளமானைச் சூழ்ந்துகொண்டு, மாதர்கள் சுயம்வர மண்டபத்தைச் சேர்ந்தனர். அப்போது, அந்த மாதர்களின் இடைகளது இடையே தோன்றிய வெளிகள் வழியாக உட்புகுந்து, மன்னவரின் கண்கள், தமயந்தியை மென்மேலும் நிரம்பியவாய் நெருங்கின.

மண்டபம் புகுந்தாள்

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. 138

மின்னலின் நிறத்தைப்போன்ற சிவந்த தாள்களையும் வெண்மையான சிறகுகளையும் உடைய அன்னமானது, செந்தாமரைப் பூக்கள் நிறைந்த தடாகத்தினிடத்தே போவதனைப்போல, திருமகள்போன்ற இளைய பாவையாகிய தமயந்தியானவள், மன்னர்களின் கண்களாகிய செந்தாமரை மலர்கள் பூத்த அந்தச் சுயம்வர மண்டபத்தினிற் போய்ச் சேர்ந்தாள்.

கடைபார்த்து நின்றான்

வடங்கொள் வனமுலையாள் வார்குழைமேல் ஓடும்
நெடுங்கண் கடைபார்த்து நின்றான்—இடங்கண்டு
பூவாளி வேந்தன்றன் பொன்னாவம் பின்னேயிட்டு
ஏவாளி நாணின்மேல் இட்டு. 139

மலரம்புகளையுடைய வேந்தனாகிய மன்மதன், தகுதியான இடத்தைப் பார்த்தவனாகத், தன் அழகிய அம்புக் கூட்டைப் பின்புறமாக இட்டுக்கொண்டான். அம்பு வரிசைகளைத் தன் கருப்பு வில்லின் சுருப்பு நாணின்மேல் இட்டுக் கொண்டான். முத்து வடத்தினை ஏந்திக்கொள்ளுகின்ற அழகிய மார்பகங்களை உடைய தமயந்தியின், நீண்ட குண்டலங்களின்மீது ஓடிக்கொண்டிருக்கும் நெடிதான கண்களின் கடையினைப் பார்த்தவாறே, தான் அம்பு தொடுத்தற்குத் தக்க சமயத்தையும் எதிர்பார்த்திருந்தான்.

தனிக்கொடிக்குக் காட்டினுள்

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினுள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. 140

இயல்புகளிலே சிறந்த அணங்குபோல்வாளான சேடி ஒருத்தி, தேர் வேந்தர்கள் தம்மை 'இவரிவர் இன்னுர்' எனத் தெரிந்துகொண்டு, 'அந்தந்த மன்னவர்களுடைய குலச்சிறப்பும், பெயரும், வளநாடும் இன்னபடியான தன்மையுடையன' என்று, வெற்றிமாலையினையுடைய வேந்தனுன வீமராசனின் ஒப்பற்ற கொடியாகிய தமயந்திக்கு சொல்லிய வாறே, ஒவ்வொருவராகக் காட்டிக்கொண்டே வந்தாள்.

சோழநாடன் இவன்

பொன்னியமுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்
சென்னி தடவும் திருநாடன்—பொன்னிற்
சுணங்கவிழ்ந்த பூண்முலையாய் சூழமரிற் றுன்னுர்
கணங்கவிழ்ந்த வேலனிவன் காண். 141

பொன்னைப் போலத் தேமல்கள் படர்ந்திருக்கின்ற பூணிட்ட மார்பகங்களை உடையவளே! வந்து சூழ்ந்த போரிலே பகைவர்களின் திரள் எல்லாம் வீழ்ந்துபடுவதற்கு ஏதுவான வேற்படையினைக் கொண்டிருக்கும் இவனைப் பார்; இவன், பொன்னிநதியின் அமுதம்போன்ற நீரின் புது வெள்ளத்தே எழுகின்ற அலைகளின் முனைகள், அழகிய கமுக மரங்களினது உச்சியினைத் தடவிக் கொண்டிருக்கும் நீர்வளமுடைய சோழநாட்டின் அரசனுவான்.

பாண்டி நாடன் இவன்

போர்வாய் வடிவேலாற் போழப் படாதோரும்
சூர்வாய் மதர்அரிக்கண் தோகாய்கேள்—பார்வாய்ப்
பருத்ததோர் மால்வரையைப் பண்டொருகாற் செண்டால்
திரித்தகோ விங்கிருந்த சேய். 142

வடித்துக்கொண்ட வேற்படையினுலே போரினிடத்தே பிளக்கப்படாதவர்களும் அச்சமுறும் தன்மையினைக் கொண்ட, மதர்த்த, அரிபடர்ந்த கண்களையுடைய மயில் போன்றவளே, கேட்பாயாக: இங்கே வீற்றிருக்கின்ற

முருகனைப்போன்ற மன்னவன், பூமியினிடத்தேயே பெரிதான, ஒப்பற்ற பெருமலையாம் மேருவினை, முன்னொரு காலத்தே செண்டினால் அடித்து வெற்றிகொண்ட பாண்டிய குமரனுவான்.

சேரன் இவன்

வென்றி நிலமடந்தை மென்முலைமேல் வெண்டுகில்போல்
குன்றருவி பாயும் குடநாடன் —நின்றபுகழ்
மாதே யிவன்கண்டாய் மானத் தனிக்கொடியின்
மீதே சிலையுயர்த்த வேந்து. 143

நிலைபெற்ற புகழினையுடைய மாதே! வெற்றிப் புகழுடைய நிலமகளின் மென்மையான முலைகளின்மேலாக வெண்மையான துகில் விளங்குமாறுபோல, மலைகளிடத்திருந்து அருவிகள் பாய்கின்ற மேற்றிசை நாட்டிற்கு உரியவனான, ஒப்பற்ற தன் கொடியின்மீதிலே வில்லை உயர்த்து அமைத்துள்ள சேரவேந்தன் இவன் ஆவான். [மானத்தனிக் கொடி-பெருமையுள்ள ஒப்பற்ற கொடி.]

யதுகுல வேந்தன் இவன்

ஆழிவடி யம்பலம்ப நின்றானும் அன்றொருகால்
ஏழிசைநூற் சங்கத் திருந்தானும்—நீள்விசும்பின்
நற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானும் கண்டாயிச் சேய். 144

வடித்த தன் அம்பினைக் கடலிலே முன்னொரு காலத்தில் கழுவிக்கொண்டவனும், முன் ஒரு காலத்திலே ஏழுவகையான இசையமைதிகளையுடைய இசைச்சங்கத்திலே இருந்தவனும், நெடிதான ஆகாயத்திலுள்ள நல்ல தேவர்களின் பொருட்டாகத் தூது நடந்தவனும், பாரதப்போர் வெற்றி பெறச் காரணனும் இந்தக் குமரனேயாவான்; இவனைக் சரண்பாயாக:

கார்த்த வீரியார்ச்சுனன் என்பவன் யதுகுலத்தான். அவன் நருமதைச் சங்கமத்தருகே இராவணனை மீட்கவந்த அரக்கரைக் கொன்று கடலிலே ஆயுதங்களைக் கழுவினான். மற்றொருமுறை நாரதருக்கும் விசுவாவசுவிற்கும் சங்கீத சர்ச்சை நடந்த சங்கத்தின் தலைவனாயிருந்தான். அவன் பெருமைகள் யதுகுலத்திற்குச் சுட்டப்பெற்றன. பாண்டவர் தேவாம்சமாகப் பிறந்தவர்; அவர்கட்குத் தூது சென்றவன்

கண்ணன்; அவன் யதுகுலத்தான்; பாரதப் போரை முடித்த வனும் அவனே. நளசரிதை பாரதத்திற்கு முற்பட்டது. ஆயினும் கவிஞர் இவ்வாறு சிறப்பிக்கிறார். ரஜீ என்பவன் ஒருவனைத் தேவதைகள் இந்திர தூதனாக வந்து அழைத்துச் சென்று, உலகத்தை நாசஞ்செய்து கொண்டிருந்த அரக்கரைக் கொல்வித்த கதையினை இப்பகுதி குறிக்கும் எனவும் உரைப்பர்; பாண்டியனையே குறிப்பதாகலாம் எனவும், ஆயின் 'முன்னரே பாண்டியனைப்பற்றிக் கூறப்பட்டதனால் கூறியது (142) கூறலாம் எனவும், நளவெண்பாவின் உரையாசிரியருள் ஒருவராகிய சீனிவசா இராகவாசாரியார் அவர்கள் இச்செய்யுளை விளக்குவார்கள்.

குருநாடர் கோமான்

தெரியில் இவன் கண்டாய் செங்கழுநீர் மொட்டை
அரவின் பசுந்தலையென் றஞ்சி—இரவெல்லாம்
பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புள் தாலாட்டும்
வள்ளைக் குருநாடர் மன். 145

செங்கழுநீர் மலரினது மொட்டினைப் பாம்பினது பசுமையான தலையென்று நினைத்து அச்சங்கொண்டு இரவுப்பொழுதெல்லாம் பறவைக் குஞ்சானது வாய்விட்டு ஓலமிட, அதன் தாய்ப்பறவை தாலாட்டிக் கொண்டே இருக்கும், வள்ளைக் கொடிகள் மலிந்த குருநாட்டின் கோமான் இவன். தெரிய விரும்பினால் இவனையும் காண்பாயாக.

'பிள்ளைக் குருகு' என்றது, நாரைக்குஞ்சு எனவோ அன்றிற் குஞ்சு எனவோ, யாதேனும் ஒரு நீர்ப்பறவைக் குஞ்சாகக் கொள்க.

மத்திரத்தார் மகன்

தேமருதார்க் காளை யிவன்கண்டாய் செம்மலர்மேல்
காமருசங் கீன்ற கதிர்முத்தைத்—தாமரைதன்
பத்திரத்தால் ஏற்கும் படுகர்ப் பழனஞ்சூழ்
மத்திரத்தார் கோமான் மகன். 146

தேன் பொருந்தியிருக்கும் தாரினை அணிந்த ஏறுபோன்றோனான இவன், சங்கானது சிவந்த மலரின்மேலாக விருப்பமுடனே ஈன்றுபோட்ட ஒளியுடைய முத்தினைத், தாமரையானது தன் இலையினாலே தாங்கிக்கொள்ளுகின்ற, பள்ளங்களையுடைய வயல்கள் சூழ்ந்திருக்கும் மத்திரதேசத்து அரசனுடைய மகன்; இவனையும் காண்பாயாக,

மச்சத்தார் கோமான் மகன்

அஞ்சாயல் மானே யிவன்கண்டாய் ஆலைவாய்
வெஞ்சாறு பாய விளைந்தெழுந்த — செஞ்சாலிப்
பச்சைத்தாள் மேதிக் கடைவாயிற் பாலொழுகும்
மச்சத்தார் கோமான் மகன். 147

அழகிய சாயலினைக் கொண்ட மான் போன்றவளே, ஆலையினிடத்தே யிருந்து விருப்பங்கொள்ளும்படியான கறுப்பஞ்சாறு வந்து நீராகப் பாய, அதனுலே விளைந்து உயர்ந்த 'செஞ்சாலி' எனும் நெற்பயிரினது பசுமையான தாளினைத் தின்பதனுல், எருமைகளின் கடைவாயினின்றும் பால் ஒழுகிக்கொண்டிருக்கும்படியான மச்சநாட்டரசனின் மகன் இவன்; இவனைக் காண்பாயாக!

'கடைவாயிற் பாலொழுகும்' என்றது, நெற்பயிர் காய்ப்பருவமாயிருந்த நிலையினைக் காட்டுவது.

அவந்திநாடன் இவன்

வண்ணக் குவளைமலர் வெளவி வண்டெடுத்த
பண்ணிற் செவிவைத்துப் பைங்குவளை உண்ணு
தருங்கடா நிற்கும் அவந்திநா டாளும்
இருங்கடா யானை இவன். 148

வண்ணமுடன் திகழும் குவளை மலர்களை அரிதான எருமைக் கடாக்கள் பற்றிக் கௌவியபோது, அப் பூக்களிலேயுள்ள வண்டுகள் எழுப்பிய ரீங்காரப் பண்ணினுக் குச் செவிகொடுத்ததாகிப், பசுமையான அக் குவளை மலர்களை உண்ணுதேயே நிற்கும் வளமுடைய, அவந்தி நாட்டினை ஆளுகின்ற பெரிய களிற்றுயானையினைப் போன்றவன் இவன்; இவனையும் காண்பாயாக!

அருங்கடா—வலிமையுள்ள கடா; அருமை வலிமையைக் குறித்தது. எருமைக் கடாவும் பண்ணிற்கு மயங்கும் என்றதனுல், அந்நாட்டுக் கலைச் சிறப்பினைக் கூறினுர்.

பாஞ்சால மன்னன் இவன்

விடக்கதிர்வேற் காளை இவன்கண்டாய் மீனின்
தொடக்கொழியப் போய்நிமிர்ந்த தூண்டில் — மடற்கமுகின்
செந்தோடு பீறித்தேன் செந்நெற் பசுந்தோட்டில்
வந்தோடும் பாஞ்சாலர் மன். 149

நஞ்சு ஊட்டப்பெற்ற ஒளியுடைய வேலினைக் கைக் கொண்டு விளங்கும் காளைபோன்ற இவனைக் காண்பாயாக தூண்டிலிலே கொடுத்திருந்த இரையானது போய்விட, அதனால் விரைந்து சென்று நிமிர்ந்த தூண்டில் முட் கோலானது, மடல்களையுடைய கமுகமரத்தின் வளமான தோட்டினைப் பிளக்க, அதிலிருந்து வழிந்த தேனானது செந் நெற் பயிர்களின் பசுந்தாளிலே வந்து விழுந்து ஓடுகின்ற, வளமிக்க பாஞ்சால நாட்டின் வேந்தன் இவன்.

கோசல மன்னன் இவன்

அன்னம் துயிலெழுப்ப அந்தா மரைவயலில்
செந்நெல் அரிவார் சினையாமை—வன்முதுகில்
கூனிரும்பு தீட்டும் குலக்கோ சலநாடன்
தேனிருந்த சொல்லியிச் சேய். 150

தேனனைய இனிமை தங்கியிருக்கின்ற சொல்லினை உடையவளே! அன்னப் பறவைகள் அதிகாலையிலேயே தம்மைத் துயிலினின்றும் எழுப்பிவிட, அழகிய தாமரை மலர்கள் நிறைந்துள்ள வயலிடத்தே சென்று செந்நெற்களை அரிபவர், கருக்கொண்டிருக்கும் ஆமையினது முதுகு ஓட்டிலே வளைவான தம் அரிவாட்களைத் தீட்டுகின்ற, சிறப்பு மிகுந்த கோசலநாட்டு மன்னன் இந்த அரசகுமாரன்: இவனையும் பார்ப்பாயாக!

மகத நாட்டான்

புண்டரிகம் தீயெரிவ போல்விரியப் பூம்புகைபோல்
வண்டிரியும் தெண்ணீர் மகதர்கோன்—எண்டிசையில்
போர்வேந்தர் கண்டறியாப் பொன்னூவம் பின்னுடைய
தேர்வேந்தன் கண்டாயிச் சேய். 151

நெருப்பு எரிவதைப் போலச் செந்தாமரைகள் இதழ் விரிந்திருக்கும். அந்த நெருப்பிலிருந்தும் எழுகின்ற புகையினைப்போல, அவற்றின் மேலாக வண்டினம் மொய்த்துக்கொண்டிருக்கும். அத்தகைய நீர்வளம் மிகுந்த மகதநாட்டின் கோமான் இவன். எட்டுத் திக்குகளிலுமுள்ள போராற்றல் மிக்க வேந்தரெல்லாம் கண்டறியாத, அழகிய அம்புறுத்தூணியைத் தன் பின்புறமாக உடைய தேர் வேந்தனும் இவன்; இவனையும் காண்பாயாக.

அங்கநாடன் இவன்

கூன்சங்கின் பிள்ளை கொடிப்பவளக் கோடிடறித்
தேன்கழியில் வீழத் திரைக்கரத்தால்—வான்கடல்வந்
தந்தோ எனவெடுக்கும் அங்கநா டாளுடையான்
செந்தேன் மொழியாயிச் சேய். 152

செவ்விய தேன்போன்ற இனிதான சொல்லினை உடையவளே; இந்த அரசகுமாரன், வளைவான சங்கினத்தின் குஞ்சுகள் கொடிப்பவளத்தின் கொம்பிலே இடறுதலுற்றுத் தேன்பாயும் கழிக்கரையிடத்திலே போய் வீழப், பெருங் கடலானது அதற்கு இரங்கி, 'அந்தோ!' என வந்து, தன் திரைக்கரத்தினாலே அவற்றைத் தழுவி எடுக்கின்ற, அங்க நாட்டை ஆளுகின்ற உரிமையுடையவன் இவன்; இவனையும் காண்பாயாக!

கலிங்க நாடன் இவன்

வெள்வாளைக் காளைமீன் மேதிக் குலமெழுப்பக்
கள்வார்ந்த தாமரையின் காடுழக்கிப்—புள்ளோடு
வண்டிரியச் செல்லும் மணிநீர்க் கலிங்கர்கோன்
தண்டெரியல் தேர்வேந்தன் தான். 153

"தண்மைவாய்ந்த மலர்மாலையினை அணிந்த தேர் வேந்தனாகிய இவனையும் கண்டாயோ! எருமைக் கூட்டங்கள் புகுந்து வெண்மையான வாளை என்னும் இளமீன்களைக் கலக்கி எழுப்ப, அவை தேன் ஒழுகும் தாமரைமலர்க் காட்டினைக் கலக்கி, அங்கிருந்த பறவைகளும் வண்டுகளும் அஞ்சியோடுமாறு சென்றுகொண்டிருக்கும் நீர்வளத்தினையுடைய, அழகான கலிங்கர்களின் கோமான் இவன்!

கேகய நாடன்

அங்கை வரிவளையாய் ஆழித் திரைகொணர்ந்த
செங்கண் மகரத்தைத் தீண்டிப்போய்க்—கங்கையிடைச்
சேல்குளிக்கும் கேகயர்கோன் தெவ்வாடற் கைவரைமேல்
வேல்குளிக்க நின்றுனிவ் வேந்து. 154

வரிகள் பொருந்திய வளைகள் விளங்கும் அழகிய கைகளை உடையவளே! கடலலைகள் கொணர்ந்த சிவந்த கண்களையுடைய மகரமீனைக் கெண்டை மீனானது தொட்டுப்போய்க்

கங்கை நீரிடத்தே குளிக்கின்ற, கேகயநாட்டு மன்னவன் இவன். பகையரசருடைய வளமிகுந்த யானைகளின்மீது தன் கைவேல் பாய்ந்து குளிக்கும்படியாகக் களத்திலே வீரம் விளைத்துநின்ற வேந்தனும் இவனாவான்; இவனையும் காண்பா யாக!

காந்தார நாடன்

மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தானேகும் அன்னம் தனிக்கயிற்றில்—போம்நீள்
கழைக்கோ தையரேய்க்கும் காந்தார நாடன்
மழைக்கோதை மானேயிம் மன். 155

கார்மேகத்தைப் போன்ற கருமையான கூந்தலையுடைய மானே! இந்த மன்னவனையும் காணாய்; மிகுதியான நீரினை யுடைய நெடிதான தடாகத்திலே படர்ந்துள்ள, வள்ளைக் கொடிகளின்மீது செல்லுகின்ற அன்னப் பறவைகள், ஒற்றை யான கயிற்றிலே நடந்துபோகின்ற கழைக்கூத்தியராகிய பெண்களை ஒப்பத் தோன்றும் காந்தார நாட்டு மன்னவன் இவனாவான்!

சிந்து நாட்டவன்

அங்கை நெடுவேற்கண் ஆயிழையாய் வாவியின்வாய்ச்
சங்கம் புடைபெயரத் தான்கலங்கிச்—செங்கமலப்
பூச்சிந்தும் நாட்டேறல் பொன்விளைக்கும் தண்பணைசூழ்
மாச்சிந்து நாட்டானிம் மன். 156

வீரர்களின் அங்கையிடத்தே விளங்கும் நெடிதான வேற் படையினைப் போன்ற கண்களையுடைய சிறந்த ஆபரணங் களை அணிந்தவளே! தடாகத்தினிடத்தே சங்கம் இடம் பெயரத், தான் அதனால் கலக்கமுற்ற செந்தாமரைப் பூவானது சிந்துகின்ற புதிய தேன், பொன் போன்ற நெல் மணிகளை விளைவிக்கும் தண்மைவாய்ந்த வயற்பகுதிகள் சூழ்ந்துள்ள பெரிய சிந்து நாட்டான் இந்த மன்னவன்; இவனைக் காண்பாயாக! [நாட்டேறல்-அன்றலந்த பூவி லிருந்து சிந்தும் புதிய தேன்.]

நளனுருவிலே தேவர்கள்

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த

மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணுநின்று
ஊசலா டுற்ருள் உளம். 157

இவ்வாறு, அச்சுயம்வர மண்டபத்துள் இருந்த அரசரை எல்லாம் சேடியானவள் காட்டிவரப் பார்த்துக்கொண்டே வந்தாள் தமயந்தி. தேவர்கள் நால்வரும் அவ்விடத்தே நளனுருவத்துடனே வந்து வீற்றிருந்தனர். மலர் சூட்டப் பெற்ற, குற்றமில்லாத அழகிய கூந்தலையுடைய தமயந்தி, அவர்களைக் கண்டதும், அப்படியே மயங்கி நின்றுவிட்டாள். அவருள் நளன் யாரென அறியவியலாமல் தன் உள்ளம் ஊசலாடுகின்ற ஒரு நிலையினையும், அவள் அப்போது அடைந்தாள்.

வானவரும் வந்திருந்தனர்

பூணுக் கழகளிக்கும் பொற்றொடியைக் கண்டக்கால்
நாணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர்—நீணிலத்து
மற்றேவர் வாராதார் வானவரும் வந்திருந்தார்
பொற்றேர் நளனுருவாய்ப் போந்து. 158

அணிந்துள்ள ஆபரணங்களுக்குத் தான் அழகினைத் தந்து கொண்டிருக்கும், பொன்னுலியன்ற தொடியணிந்துள்ளவளான தமயந்தியைப் பார்த்தவிடத்தே, அங்கிருந்த நல்ல அரசர்கள் அனைவரும் தம் நாணம் அகன்றுபோய்த், தம் நெஞ்சமும் உடைந்துபோகத் தளர்வுடன் வீற்றிருந்தனர். இவ்வுலகத்து எந்த மன்னர் தாம் அந்தச் சுயம்வரத்திற்கு வராதிருந்தார்கள்! அனைவருமே வந்து குழுமியதுடன், வானவரும் பொற்றேரினையுடைய நளனின் உருவினைக் கொண்டவர்களாக அங்கு வந்து கூடியிருந்தார்கள் அல்லரோ!

அருள் என்ருள்

மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியான் ஆகிற் கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருளென்ருள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே கொண்டு. 159

தன்னை வந்து சூழ்ந்த ஊழ்வலியின் காரணமாகத், தான் காதல் கொண்ட நளமன்னவனைத் தன் உள்ளத்தே வரித்துக் கொண்டு, 'ஒளியுடைய தாரணிந்த வீமராசனின் உண்மையான குலத்திலே பிறந்த சிறந்த இயல்புகளைக் கொண்ட

கன்னி யான் ஆகில், அன்னம் அன்று சொன்னவனை இன்று யான் மணமாலை சூட்டுவதற்கு எனக்கு அருள் செய்வாயாக' என்று, தெய்வத்தை நோக்கி அவள் வேண்டினாள்.

அறிந்தாள் நளனை

கண்ணிமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு. 160

நறுமணமுள்ள தாமரைமலரிலே விரும்பி உறைகின்ற திருமகளினைப் போன்றவள் அந்தத் தமயந்தி. நளனுருவிலே இருந்தவர்களினுள்ளே, கண் இமைத்தலாலும், காலடிகள் நிலத்தே தோய்தலாலும், பன்னிற வண்ணமுடைய மலர் மாலை வாடுதலாலும் ஆராய்ந்து, அவர்களுள் அவ்விடத்தே இருந்த உண்மையான நளனையும் அவள் கண்டறிந்து விட்டாள்.

பொன்மாலை சூட்டினாள்

விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலம் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 161

மேலுலகத்து வேந்தர்கள் எல்லாரும் நாணியவராகி மனம் சுளிக்கவும், இடம் விரிந்த உலகமெல்லாம் களிப்புக் கொள்ளவும், இவ்வுலகத்து அரசர் எல்லாரும் தம்மனத்தே கடிதான மயக்கத்தினைக் கொள்ளவுமாகத், திருமகள்போன்ற அத்தமயந்தியும், வெற்றி வேந்தனான நளனுக்குத் தன் கையிலிருந்த பொன்மாலையினைச் சூட்டினாள்.

முகம் வெளுத்தனர்

திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே—ஒண்டாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது. 162

ஒளியுடனே சுடரிடும் தன்மையினைக் கொண்ட சிறந்த மாலையினை அணிந்தவனும், வேற்படையினை உடையவனு

மாகிய நளமன்னன், சிறப்புடைய வேலினைப் போன்ற கண்களுடையவளான தமயந்தியின் அழகிய சுயம்வரமாலையினைப் பூண்டு வீற்றிருந்தான். அப்போது, திண்மையான தோளினரான வெற்றிவேந்தர்களாக அங்குக் கூடியிருந்தோரின் செந்தாமரை மலர்போன்ற முகங்கள் எல்லாம், வெண்தாமரை மலர்போன்ற முகங்களாகி வெளிறித் தோன்றின. [ஏமாற்றத்தால் பிறர் முகங்கள் வாடிப் போயின தன்மையைக் கவி இப்படிக் கூறுகின்றார்.]

செம்மாந்து சென்றான்

மல்லல் மறுகின் மடநா குடனாகச்
செல்லும் மழவிடைபோல் செம்மாந்து—மெல்லியலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலான் நளன். 163

நல்ல மலர்மாலையினை அணிந்தோனும், வேற்படையினை உடையோனுமாகிய நளன், அதன்பின், வளம்பொருந்திய வீதியினிடத்தே இளமையுடைய பசுவினுடனாகச் செல்லுகின்ற இளமைபொருந்திய ஓர் ஆனேற்றினைப்போலத் தமயந்தி தன்னருகே வந்துகொண்டிருக்க விம்மிதத்துடனே ஊர்வலமாகப் போவானானான்.

கலியைக் கண்டார்

வேலை பெருவமுதம் வீமன் திருமடந்தை
மாலை பெறுதகலும் வானாடர்—வேலை
பொருங்கலிநீர் ஞாலத்தைப் புன்னெறியில் ஆக்கும்
இருங்கலியைக் கண்டார் எதிர்? 164

கடலிடத்தே பிறவாத அமுதமாகிய வீமராசனின் திருமகளான தமயந்தியினது மணமாலையினைப் பெறுது வறிதே திரும்பிச் செல்லும் வானநாட்டவராகிய தேவேந்திரன் முதலானோர், அலைகள் மோதுகின்ற ஆரவாரத்தையுடைய கடலினாலே சூழப்பெற்ற உலகத்தினைக் கீழான பாதைக்கு உட்படுத்தும் தன்மைவாய்ந்த பெரிய கலிபுருஷனைத் தம் எதிரே வந்துகொண்டிருக்கக் கண்டார்கள்.

ஈங்கு வருவது ஏன்

ஈங்குவா வென்னென் றிமையவர்தம் கோன்வினவத்
தீங்கு தருகலியும் செப்பினன்—நீங்கள்

விருப்பான வீமன் திருமடந்தை யோடும்
இருப்பான் வருகின்றேன் யான். 165

இமையவர்களின் கோமானுகிய தேவேந்திரன், 'இவ்விடத்தே வருவதற்கு யாது காரணமோ?' என்று அந்தக் கலியினைக் கேட்கத், திங்கு விளைப்போனுன அவனும், 'நீங்கள் விருப்பங் கொண்ட வீமராசனின் திருமகளுடனே யானும் கலந்து இருப்பது கருதியே இப்போது வந்துகொண்டிருக்கின்றேன்' என்று சொன்னுன்.

ஆசையை விட்டுப் போவாய்

மன்னவரில் வைவேல் நளனே மதிவதனக்
கன்னி மணமாலை கைக்கொண்டான்—உன்னுடைய
உள்ளக் கருத்தை ஒழித்தே குதியென்றுன்
வெள்ளைத் தனியானை வேந்து. 166

கலிபுருஷனின் சொற்களைக் கேட்டதும், ஒப்பற்ற வெள்ளை யானையினையுடைய வேந்தனுன இந்திரன், 'வந்து கூடிய மன்னவரில் கூர்மையான வேலோனுகிய நளன் என்பவனே நிலாவனைய முகத்தினளான அக் கன்னியின் மணமாலையினைக் கைக்கொண்டான். அதனுல், நின் உள்ளக் கருத்தினைக் கைவிட்டு மீண்டும் வானகம் செல்வாயாக' என்றுன். [வெள்ளைத் தனியானை-அயிராவதம்.]

கெடுக்கின்றேன் கொடுக்கின்றேன்

விண்ணரசர் நிற்க வெறித்தேன் மணமாலை
மண்ணரசர்க் கீந்த மடமாதின் – எண்ணம்
கெடுக்கின்றேன் மற்றவள்தன் கேள்வற்கும் கீழ்மை
கொடுக்கின்றேன் என்றுன் கொதித்து. 167

இந்திரனின் வார்த்தைகளைக் கேட்ட கலிபுருஷன் கொதிப்படைந்தான். 'வானகத்து வேந்தராகிய நீங்கள் எல்லாரும் நிற்க, மணமுள்ள தேன் விளங்கும் தன் மணமாலையினைப் பூவுலகத்து அரசனுக்குச் சூட்டிய அறியாமையினை உடைய அந்தப் பெண்ணின் எண்ணத்தைக் கெடுக்கின்றேன்; மேலும், அவள் கணவனுக்கும் யான் தாழ்வு உண்டாக்குகின்றேன்' என்று கூறினுன்.

உரைத்துப் போனுன்

வாய்மையும் செங்கோல் வளனும் மனத்தின்கண்
தூய்மையும் மற்றவன் தோள்வலியும்—பூமான்
நெடுங்கற்பும் மற்றவர்க்கு நின்றுரைத்துப் போனுன்
அருங்கொற்ற வச்சிரத்தான் ஆங்கு. 168

பகைவரைக் கொன்று வெற்றிகொள்ளும் வச்சிரப் படையுடையோனுகிய இந்திரன், கலியின் அந்தப் பேச்சைக் கேட்டான். அந் நளனது வாய்மையினையும், செங்கோற் சிறப்பினையும், உள்ளத்துத் தூய்மையினையும், தோள் வல்லமையினையும், அந்தப் பூமாது போன்றவளான தமயந்தியின் உயரிய கற்புச்செவ்வியினையும் அந்தக் கலிக்கு எடுத்துச் சொல்லிவிட்டுத், தன் நாடு நோக்கி அவனும் போய் விட்டான்.

விடநாகம் அன்னுள்

செருக்கதிர்வேல் கண்ணியுடன் தேர்வேந்தன் கூட
இருக்கத் தரியேன் இவரைப்—பிரிக்க
உடனுக என்றுன் உடனே பிறந்த
விடநாகம் அன்னுன் வெகுண்டு. 169

அவ்வாறு இந்திரன் சொன்னவுடனே, நஞ்சுடனே தோன்றிய நாகத்தைப் போன்று அந்தக் கலியும் வெகுண்டான். 'போரிடுதற்கான ஒளிகொண்ட வேல் போன்ற கண்களை உடையாளான தமயந்தியுடன் தேர் வேந்தனுன நளனும் ஒன்றுகக்கூடி வாழ்ந்திருக்க யான் சகிக்கவே மாட்டேன். அவர்களைப் பிரித்துவிடுவதற்கு உடனேயே தொடங்குவேன் என்றுன்.

8. மணமும் மகிழ்வும்

மங்கலநாள் காண வருபவன்

வெங்கதிரோன் தானும் விதர்ப்பன் திருமடந்தை
மங்கலநாள் காண வருவான்போல்—செங்குமுதம்
வாயடங்க மன்னற்கும் வஞ்சிக்கும் நன்னெஞ்சில்
தீயடங்க ஏறினுன் தேர். 170

வெம்மையான கதிர்களைப் பரப்புவோனாகிய ஞாயிறு தானும் விதர்ப்பன் திருமகளின் திருமணச் சிறப்பினைக் கண்டு மகிழ்வதற்கு வருபவனைப்போலச், செவ்வல்லி மலர்கள் இதழ்மூடி உறக்கம் கொள்ளவும், நளமன்னனுக்கும் வஞ்சிக்கொடியான தமயந்திக்கும் நன்மை விளங்கும் உள்ளத்து ஆசைத்தீ அடங்கவுமாகத், தன் தேரின்மீது ஏறிப் புறப்பட்டான்.

சூட்டினர் பூட்டினர்

இன்னுயிர்க்கு நேரே இளமுறுவல் என்கின்ற
பொன்னழகைத் தாமே புதைப்பார்போல் —மென்மலரும்
சூட்டினர் சூட்டித் துடிசேர் இடையாளைப்
பூட்டினர் மின்னிமைக்கும் பூண். 171

சுயம்வரத்திற்கு வந்திருந்த மன்னர்களின் இனிதான உயிர்கட்கு எல்லாம், தமயந்தியின் இளமுறுவல் ஒன்றே சமானமாகும். இவ்வாறு போற்றப்படுகின்ற அப் பொன் மேனி உடையாளின் அழகினை எல்லாம் தாமே புதைத்து மறைப்பவரைப்போலத், துடியின் இடைப் பகுதியினோடு பொருத்தமுடைய நுண்ணிடையாளான தமயந்திக்கு மென் மலர்களைச் சூட்டியும், மின்போல ஒளிரும் பற்பல அணி வகைகளைப் பூட்டியும், சேடியர்கள், மணக்கோலத்திற்கென அவளை அலங்கரித்தார்கள்.

பொன் அறை புகுந்தார்

கணிமொழிந்த நாளிற் கடிமணமும் செய்தார்
அணிமொழிக்கும் அண்ண லவர்க்கும் —பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் னறைபுக்கார்
மற்றேவரும் ஒவ்வார் மகிழ்ந்து. 172

சோதிடவல்லான் கணக்கிட்டுக் கூறிய நல்ல நாளிலே இனிதான பேச்சினை உடையாளான அத் தமயந்திக்கும், ஆடவருள் தலைமையாளனாகிய நளனுக்கும் திருமணமும் செய்துவைத்தார்கள். தங்களுக்குத் தாங்களே அன்றிப் பிறரெவரும் ஒப்பாகாதவராக விளங்கும் நளதமயந்தியர், மகிழ்வுடனே பணிந்த சொல்லுடையவரான சேடியர்கள் குற்றேவல் செய்துவரச், சிறப்புடைய பொன்மயமான பள்ளியறைக்குள்ளேயும் சென்று புகுந்தார்கள். [கொழும் பொன்-சிறந்த பொன்.]

அஞ்சும் தொடுத்தான்

செந்திருவின் கொங்கையினும் தேர்வேந்த னுகத்தும்
வந்துருவ வார்சிலையைக் கால்வளைத்து—வெந்தீயும்
நஞ்சும் தொடுத்தனைய நாம மலர்வாளி
அஞ்சும் தொடுத்தான் அவன். 173

சிவந்த திருமேனியினளான திருமகளைப்போன்ற தமயந்தியின் தனங்களிலும், தேர்வேந்தனுகிய நளனது மார்பகத்திநும் நுழைந்து ஊடுருவிச் செல்லும்படியாக மன்மதனுனவன், தன் நெடிதான வில்லினை ஊன்றி, அதன் இரு நுனியினையும் வளைத்து, வெப்பமான நெருப்பினையும் நஞ்சினையும் ஒன்றுகூட்டித் தொடுத்தாற்போல, அச்சந் தரும் மலரம்புகள் அஞ்சினையும் தொடுத்து எய்தான்.

இருவர் என்பது இல்லை

ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி
இருவரெனும் தோற்ற மின்றிப்—பொருவெங்
கனற்கேயும் வேலானுங் காரிகையுஞ் சேர்ந்தார்
புனற்கே புனல் கலந்தாற் போன்று. 174

போரிடுவதற்குரிய வெம்மையான நெருப்பினை ஒத்திருக்கின்ற வேலினை உடையவனுகிய நளனும், காரிகையாளான தமயந்தியும், ஒருவருடைய உடலிடத்தே மற்றொருவர் ஒன்றிக் கலந்தவராயினர். 'இருவர்' என்னும் தோற்றமே இல்லாதபடியாகப், புனலிடத்தே புனலானது இரண்டறக் கலந்ததனைப் போன்று, ஒன்றிய சேர்க்கையிலேயும் ஒருவராகிக் கலந்து திளைத்தார்கள்.

மடுத்துப் பொருதாள்

குழைமேலும் கோமா னுயிர்மேலும் கூந்தல்
மழைமேலும் வாளோடி மீள—விழைமேலே
அல்லோடும் வேலான் அகலத்தோ டும்பொருதாள்
வல்லோடும் கொங்கை மடுத்து. 175

தன்னிரு காதணிகளின் மேலும், மன்னவனுகிய நளனின் உயிரின் மேலும், தன் கூந்தலாகிய மழைமேகத்தின் மேலும், வாள்போன்ற தன் கண்களானவை ஓடிச்சென்று மீளுமாறு, ஆசைப்பெருக்கத்தினுலே, இருளும் அகன்றேடும் ஒளியுடைய

வேலாஞன நளனின் அகன்ற மார்பினிடத்தே, சொக் கட்டான் சாய்கலைப் போன்றவாகிய தன் கொங்கை களிஞலே நெருக்கித் தமயந்தியும் கலவிப் போரிட்டனள்.

பாய்ந்த ஓராறு

வீரனக லச்செறுவின் மீதோடிக் குங்குமத்தின்
ஈரவிள வண்ட லிட்டதே—நேர்பொருதக்
காராரும் மெல்லோதிக் கன்னியவள் காதலெனும்
ஓராறு பாய வுடைந்து. 176

அங்ஙனமாக நேரிட்டுப் போரிட்ட கார்மேகத்தை ஒத்த மென்மையான கூந்தலேயுடைய கன்னியாம் தமயந்தி யானவளின், காதல் என்கின்ற ஒப்பற்ற ஆருனது பாய்ந்து பெருகிவர, மடையுடைந்து வீரஞகிய நளனின் அகன்ற மார்பிடமாகிய கழனியிலே வெள்ளமாகப் புரண்டு ஓடிக், குங்குமச்சாந்தின் குளிச்சியான இளவண்டலேயும் இட்டது. 'கலவிப் போரிஞலே நளனின் மார்பிடத்தே இருவருடைய வியர்வும் பெருகி வழியக், குங்குமச்சாந்தம் கலேந்து வெள்ளத்தால் வண்டலிட்டதுபோலத் தோன்றிற்று என்பது கருத்து.

நளன் சேர்ந்தான்

கொங்கை முகங்குழையக் கூந்தல் மழைகுலேயச்
செங்கயற்க ஞேடிச் செவிதடவ—அங்கை
வளேபூச லாட மடந்தையுடன் சேர்ந்தான்
விளேபூசற் கொல்யானே வேந்து. 177

வந்து வாய்க்கின்ற போரினிடத்தே, கொல்லும் யானேப் படையினே உடையவஞக விளங்கும் நள மன்னஞனவன், முலேமுகங்கள் குழைவற்றுப்போகவும், கார்மேகம் போன்ற கூந்தல் அவிழ்ந்து கலேயவும், சிவந்த கெண்டைமீனேப் போன்ற கண்கள் ஓடிச்சென்று காதுகளே அளவளாவவும், அங்கை வலேயல்கள் ஒன்றுடன் ஒன்று பூசலிட்டு ஒலிக்கவும், மடந்தையாம் அத் தமயந்தியுடனே தானும், ஒன்றுபட்டுக் கூடிக் கலந்தான்.

கலந்தார் நெடுங்காலம்

தையல் தளிர்க்கரங்கள் தன்தடக்கை யாற்பற்றி
வையம் முழுதும் மகிழ்தூங்கத்—துய்ய

மணநதான் முடித்ததற்பின் வாணுதலும் தானும்
புணர்ந்தா னெடுங்காலம் புக்கு. 178

தமயந்தியின் தளிர்போன்ற கரத்தினைத் தன் விசாலமான கையினாலே பற்றிப், பூமியிலுள்ளோர் அனைவரும் மகிழ்ச்சியினாலே களிப்படையத் தூய திருமணத்தினை முடித்த தன் பின்னாக, ஒளியுடைய நெற்றியினளான அத்தமயந்தியும் தானுமாகக் கூடி, நளன் நெடுங்காலம் இன்புற்று வாழ்ந்திருந்தான்.

நளனும் தமயந்தியும் தம்முள் காதல்கொண்ட தன்மையிலிருந்து, அந்தக் காதலுக்கு ஏற்பட்ட பலவாறான இடையூறுகள் பலவற்றையும் வென்று, முடிவிலே தம்முள் மணம் புணர்ந்து ஒன்றுபட்ட களிப்பு நிலையினை இச்செய்யுளிலே காணலாம்.

கலிபுருஷன் நளதமயந்தியர்மீது கொண்ட காழ்ப்புப் பொருளற்றது. எனினும், அவனுடைய கொதிப்பும் வஞ்சினமும் பிறவும் பிறரது வாழ்வுகண்டு பொறுக்காத தன்மையினைக் காட்டுவதாகின்றது. காலத்தால் வந்து, கருதியதை முடிக்க முயன்று, அதனில் தோல்வியும் அடைந்த பிற தேவர்கள் எவ்வித மனக்கொதிப்பும் இல்லாது செல்லக் காலம் கடந்து வந்த கலியோ பொருமிச் சினந்து தீமை விளைவிக்கவும் துணிகின்றான். ஆகவே, அவன் கொண்ட சினம் பொருளற்றது என்பதும் விளங்கும்.

இந்த நிலைமையினைக் கவி மிகவும் நன்றாகப் பதிய வைக்கின்றார். அடுத்துவரும் பகுதிகளை அனுபவிக்கக் கலியினது இந்த ஆத்திரக் கோலத்தினைப் புரிந்துகொள்வது மிகவும் முதன்மையாகும்.

மேலும், வினையின் பயனாகவே அனைத்தும் வந்து வாய்ப்பதாம் என்னும் நியதியையும் இவ்விடத்தே நினைவிற் கொள்ளல் வேண்டும்.

2

கலிதொடர் காண்டம்

1. கண்கவர் காட்சிகள்

திருமால் திருப்பாதம்

முந்தை மறைநூல் முடியெனலாம் தண்குருகூர்ச்
செந்தமிழ் வேத சிரமெனலாம்—நந்தும்
புழைக்கைக்கும் ஆயப் பொதுவர் மகளிர்க்கும்
அழைக்கைக்கு முன்செல் அடி. 179

துன்பமுற்ற யானைக்கும், அன்புடைய ஆயர்குல மகளிர்க்கும் அழைப்பதற்கு முன்னுகவே சென்று உதவிய திருப்பாதம், திருமாலின் திருப்பாதமே! அதனை, மறை நூலின் திருமுடியே என்றும் கூறலாம். தண்மையான திருக்குருகூரிடத்தே எழுந்த செந்தமிழ் வேதமாகிய திருவாய் மொழியின் சிரம் என்றும் கூறலாம்! [திருக்குருகூர்— ஆழ்வார் திருநகரி. அங்கு எழுந்த செந்தமிழ் வேதம் சடகோபர் பாடிய பாசுரங்கள். அத்தகைய திருப்பாதமே எமக்குத் துணையாகும் என்பது கவியின் உட்பொருள்.]

மெய்யன்பர் உள்ளத்தான்

செக்கர் நெடுவானில் திங்கள் நிலாத்துளும்பி
உக்க தெனச்சடைமேல் உம்பர்நீர்—மிக்கொழுகும்
வெள்ளத்தான் வெள்ளி நெடுங்கிரியான் மெய்யன்பர்
உள்ளத்தான் எங்கட் குளன். 180

செந்நிறமான பரந்த வானத்திடத்தே திங்களின் நிலவொளியானது பெருகி வழிந்தது என்னும்படியாகத் தன் செஞ்சடையின் மேலாகக் கங்கைநீர் பெருகிப் பாய்கின்ற அருள்வெள்ளத்தை உடையவனும், உயரிய வெள்ளி மலைக்கு உரியவனும், மெய்யன்பர்களின் உள்ளத்தே நிலைத்திருப் பவனும் ஆகிய சிவபெருமானும், எங்கட்கு அருள் செய் பவனுக உள்ளனன்.

தேரில் சென்று ஏறினன்

தவளத் தனிக்குடையின் வெண்ணிழலும் தையல்
குவளைக் கருநிழலும் கொள்ளப்—பவளக்
கொழுந்தேறிச் செந்நெற் குலைசாய்க்கும் நாடன்
செழுந்தேரில் ஏறினன் சென்று. 181

பவளக்கொடியின் கொழுந்துகள் படர்ந்தேறிச் செந்நெற்குலைகளைச் சாய்க்கின்ற வளமான நிடதநாட்டினை உடையவன் நளன். வெண்மையான ஒப்பற்ற கொற்றக் குடையின் வெளுப்பான நிழலும், தமயந்தியின் கண்களாகிய குவளைமலர்களினுடைய கருநிழலும் தன்னைக் கவிந்து ஆட்கொள்ளுமாறு, அவன், செழுமையான வேலைப்பாடு களுடன் கூடிய தன் தேரிலே சென்று ஏறினன். [தவளம்-முத்து; இங்கு அதுபோன்ற வெண்மைக்கு ஆயிற்று. குடை நிழலினை நிலவாகக் கருதிக் காதலுடன் தமயந்தி நளனை நோக்கியவளாயினுள் எனக் கொள்க.]

வண்டு எதிர்கொள்வன

மங்கையர்கள் வாச மலர்கொய்வான் வந்தணையப்
பொங்கி எழுந்த பொறிவண்டு —கொங்கோடு
எதிர்கொண் டணைவனபோல் ஏங்குவன முத்தின்
கதிர்கொண்ட பூண்முலையாய் காண். 182

முத்துமாலைகளின் ஒளியினைத் தம்மேற் கொண்டிருக்கும் பூண் அணிந்த முலைகளை உடையவளே! மங்கையர்கள் மணமான மலர்களைக் கொய்வதன் பொருட்டாகத் தம்மை நெருங்க, அதற்கு அஞ்சி மேலே எழுந்த புள்ளிகளையுடைய வண்டுகள், மகரந்தத் துகளோடு அந்தப் பெண்களை எதிர் கொண்டு வாழ்த்தி வரவேற்று அணைவனபோன்று ஆரவாரிக் கின்றன; அதனைக் காண்பாயாக! [இதுமுதற் பதினன்கு செய்யுட்கள் நளன் தமயந்திக்குக் காட்டிக்கூறும் இயற்கைக் காட்சிகளாகக் கவி கூறுவனவாம்.]

பணியும் மலர்க்கொம்பு

பாவையர்கை தீண்டப் பணியாதார் யாவரே
பூவையர்கை தீண்டலுமப் பூங்கொம்பு—மேவியவர்
பொன்னடியிற் ருழ்ந்தனவே பூங்குழலாய் காணென்ருன்
மின்னெடுவேற் கையான் விரைந்து. 183

மின்போல ஒளியெறிக்கும் நெடிய வேலினைக் கொண் டிருக்கும் கையினன் நளன். கோட்டுப்பூப் பறிக்கும் சில மங்கையரைத் தமயந்திக்குக் காட்டியவனுக, "பெண்களின் கையினுலே தீண்டப்பெற்ருல் அவர்க்குப் பணிந்து போகாதவர்தாம் யாவரோ? பூங்குழலாய்! அதோ பூவையர் களின் கையினுலே தீண்டப்பெறுதலும், அந்தப் பூங்கொம்

பானது தாழ்ந்து, அவர்களுடைய பொற்பாதங்களிலே மலர்களைச் சொரிந்து, அவர்கட்குப் பணிவதனை விரைந்து காண்பாயாக'' என்றான்.

வேர்த்தாளைக் காண்

மங்கை யொருத்தி மலர்கொய்வாள் வாண்முகத்தைப்
பங்கயமென் றெண்ணிப் படிவண்டைச்—செங்கையால்
காத்தாளக் கைம்மலரைக் காந்தளெனப் பாய்தலுமே
வேர்த்தாளைக் காணென்றான் வேந்து. 184

மங்கை ஒருத்தி மலர் கொய்வாளாகின்றாள். அவளுடைய ஒளியுடைய முகத்தினைத் தாமரை மலர்கள் என்று கருதிவந்து வண்டினம் படிந்தன. தன் செங்கையினாலே அவற்றைப் படியவொட்டாமல் தடுத்துத் தன் முகத்தைக் காத்தாள் அவள். அப்போது, 'அக் கையாகிய மலரினைக் காந்தள் எனக் கருதி வண்டுகள் அதன்மேலும் பாய்ந்தன. பாய்தலுமே, அச்சத்தினாலே அவள் வேர்த்தாள்; அவளைக் காண்பாயாக!' என்றான் வேந்தன், தமயந்தியிடம்.

தளிர் கொய்வாளைக் காண்

புல்லும் வரிவண்டைக் கண்டு புனமயில்போல்
செல்லும் மடந்தை சிலம்பவித்து—மெல்லப்போய்
அம்மலரைக் கொய்யா தருந்தளிரைக் கொய்வாளைச்
செம்மலரில் தேனே தெளி. 185

'செந்தாமரை மலரிலே விளங்கும் தேன் போன்றவளே தமக்குள்ளே தழுவியிருக்கும் வரிகளையுடைய வண்டுகளைக் கண்டாள் ஒரு பெண். காட்டு மயிலினைப்போல ஒய்யாரமாகச் செல்லும் அவள், தன் சிலம்புகள் ஒலி செய்யாவாறு அடக்கிக்கொண்டு மெல்ல மெல்லப் போகின்றாள். போய், வண்டுகள் புல்லிக்கிடக்கும் அந்த மலரினைக் கொய்யாமல் அரிதான தளிரினைக் கொய்கின்றாள். அவளைப் பாராய்!'

[செம்மலர்-செம்மையான மலரும் ஆம்; அம் மலர்-அந்த மலர்; இங்ஙனமன்றி அழகிய மலர் எனினும் பொருந்தும். 'புல்லிக் கிடந்த வண்டுகளைக் கண்டவள் அழகிய மலரை மறந்தவளாகத் தளிரினைக் கொய்வாளானாள் என்று அந்த இனிய காட்சியைத் தமயந்திக்குக் காட்டுகிறான் நளன்.]

பாதாரவிந்தத்தே சூட்டினன்

கொய்த மலரைக் கொடுங்கையி ஞலணைத்து
மொய்குழலிற் சூட்டுவான் முன்வந்து—தையலாள்
பாதார விந்தத்தே சூட்டினன் பாவையிடைக்
காதார மில்லா தறிந்து. 186

'தான் கொய்துகொண்ட மலரினைத் தன் கொடுங்கையினுலே அணைத்துக் கொண்டவனுக, அடந்த தன் காதலியின் கூந்தலிலே சூட்டுவதற்கு முன்வந்தான் ஒருவன். வந்தவன் அந்தப் பாவையின் இடைக்கு ஓர் ஆதாரமும் இல்லாதிருப்பதை அறிந்தான். அறிந்ததும் அம் மலர்களை அவளுடைய திருவடித் தாமரைகளிலே சூட்டினன். அதனையும் காண்பாயாக.'

புலவித் தோற்ற அமளி

ஏற்ற முலையார்க்கு இளைஞர் இடும்புலவித்
தோற்ற வமளியெனத் தோற்றுமால்—காற்றசைப்ப
உக்க மலரோ டுகுத்தவளை முத்தமே
எக்கர் மணன்மே லிசைந்து. 187

'காற்று அசைத்திடுதலினுலே வீழ்ந்திருந்த மலர்களோடு மேலே வளைகள் ஈன்ற முத்துக்களும் பொருந்தியிருத்தலினுலே; எக்கராகிய மணற்பரப்பானது ஏற்றம் பொருந்திய மார்பகங்களையுடைய பெண்களுக்கு, இளைஞர்கள் இடுகின்ற ஊடலினுலே தோற்றும் மலரமளிபோலக் காணப்படுவதனை, அதோ காண்பாயாக.' [எக்கர்-வெள்ளம் ஏறுங்காலத்துப் படியும் மணல்மேடு. உக்க-உதிர்த்த, வளை-சங்கு. ஊடல் கொண்ட மனைவி தன் பூவையும் முத்து வடத்தையும் சிதைத்து எறிந்துபோன அமளி போன்றது அதுவென்று கொள்க.

அல்லென்ற சோலை அழகு

அலர்ந்த மலர்சிந்தி அம்மலர்மேற் கொம்பு
புலர்ந்தசைந்து பூவணைமேற் புல்லிக்—கலந்தொசிந்த
புல்லென்ற கோலத்துப் பூவையரைப் போன்றதே
அல்லென்ற சோலை அழகு. 188

'மலர்ந்த பூக்கள் உதிர்ந்து கிடக்கின்றன. அந்த மலர்களின் மேலாகக் கிளையானது வாட்டமுடன் அசைந்து கொண்டிருக்கின்றது. இருளோ என்றிருக்கும் அத்தகைய சோலையின் அழகினைப் பார்! மலரணையினிடத்தே தன் காதலனைத் தழுவிக் கூடியபின், தளர்ந்து சோர்ந்துகிடக்கும் தன்மையினையுடைய பெண்ணினைப்போல, அந்த இடம் விளங்குவதனையும் பார்ப்பாயாக!'

வாய் நெகிழ்ந்த ஆம்பற்பூ

கொங்கை முகத்தணையக் கூட்டிக் கொடுங்கையால்
அங்கணைக்க வாய்நெகிழ்ந்த ஆம்பற்பூ—கொங்கவிழ்தேன்
வார்க்கின்ற கூந்தன் முகத்தை மதியென்று
பார்க்கின்ற தென்னலாம் பார். 189

'மலர்கொய்யும் மகளிர், தமது கொடுங்கையினாலே தம் முலைமுகங்களிலே பொருந்துமாறு சேர்த்துக் கட்டிக்கொள்ள அதனால் வாய்நெகிழ்ந்த ஆம்பற்பூவானது, மணம்பரவும் தேனைச்சொரிகின்ற கூந்தலையுடைய அப் பெண்களுடைய முகத்தினை, நிலவென்று கருதிப் பார்க்கின்றது என்று சொல்லலாம்; அதனைப் பார்த்தனையோ?'

முக்கண்ணன் போன்றாள்

கொய்த குவளை கிழித்துக் குறுநுதன்மேல்
எய்தத் தனிவைத்த ஏந்திழையாள் – வையத்தார்
உண்ணக் கடுவிடத்தை யுண்ட வொருமுன்று
கண்ணனைப் போன்றனளே காண். 190

'தான் கொய்த செங்குவளை மலரினைக் கிழித்து ஓர் இதழைத் தன்னுடைய குறுகலான நெற்றியின் மேலேசேரும் படியாகத் தனிப்பட வைத்தனள் ஓர் ஏந்திழையாள். அதனாலே உலகத்தார் உண்ணத கொடிய நஞ்சினை முன்னாளிலே உண்ட ஒப்பற்ற முக்கண்ணனைப் போன்றிருக்கின்றாள் அவள். அவளையும் அதோ காண்பாயாக. [நெற்றியின்மேல் விளங்கும் செங்குவளையின் மலரிதழ் நெற்றிக்கண்ணைப்போல விளங்கியது என்க.]

பூமகட்குச் சொல்லுவாள்

கொழுநன் கொழுந்தாரை நீர்வீசக் கூசிச்
செழுமுகத்தைத் தாமரைக்கே சேர்த்தாள் —கெழுமியவக்

கோமகற்குத் தானினைந்த குற்றங்கள் அத்தனையும்
பூமகட்குச் சொல்லுவாள் போல். 191

'தன் நாயகனுனவன் கொழுமையான ஒழுக்குள்ள அருவி நீரினைத் தன்மீது வீச, அதனல் நாணமடைந்து, தன்பாற் பொருந்திய அந்தச் சிறந்தோனுக்குத் தான் நினைந்த குற்றங்களை எல்லாம் திருமகளுக்கு எடுத்துச் சொல்லுபவளைப் போலப் பொலிவுள்ள தன் முகத்தினைத் தாமரை மலரினிடத்தே சேர்த்தனள் ஒருத்தி; அவளையும் காண்பாயாக!' ['தாமரை' என்றது, தன் உள்ளங்கைகளை; கைகளால் முகத்தைப் பொத்தினள் என்க.]

முகம் மூன்று பெற்றாள்

பொய்தற் கமலத்தின் போதிரண்டைக் காதிரண்டில்
பெய்து முகமூன்று பெற்றாள்போல்—எய்த
வருவாளைப் பாரென்றான் மாற்றுரை—வென்று
செருவாளைப் பார்த்துவக்கும் சேய். 192

வாளின் ஆற்றலினாலே பகைவரை வெற்றிகொண்டு, செருவிற்குப் பயன்பட்ட தன் வாளினைப் பார்த்துப்பார்த்து மகிழ்ச்சி கொள்பவன், முருகனைப்போன்ற ஆற்றல் உடையோனான நளன். "செந்தாமரை மலர்களினுள்ளே இரண்டினைக் கொய்து விளையாட்டாகத் தன் காதுகள் இரண்டிலும் செருகிக்கொண்டு, மூன்று முகங்களை உடையவளைப்போல் நம் பக்கமாக வந்து கொண்டிருப்பவளைப் பாராய்!" என்று, அங்ஙனமாக வந்துகொண்டிருந்த ஒரு நங்கையைக் காட்டித் தமயந்தியிடம் அவன் கூறினான்.

அயர்வானைக் காண்

பொன்னுடைய வாசப் பொகுட்டு மலரலையத்
தன்னுடனே மூழ்கித் தனித்தெழுந்த—மின்னுடைய
பூணாள் திருமுகத்தைப் புண்டரிகம் என்றயிர்த்துக்
காணாத தயர்வானைக் காண். 193

'பொன்னிறமான மகரந்தத்தினை உடைய மணமுள்ள பொகுட்டினைக் கொண்ட தாமரை மலர்கள் அலையும்படியாகத், தன்னுடனே அவற்றையும் அணைத்துக் கொண்டு நீரிலே மூழ்கி, மீண்டும் அம் மலர்களினிடையே விளங்கும ஒப்பற்ற மற்றொரு மலர்போல மேலெழுந்தாள் ஒருத்தி. ஒளியுடைய ஆபரணங்களைக்கொண்ட தன் நாயகியின்

திருமுகத்தினைத் 'தாமரைப்பூ' என்றே கருதி, அவளைக் காணாது ஐயுற்றுத் தளர்கின்றான் அவள் காதலன். அவனையும் காண்பாயாக.'

மதிகொண்ட பாம்பு

சிறுக்கின்ற வாண்முகமும் செங்காந்தட் கையால்
முறுக்குறெடு மூரிக் குழலும்— குறிக்கின்
கரும்பாம்பு வெண்மதியைக் கைக்கொண்ட காட்சி
அரும்பாம் பணைமுலையாய் ஆம். 194

'அரும்பினைப்போன்ற பணைத்த தனங்களை உடையவளே! சிறுத்திருக்கின்ற ஒளியுடைய முகமும், செங்காந்தள் மலரினைப் போன்ற கையினாலே முறுக்கிப்பிழிகின்ற சிறப்பு மிக்க கூந்தலும் ஆகியவற்றினைக் குறிப்பிடுவதானால், இராகு என்னும் கருமையான பாம்பு வெண்மதியினைக் கைக்கொண்ட தோற்றம்போன்று விளங்குவதனைக் காண்பாயாக. [இப்படி, நீராடிவிட்டுத் தன் கூந்தலைப் பிழிந்து கொண்டிருந்த ஒருத்தியைக் காட்டி நளன் கூறுகிறான்.]

எழுந்த பிறை

சோர்புனலில் மூழ்கி எழுவாள் சுடர்நுதல்மேல்
வார்குழலை நீக்கி வருந்தோற்றம்—பாராய்
விரைகொண் டெழுந்தபிறை மேகத் திடையே
புரைகின்ற தென்னலாம் பொற்பு. 195

'வழிகின்ற அருவிநீரிலே குளித்து எழுபவள் தன் ஒளியுடைய நெற்றியின்மேலே படிந்த நீண்ட கூந்தலை ஒதுக்கிக் கொண்டு வருகின்ற தோற்றமானது, மேகத்தின் ஊடே விரைவுகொண்டு எழுந்த பிறைநிலவின் அழகுபோன்றுள்ளது என்று சொல்லலாம். அவளையும் காண்பாயாக'

கோல்வளைக்குக் காட்டினள்

செழுநீலம் நோக்கெறிப்பச் செங்குவளை கொய்வாள்
முழுநீலம் என்றயிர்த்து முன்னர்க்—கழுநீரைக்
கொய்யாது போவாளைக் கோல்வளைக்குக் காட்டினான்
வையாரும் வேற்றடக்கை மன். 196

கூர்மைபொருந்திய வேலினை ஏந்திய பெரிதான கைகளை யுடைய நளனுனவன், செங்கழுநீர் மலரினைக் கொய்பவள் ஒருத்தி செழுமையான நீலமலர் போன்ற தன் கண்ணொளி அதன்மேற்படிய, அதனை முழுநீலமலர் என்றே ஐயுற்றுக் கொய்யாது செல்லுகின்றதனையும், கோற்றொழிலமைந்த வளையணிந்தவளான தமயந்திக்குக் காட்டினுன்.

உவந்து உறைந்தார்

காவி பொருநெடுங்கண் காதலியும் காதலனும்
வாவியும் ஆறும் குடைந்தாடித்—தேவின்
கழியாத சிந்தையுடன் கங்கை நதிஆடி
ஒழியா துறைந்தார் உவந்து. 197

கருங்குவளை மலரையும் வெற்றிகொள்ளும் நெடுங் கண் களையுடைய நாயகியாரளான தமயந்தியும், அவள் காதலனுன நளமன்னனும், மேற்கண்டவாறு இனிய காட்சிகள் பலவற்றையும் கண்டவராகச் சென்று, குளத்தினும் ஆற்றினும் நீரிற் குடைந்து நீர் விளையாட்டு ஆடி மகிழ்ந்தனர். அதன்பின், தெய்வத்தினின்றும் கழிந்து போகாத சிந்தையுடையவராகக் கங்கை நதியினும் நீராடி னர். அப்புறமும் அவ்விடம் விட்டு நீங்காது, பொழி லினிடத்தே ஒருபால் மகிழ்வுடன் தங்கியிருந்தனர்.

2. ஊடலும் கூடலும்

இளமரக்கா ஒக்கும்

நறையொழுக வண்டுறையும் நன்னகர்வாய் நாங்கள்
உறையும் இளமரக்கா ஒக்கும்—இறைவளைக்கைச்
சிற்றிடையாய் பேரல்குல் தேமொழியாய் மென்முறுவல்
பொற்றெடியாய் மற்றிப் பொழில். 198

'முன்னங்கையிலே வளைகளுடன் விளங்கும் சிற்றிடையினை உடையவளே! பெரிதான அல்குல் தடத்தினை யுடைய இனிதான மொழியாளே! மென்முறுவலினையும் பொற்றெடியினையும் கொண்டவளே! இந்தப்பொழிலானது, தேன் ஒழுக்கெடுத்துப் பாய வண்டுகள் தங்கியிருக்கும் நன்மை பொருந்திய மாவிந்த நகரத்தினிடத்தே, நாங்கள்

தங்கி மகிழ்கின்ற இளமரக்காவினுக்கு ஒப்பாகும் என்றான் நளன்.

ஒக்குமதோ என்ருள்

கன்னியர்தம் வேட்கையே போலும் களிமழலை
தன்மணிவாய் உள்ளே தடுமாற—மன்னவனே;
இக்கடிகா நீங்கள் உறையும் இளமரக்கா
ஒக்குமதோ என்ருள் உயிர்த்து. 199

இளங் கன்னியர்களின் உள்ளத்தே எழுந்த காதல் வேட்கையினைப் போன்றதாகக், களிப்பூட்டும் மழலைச் சொற்களானவை தன் அழகிய வாயினுள்ளே கிடந்து தடுமாற்றம் கொள்ள, 'அரசே! மணஞ்சிறந்த இந்தச் சோலையானது நீங்கள் தங்கும் இளமரக்காவினைப் போன்றதோ?' என்று பெருமூச்சுடனே கேட்டவளாகத் தமயந்தி வாட்டமுற்ருள். ['நீங்கள்' என்றதனை நளனுடன் சென்றவர் பெண்களோ என்று ஐயுற்று, ஊடல் கொண்டு தமயந்தி வினவினுள் என்க.]

கடைசிவப்ப நின்ருள்

தொண்டைக் கனிவாய் துடிப்பச் சுடர்நுதல்மேல்
வெண்தரளம் என்ன வியர்வரும்பக்—கெண்டைக்
கடைசிவப்ப நின்ருள் கழல்மன்னர் வெள்ளைக்
குடைசிவப்ப நின்ருன் கொடி. 200

வீரக்கழல் அணிந்த பகைமன்னர்களின் வெண்கொற்றக் குடைகள் எல்லாம் களத்திலே வீழ்ந்து இரத்தத்திலே படிந்து செந்நிறமாகும் வண்ணம், வெற்றிகொண்டு நிலைபெற்றவனுகிய வீமராசனின் கொடியாகிய தமயந்தியானவள், கொவ்வைக்கனி போலும் தன் வாயிதழ்கள் துடிப்பவும், ஒளிபொருந்திய நெற்றியின் மேல் வெண்முத்துக்களைப் போன்ற குறுவியர்வு அரும்பவும், கெண்டை மீன்களைப் போன்ற தன் கண்களின் கடை சிவப்படையவுமாக ஊடி நின்ருள். [தமயந்தி ஊடல்கொண்டு நின்றதனைக் கவி இப்படிக் கூறுகிருர். தொண்டை—கொவ்வை.]

புருவக் கொடியின் நடனம்

தங்கள் புலவித் தலையில் தனித்திருந்த
மங்கை வதன மணியரங்கில்—அங்கண்

வடிவால்மேற் கால்வளைத்து வார்புருவம் என்னும்
கொடியாடக் கண்டானோர் கூத்து. 201

தங்கள் இருவருக்கும் இடையே ஏற்பட்ட ஊடலின் கண், தனியாகப்போய் நின்றிருந்த மங்கையாம் தமயந்தியின் முகமாகிய அழகிய அரங்கத்திலே, அழகிய கண்களாகிய கூர்மையுடைய வாளின் மேலாக நீண்ட புருவம் என்னும் நடனமாது, தன் கால்களை வளைத்து ஒப்பற்றவிதமாக ஆடிக்கொண்டிருந்த ஒரு கூத்தினையும் நளன் அப்போது கண்டான். [புருவங்கள் ஊடற்சினத்தால் துடிதுடிப்பக் கண்டான் நளன் என்பது இது.]

அடிமுடி சூட்டினன்

சில்லரிக் கிண்கிணிமென் தெய்வமலர்ச் சீறடியைத்
தொல்லை மணிமுடிமேற் சூட்டினன்— வல்லை
முழுநீலக் கோதை முகத்தே மலர்ந்த
செழுநீலம் மாறுச் சிவப்பு. 202

சிலவாகிய பரல்களைக்கொண்ட சதங்கைகள் விளங்கும் தமயந்தியின் மேன்மையான தெய்வமலர் போன்ற சிறிய பாதங்களைப் பழமை வாய்ந்த தன் மணிமுடியின் மேலாக நளன் அப்போது சூட்டிக்கொண்டான். முழுநீல மலர்களைக் கட்டிய மாலையினை அணிந்த கூந்தலினை உடைய தமயந்தியின் முகத்திலே விளங்கும் செழுமையான நீலமலர்போன்ற கண்களும், அதனால் தம் செந்நிறத்தினின்றும் மாறுபடுதலுற்றன. [அவள் சினம் நீங்கியவள் ஆயினள்.]

காமப் பயிர் விளைத்தாள்

அங்கைவேல் மன்னன் அகலம் எனுஞ் செறுவில்
கொங்கையேர் பூட்டிக் குறுவியர்நீர்—அங்கடைத்துக்
காதல் வரம்பொழுக்கிக் காமப் பயிர்விளைத்தாள்
கோதையரின் மேலான கொம்பு. 203

நங்கையர்களினுள்ளே மேலான குணநலன்கள் உடையவளாகிய தமயந்தியானவள், தன் ஊடல் தீர்ந்ததும் அழகிய கையிடத்தே வேலினையுடைய மன்னனாகிய நளனின் மார்பு என்னும் வயலினிடத்தே, தன் கொங்கைகள் என்னும் ஏரினைப் பூட்டி உழுது, குறுவியர்வு எனும் நீரினை அவ்வயலுக்கு அடைத்துக், காதல் எனும் வரம்புகளை ஒழுங்குபடுத்திக் காம இன்பமாகிய பயிரினையும் அங்கே விளைவித்தனள்.

3. மாவிந்த வாழ்வு

வாளை கரையேறும்

வேரி மழைதுளிக்கும் மேகக் கருங்கூந்தற்
காரிகையும் தானும்போய்க் கண்ணுற்ருன்— மூரித்
திரையேற மென்கிடங்கிற் சேலேற வாளை
கரையேறும் கங்கைக் கரை. 204

அலைகள் மூரிப்புடனே எழுந்து கரையின் மேலேயும் வந்து மோதின. இதனுல், கரையருகேயுள்ள பள்ளங்களிலே இருந்த வாளை மீன்கள், அவ் அலைகளுடனே கெண்டை மீன்களும் ஏறி வரக்கண்டு பொருமல், தாம் கரையேறத் தொடங்கின. அத்தகைய செழுமையுடையது கங்கைக் கரை. அதனைத் தேன்மழை துளிக்கும் கார்மேகம் போன்ற கருமையான கூந்தலையுடைய காரிகையான தமயந்தியுடன் தானும் சென்றடைந்து கண்ணுற்ருன் நளன். [அலைகளோடு கெண்டைகள் மேலேறி வந்ததாகவும், வாளைகள் எதிரேறிச் சென்றதாகவும் கொள்க.]

நறவேற்கும் குப்பி

சூதக் கனியூறல் ஏற்ற சுருள் வாழை
கோதில் நறவேற்கும் குப்பியென—மாதரார்
ஐயுற்று நோக்கும் அகன்பொழில்சென் றெய்தினுன்
வையுற்ற வேற்ருனே மண். 205

மாங்கனிகளினின்றும் வழிந்தொழுகிய இனிய சாற்றினைச் சுருண்டிருக்கும் வாழையின் குருத்துக்கள் ஏற்று விளங்கின. அவற்றைக் கண்டதும் தமயந்தியானவள் 'தெளிவான தேனினைக் கொண்டிருக்கும் குப்பிகளோ அவை?' என ஐயுற்று நோக்கலானுள். கூர்மை பொருந்திய வேற்படையினைக் கொண்ட தானைக்குரிய மன்னனுகிய நளன், அத்தகைய அகன்ற ஒரு பொழிலிலே அவளுடன் அப்போது சென்றடைந்தான். [மாதரார்-பெண்கள்; இங்கே தமயந்தியைக் குறித்தது; பொதுவாகப் பெண்களைக் குறித்ததெனவும் கருதலாம்.]

எங்கள் நகர்

வான்தோய நீண்டுயர்ந்த மாடக் கொடிநுடங்கத்
தான்தோன்று மாற்றின் தடம்பதிதான்—வான்தோன்றி
வில்விளக்கே பூக்கும் விதர்ப்பநா டாளுடையான்
நல்விளக்கே எங்கள் நகர். 206

'வானளாவ உயரமுடனே தோன்றி ஒளியுடைய விளக்கைப்போல மலர்கள் பூக்கின்ற செழுமையான விதர்ப்ப நாட்டினை ஆளும் உரிமையுடையவன் வீமராசன். அவனுடைய நல்ல குலவிளக்காக விளங்குகின்றவளே வானத்தைத் தொடுவது போன்ற மிகவும் உயரமான மாளிகைகள்தோறும் கொடிகள் அசைந்தாட விளங்கும் இந்தப் பெருநகரம்தான், எங்கள் மாவிந்த நகரமாகும். [நளன் தன் கோநகரைக் காட்டித் தமயந்திக்கு இப்படிக் கூறுகின்றான்.]

பன்னிரண்டு வருட வாழ்வு

பொய்கையும் வாசப் பொழிலும் எழிலுருவச்
செய்குன்றும் ஆறும் திரிந்தாடித்—தையலுடன்
ஆறிரண்டாண் டெல்லை கழித்தான் அடையலரைக்
கூறிரண்டாக் கொல்யானைக் கோ. 207

பகைவரை இருகூறுகளாக்கிக் கொல்லும் யானைப் படைக்குக் கோமான் நளமன்னன். அவன், தன் மனைவியான தமயந்தியுடன், பொய்கைகளிலும், மணமுள்ள சோலைகளிலும், அழகிய அருவிகளிலும், செய்குன்றுகளிலும் சுற்றியலைந்து, இன்பமுடனே ஆடி மகிழ்ந்தவனாகப் பன்னிரண்டு ஆண்டுகளை மகிழ்வுடன் கழித்தான்.

இரு குழவி ஈன்றாள்

கோல நிறம்விளர்ப்பக் கொங்கை முகங்கருக
நீல நிறமயிர்க்கால் நின்றெறிப்ப—நூலென்னத்
தோன்றாத நுண்மருங்குல் தோன்றச் சுரிகுழலாள்
ஈன்றாள் குழவி இரண்டு. 208

அழகான தமயந்தியின் மேனி நிறம் வெளுத்தது; அவள் கொங்கைக் காம்புகள் கருமையுற்றன; மயிர்க்கால்கள் நீல நிறம் நிலைபெற்று ஒளிவீசின; நூலென்னுமாறு தோன்றுதல் அற்றிருந்த நுண்மையான இடையும் தோன்றிற்று; சுருண்ட

தலைமயிரினை உடையவளான அவளும் இரண்டு குழந்தைகளைப் பெற்றனள். [மேனி விளர்த்தல் முதலியவை கருவுற்ற மாதரிடத்தே தோன்றும் மாறுபாடுகள். கருவுற்று, இரு குழந்தைகளையும் பெற்றாள் தமயந்தி என்பது இது.]

4. கலிமகன் சேர்தல்

திரிந்தும் காணான்

ஆண்டிரண்டா றெல்லை அளவும் திரிந்தேயும்
காண்டகைய வெங்கலியும் காண்கிலான்—நீண்டபுகழ்ச்
செந்நெறியாற் பார்காத்த செங்கோல் நிலவேந்தன்
தன்னெறியால் வேறோர் தவறு. 209

கொடியவனாகிய கலிமகனும், அனைவரும் கண்டு போற்றும் சிறப்புடனே திகழ்ந்த அந்தப் பன்னிரண்டாண்டு எல்லைவரையும், நளனையே சுற்றி வந்தான். நெடிதான புகழோடுகூடிய செம்மையான முறையினாலே நாட்டைக் காத்துவந்த செங்கோலினன் நிடதநாட்டு மன்னன். அதனால் அங்ஙனம் கலிபுருஷன் அலைந்தும், அவனிடத்தே நெறிமுறை வேறுபட்ட தவறு எதனையும் காணானாயினான். [அதனால், அவனைச் சாராதுமிருந்தான்.]

புந்தி மகிழப் புகுந்தான்

சந்திசெயத் தாள்விளக்கத் தாளின்மறுத் தான்கண்டு
புந்தி மகிழப் புகுந்துகலி—சிந்தையெலாம்
தன்வயமே ஆக்குந் தமைய னுடனிருந்தான்
பொன்னசல மார்பற் புகைந்து. 210

ஒருநாள் சந்தியாவந்தனஞ் செய்வதற்காகத் தன் பாதங்களை நளன் கழுவ, அப்போது ஒரு தாளிலே நீர் சிறிது இடத்துப் படாதுபோன மறுவினைக் கலிமகன் கண்டான். தன் மனம் மகிழ நளன்பால் புகுந்தான். அவனுடைய சிந்தை முழுவதையும் தன்வசமாகவே ஆக்கிக் கொண்டான். பொன்மலையினைப் போன்ற மார்பனாகிய நளனிடத்தே சினங் கொண்ட கலி, அங்ஙனம் அவன் சிந்தையை வயப்படுத்திக் கொண்டபின், நளனுக்குத் தமையன் முறையினனான புட்கரன் என்பவனுடன் சென்று சேர்ந்து, அவனுக்கு உதவியாகஇருந்தான்.

சேர்ந்தான் கலி

நாராய ணாய நமவென் றவனடியிற்
சேராரை வெந்துயரம் சேர்ந்தாற்போல்—பாராளும்
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி. 211

'நாராயணாய நம' என்று துதித்து, அந்தப் பரந்தாமனின் திருவடியே தமக்குத் துணையாகச் சேராதிருக்கின்றவர்களைக் கொடுமையான துன்பங்கள் சென்று அடைவதனைப் போலவே, நிடதநாட்டினை ஆளுங் கொற்றவனான நளனை, நிலமகள் தலைவனை, மெய்ந்நெறியறிந்த சிறந்தோனைக் கலியும் சென்று சேர்ந்தான்.

[கவி, இவ்விடத்தே தமக்குரிய நாராயண பக்தியை அருமையாக விளக்குகின்றார். 'நாராயணாய நமஹ' என்பது அஷ்டாட்சர மந்திரம். திருமாலைத் துதிப்போர்கள் இதனை மனமொழி மெய்களாலே துதிப்பது மரபு.

வாங்கித் தருகிறேன்

நன்னெறியில் சூதால் நளனைக் களவியற்றித்
தன்னரசு வாங்கித் தருகின்றேன்—மன்னவனே!
போதுவாய் என்னுடனே என்றான் புலிநரகுக்
கேதுவாய் நின்றான் எடுத்து. 212

இழிவு உடையதான நரகத்திற்கு ஒரு காரணமாக நிலை பெற்றவன் கலிபுருஷன். அவன் புட்கரனிடம், "மன்னவனே! நல்லொழுக்கம் ஆகாத சூதாட்டத்தினாலே நளனை வஞ்சித்து, அவனுடைய அரசாட்சியினை உனக்கு நான் வாங்கித் தருகின்றேன்; என்னுடனே புறப்படுவாய்?" என்று, எடுத்துச் சொன்னான்.

['நன்னெறியில் என்பது கவி வாக்கு. புலிநரகு கீழான நரகு. ஏது-காரணம். 'எடுத்து' என்றது, வற்புறுத்தி உரைத்ததனைக் காட்டும்.]

கவருடப் போயினன்

புன்னை நறுமலரின் பூந்தா திடையுறங்கும்
கன்னி இளமேதிக் காற்குழம்பு பொன்னுரைத்த
கல்லேய்க்கும் நாடன் கவருடப் போயினன்
கொல்லேற்றின் மேலேறிக் கொண்டு. 213

புன்னை மரத்து மணமலரின் பூந்தாதுகள் வீழ்ந்து கிடக்கும் இடத்திலே கிடந்து உறங்குகின்ற, கன்னித்தன்மை கழியாத இளைய எருமைகளின் காற்குழம்புகள், பொன்னை உரைத்துக் காணுகின்ற கட்டளைக் கல்லினைப் போலத் தோன்றும் நாட்டிற்கு உரியவனான புட்கரனும், கலியின் பேச்சுக்கு இசைந்தவனாகக், கொல்லேற்றின்மேல் ஏறிக் கொண்டு நிடதத்தை நோக்கிச் செல்வானானான். [கொல் லேறு–கொல்லுந் தன்மைகொண்ட மூரிப்பான ஆனேறு.]

புட்கரன் நிடதம் சேர்ந்தான்

வெங்கட் சினவிடையின் மேலேறிக் காலேறக்
கங்கைத் திரைநீர் கரையேறிச்—செங்கதிர்ப்பைம்
பொன்னொழியப் போதும் புறம்பணைசூழ் நன்னாடு
பின்னொழியப் போந்தான் பெயர்ந்து. 214

கொடுமை பளிச்சிடும் கண்களையுடைய சினம் பொருந் திய எருதின்மேல் ஏறிக்கொண்டு, காற்று எழுந்து வீசக் கங்கையாற்றின் அலைநீரானது கரையின்மேலே ஏறி வழிந்து சென்று பாய்ந்து, சிவந்த கதிர்களாகிய பொன்மணிகள் நீருள் மூழ்கி மறையுமாறு சென்றுகொண்டிருக்கும் வயல் கள் நாற்புறமும் சூழ்ந்துள்ள, நன்மை பொருந்திய தன் நாடானது பிற்பட்டுப் போகப் புறப்பட்டு, நிடத நாட்டிற் குள் சென்று சேர்ந்தான்.

என்ன கொடி இது?

அடற்கதிர்வேல் மன்னன் அவனேற்றின் முன்போய்
எடுத்தகொடி என்னகொடி என்ன—மிடற்சூது
வெல்லும் கொடியென்றான் வெங்கலியால் அங்கவன்மேல்
செல்லும் கொடியோன் தெரிந்து. 215

போர்க்களத்திலே பகைவரைக் கொன்று வெற்றி கொள்ளும் ஒளியுடைய வேலினனான நளன், அந்தப் புட்கர னின் முன்னே சென்று, ''நீ உயர்த்துள்ள இந்தக்கொடி எதனைக் குறித்த கொடியோ?'' என்று வினவினான். கொடிய கலியின் செயலினாலே, அவ்விடத்து நளனிடத்தே செல்லும் கொடி யோனான புட்கரன், நளனின் கேள்வியை உணர்ந்து, 'பெருஞ் சூதாட்டத்திலே எதிர்த்தவர் எவரையும் வெற்றிகொள்ளும் கொடி இதுவாகும்' என்றான். [மிடல்சூது-ஆற்றல் மிகுந்த சூது. வெம்கலி-கொடியகலி.]

நளனே அழைத்தான்

ஏன்றேம் இதுவாயின் மெய்ம்மையே எம்மோடு
வான்றேய் மடல்தெங்கின் வான்தேறல்—தான்தேக்கி
மீதாடி வாளைவயல் வீழ்ந்துழக்கும் நன்னுடன்
சூதாட என்முன் துணிந்து. 216

வாளை மீன்கள் வானுயர வளர்ந்த தென்னையின் மடலிலேயுள்ள சிறந்த கள்ளினைத் தாம் நிறைய உண்டு களித்து, அவற்றின்மீது குதித்து விளையாடிக் கீழேயுள்ள வயல்களிலே வீழ்ந்து கலக்குகின்ற நல்ல நாட்டிற்கு உரியவன் நளமன்னன். அவன் "நீ எடுத்த கொடி அதனைக் குறிப்பது உண்மையாயின், யாமே நின்னோடு சூதாடுதற்கு ஏற்றுக் கொள்வோம்; எம்முடனே நீ சூதாடுக" என்றான். [வான் தெங்கின் மடல் தேறல்-உயர்ந்த தென்னையின் மடலினிடத்தே யிருந்து கிடைக்கும் தென்னங்கள். தேக்குதல்-மிகுதியாக உண்டு வெறி கொள்ளல்.]

5. சூதினல் தோற்றான்

அமைச்சர் தடுத்தல்

காதல் கவருடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதல் மறுத்தல் இவைகண்டாய்—போதில்
சினையாமை வைகும் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி. 217

தாமரை முதலிய மலர்களினிடத்தே சூல்கொண்ட ஆமைகள் தங்கியிருக்கும் செல்வமிக்க நாட்டிற்கு உரியவனே! 'பிற மாதரிடத்தில் காதல் கொள்ளுதல், சூதாடுதல் கள்ளுண்டல், பொய் சொல்லுதல், பிறர் கொடுப்பதனைத் தடுத்தல் ஆகிய இவை எல்லாம், செம்மை என்ற ஒன்றையே நினைக்கவும் செய்யாத கீழ்மக்கள் மேற்கொள்ளும் நெறியன்றோ? ஆகவே, சூதினை மேற்கொள்ளல் முறையன்று' என்றனர் அமைச்சர்கள்.

மிக்கோர்கள் தீண்டுவரோ?

அறத்தைவேர் கல்லும் அருநரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்—மறத்தையே

பூண்டுவிரோ தஞ்செயும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ வென்றுர் தெரிந்து. 218

உலகில் நிலவும் அறநெறியினை வேருடனே பெயர்த்து எறியும்; பொறுத்தற்கும் அரியதான நரகத்துயரிடத்தே கொண்டு சேர்க்கும்; வலிமை ஒன்றையே ஆதாரமாகக் கொண்டு அருள் என்னும் பண்பையே அழித்து விடும்; பலாத்காரத்தையே மேற்கொண்டு எங்கும் விரோதங்களை உண்டாக்கும்; இத்தகைய பொய்யான சூதாடலை அறிவினுலே மிக்கோர்கள் அறிந்து தீண்டுதலும் செய்வார்களோ? [மிக்கோர் தீண்டார்; நீயும் தீண்டற்கு உரியையல்லை என்பது கருத்து.]

தக்கவர் சூதாடார்

உருவழிக்கும் உண்மை உயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கும் மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து. 219

உடல் வளத்தை அழித்துவிடும்; உண்மையையும் உயர்வையும் அழித்துவிடும்; வள்ளன்மையோடு கூடிய செல்வத்தையும் அழிக்கும்; மான உணர்வைச் சிதைக்கும்; கலந்த நண்பர் ஒருவரோடு கொண்ட அன்பினையும் அழிக்கும். சூதினுல் வரும் கேடுகள் ஒன்றல்ல; இப்படி இவையும் இன்னும் பலவுமாம். அதனுலே தகுதி உடையவர் எவரும் விருப்பமுடன் சூதாடலிலே ஈடுபடுவார்களோ? மாட்டார்களே! [அதனுல், நீயும் ஈடுபடல் கூடாதென்பது கருத்து.]

வஞ்சகரே அவர்

ஆயம் பிடித்தாரும் அல்லற் பொதுமகளிர்
நேயம் பிடித்தாரும் நெஞ்சிடையே—மாயம்
பிடித்தாரின் வேறல்ல ரென்றுரைப்ப தன்றே
வடித்தாரின் நூலோர் வழக்கு. 220

''சூதாடுவதற்கான காய்களைக் கைப்பிடித்தவர்களும்; துன்டம் விளைவிக்கும் வேசியரின் தொடர்பினைக் கடைப் பிடித்தவரும்; தம் நெஞ்சினிடத்திலே வஞ்சனையை மேற்கொண்ட வஞ்சகர்களினும் வேருகமாட்டார்கள்'' என்று அறநூல்கள் சொல்லுமல்லவோ! அதுவே, தீமைகளை அகற்றி

நன்மைகளையே மேற்கொண்ட அறவோர்களின் சாத்திரங்களிற் பயின்றுவரும் வழக்கும் ஆகும்! [இதனை நீயும் அறிவாய் என்பது குறிப்பு.]

நளனின் முடிபு

தீது வருக நலம்வருக சிந்தையாற்
சூது பொரவிசைந்து சொல்லினேம்—யாதும்
விலக்கலிர்நீ ரென்றுன் வராலேற மேதி
கலக்கலைநீர் நாடன் கனன்று. 221

மந்திரிகள் மேற்கண்டவாறு உரைப்பவும், வரால் மீன்கள் ஏறும்படியாக எருமைகள் கலக்கும் அலைகின்ற நீர்வளத்தினை உடைய நிடதநாட்டிற்கு உரியோனாகிய நளன், அவர்களைக் கோபித்துக் கொண்டான். 'இதனாலே தீமை வரினும் வருக; நன்மை வரினும் வருக; எம் மனமாரச் சூதாடற்கு இசைந்து அவனிடமும் அதனைச் சொன்னேம். எனவே, நீங்கள் என்னைத் தடை செய்யாதீர்கள்' என்றான்.

பணயம் யாது?

நிறையில் கவருடல் நீநினைந்தா யாகில்
திரையிற் கதிர் முத்தஞ் சிந்தும்—துறையில்
கரும்பொடியா மள்ளர் கடாவடிக்கும் நாடா
பொரும்படியா தென்றனிப் போது. 222

இப்படி நளன் தன் மந்திரிகள் பேச்சினையும் ஒதுக்கிச் சூதாடற்குத் துணிந்துவிட்டான். அதனைக் கண்ட புட்கரன் என்பவன், 'விலைமதிப்பற்ற ஒளியுடைய முத்துக்கள் சிந்துகின்ற நீர்த்துறைகளிலே வளர்ந்துள்ள கரும்புகளை ஒடித்து உழவர்கள் எருமைக் கடாக்களை அடித்து ஓட்டுகின்ற வளநாட்டினை உடையவனே! நிறைவான தன்மையற்ற சூதாடுதற்கு நீ எண்ணினையானால், நாம் சூதுப்போரிலே ஈடுபடும்படியாக, அதற்குரிய நினது பணயம் இப்போது என்னவோ? அதனைச் சொல்வாயாக' என்றான்.

பூணாரம் வைத்தான்

விட்டொளிர்வில் வீசி விளங்குமணிப் பூணாரம்
ஒட்டினேன் உன்பணயம் ஏதென்ன—மட்டவிழ்தார்
மல்லேற்ற தோளானும் வான்பணய மாகத்தன்
கொல்லேற்றை வைத்தான் குறித்து. 223

'விட்டுவிட்டு ஒளிர்கின்ற பிரகாசத்தை எங்கும் பரப்பிக் கொண்டிருக்கும் சிறந்த இரத்தினங்களால் இழைக்கப்பெற்ற யான் பூண்டிருக்கும் இந்த மாலையினைப் பணயமாக வைத் தேன், நின் பணயம் எதுவோ?' என்றுன் நளன்.

மணம் கமழும் தாரினை அணிந்த, மற்போரினை ஏற்கத் தக்க தோளினை உடையவனுன அப்புட்கரனும், தன் சிறந்த பணயமாகத் தான் ஏறிவந்த கொல்லும் குணமுடைய ஏற்றினையே அப்போது குறிப்பிட்டு வைத்தான்.

கலி கவருய்ப் புரண்டான்

காரேயும் கூந்தலார் காரிகைமேற் காதலித்த
தாரேயும் தோளான் தனிமனம்போல்—நேரே
தவருய்ப் புரண்ட தமைய னுெடுங்கூடிக்
கவருய்ப் புரண்டான் கலி. 224

மேகத்தினைப்போன்ற கருமையான கூந்தலை உடைய வளான காரிகையாம் தமயந்தியின்மேல் காதல்கொண்ட, தாரினைப் பொருந்தின தோளினனுன நளனது தனித்து நின்ற உள்ளத்தைப் போல, அவனுக்கு எதிராகத் தவருன முறையிலே முறைபிறழ்ந்து வந்து சூதுக்கு அழைத்த தமை யனுன புட்கரனேடும் கூடிக்கொண்டு, பாச்சிகையாகத் தானே உருக்கொண்டு, கலிமகன் வஞ்சகமாகப் புரண்டான். [தமையன் என்பதற்கு, நளனுக்குத் தமையனுகிய புட்கரன் எனப் பொருள்கொள்வாரும் உள்ளனர். கலியே கவருடற் குரிய பகடையாகிப் புட்கரனுக்கு ஆதரவாகப் புரண்டான் என்பது கருத்து.]

வைத்த நிதி தோற்றுன்

வைத்த மணியாரம் வென்றேன் மறுபலகைக்
கொத்த பணயம் உரையென்ன—வைத்தநிதி
நூரு யிரத்திரட்டி நூறுநூ ருயிரமும்
வேருகத் தோற்றுனவ் வேந்து. 225

[அந்தப் பந்தயத்திலே நளன் தோற்றுவிட்டான்.] அப் போது புட்கரன், "நீ பணயமாக வைத்த மணியாரத்தினை நான் வென்றுவிட்டேன். இனி மற்ருெரு பலகைக்குத் தகுதியான பணயம் யாதென்று சொல்லுவாயாக" என்றுன். அந்த வார்த்தைகளைக் கேட்ட நளமன்னன், அப்போது பணயமாக வைத்த நிதியாகிய நூருயிரத்தையும், இரட்

டித்த அநேக நூறு நூருயிரங்களையும், வேறுவேருக மீளவும் மீளவும் வைத்து அனைத்தையும் தோற்றுப்போனுன்.

நால்வகைப் படையும் தோற்ருன்

பல்லா யிரம்பரியும் பத்துநூ ருயிரத்துச்
சொல்லார் மணித்தேரும் தோற்றதற்பின்—வில்லாட்கள்
முன்ருேற்று வானின் முகிருேற்கும் மால்யானை
பின்ருேற்றுத் தோற்ருன் பிடி. 226

பலவாயிரம் குதிரைகளையும் புகழ் அமைந்த பத்து நூருயிரம் மணித்தேர்களையும், நளன் அடுத்து வைத்துத் தோற்ருன். அதன்பின், வானத்துக் கார்மேகங்களும் தோற்றுப் போகும்படியான பெரிதான களிற்றியானைகளை வைத்துத் தோற்ருன். அதன்பின், தன்பாலிருந்த பிடி யானைகளையும் வைத்துத் தோல்வியுற்ருன்.

பாவையரை வைத்துத் தோற்ருன்

சாதுரங்கம் வென்றேன் தரும்பணைய மேதென்ன
மாதுரங்கம் பூணும் மணித்தேரான் - சூதரங்கில்
பாவையரைச் செவ்வழியாழ்ப் பண்ணின்மொழிப் பின்னுகுழற்
பூவையரைத் தோற்ருன் பொருது. 227

"நால்வகைச் சேனைகளையும் வென்றேன்; இனி நீ தரும் பணையம் யாதோ?" என்று புட்கரன் கேட்டான். கேட்கவும், பெரிய குதிரைகள் பூண்டிருப்பதான மணி யிழைத்த தேரினை உடையவனுன நளன், சூதாடுகளத்திலே அந்தப் புட்கரனுடன் மேலும் பொருது, பாவை போன்ருரும், செவ்வழி என்னும் பண்ணிசைக்கும் யாழினது பண்ணினைப்போன்ற இனிய பேச்சினையும் பின்னலிட்ட கூந்தலையும் உடையவருமான, அரண்மனைப் பணிப்பெண்கள் அனைவரையும் பணையமாக வைத்துத் தோற்றுப்போனுன்.

சிறியானைத் திரு சேர்ந்தாள்

கற்பின் மகளிர்பா னின்றும் தமைக்கவட்டின்
விற்கு மகளிர்பான் மீண்டாற்போல்—நிற்கும்
நெறியானை மெய்ம்மைவாய் நின்ருனை நீங்கிச்
சிறியானைச் சேர்ந்தாள் திரு. 228

கற்புச் செவ்வியினையுடைய மகளிரிடத்தினின்றும் நீங்கித் தம்மைக் கபடத்திலே விலைப்படுத்தும் வேசிமகளிர் பால் ஒருவன் சென்றதுபோல, நிலைபெற்ற நல்லொழுக்கம் உடையவனும் சத்தியத்தின் நெறியிலேயே நிலைபெற்றவனுமான நளனைக் கைவிட்டுப் பிரிந்து, திருமகளும், சிறுமைக் குணமுடையோனான அந்தப் புட்கரனைச் சென்று அடைந்தாள். ['கவட்டின் விற்கும்' என்றது, விற்பது போலக் காட்டி வஞ்சித்தலை இயல்பாக உடையவர் எனக் குறிப்பதற்காகும்.]

இவளைப் பணயம் தா?

மனைக்குரியார் அன்றே வருந்துயரம் தீர்ப்பார்
சினைச்சங்கின் வெண்டலையைத் தேனல்—நனைக்கும்
குவளைப் பணைப்பைந்தாட் குண்டுநீர் நாடா
இவளைப் பணயந்தா வின்று. 229

[இங்ஙனமாக, நளன் தன் உடைமைகளானவை அனைத்தையும் வைத்து இழந்து நின்றான். அப்போது புட்கரன்,] 'கருவுற்றிருக்கும் சங்கினது வெண்மையான தலையினைத் தேன் பெருக்கினாலே நனைத்துக் குவளைமலர்கள் களிப்பூட்டுகின்ற வயல்களிலே நெற்பயிரின் பசுந்தாள்கள் விளங்கும் ஆழமான நீர்வளம் நிறைந்த நிடதநாட்டிற்கு உரியவனே! ஒருவருக்கு இன்னல் வந்த காலத்திலே அவர்தம் இல்லறத்திற்கு உரியவரான மனைவிமாரல்லவோ அவருக்கு வருகின்ற துயரங்களைப் போக்குபவர்; அதனால், இப்போது தமயந்தியாம் நின் மனைவியைப் பணயமாகத் தருவாயாக'' என்று கேட்டான்.

நாம் போதும்

இனிச்சூ தொழிந்தோம் இனவண்டு கிண்டிக்
கனிச்சூத வார்பொழிலின் கண்ணே—பனிச்சூதப்
பூம்போ தவிழ்க்கும் புனலுடன் பொன்மகளே
நாம்போதும் என்றான் நளன். 230

[அதனைக் கேட்டதும் நளன் தன் நிலையினை உணர்ந்தான்.] "வண்டினங்கள் குடைந்துள்ள பழங்களையுடைய மாமரங்களைக் கொண்ட உயர்ந்த மாஞ்சோலையினிடத்தே பெய்கின்ற பனியானது, மாம்பூக்களின் இதழ்களைப் பிணிப் பவிழ்த்து மலரச்செய்கின்ற நீர்வளமுள்ள, விதர்ப்பநாட்டு

அரசனின் திருமகளே! இனிச் சூதாடலை யாம் கைவிட்டோம்; நகரைவிட்டு இப்போது வெளியேறிப் போவோம்'' என்று தமயந்தியை நோக்கிக் கூறினன்.

6. நாடகன்ற கோலம்

தேவியொடும் போயினன்

மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் கொள்ளத்தான் போனற்போல்—தன்கால்
பொடியாடத் தேவியொடும் போயின னன்றே
கொடியானுக் கப்பார் கொடுத்து. 231

மென்மையான பாதங்களையும் சிறகுகளையும் உடைய அன்னப் பறவையானது, தான் வீற்றிருந்த மென்மையான மலரினைப் புன்மையான காகமானது வந்து கைப்பற்றிக் கொள்ள, தான் அதனின்றும் நீங்கிப் போயினற்போலத், தன் நாட்டினைக் கொடியவனுகிய புட்கரனுக்குக் கொடுத்து விட்டுத் தன் தேவியோடுங் கூடியவனுகத், தன் பாதங்களிலே புழுதி படும்படியாக நடந்து நளன் அரண்மனையினின்றும் வெளியேறிப் போவானுயினன்.

விதியின் வலி

கடப்பா ரெவரே கடுவினையை வீமன்
மடப்பாவை தன்னுடனே மன்னன்—நடப்பான்
வனத்தே செலப்பணித்து மாயத்தாற் சூழ்ந்த
தனைத்தே விதியின் வலி. 232

கடுமையான வினைப்பயனின் விளைவினைப் கடந்து போகின்றவர்தாம் யாவர்? தீவினையின் வலிமையானது, வீமராசனின் மடப்பம் பொருந்திய திருமகளான தமயந்தியுடனே மன்னனும் நளனையும் நடப்பவராகக் காட்டிடத்தே செல்லுமாறு ஏவிவிட்டது. வஞ்சனையினலே கலிபுருடன் கருதிய அந்தத் தன்மையதே அவர்க்கு வந்து வாய்த்த நிலையும் ஆகும். [இது கவிக்கூற்று. நளன் சூதாடும் இழிந்தோன் அல்லன் என்பார் கவி, இப்படி எல்லாம் வினைவலியினலே வந்து எல்லாம் சம்பவித்தது என்று முடிவு கூறுகின்ருர்,

போவது யாங்கு?

ஆருயிரின் தாயே அறத்தின் பெருந்தவமே
பேரருளின் கண்ணே பெருமானே—பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்கென்றுர் தங்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று. 233

நளனும் தமயந்தியும் குழந்தைகளுடன் வெளியேறிச் சென்று கொண்டிருந்த அந்தக் கொடுமையைக் கண்ட மாவிந்த நகரத்து மக்கள் கலங்கினுர்கள். நளனிடம் வந்து தம் கண்களிலே வழிந்தோடுகின்ற கண்ணீரினை வார்த்து அவன் கால்களைக் கழுவியவராக நின்று சொல்லலானுர்கள்: "இந்நகரத்து அரிய உயிர்த் தொகைகட்கெல்லாம் தாய் போல விளங்கியவனே! தருமத்தின் பெருந்தவ உருவமாக விளங்கியவனே! பேரருள் கொண்ட கண் போன்றவனே! பெருமானே! இந் நிலப்பகுதியினை யாவனைக் காவல் புரியுமாறு விட்டுவிட்டு நீ எவ்விடத்துக்குப் போகின்ருய்?" என்று புலம்பினுர்கள்.

அழிவரோ செங்கோலவர்

வேலை கரையிழந்தால் வேத நெறிபிறழ்ந்தால்
ஞாலம் முழுதும் நடுவிழந்தால்—சீலம்
ஒழிவரோ செம்மை உரைதிறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர். 234

கடல்கள் தம் கரையினை இழந்துபோயினவாகி மேலேறிக் கரை கடந்தாலும், வேதமானது தன் சத்தியநெறியினின்று பிறழ்ந்து போயினுலும், உலகம் முழுவதுமே நடுநிலைமை இழந்து போயினதானுலும், செவ்வையான ஆட்சி நடாத்துகின்றேரான நின்போன்றவர் தம் நல்லொழுக்கத்தினின்றும் நீங்குவார்களோ? அன்றிச் செம்மையான தம் பேச்சினின்று மாருத தம் செய்கையினின்றும் அழிந்துபோவார்களோ? போகார்களே! அங்ஙனமாகவும் இங்ஙனம் நிகழ்ந்ததுதான் என்னவோ? [இவ்வாறு நொந்து கூறினர் மக்கள்.]

நாளை எழுந்தருள்க

வடியேறு கூரிலைவேன் மன்னுவோ உன்றன்
அடியேங்கட் காதரவு தீரக் கொடிநகரில்
இன்றிருந்து நாளை எழுந்தருள்க என்றுரைத்தார்
வென்றிருந்த தோளான்றுள் வீழ்ந்து. 235

வெற்றி நிலைபெற்றிருந்த தோட்களையுடைய நளனின் பாதங்களிலே வீழ்ந்து, "வடித்த ஏறுபோன்ற கூர்மையான இலைப் பகுதியினையுடைய வேலினைக் கொண்டிருக்கும் மன்னவனே! உன்னுடைய அடியவராகிய எங்கட்கு ஆதரவு திருமாறு. கொடிகள் பறக்கும் இந்த நகரத்திலே இன்று மட்டுமாயினும் தங்கியிருந்து, நாளைக்குப் புறப்பட்டுப் போவீராக" என்றும் வேண்டினர்கள். [கொடிநகர் என்பதனைக் 'கொடி இ நகர்' எனப் பிரித்து, 'கொடுமையான இந்த நகரிலே' எனவும் பொருள் கொள்வர்.]

இன்று இங்கு இருத்துமோ

மன்றலிளங் கோதை முகநோக்கி மாநகர்வாய்
நின்றுருகு வார்கண்ணி னீர்நோக்கி—இன்றிங்
கிருத்துமோ வென்று னிளங்குதலை வாயாள்
வருத்தமோ தன்மனத்தில் வைத்து. 236

பெரியதான மாவிந்த நகரத்தின் வாயிலிலே நின்று அங்ஙனம் உருகிப் புலம்பியவர்களின் கண்களினின்று வழிந்தோடிய கண்ணீர்ப் பெருக்கினை நளன் பார்த்தான். மணம் கொண்ட இளைய கோதையாளான தமயந்தியின் முகத்தை நோக்கினன். இளையதான மழலை விளங்கும் வாயினளான அவளுடைய வருத்தத்தைத் தன் மனத்திலே வைத்தோயாதோ, 'இன்று இவ்விடத்தே இருப்போமோ?' என்று அவளைக் கேட்டான்.

கொண்டாடினரைக் கொல்

வண்டாடும் தார்நளனை மாநகரில் யாரேனும்
கொண்டாடினர் தம்மைக் கொல்லென்று—தண்டா
முரசறைவா யாங்கென்றன் முன்னே முனிந்தாங்
கரசறியா வேந்த னழன்று 237

[இவ்வாறு நளனின் நிலைமையிருக்கையில், அவ்விடத்தே, அரசநெறியின் பண்பினை அறியாதவனாகிய புட்கரன் என்பவன், தன் ஏவலர் முன்பாகச் சினங்கொண்டவனாகிக் கொதித்தெழுந்து, "வண்டுகள் களித்தாடும் தாரினையுடைய நளனை மாநகரிலே யாரேனும் உபசரித்துப் போற்றினர் என்றால், 'அவர்களைக் கொன்றுவிடுக' என்று ஓயாத முரசினை எங்கும் அறைவாய்" என, ஏவலரை ஏவினன். ['முன்னே முனிந்து' என்பதனை, முதலிலேயே நளன்பாற்

பகைகொண்டு முனிந்துவந்த புட்கரன், இப்போது அழன்று ஆணையிட்டான் எனக் கூட்டிப் பொருள் கொள்வர்.]

என்னல் வந்தது?

அறையும் பறையரவங் கேட்டழிந்து நைந்து
பிறைநுதலாள் பேதைமையை நோக்கி—முறுவலியா
இந்நகர்க்கீ தென்பொருட்டா வந்த தெனஉரைத்தான்
மன்னகற்றும் கூரிலைவேன் மன். 238

தன்னுடனே மாறுகொண்ட மன்னவரின் உயிரினைப் போக்கும் கூர்மையான இலையினையுடைய வேலினை ஏந்திய நளமன்னன், அங்ஙனமாக அறைந்த பறையொலியினை கேட்டான். தன் நெஞ்சம் அழிந்து சோர்ந்து, பிறயனைய நெற்றியுடையாளான தமயந்தியின் பேதைமையினைக் கண்டு இளமுறுவல் செய்தவாறே, 'இந்த நகரத்திற்கு இத்தகைய தோர் கொடுமை என் காரணமாகவே வர நேரிட்டது' என்று வருத்தத்துடன் சொன்னன்.

வாயில் கடந்தான்

தன்வாயில் மென்மொழியே தாங்கினுன் ஓங்குநகர்ப்
பொன்வாயில் பின்னுகப் போயினுன்—முன்னுளில்
பூமகளைப் பாரினெடு புல்லினுன் தன்மகனைக்
கோமகளைத் தேவியொடுங் கொண்டு. 239

முற்காலத்திலே மலர்களை நிலமகளோடும் தழுவியிருந் தோனுகிய நளமன்னன், தன் குமாரனையும் தன் மகளான அரச குமாரியையும், மனைவியான தமயந்தியினேடும் அழைத்துக் கொண்டவனுகத், தன்னுடைய வாக்கிலே அப்போதும் மென்மையான சொற்களையே தாங்கியவனுக, உயர்ந்த நகரத்தின் பொன்னுலிழைத்த கோட்டைவாயில் பிற்படுமாறு அதனைக் கடந்தும் போவானுயினுன். [மக்களுக்கு இதமான வார்த்தைகளைச் சொல்லி அமைதிப் படுத்திவிட்டு, நளன் குடும்பத்துடன் நகரைவிட்டு வெளி யேறினுன் என்பது கருத்து.]

இழவு படுமாபோல்

கொற்றவன்பான் செல்வாரைக் கொல்வான் முரசறைந்து
வெற்றியொடு புட்கரனும் வீற்றிருப்ப—முற்றும்

இழவு படுமாபோல் இல்லங்க டோறும்
குழவிபா லுண்டிலவே கொண்டு. 240

வெற்றி வேந்தனுகிய நளனிடத்தே செல்பவரைக் கொல்லும்படியாக முரசறையச் செய்து, அந்த வெற்றிச் செருக்குடனே புட்கரனும் வீற்றிருந்தான். ஆனால், அந்த நகரம் முழுவதுமோ, இழவுபட்ட விதத்தைப் போன்றதாகி ஒளியிழந்து கிடந்தது; வீடுகள் தோறும் குழந்தைகள் கூடத் தம் தாயாரின் மார்பைப் பற்றிக்கொண்டும் பால் உண்ணுவாய்ச் சோர்ந்திருந்தன. [அந்த அளவுக்கு நகரம் வருத்தத்திலே மூழ்கிக் கிடந்ததென்பது குறிப்பு. புட்கரனின் வெற்றிப் பெருமிதத்தை இகழ்ந்து உரைத்தது இது வாகும்.]

கடந்தோமோ எந்தாய்!

சந்தக் கழற்று மரையுஞ் சதங்கையணி
பைந்தளிரு நோவப் பதைத்துருகி—எந்தாய்
வடந்தோய் களிற்றய் வழியான தெல்லாம்
கடந்தோமோ வென்றார் கலுழ்ந்து. 241

அழகான வீரக்கழல் அணிந்த தாமரைபோன்ற பாதங்களையுடைய நளனின் குமாரனும், பாதசரம் அணிந்த பசுமையான தளிரைப்போன்ற நளனின் குமாரியும், தம் பாதங்கள் நோவுதலினலே தவித்து மனத்தளர்ச்சி கொண்டனர். ''எம் தந்தையே! வடம் தோய்ந்திருக்கும் களிற்றினை உடையவனே! வழியானது அனைத்தையும் கடந்துவிட்டோமோ?'' என்று கலங்கியவராகக் கேட்டனர், [எந்தாய்-எனத் தாயை விளித்ததாகவும், களிற்றய் எனத் தந்தையை விளித்த தாகவும் கொண்டு, பெற்றோர் இருவரையும் கேட்டதாகவும் உரைக்கலாம்.]

நளனின் துயரம்

தூயதன் மக்கள் துயர்நோக்கிச் சூழ்கின்ற
மாய விதியின் வலிநோக்கி—யாதும்
தெரியாது சித்திரம்போல் நின்றிட்டான் செம்மை
புரிவான் துயரால் புலர்ந்து. 242

செம்மையானவே செய்கின்ற இயல்புடையோனுகிய நளமன்னவன், அவ்வாறு கேட்ட தன்னுடைய மக்களின் துயரத்தைக் கண்டான். தன்னை வந்து சூழ்கின்ற வஞ்சம்

பொருந்திய விதியின் வலிமையையும் நோக்கினுள். துயரத்திஞலே வாட்டமுற்று, யாதும் சொல்லவோ செய்யவோ தோன்ருமல், ஒரு சித்திரத்தைப் போலச் செயலற்று நின்று விட்டான்.

7. சிதறிய குடும்பம்

வீமன் நகருக்குச் செல்க

காதல் இருவரையும் கொண்டு கடுஞ்சுரம்போக்
கேதம் உடைத்திவரைக் கொண்டுநீ – மாதராய்
வீமன் திருநகர்க்கே மீளென்ருன் விண்ணவர்முன்
தாமம் புனைந்தாளைத் தான். 243

வானவராகிய இந்திரன் முதலியோரின் முன்னிலையிலே அவர்களை விலக்கித் தனக்கு மணமாலை சூட்டித் தன்னை மணந்துகொண்ட தமயந்தியை நோக்கி, "அழகுடையாளே! நம் அன்பிற்கு உரியவராகிய நம் மக்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு கடுமையான பாலைவழியிலே செல்வது துன்பம் உடையதாகும். அதனுல், இவரை இட்டுக்கொண்டு நீ வீமராசனின் சிறந்த நகருக்குச் செல்வாயாக" என்ருன். [தான்–அசை. மாதராய்- அழகுள்ளவளே; என்றது தமயந்தியை. தாமம்-மணமாலை.]

காதலனைப் பெறலாமோ?

குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம் பெறலாமோ—கொற்றவனே
கோக்கா தலனைக் குலமகளுக் கென்றுரைத்தாள்
நோக்கான் மழைபொழியா நொந்து. 244

நளன் அங்ஙனமாகச் சொல்லவும். அதனைக் கேட்ட தமயந்தியானவள் கண்களாலே கண்ணீராகிய மழையினைப் பொழிபவளாளுள். மனம் நொந்தவளாக, "கொற்றவனே! நற்குலத்திலே பிறந்த ஒரு பெண்ணுக்குப் பழுதில்லாத தோற்றத்தையும் மதலைவாயினரான மைந்தர்களையும் பெற்றுக்கொள்ளலாம்; ஆயின், சிறந்த காதலனைப் பெற்றுக் கொள்ளக் கூடுமோ?" என்று சொன்ஞள். [தான் நளனை விட்டுப் பிரிய விரும்பவில்லை என்று தமயந்தி இங்ஙனம் கூறு

கின்ருள். அவனேடேயே தான் வருவதாகவும் குழந்தைகளை அதற்காகப் பிரிவதற்குங்கூட இசைவதாகவும் தமயந்தி கூறினதாகக் கொள்க.]

மகப்பெரு மானிடர்கள்

கைதவந்தான் நீக்கிக் கருத்திற் கறையகற்றிச்
செய்தவந்தான் எத்தனையும் செய்தாலும்—மைதீர்
மகப்பெரு மானிடர்கள் வானவர்தம் மூர்க்குப்
புகப்பெருர் மாதராய் போந்து. 245

"தமயந்தி! உள்ளத்திலே வஞ்சத்தைவிட்டுக். கருத்திலே படர்ந்துள்ள குற்றத்தை நீக்கி, எத்தனை செய்தற்கரிய தவத்தைச் செய்தாலும், பாவத்தைத் தீர்க்கும்படியான மக்களைப் பெருத மானிடர்கள் தேவர்களுடைய ஊராகிய சுவர்க்கத்திலே சென்று புகவே மாட்டார்கள். [தமயந்தி, 'குழந்தைகளையேனும் பெற்றுக்கொள்ளலாம்' என்று சொல்ல, நளன் 'குழந்தைகளைப் பெருதவர்க்குச் சுவர்க்கபோகம் கிடையாதென்று' கூறுகின்ருன். அவர்களைப் பிரிவதற்கியலாது அவன் மனம் கொள்ளுகின்ற வேதனை மிகுதியும் இதனுற் புலப்படும்.]

என்னுடையரேனும் உளரோ?

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்? 246

இனிதான உணவிலே கையிட்டு அளைகின்ற தாமரைப் பூப்போன்ற கைகளையும், மணம்நாறும் சிவந்த வாயினையும் கொண்ட மக்களை இவ்விடத்தே அடையப் பெருதவர், பிற செல்வங்களை உடையவர்களேயானுலும், கீர்த்தியை உடையவர்களே யானுலும், மற்றும் என்னென்ன வசதிகளையும் உடையவர்களே யானுலும், அவர்கள் ஏதேனும் உடையவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் ஆவார்களோ? [இதுவும் நளன் சொல்வது. இவ்வுலகிலே மக்கட் செல்வம் ஒன்றே செல்வமாகக் கருதிப் பேணுவதற்கு உரியதென்று நளன் அதன் சிறப்பினை மேலும் வற்புறுத்திச் சொல்லுகின்ருன்.]

என்ன பயன்?

சொன்ன கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னங்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி. 247

இனிமையான முகத்து எதிரிலே குறுகின தலைப்பக்கங்களையுடையவரும் சதங்கை அணிந்த பாதங்களுள்ளவருமான சிறந்த மக்களின் பால்வடியும் வாயினிடத்துச், சிறுகச் சிறுகப் பிறக்கும் மழலைச் சொற்களைக் கேட்டு அந்த இன்பததை அநுபவியாத காதுகள், ஆன்றோரால் சொல்லப்பட்ட கலைகளின் பகுதிகள் அனைத்தினும் படிந்தனவே யானாலும் அதனால் என்ன பயனை உடையதாம்? [எத்துணைக் கல்வி கற்றாலும், குழந்தைகளின் மழலைப் பேச்சைக் கேட்டின்புறாத செவிகளாற் பயனில்லை என்பதாம். 'குழலினிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச்சொற் கேளாதவர்' என்னும் குறட்பாவும் இதே கருத்தினை வலியுறுத்தும்.]

எம் பதிக்குப் போந்தருள்க

போற்றரிய செல்வம் புனனாட் டொடும்போகத்
தோற்றமையும் யாவற்குந் தோற்றாதே—ஆற்றலாய்
எம்பதிக்கே போந்தருளு கென்றா ளெழிற்கமலச்
செம்பதிக்கே வீற்றிருந்த தேன். 248

[மக்கட் செல்வமே சிறந்த செல்வமென்று நளன் இவ்வாறு எடுத்துச் சொல்லவும், அதனைக் கேட்ட அழகான தாமரை மலராகிய] செவ்விய இடத்திலே தங்கியிருக்கும் தேன் போன்ற சிறந்த சொல்லினிமையினை உடைய தமயந்தியானவள், "ஆற்றல் உடையவனே! போற்றுவதற்கும் அரிதான நம் செல்வம் எல்லாம் நீர்வளமுள்ள நம் நாட்டோடும் போய்விடும்படியாக, நீ சூதிலே தோற்றமையும் எவர்க்கும் தோற்றாதேயே. எங்கள் நகருக்கே எம்மோடு நீயும் எழுந்தருள்வாயாக" என்றாள். [காட்டிற்குப் போவதாக நளன் சொல்லவும், தமயந்தி, தன் ஊருக்கே போகலாமென வேண்டுகின்றாள். சூதில் தோற்றது தோன்றாமல் என்றது, அதனால் வந்துற்ற வறுமைத்துயரம் தோற்றாதபடியாக என்க.]

மானம் துடைக்கும் வாள்

சினக்கதிர்வேற் கண்மடவாய் செல்வர்பாற் சென்றீ
எனக்கென்னு மிம்மாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள். 249

''சினம் ஒளிறும் வேல்போன்ற கண்களை உடையவளே! செல்வம் உடையவர்களிடத்தே சென்று எதனையாவது தருவீராக என்று இரந்து நிற்பது போன்றது நீ சொல்லும் இந்தச் சொற்கள் என்று அறிவாயாக. தனக்குரியதான சிறந்த இடத்தையும் அழித்துத், தரும நெறியினையும் வேரோடு பிடுங்கி, மானத்தையும் அழிக்கவல்லதாகிய ஒரு வாளினைப் போன்ற கொடிய செயலாகும் அது. அதனால் அதனை யான் மேற்கொள்ளேன்'' என்கிறான் நளன். ['மனைவியுடன் அவள் வீட்டிற்சென்று இருப்பது, தன்னுடைய கௌரவத்திற்கு இழுக்கானதாகும்' என்று, இப்படி அவள் முடிபினை மறுத்து உரைக்கின்றான் நளன்.]

பேடிகள்! பித்தர்!

மன்னராய் மன்னர் தமையடைந்து வாழ்வெய்தி
இன்னமுதம் தேக்கி யிருப்பாரேல்—சொன்ன
பெரும்பே டிகளலரேற் பித்தரே யன்றோ
வரும்பேடை மானே யவர். 250

''அருமையான பெண்மான் போன்றவளே! மன்னவரா யிருந்தும் வேறொரு மன்னரைச் சார்ந்திருந்து, அதனால் நல் வாழ்வினை அடைந்து இனிதான உணவினை உண்டு வாழ்ந் திருப்பாரானால், அத்தகைய மன்னவர்கள், பெரியோர் சொன்ன பெரும் பேடிகளே யாவர்; பேடிகள் அல்லாரேல், அவர்கள் பைத்தியக்காரர்கள் ஆவதும் உண்மையல்லவோ? [தேக்கி-நிறைய வயிற்றை நிரப்பி. பேடு-ஆண் பெண் ணற்ற அலி நிலையினர். பிறரைச் சார்ந்து வாழ்பவர் பேடிகள் அல்லது பைத்தியக்காரர்கள் அல்லரோ! அங்ஙனமாக வும் எப்படி இசைவேன்? என்றான் நளன்.]

காதலரை அனுப்புக

செங்கோலாய் உன்றன் திருவுள்ளம் ஈதாயின்
எங்கோன் விதர்ப்பன் எழில்நகர்கே—நங்கோலக்

காதலரைப் போக்கி அருளொன்றுள் காதலருக்
கேதிலரைப் போல எடுத்து. 251

''செங்கோன்மை உடையவனே! உனது திருவுள்ளம் இவ் வண்ணமானால், என் தந்தையாகிய விதர்ப்ப மன்னவனின் அழகான நகருக்கு நம்முடைய அன்பிற்குரியாரான அழகான மக்களை மட்டும் அனுப்பி அருள்வாயாக'' என்று தன் காதன் மக்களுக்குத் தான் தாயன்பு இல்லாத அயலவள் ஒருவரைப்போல நின்று, தமயந்தி நளனிடத்தே கூறினாள். [எங்கோன்-எம் கோமான்; இங்கே தகப்பன். திருவுள்ளம்-மனப்போக்கு. ஏதிலர்-எவ்வுறவுப் பிணிப்பும் இல்லாத அயலவர்.]

தாதைக்குக் காட்டுக

பேதை பிரியப் பிரியாத பேரன்பின்
காதலரைக் கொண்டுபோய்க் காதலிதன்—தாதைக்குக்
காட்டுநீ என்றான் கலங்காத உள்ளத்தை
வாட்டுநீர் கண்ணிலே வைத்து. 252

எதற்கும் கலங்காத திண்மையான தன் உள்ளத்தையும் வாட்டும் தகைமையதான மக்களைப் பிரிவதான துயரத்தைத் தன் கண்ணிலே வைத்தவனாக, நளன், ''என் காதலியாம் இப் பேதையானவள் பிரிதற்குத் துணிவு கொண்டும், தாம் பிரிதற்கு மனம் பொறாத பேரன்பினரான அன்பிற்குரிய மக்களாகிய இவரைக் கொண்டுபோய், என் காதலியின் தந்தையாகிய வீமராசனுக்குக் காட்டுக'' என்று தம்முடன் தொடர்ந்து வந்துகொண்டிருந்தவனாகிய ஓர் அந்தணனைக் கேட்டுக்கொண்டான்.

வேறாகப் போக்குதிரோ?

தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப்பயந்தாள்
இந்து முகத்தை எதிர்நோக்கி—எந்தம்மை
வேறாகப் போக்குதிரோ என்றார் விழிவழியே
ஆறாகக் கண்ணீர் அழுது. 253

அதனைக் கேட்ட அம்மக்கள் தம் தந்தையின் திருமுகத்தை நோக்கினர்; தம்மைப் பெற்றவளின் நிலவனைய முகத்தையும் எதிரிட்டு நோக்கினர். தம் கண்களின் வழியே கண்ணீர் ஆறாகப் பெருகி ஓடுமாறு ''எங்களை உங்களைவிட்டுத் தனியே வேற்றிடம் அனுப்புகின்றீர்களோ?'' என்று கூறி

அழுதனர். [தாய் தந்தையரைப் பிரிய இயலாத மக்கள் அங்ஙனம் புலம்புகின்றனர்.]

புல்லி விடா நின்றாள்!

அஞ்சனந்தோய் கண்ணில் அருவிநீர் ஆங்கவர்க்கு
மஞ்சனநீர் ஆக வழிந்தோட—நெஞ்சுருகி
வல்லிவிடா மெல்லிடையாள் மக்களைத்தன் மார்போடும்
புல்லிவிடா நின்றாள் புலர்ந்து. 254

பூங்கொடி போலும் நுண்மையான இடையுடைய வளான தமயந்தியானவள், மைதீட்டிய தன் கண்களி னின்றும் அருவிபோல வழிந்தோடும் கண்ணீரே அவ்விடத்து அவர்கட்குத் திருமஞ்சன நீர்போல் வழிந்தோடி முழுக் காட்டத், தன் உள்ளம் உருகியவளாக, அவர்களைத் தன் மார்புடனே அணைத்துக்கொண்டு, விடுவதற்கு மனமற்ற வளாக வாட்டமுடன் செயலற்று நின்றாள்.

உயிர்கொண்டு ஏகுவான்

இருவர் உயிரும் இருகையான் வாங்கி
ஒருவன் கொண் டேகுவான் ஒத்து—அருமறையோன்
கோமைந்த னோடிளைய கோதையைக்கொண் டேகினான்
வீமன் நகர்க்கே விரைந்து. 255

அரிதான வேதப்பொருள் உணர்ந்தோனாகிய அந்தணனும், நள தமயந்தியர் ஆகிய அவ்விருவரது உயிரையும் தன் இரண்டு கைகளினாலேயும் பறித்துக் கொண்டு சென்றாற்போல, அரசகுமரனோடு அவனுக்கு இளையவளான அரசகுமாரியையும் தன் இரு கைகளிலேயும் பிடித்துக் கொண்டவனாக, வீமராசனின் நகரமான குண்டின புரத்துக்கு விரைந்து செல்வானானான். [பெற்றோரிடமிருந்து மக்களைப் பிரித்துச் செல்லும் நிலையினைக் கூற்றுவன் உயிரைப் பற்றிக்கொண்டு செல்லும் நிலைக்கு ஒப்பிடுகின்றார் கவிஞர். அந்த அளவிற்கு நளதமயந்தியர் மக்களைப் பிரியவியலாது வருத்தமுற்றனர் என்பது கருத்து.]

உள்ளம் ஒடுங்கினான்!

காத லவர்மேலே கண்ணோட விண்ணோடும்
ஊதை எனநின் றுயிர்ப்போட—யா தும்

உரையாடா துள்ளம் ஒடுங்கினன் வண்டு
விரையாடும் தாரான் மெலிந்து. 256

வண்டுகள் மணமுள்ள தேனிலே முழுகிக் களிக்கும் பூமாலையினையுடைய நளன், மக்களைப் பிரியும் அந்த வருத்தத்தினாலே தன் உள்ளம் மெலிந்தான். தன் கண் பார்வை அன்புக்குரியவரான அம் மக்களைப் பின்பற்றியே செல்ல வானிலே செல்லும் ஊதைக்காற்று என்று சொல்லும் படியாக நிலைத்த பெருமூச்சு எழ, யாதும் தமயந்தியுடன் உரையாடாதே நின்றவனாகித், தன் அந்த அவலமான நிலைமையை எண்ணி உள்ளம் ஒடுக்கமுற்றவனும் ஆயினான். ['உரையாடாதே' என்றது, அவளுக்குத் தேறுதல் உரைக்கவும் வலியற்றவனாகத் தானே தளர்ச்சியுற்று நின்றான் என்பதனைக் காட்டுதற்காம்.]

8. ஆடை அரிந்த செயல்

வேகின்ற சுரம்!

சேலுற்ற வாவித் திருநாடு பின்னொழியக்
காலிற்போய்த் தேவியொடும் கண்ணுற்றான்—ஞாலஞ்சேர்
கள்ளிவே கத்தரவின் கண்மணிகள் தாம்பொடியாத்
துள்ளிவே கின்ற சுரம். 257

கெண்டை மீன்களைக் கொண்டிருக்கும் தடாகங்களை யுடைய அழகிய தன் நிடத நாட்டினை, அது தனக்குப் பிற்பட்டுப் போகுமாறு கடந்து, தன் மனையாளான தமயந்தி யோடும் கால்நடையாகவே நளன் நடந்து சென்றான். நிலத்தினைச் சேர்ந்திருக்கின்ற கள்ளிமரங்களினது கடுமையினாலே, நாகப் பாம்புகளினிடத்தேயுள்ள மணிகள் துள்ளித் தெறித்து வீழ்ந்து சாம்பலாக எரிந்துபோகின்ற வெப்பமிக்க பாலைநிலத்தையும், அதன்பின் அவன் கண்ணுற்றான்.

புள் வடிவிற் கலி

கன்னிறத்த சிந்தைக் கலியுமவன் முன்பாகப்
பொன்னிறத்த புள்வடிவாய்ப் போந்திருந்தான்—நன்னெறிக்கே
அஞ்சிப்பார் ஈந்த அரசனையும் தேவியையும்
வஞ்சிப்பான் வேண்டி வனத்து. 258

நல்லொழுக்க நெறி என்னும் ஒன்றுக்கு மட்டுமே அச்சங் கொண்டு தன் நாட்டினைப் புட்கரனுக்குக் கொடுத்து வந்த நளனையும், அவன் தேவியையும், மீண்டும் அவ்வனத் திடையேயும் வஞ்சிப்பதற்குக் கருதினான் கலிமகன். கல்லைப் போன்ற வன்மையான உள்ளமுடைய அவனும், அந்த விருப்பத்தினாலே, அவர்கள் முன்பாகப் பொன்னிறம் கொண்டதொரு பறவையின் வடிவாகச் சென்று அமர்ந் திருந்தான். [இரக்கமற்றோன் கவியாதலின், 'கன்னிறத்த சிந்தைக் கலி' என்றனர். கன்னிறத்த = கல் + நிறத்த எனப் புணர்ந்து வந்தசொல்.]

பிடித்துத் தா என்றாள்!

தேன்பிடிக்கும் தண்துழாய்ச் செங்கண் கருமுகிலை
மான்பிடிக்கச் சொன்ன மயிலேபோல்—தான்பிடிக்கப்
பொற்புள்ளைப் பற்றித்தா என்றாள் புதுமழலைச்
சொற்கிள்ளை வாயாள் தொழுது. 259

தேன் நிரம்பியிருக்கும் தண்மையான துளபமாலையினை அணிந்தோனும், செங்கண்ணனும், கருமுகிலைப் போன்ற நிறமுடையோனுமான இராமபிரானை, மானைப் பிடித்துத் தருமாறு சொன்ன மயில் போன்றாளான சீதையைப்போலப் —கேட்போர்க்குப் புதுமை விளைக்கின்ற மழலைச்சொற்களை யுடைய கிளியினைப் போன்று கொஞ்சும் மழலைமொழி பேசும் வாயினளான தமயந்தியும், நளனைத் தொழுது தான் தன் கையிலே பற்றி வைத்துக்கொள்ளும் பொருட்டாக, அந்த பொன்னிறப் பறவையினைப் பிடித்துத் தருகவென்று அப்போது கேட்டனள்.

வளைக்க எண்ணினான்

பொற்புள் ளதனைப் பிடிப்பான் நளன்புகுதக்
கைக்குள் வருமாபோல் கழன்றோடி—எய்க்கும்
இளைக்குமா போல இருந்ததுகண் டன்றே
வளைக்குமா றெண்ணினான் மன். 260

அந்தப் பொன்னிறப் பறவையினைப் பிடிக்கும் பொருட் டாக நளன் அதனிடத்தே செல்ல, அது அவன் கைக்குள்ளே பிடிபடுவதுபோலக் காட்டித் தப்பியோடி, எய்த்து இளைப் படைந்தாற்போல ஒரு புறத்தே சென்று இருந்தது. அதனைக்

கண்ட நளமன்னன் அதனை அப்படியே வளைத்துப் பிடிப்பதற் கான வகையினைக் கருதினான். [கழன்று—பிடியினின்றும் நழுவிச் சென்று. எய்த்தல்—களைத்துச் சோர்தல். இளைத்தல்—நெடுமூச்செறிதல். அந்தப் போலிப் பறவை நடித்தது அவ்வாறுயிருந்ததென்பது கருத்து.]

ஒற்றைத் துகிலாடை

கொற்றக் கயற்கட் கொடியே யிருவோரும்
ஒற்றைத் துகிலா லுடைபுனைந்து—மற்றிந்தப்
பொற்றுகிலாற் புள்வளைக்கப் போதுவோ மென்றுரைத்தான்
பற்றகலா வுள்ளம் பரிந்து. 261

அந்த நிலையிலும் நளன் தன் காதலியான தமயந்தியின் மீது ஆசை நீங்காத உள்ளம் உடையவனாகவே இருந்தான். அதனால், தன் காதலியின் ஆர்வத்திற்கு உதவும் அன்பு கொண்டவனாகக் ''கெண்டை மீனையும் வெற்றிகொண்ட கண்களையுடைய கொடி போன்றவளே! நாம் இருவரும் ஒற்றைத் துகிலால் உடை புனைந்துகொண்டு, இந்த அழகிய துணியினாலே அந்தப் பறவையினை வளைத்துப் பிடிக்கச் செல்வோம்'' என்று சொன்னான். [துணியினாலே அந்தப் பறவையை வளைத்துப் பிடிக்கக் கருதிய நளன், உடுத்திருந்த ஆடையன்றி, வேறு இருவரிடமுமில்லாத நிலையினை உணர்ந்து தமயந்தியின் ஆடையின் ஒரு முனையைத்தான் உடுத்துக் கொண்டு, தான் உடுத்தியிருந்த ஆடையினாலே அன்னத்தை வளைத்துப் பிடிக்கக் கருதுகின்றான்.]

புள் வளைத்தான்

எற்றித் திரைபொர நொந்தேறி யிளமணலிற்
பற்றிப் பவளம் படர்நிழற்கீழ்—முத்தீன்று
வெள் வளைத்தா யோடுநீர் வேலைத் திருநாடன்
புள் வளைத்தான் ஆடையாற் போந்து. 262

அலைகள் வன்மையுடன் மோத. அதனாலே வருத்த முற்றுக் கரையிடத்து இளமணலிலே பற்றிக்கொண்டு மேலே ஏறிச்சென்று, பவளக் கொடிகள் படர்ந்திருக்கும் நிழலிலே முத்துக்களை ஈன்றுவிட்டு வெண்மையான சங்கு களின் தாய்கள் ஓடிக்கொண்டிருக்கும் நீர்வளமிக்க கடல்

வளத்தினையுடைய அழகிய நிடத நாட்டையுடையவன் நளன். அவன், முன் கூறியவாறே தங்களிருவரையும் ஒற்றையாடையினாலே புனைந்து கொண்டவனாகத், தான் உடுத்தியிருந்த ஆடையினாலே அந்தப் பறவையைச் சென்று வளைத்தான். [எற்றுதல்-உதைத்தல், பொருதல்-தாக்குதல், கடலலைகள் மோதுவதனை, 'எற்றித் திரை பொர' என்றனர் கவிஞர்.]

தோற்பித்தோன் நானேகாண்

கூந்தல் இளங்குயிலும் கோமானும் கொண்டணைத்த
பூந்துகில்கொண் டந்தரத்தே போய்நின்று—வேந்தனே
நன்னாடு தோற்பித்தோன் நானேகாண் என்றதே
பொன்னாடு மானிறத்த புள். 263

சிறந்த கூந்தலையுடைய இளமைப் பருவத்துக் குயிலை யொத்த தமயந்தியும், கோமானான நளனும், கொண்டு வளைத்த அழகிய அந்த ஆடையினைத் தூக்கிக்கொண்டு வானத்தே பறந்துபோய் நின்றுகொண்டு, 'வேந்தனே! நின் நலம்பொருந்திய நாட்டினைத் தோற்பித்தவனும் நானே தான் என்பதை அறிவாயாக' என்று, பொன்னினது மேன்மை தாங்கிய நிறத்தினையுடையதாக அசைந்து கொண்டிருந்த அந்தப் பறவையானது நளனிடம் சொல்லிற்று. [நளன்பால், 'எல்லாம் தன் செயலே' என்று பறவை உருவெடுத்துவந்த கலிபுருஷன் கூறினான் என்பது கருத்து.]

ஆவியும் ஆடையும்

காவிபோற் கண்ணிக்கும் கண்ணியந்தோட் காளைக்கும்
ஆவிபோ லாடையுமொன் றானதே—பூவிரியக்
கள்வேட்டு வண்டுழலுங் கானத் திடைக்கனகப்
புள்வேட்டை யாதரித்த போது. 264

பூக்கள் இதழ்விரியத் தொடங்கவும், அவற்றின்பால் நிறைந்திருக்கும் மதுவினை விரும்பி வண்டினம் திரிந்துகொண் டிருக்கின்ற கானகத்தின் இடையிலே, பொற்பறவையினைப் பிடித்தற்கு நளதமயந்தியர் விரும்பிய பொழுதிலே, நீலோற் பலம் போன்ற கண்களையுடைய தமயந்திக்கும், மாலைதரித்த தோள்களையுடைய காளையான நளனுக்கும், கலந்துள்ள

அவர்களின் உயிரினைப் போலவே, அவர்கள் உடுத்திருந்த ஆடையும் ஒன்றாக ஆயிற்று. [இது கவி வாக்கு. நளதமயந்தியர் ஒரே ஆடை உடுத்தவராக விளங்கிய தன்மையினைக் கவிஞர் இங்ஙனம் கூறுகின்றார்.]

விதியை நினைத்தாள்

அறம்பிழைத்தார் பொய்த்தார் அருள்சிதைத்தார் மானத்
திறம்பிழைத்தார் தெய்வம் இகழ்ந்தார்—புறங்கடையில்
சென்றார் புகுநரகஞ் சேர்வாய்கொல் என்றழியா
நின்றாள் விதியை நினைந்து. 265

அறநெறியினைப் பிழைத்தோர்கள்; பொய்த்தே திரிகின்ற தன்மையுடையோர்; அருள் என்னும் அரும் பண்பைச் சிதைத்தோர்கள்; மானம் என்கின்றவோர் தன்மையினையே பிழைத்தவர்கள்; தெய்வத்தை இகழ்ச்சியாகப் பேசினவர்கள்; செல்வர்களின் புறக்கடைகளிலே சென்று இரந்து நிற்பவர்கள் ஆகிய பாவிகள் போய்ச் சேர்கின்ற நரகத்தினை நீயும் சென்று அடைவாய் போலும்!'' என்று கலியைக் குறித்து எண்ணித், தன் உள்ளம் அழிந்தவளாகத், தமயந்தி தனக்குற்ற விதியை நினைந்து நொந்து கொண்டவளாக நின்றாள்.

சூழ்ந்த பேரிருள்

தெய்வம் கெடுத்தால்

வையந் துயருழப்ப மாயம் பலசூழ்ந்து
தெய்வங் கெடுத்தாற் செயலுண்டோ—மெய்வகையே
சேர்ந்தருளி நின்றதனிச் செங்கோலா யிங்கொழியப்
போந்தருளு கென்றாள் புலர்ந்து. 266

தமயந்தி அவ்வாறு வாட்டமுற்று, 'மெய்ம்மை நெறியிலே ஈடுபட்டு நின்று யாவர்க்குங் கருணைபுரிந்து வாழ்ந்திருந்த ஒப்பற்ற செங்கோன்மையினை உடையவனே! இவ்வுலகமெல்லாம் துயரத்திலே வருத்தமுறப் பல வஞ்சனைகளைக் கருதித் தெய்வமே இவ்வாறாக நம்மைக் கெடுக்க

முயன்றதென்றால், அதற்கு எதிரானவொரு செயலும் உளதாகுமோ? ஆதலினாலே, இவ்விடத்தைவிட்டுக் கவலையை மறந்து புறப்பட்டு அருள்வீராக' என்றாள், நளனிடம்.

["தெய்வமே கேடுசெய்ய முடிவு செய்துவிட்டபோது, அதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியுமோ? அதனால், நிகழ்ந்ததை மறந்து இவ்விடத்தைவிட்டு நாம் புறப்படுவோம்'' என்கின்றாள் தமயந்தி.]

குளிப்பான்போற் சென்றடைந்தான்

அந்த நெடுஞ்சுரத்தின் மீதேக வாங்கழலும்
வெந்தழலை யாற்றுவான் மேல்கடற்கே—எந்தை
குளிப்பான்போற் சென்றடைந்தான் கூரிருளாற் பாரை
யொளிப்பான்போற் பொற்றே ருடன். 267

நளதமயந்தியரின் நிலைமை இவ்வாறாக இருந்தது. அந்த வேளையிலே, அந்த நெடிதான பாலைவனத்தின் மேலாகச் சென்ற பொழுது அவ்விடத்தே யுண்டான கொடிதான வெப்பத்தினை ஆற்றிக்கொள்வதன் பொருட்டாக, மேலைக் கடலிடத்தே சென்று குளிப்பவனைப் போலவும், மிகுதியான இருளிலே பூமியை ஒளித்து வைப்பவனைப் போலவும் எந்தையாகிய சூரிய பகவானானவன், தன் பொற்றேருடனே மேற் கடலிற் சென்று சேர்ந்தான். [நளனுக்குத் துயர்தந்தது காணப்பொறாது, அந்தத் துயரத்து வெம்மையினாலே ஆற்றானாகிக் கதிரவன் மேற்றிசையிற் சென்றடைந்தான் எனவும் கருதுக. 'பூமியை இருளில் ஒளிப்பான்போல்' என்றதும், அதுபற்றியே என்க.]

கோதையோடும் சென்றான்

பானு நெடுந்தேர் படுகடலிற் பாய்ந்ததற்பின்
கான வடம்பின் கவட்டிலைகள்—மானின்
குளம்பேய்க்கும் நன்னாடன் கோதையொடுஞ் சென்றான்
இளம்பேய்க்குந் தோன்றா விருள். 268

சூரியனின் பெரிய தேரானது சென்று மேற்கடலிலே மூழ்கி மறைந்தபின், காட்டிலுள்ள அடப்பங் கொடிகளின் பிளவுபட்ட இலைகள் மானின் குளம்புகளைப்போலத் தோற்றமளிக்கின்ற நலம் பொருந்திய நாட்டையுடையவனான நளன், இளம் பருவத்துப் பேய்க்கும் வழிதோன்றாத அந்த அடர்ந்த இருளினூடே, தமயந்தியோடு மேற்கொண்

டும் செல்வானுன். ['இளம்பேய்க்கும் தோன்று இருள்' என்றது இருளின் மிகுதியைக் குறித்தது. இளமைதெளிவான பார்வை உடையது; அதனுலேயே இளம்பேய் என்ருர்; அதற்கும் வழித்தோன்றுதென்ருர், இருளின் அடர்த்தியைக் காட்டுதற் பொருட்டாக.]

மண்டபங் கண்டான்

எங்காம் புகலிடமென் றெண்ணி யிருள்வழிபோய்
வெங்கா னகந்திரியும் வேளைதனில்—அங்கேயோர்
பாழ்மண் டபங்கண்டான் பால்வெண் குடைநிழற்கீழ்
வாழ்மண் டபங்கண்டான் வந்து. 269

'நமக்குப் புகலிடம் எங்கேயோ?' என்று எண்ணிய வாறே, அந்த இருளினிடத்தே வழிநடந்து போவாராக, வெம்மையான அந்தக் காட்டிலே நளதமயந்தியர் திரிந்து கொண்டிருந்த வேளையிலே, பால்போன்ற வெண்கொற்றக் குடை நிழலின் கிழாக அமர்ந்து வாழ்வுசிறந்த அரண்மனை மண்டபத்தே அரசியற்றியதனை அறிந்தவனுகிய நளன், அவ்விடத்தே ஒரு பாழும் மண்டபத்தினைத் தனக்கு எதிரே விளங்கக் கண்டான்.

துயிலப் போதராய்

மூரி யிரவும்போய் முற்றிருளாய் மூண்டதால்
சாரு மிடமற்றுத் தானில்லை—சோர்கூந்தல்
மாதராய் நாமிந்த மண்டபத்தே கண்டுயிலப்
போதரா யென்ருன் புலர்ந்து. 270

"தளர்ந்து சோர்கின்ற கூந்தலை உடையவளான மாதரசியே! சிறிதளவான இருட்டையுடைய முன்னிரவின் இருளும் மறைந்துபோய் இப்போது நிறைந்த இருளாகவும் மூண்டுவிட்டது. வேறு தங்கும் இடமோ யாதும் இல்லை. அதனுலே. நாம் அந்த மண்டபத்தேசென்று கண் துயிலலாம்; அவ்விடத்தே செல்வாயாக!'' என்று, நளன் மனவாட்ட முடனே தமயந்தியிடம் சொன்னுன்.

மகரயாழ் கொதுகின் பாடல்

வையம் உடையான் மகரயாழ் கேட்டருளும்
தெய்வச் செவிகொதுகின் சில்பாடல்—இவ்விரவில்
கேட்டவா வென்றழுதாள் கெண்டையங்கண் நீர்சோரத்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து. 271

நிலம் ஆளுகின்ற உரிமை உடையான் நளமன்னன், "அவனுடைய, மகரவீணையின் இன்னிசையைக் கேட்டருள் கின்ற மேன்மைபொருந்திய காதுகள், இப்போது கொசுகின் அற்பமான பாடலையும் இந்த இரவுநேரத்திலே கேட்ட வகைதான் என்ன கொடுமையோ?'' என்று, பூவிதழ்களை யுடைய நீண்டகூந்தலைக் கொண்டாளான தமயந்தியானவள் வாட்டமுற்றுத், தன் கெண்டை மீன்களைப்போன்ற அழகிய கண்களின்றும் நீர் வடிய, அதனைக் கண்டு அழத் தொடங்கினாள். [தன் காதலன் மண்டபத்திலே உறங்கும் நிலையினைக் கண்ட தமயந்தி, தன் துயரையும் மறந்து அவனுடைய அந்த அவல நிலைக்கு நொந்து இங்ஙனம் கண்ணீர் சொரிகின்றாள்.]

வழியல்! அழியல்!

பண்டை வினைப்பயனைப் பாரிடத்தி லார்கடப்பார்
கொண்டல் நிழலிற் குழைதடவும்—கெண்டை
வழியனீ ரென்றான் மனநடுங்கி வெய்துற்
றழியனீ யென்றான் அரசு. 272

"கார்மேகத்தை போன்ற கூந்தலினது நிழலிலேயுள்ள காதணிகளைச் சென்று தடவுகின்ற, கெண்டை மீன்களைப் போன்ற கண்களை உடையவளே! அக்கண்களினின்றும் நீ கண்ணீரை வழியவிடுதல் வேண்டா. பழைதான வினையின் பயனை அநுபவிப்பதல்லது, இந்த, உலகத்திலே அதனை வெல்வார்தாம் யாவரோ? அதனால், மனநடுக்கமுற்றுத் துயரமாகிய வெப்பத்தை உளங்கொண்டு நீ வருந்தவும் வேண்டாம்'' என்று கூறித் தமயந்தியை ஆற்றுவிக்க முயன்றான் நளன். [கொண்டல் - மழை மேகம். வினைப் பயன்-ஊழ்வினைப் பயன். பண்டை வினை-பழைதாகத் தொடர்ந்துவரும் வினை; முப்பிறவிகளிற் செய்த பாவங்களின் பயனாக வந்து அமைவது.]

காணேன் அரசே

விரைமலர்ப்பூ மெல்லணையும் மெய்காவல பூண்ட
பரிசனமும் பள்ளி யறையும்—அரசேநான்
காணேனிங் கென்னாக் கலங்கினாள் கண்பனிப்பப்
பூணோர் முலையாள் புலர்ந்து, 273

அணிகலன்கள் பொருந்தியிருக்கின்ற மார்பகங்களை உடையவளான தமயந்தி, நளன் அங்ஙனமாகக் கூறக்கேட்டு மீண்டும் வாட்டம் கொண்டவளாயினுள். "அரசே! மணமுள்ள மலர்களின் இதழ்களைப் பரப்பிய மென்மையான படுக்கையையும், மெய்காவல் பூண்டு காத்திருக்கும் ஏவலர் களையும், பள்ளிகொள்வதற்கென்றே அமைந்த அறையையும் நான் காணவில்லையே?'' என்று, தன் கண்களினின்றும் நீர் சொரியக் கூறியவளாக, அவள் மீண்டும் மனம் கலங்கினுள். [மெய்காவல்-அரசனின் உடலைக் காக்கும் ஏற்பாடு. இதனைப் பூண்டோர் 'மெய்காவலர்' ஆவர். பாடிகாவல், ஊர்காவல் நாடுகாவல் போன்ற பல காவல் துறைகளையும் தம்முரசர்கள் அந்நாளிற் கொண்டிருந்தனர் என்க.]

துயில்கை கடன்

தீய வனமும் துயின்று திசைதுயின்று
பேயுந் துயின்றதாற் பேர்யாமம் — நீயுமினிக்
கண்மேற் றுயில்கை கடனென்ருன் கைகொடுத்து
மண்மேற் றிருமேனி வைத்து. 274

தமயந்தியின் வாட்டத்தைக் கண்ட நளன், அவள் உறங்காது தன் நிலைக்கு வருந்திக்கொண்டிருக்கும் நிலைமைக்குப் பெரிதும் கலங்கியவனுயினுன். தன் கையினை அவளுக்குத் தலையணையாகக் கொடுத்து, மண்மேல் அவளுடைய அழகிய உடலையும் படுக்கவைத்தான். 'கடுமையான இந்த வனமும் துயின்றது; எட்டுத் திசைகளும் துயின்றன; பேயும் உறங்கிவிட்டது; இத்தகைய பெரிதான சாமவேளையிலே, இனி நீயும் நின் கண்மேல் உறக்கங் கொள்ளுதலே நின் கடமையாகும்' என்று, அவளைப் படுக்க வைத்து உறங்குமாறு சொல்லி வற்புறுத்தினுன்.

வெடியாதால் என்ருன்!

புன்கண்கூர் யாமத்துப் பூமிமேற் ருன்படுத்துத்
தன்கண் துயில்வாளைத் தான்கண்டு — மென்கண்
பொடியாதால் உள்ளாவி போகாதால் நெஞ்சம்
வெடியாதால் என்ருன் விழுந்து. 275

துயரம் மிகுந்த அந்த இரவின் யாமத்திலே, பூமியின் மேல் படுத்துக் கண்ணுறங்கிக் கொண்டிருந்த தமயந்தியை நளனும் கண்டான். 'இந்த நிலையைக் காணும் என் கண்கள்

பொடியாகாவோ? என்னுள் இருக்கும் என் உயிரும் இந்நிலையே போகாதோ? என் நெஞ்சம் இப்படியே வெடியாதோ?'' என்று தரையிலே விழுந்து புலம்பவும் தொடங்கினன்.

முன்தானையும் இல்லை!

முன்றில்தனில் மேற்படுக்க முன்தா னையுமின்றி
இன்று துயில இறைவனுக்கே—என்றனது
கைபுகுந்த தென்னுடைய கால்புகுந்த தென்றழுதாள்
மைபுகுந்த கண்ணீர் வர. 276

[தமயந்தி உறங்கிய நிலையினைக் கண்டு புலம்பி வருந்திய நளனும் அயர்ந்து உறங்கிப் போனன். அப்போது அவள் விழித்துக்கொண்டு தன் நாயகனைப் பார்த்துப் புலம்புகின்றுள்.] 'என் இறைவனுக்கு இன்று துயில்கொள்வதற்கு, இந்த மண்டபத்து முற்றத்திலே விரித்துப் படுத்துக்கொள்வதற்கு என்னுடைய முன்தானையும் கூட இல்லாமற் போயிற்றே! என்னுடைய கைகள் தலைக்கு அணையாகவும், கால்கள் காற்கணையாகவும் தாமே புகுந்தனவே! இதுவோ அவர் நிலை?' என்று, மைதீட்டிய தன் கண்களினின்றும் நீர் வழிய அவள் அவனை நினைத்து அழுதாள். [முன்தானையே அவனுக்கு ஆடையாயினமையினுல், அதுவும் விரித்தற்கு இல்லாமற் போயிற்றே என அவள் வருந்துகின்றுள்.]

யாரே துயரடையார்?

வீமன் திருமடந்தை விண்ணவரும் பெற்றிலாத்
தாமம் எனக்களித்த தையலாள்—யாமத்துப்
பாரே அணையாய்ப் படைக்கண் துயின்றுள்மற்
றுரே துயரடையார் ஆங்கு. 277

அங்ஙனமாகப் புலம்பிய அவள் சோர்ந்து மீளவும் உறங்க, நளன் விழித்துக்கொண்டு மீண்டும் புலம்புகின்றுன்.

''வீமராசனின் செல்வத் திருமகள் இவள்! தேவர்களும் பெறுதற்கியலாத மணமாலையினை எனக்கு அளித்த தையலாள் இவள்! இத்தகையாளே, இந்த யாமத்து வேளையிலே, பூமியே படுக்கையாகக் கொண்டு வேற்படை போன்ற தன் கண்கள் துயின்றனள். இங்ஙனமாயினுல், ஊழினுல் பிறர் யாவரே துயரம் அடையாது தம்மைக் காத்துக்கொள்வ

வல்லவராவர்?'' [தாம் அவ்வாறு துயரடைந்த நிலைக்கு ஊழின் வலியே காரணமாவதெனநளன் இங்ஙனம் கூறி வருந்துகின்றான்.

கலக்கினான் கலி

பெய்ம்மலர்ப்பூங் கோதை பிரியப் பிரியாத
செம்மை யுடைமனத்தான் செங்கோலான்—பொய்ம்மை
விலக்கினான் நெஞ்சத்தை வேறுக்கி நின்று
கலக்கினான் வஞ்சக் கலி. 278

மலர்களைப் பெய்து கட்டிய அழகிய மாலையினையுடைய வளான தமயந்தியைப் பிரிவதற்கு வேறுபடாத செம்மை யான தன்மையுடைய மனத்தினை உடையவன்; செங்கோன் மையினை உடையவன்; பொய்ம்மையினை அறவே விலக்கிய வன்; நளன். எனினும், வஞ்சகனாகிய கலிமகன் அவன் மனத்தையும் வேறுபடுத்தி நின்று, அப்போது 'பிரியலாமோ' என்ற நினைவையும் எழச் செய்து, அவனைக் கலக்கமுறச் செய் தான்.

10. பிரிகின்ற கொடுமை

உதித்ததே வேறு உணர்வு

வஞ்சக் கலிவலியான் மாகத் தராவளைக்குஞ்
செஞ்சுடரின் வந்த கருஞ்சுடர்போல்—விஞ்ச
மதித்ததேர்த் தானை வயவேந்தன் நெஞ்சத்
துதித்ததே வேறோர் உணர்வு. 279

இராகு வென்னும் பாம்பினாலே வளைத்துச் சூழ்ந்து கொள்ளப் பெற்றிருக்கும் சிவந்த கதிர்களையுடைய வானத்து கதிரவனிடமிருந்து, தோன்றிவரும் கருமையான ஒளிக்கதிர் களைப் போல, மேலாகப் போற்றப்பெற்ற தேர்ப்படையினை யுடைய வெற்றிவேந்தனான நளனின் செம்மையான நெஞ்சத் திடத்தேயும், வஞ்சகனான கலியின் ஆற்றலினாலே வேறு பட்டதாகிய ஒரு கொடிய எண்ணம் அப்போது உதிப்பதா யிற்று. [செங்கதிரோன், இராகு சூழ்ந்துகொள்ள இருள் பட்டாற்போல், நளனின் மனமும் கலியின் வஞ்சனையினாலே இருளடைந்தது; அங்கே, அவனியல்பிற்கு மாறுபட்ட உணர்வும் எழுந்தது என்பது கருத்து.]

அரிதற்கு நினைந்தான்

காரிகைதன் வெந்துயரம் காணுமல் நீத்தந்தக்
கூரிருளிற் போவான் குறித்தெழுந்து—நேரே
இருவர்க்கும் ஒருயிர்போ லெய்தியதோர் ஆடை
அரிதற் கவனினைந்தா னுங்கு. 280

தமயந்தியின் கொடுமையான துயரத்தினைக் காணப் பொருமல், அவளை விட்டுப் பிரிந்து அந்த நிறைந்த இருளிலே வெளியேறிப்போகக் கருதிப், படுத்திருந்த நளன் எழுந்து கொண்டான். இருவருக்கும் பொருந்திய ஓர் உயிரினைப் போலவே ஒன்ருக அமைந்திருந்த அந்த ஒற்றை ஆடையினையும் இடையில் அரிதற்கு அவன் அப்போது எண்ணங் கொண்டான். [ஆடை அரிதலன்றி அவனுற் பிரியமுடியாததனுல், அதனை அரிவதற்கு எண்ணினுன் என்க.]

வாளாக வந்தான் !

எண்ணிய எண்ணம் முடிப்ப இகல்வேந்தன்
கண்ணி யதையறிந்து காய்கலியும்—பண்ணினுக்குக்
கேளான தேமொழியை நீங்கக் கிளரொளிசேர்
வாளாய் மருங்கிருந்தான் வந்து. 281

வலிமை மிகுந்த வேந்தனுகிய நளன், தமயந்தியைப் பிரிவதற்கும் அவள் துகிலை அரிதற்கும் நினைந்ததை அறிந்தான். அவர்கள்பாற் சினம் கொண்டோனுன கலிமகனும், அவன் எண்ணத்தை முடித்துக்கொள்ளுமாறும், பண்ணினுக்கு உறவுடைய இனிதான பேச்சினையுடைய தமயந்தியைப் பிரிந்துபோகுமாறும், அதற்கு உதவியாக ஒளிவிளங்குகின்ற ஒரு வாளாக உருவெடுத்து வந்து, நளனருகேஅவன் காணுமாறு கிடந்தான்.

அரிந்தான்! திகைத்தான்!

ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக
முற்றுந்தன் அன்பை முதலோடும்—பற்றி
அரிந்தான் அரிந்திட் டவள்நிலைமை நெஞ்சில்
தெரிந்தான் இருந்தான் திகைத்து. 282

ஒன்ருயிருந்த ஆடையும் ஒன்றுபட்டிருந்த இருவருயிரும் இரண்டுபடுமாறு, வளர்ந்து கனிந்துவரும் காதலன்பை

அடியோடும் பற்றி அரிவான்போல, நளனும், இருவர்க்கும் ஒன்றுயிருந்த துகிலை இரண்டுபட அவ்வாளிலுலே அரிந்தான். அரிந்தபின், அவள், அதனால் அடையும் நிலைமையினைத் தன் நெஞ்சிலே ஆராய்ந்தான்; திகைப்படைந்து செயலற்றுச் சற்றுநேரம் அப்படியே இருந்தும் விட்டான்.

கடைவார் கைபோல மனம்

போயொருகால் மீளும் புகுந்தொருகால் மீண்டேகும்
ஆயர் கொணர்ந்த அடுபாலின் — தோயல்
கடைவார்தம் கைபோல ஆயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம். 283

காலதேவனின் உருவமாக விளங்கிய வேலினைக் கைக்கொண்டோனான நளனின் மனம், அப்போது, ஒருமுறை தமயந்தியிடத்தே புகுந்து செல்லும்; மீண்டும் அவன்பால் வரும் என்றபடியாக, ஆயர்கள் கொணர்ந்த காய்ச்சிய பாலின் தோயலைக் கடைபவர்களது கைபோலப் போவதும் வருவதுமான ஒரு நிலைமையினையும் உடையதாயிற்று. [அவள்பால் போவது பிரியவொண்ணாத நிலை; மீளவும் வருவது பிரியத் துணியும் நிலை; இவ்வாறு அவன் மனம் அலைக்கழிவ தாயிற்று என்க. தோயல்—தோய்த்த தயிர்.]

நெஞ்சம் வலித்தது

சிந்துரத்தான் தெய்வ முனிவன் தேரிந்துரைத்த
மந்திரத்தால் தம்பித்த மாநீர்போல் — முந்த
ஒளித்ததேர்த் தானை உயர்வேந்தன் நெஞ்சம்
வலித்ததே தீக்கலியால் வந்து. 284

தெய்வத் தன்மை கொண்ட நாரத முனிவரானவர் ஆராய்ந்து உரைத்த மந்திரத்தினாலே அசைவற்று நின்றதோர் கங்கை நீரின் தன்மையினைப் போல, முற்பட ஒலி முழக்கிச் செல்லும் தேர்ப்படையினை உடையோனாயிருந்த உயர்ந்த நளனின் நெஞ்சமும், தீய கலிமகனின் செயலினாலே தமயந்தியினின்றும் முற்றவும் மீண்டு வந்து, தன் இயல்பிலே திரிந்து வன்மையுடையதாயிற்று. [கங்கையாற்று நீரைப் பனிக்கட்டியாக நாரதர் சபித்த கதை இங்குக் கூறப்பெற்றது. நீர் தம்பித்ததும் மென்மை மாறுபட்டதாகி வன்மையுறும். அதுபோன்றே, நளனின் மனமும் வன்மை அடைந்தது என்க. 'வன்மை' என்றது, பிரியத் துணிந்த தன்மையை.]

தெய்வங்காள்!

தீக்கா னகத்துறையும் தெய்வங்காள்! வீமன்தன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின்—நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதிலன்போல் போகின்றேன் யான். 285

நளன், காடுறையும் தெய்வங்களை இப்படி வேண்டுகின்ருன்: "கொடுமை உடையதான இக் கானகத்தே கோயில் கொண்டிருக்கும் தெய்வங்களே! வீமராசனது இராசகுமாரியாகிய இவளை, என்பால் போக்காத காதலன்பினுலே மிகுந்தவளைக், காரிருளிலே கைவிட்டு, அவளோடு எந்த உறவும் அற்ற ஒருவன்போல யானும் போகின்றேன்; நீங்கள் அவளைக் குறிக்கொண்டு காப்பாற்றுவீராக." [பிரியினும், அவள் துயருருவாறு காடுறை தெய்வங்களை உதவுமாறு வேண்டுகின்ற நளனின் உள்ளத்தன்மையினுலே, பிரிதலால் அவன் அடைந்த வேதனை மிகுதி உணரப்படும்.

வேருகப் போயினுன்

ஏந்தும் இளமுலையாள் இன்னுயிரும் தன்னருளும்
பூந்துகிலும் வேருகப் போயினுன்—தீந்தேன்
தொடைவிரவு நாள்மாலை சூட்டினுள் தன்னை
இடையிருளில் கானகத்தே இட்டு. 286

இனிய தேனுனது தொடுத்துள்ள பூக்கண்ணிகளிலே விரவியிருக்கின்ற மணமாலையினைச் சுயம்வரநாளிலே தனக்குச் சூட்டியவளான தமயந்தியை, இரவின் இடைச்சாமத்து இருள்வேளையிலே காட்டிடத்தே தனியே உறங்கிக் கிடக்க விட்டு, நிமிர்ந்த இளங்கொங்கைகளை உடையாளான அவளுடைய இனிதான உயிரும், தன்னுடைய அருட்குணமும், அழகிய ஆடையும் வேறுபட்டுப் பிரிந்துபோகுமாறு, நளன் அப்போது அவ்விடம்விட்டு நீங்கியும் போயினுன்.

நகஞ் சிதையச் சென்ருன்

தாருவெனப் பார்மேல் தருசந் திரன்சுவர்க்கி
மேருவரைத் தோளான் விரவார்போல்—கூரிருளில்
செங்கா னகஞ்சிதையத் தேவியைவிட் டேகினுன்
வெங்கா னகந்தனிலே வேந்து. 287

வேந்தனுகிய நளமன்னனுனவன், கற்பகத் தருவினைப் போல என்னும்படியாக இந்தப் புவியின்மேல் வழங்கிக் கொண்டிருக்கும் சந்திரன்சுவர்க்கி என்னும் மேருமலையை யொத்த திண்ணிய தோளுடையானது பகைவர்களைப்போல, மிக்க இருள் கவிந்துள்ள அவ்வேளையிலே வெம்மை மிகுந்த அந்தக் கானகத்திடத்தே தன் மனைவியை விட்டுவிட்டுத் தன் சிவந்த கால்களின் நகங்களால் இடருண்டு சிதைவுபடுமாறு நடந்து செல்பவனுயினுன். [தாரு-தருவென்பது முதல் நீண்டது; கற்பகத் தரு அதன் அடியில் நின்று எண்ணுப வர்க்கு எண்ணியதை எண்ணியபடியே அளிக்கும் சக்தி யுடைய தேவவிருட்சம் அது என்பர்.]

11. துணையிழந்த தோகை

எங்குற்ருய்?

நீலம் அளவே நெகிழ நிரைமுத்தின்
கோல மலரின் கொடியிடையாள்—வேல்வேந்தே
எங்குற்ருய் என்ரு இனவளைக்கை நீட்டினுள்
அங்குத்தான் காணு தயர்ந்து. 288

மலர்களைக் கொண்ட இனிதான கொடியினைப் போன்ற நுண்ணிய இடையுடையாளான தமயந்தியானவள் கண் விழித்துப், படுத்திருந்த இடத்திலே நளனைக் காணுதவளாகித் தளர்ச்சியுற்று, வரிசையாக விளங்கும் முத்துக்களைப்போலக் கண்ணீர்த்துளிகள் நீலமலர்போன்ற கண்களின் அளவாக நிறைந்து வழிந்தோட, 'வேல் வேந்தே! எங்கே சென்றனையோ?' என்று கதறியவாறே, தொகுதியாக வளை யல்கள் விளங்கும் தன் கைகளை நீட்டித் தேடினுள்.

அரிந்த துகில் கண்டாள்!

உடுத்த துகிலரிந்த தொண்டொடியாள் கண்டு
மடுத்த துயிலான் மறுகி—அடுத்தடுத்து
மன்னேயென அழைப்பாள் மற்றுமவ னைக்காணு
தென்னேயி:. தென்னென் றெழுந்து. 289

ஒள்ளிய தொடியணிந்தவளான தமயந்தியானவள், தன்னை ஆட்கொண்ட துயிலின் காரணமாக நளனது செயலை

அறியாது போனவள், ஒன்றாய் உடுத்திருந்த துகிலினை அரிந்திருந்த அவன் செயலையும் அப்போது கண்டாள். மனம் வருத்தம் உற்றாள்; அடுத்தடுத்து, 'மன்னவனே!' என்றும் அழைத்தாள்; அழைத்தும் அவனை வரக் காணாதுபோகவே, 'இஃது என்ன காரணமோ?' என ஐயுற்றுக் கலங்கி எழுந்தாள்.

போய் வீழ்ந்தாள்

வெய்ய தரையென்னும் மெல்லமளி யைத்தடவிக்
கையரிக்கொண் டெவ்விடத்தும் காணாமல்—ஐயகோ
என்னப்போய் வீழ்ந்தாள் இனமேதி மென்கரும்பைத்
தின்னப்போம் நாடன் திரு. 290

எருமை மாட்டு மந்தைகள் மென்மையான கரும்புகளைத் தின்னுதற் பொருட்டாகப் போகும் வளமான நாட்டிற்கு உரியவனாகிய வீமனின் செல்வமகளானவள், கொடிதான தரை எனப்படும் மெல்லிய அந்தப் படுக்கையைத் தடவிப் பார்த்தும் கைகளால் அலசிப் பார்த்ததும் எவ்விடத்தும் நளனைக் காணாமையினாலே, 'ஐயகோ!' என்று அலறிக்கொண்டு அப்பாற்போய்ச் சோர்ந்து வீழ்ந்தாள். [தரையைத் தடவிப் பார்த்தது ஏக்கத்தின் மிகுதியினால்.]

வீழ்ந்த வீமன் கொடி !

அழல்வெஞ் சிலைவேடன் அம்புருவ ஆற்றா
துழலுங் களிமயில்போல் ஓடிக்—குழல்வண்
டெழுந்தோட வீழ்ந்தாள் இருகுழைமேல் கண்ணீர்க்
கொழுந்தோட வீமன் கொடி. 291

வீமராசனின் குலக்கொடியான தமயந்தியானவள், வேடனின் கொடிய வில்லினின்றும் எய்யப்பெற்ற கொடிய அம்பு தைத்து ஊடுருவ, அதற்கு ஆற்றாது கிடந்து துடிதுடிக்கும் இளையதோர் மயிலினைப்போல, அங்குமிங்கும் ஓடிக் கதறித் துடிதுடித்தாள். அதனால், கூந்தலிலே மொய்த்திருந்த வண்டுகள் அஞ்சி எழுந்து ஓடவும், இரு குழைகளின் மேலும் கண்ணீர்த்தாரைகள் வழிந்தோடவுமாகத், தரைமேல் வீழ்ந்து அழுவாளுமாயினாள்.

முகிலும்! மின்னும்!

வான்முகிலும் மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோல்
தானும் குழலும் தனிவீழ்ந்தாள்—ஏனம்

குளம்பான் மணிகிளேக்கும் குண்டுநீர் நாடன்
இளம்பாவை கைதலேமேல் இட்டு. 292

பன்றிகள் தம் காற்குளம்புகளாலே மணிகளேக் கிளேத்துக்கொண்டிருக்கும் ஆழமான நீர்நிலேகளேயுடைய நாட்டிற்கு உரியவனுன வீமனின் இளேய பாவையானவள், தலேமேலாகத் தன் கைகளே வைத்துக்கொண்டவளாக, வானகத்து மேகமும் மின்னற்கொடியும் வெறுந்தரையிலே ஒருசேர வந்து வீழ்ந்ததைப்போலத், தானும் தன் கூந்தலும் ஒருசேரச் சோர்ந்து போகத் தரையிலே வீழ்ந்தனள்.

கூவின கோழிக் குலம்!

தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம்
கையால் வயிறலேத்துக் காரிருள்வாய்—வெய்யோனே
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம். 293

கோழியினத்தைச் சேர்ந்த சேவல்கள் தமயந்தியின் துயரத்தினேக் கண்டு நிலேகொள்ளாவாயின. தம் சிறகு களாம் கைகளாலே தன் வயிற்றிலே அறைந்து கொண்டு வருந்தின. கருமையான இருள்நிலவிய அப்பொழுதிலே, வெய்யோனுகிய கதிரவனேத் தாவிச்செல்லும் குதிரைகள் பூட்டிய தன் தேரிலேறி வருக என்று அழைப்பவன்போல, அவை குரலெடுத்துக் கூவவும் தொடங்கின. [இரவின் கடையாமத்திலே சேவல்கள் கூவின என்பதனேக் கவிஞர் இங்ஙனம் கூறுகின்றனர்.]

நெறிகாட்டுவான் போல!

வான நெடுவீதி செல்லும் மணித்தேரோன்
தான மடந்தைக்குத் தார்வேந்தன்—போனநெறி
காட்டுவான் போலிருள் போய்க் கைவாங்கக் கானூடே
நீட்டுவான் செங்கரத்தை நின்று. 294

வானமாகிய நீண்ட வீதியின் வழியாகச் செல்லுகின்ற அழகிய தேரோனுகிய கதிரவன், தான் வானத்தே நிலே பெற்றுத், தமயந்திக்கு மாலேயணிந்த வேந்தனுகிய நளன் போன நெறியினேக் காட்டுபவனேப் போலாக, இருட் பொழுது கழிந்துபோய்த் தன் கிரணங்களால் பொழுதும் புலரக், காட்டின் ஊடே தன் செவ்விய அருட் கரத்தினே நீட்டுவான் போல ஒளிக்கதிர்களேச் சொரிவானுயினுன்.

[கதிரவன், நளன் சென்ற திசையைத் தமயந்திக்குக் காட்டுபவனைப்போல எழுந்து உதயமாயினன் என்க.]

பலவாறு பேசுவாள்!

செய்தபிழை ஏதென்னும் தேர்வேந்தே என்றழைக்கும்
எய்துதுயர்க் கரைகா ணேனென்னும்—பையவே
என்னென்ன தென்னென்னும் இக்கானின் விட்டேகும்
மன்னென்ன வாடும் அயர்ந்து. 295

[மேலும் தமயந்தியின் துன்பம் மிகுதியாயிற்று; நளனை முன்னிலைப்படுத்தி வினவுவாள்போல இவ்வாறு புலம்புகின்றாள். "[நான் செய்த பிழைதான் ஏதோ?" என்பாள். "தேர்வேந்தனே" என்று அழைப்பாள். என்னை அடைகின்ற துயரத்திற்கு ஒரு கரையினையும் யான் காணேனே?" என்பாள். மெல்ல நின் வாய் திறந்து என்னவென்று கூறுதிருப்பதுதான் என்ன காரணமோ?" என்பாள். "இந்தக் கானகத்திலே என்னைவிட்டுப் பிரிந்து போகும் வேந்தே! அதுதான் எதன் காரணமாகவோ?" என்று, மேலும் பேச்சற்று அயர்ந்து வாட்டம் அடைவாள். [சோகத்தின் மிகுதியினாலே இவ்வாறு தமக்குத் தாமே பேசுவது இயல்பு; இவற்றால் தமயந்திகொண்ட சோகத்தினது மிகுதி புலனாகும்.]

வெள்ளத்தே விழுந்தாள்!

அல்லியந்தார் மார்பன் அடித்தா மரையவள்தன்
நல்லுயிரும் ஆசையும்போல் நாறுதலும்—மல்லுறுதோள்
வேந்தனே என்ன விழுந்தாள் விழிவேலை
சார்ந்தநீர் வெள்ளத்தே தான். 296

அகவிதழ்களைக் கொண்ட பூவிதழ்களினாலே தொடுக்கப்பெற்ற மாலை விளங்கும் மார்பனான தன் கணவனின் தாமரைமலர் போன்ற அடிச்சுவடுகள், அவளுடைய நல்ல உயிரும் அவள் அவன்மேற் கொண்டிருந்த ஆசையும் போலத் தோன்றின. தோன்றலும், மற்போர் சிறந்த தோளாற்றலையுடைய வேந்தனே!' என்று கதறியவாறே அவன்மேல் விழுந்தாள். அவள் கண்களாகிய கடலினின்றும் பெருகி வழிந்த கண்ணீர் வெள்ளத்திலே மூழ்கியும் கிடந்தாள்.

காட்டுதிரோ?

வெறித்த இளமான்காள்! மென்மயில்காள்! இந்த
நெறிக்கண் நெடிதூழி வாழ்வீர்—பிரித்தெம்மைப்
போனரைக் காட்டுதிரோ என்னுப் புலம்பினள்
வானுடர் பெற்றிலா மான். 297

வான நாட்டவர்களுக்கும் பெறுவ்தற்கு இல்லாதுபோன மான்போன்றவளான தமயந்தியானவள், அக்கானிலே தன் கண்ணெதிர்ப்பட்ட மான் மயில் முதலியவற்றை நோக்கிப் புலம்பத் தொடங்கினள். "என்னைக் கண்டு அச்சங்கொண்டு செல்லும் இளமான்களே! மென்தன்மைகொண்ட மயில்களே! இந்த வழியிடையிலேயே நீவிர் நெடிதூழி காலம் வாழ்வீராக! எம்மைப் பிரிந்து சென்றவரை எமக்குக் காட்ட மாட்டீர்களோ?'' என்று சொல்லிப் புலம்பினள். [வெறித்த-வெருண்ட.]

அரவு அருகணைந்தாள்!

வேட்ட கரியை விழுங்கிப் பெரும்பசியான்
மோட்டு வயிற்றரவு முன்தோன்ற—மீட்டதனை
ஓரா தருகணைந்தாள் உண்தேன் அறற்கூந்தல்
போரார் விழியாள் புலர்ந்து. 298

வண்டினம் உண்ணுவதற்குரிய தேன் பொருந்திய மலரணிந்தும் அறல்பட்டும் விளங்கும் கூந்தலை உடையவளும், காதளவும் ஓடிப் பொருதும் விழிகளை உடையவளுமான தமயந்தியானவள், மேலும் வாட்டங்கொண்டவளாயினள். அளவுகடந்த பெரும் பசியினுலே தான் விரும்பிய யானையைப் பிடித்து விழுங்கி அதனுல் உயர்ந்திருக்கின்ற வயிற்றினையுடைய ஒரு மலைப்பாம்பானது தன் முன்னே தோன்றவும், மீளவும் அதன் இயல்பினை அறிந்து உணராது மயங்கியவளாக, அதனருகே சென்றும் அடைந்தாள்.

பாம்பு விழுங்கியது!

அங்கண் விசும்பின் அவிர்மதிமேல் சென்றடையும்
வெங்கண் அரவுபோல் மெல்லியலைக்—கொங்கைக்கு
மேலெல்லாம் தோன்ற விழுங்கியதே வெங்கானின்
பாலெல்லாம் தீயுமிழும் பாம்பு. 299

அழகிய இடத்தை உடையதான வானத்திடத்தேயுள்ள ஒளிரும் நிலவின் மேலாக, அதனை விழுங்கும் பொருட்டாகச் சென்று சேரும் கொடிய கண்களையுடைய இராகு என்னும் பாம்பினைப்போல, வெம்மையுடைய அந்த கானகத்திடமெல்லாம் நஞ்சாகிய நெருப்பைக் கக்கிக்கொண்டிருந்த அந்தப் பாம்பானது, மெல்லியலான தமயந்தியைக் கொங்கைகட்கு மேற்பட்ட உடற்பகுதியெல்லாம் வெளியே தோன்றும்படியாக அந்த அளவிலே விழுங்கிற்று.

'விலக்காயோ' என்று அழுதாள்

வாளரவின் வாய்ப்பட்டு மாயாமுன் மன்னவநின்
தாளடைந்து வாழுந் தமியேனைத்—தோளால்
விலக்காயோ என்றழுதாள் வெவ்வரவின் வாய்க்கிங்
கிலக்காகி நின்ருள் எடுத்து. 300

அக்காட்டிலே அக்கொடிய பாம்பின் வாய்க்கு இலக்காகி முடிந்த தமயந்தியானவள், ' மன்னவனே! கொடிய இந்தப் பாம்பின் வாயிடையேபட்டு நான் இறந்து போவதற்கு முன்பாக, நின் திருவடிகளையே தஞ்சமாக அடைந்துவாழ்கின்றவளாகிய என்னை, நின்தோள் வலிமையினுலே தடுத்துக் காப்பாற்றி இத் தீமையை நீக்கமாட்டாயோ?'' என்று சொல்லி அழுதாள்.

முகம் காண்கிலேனே!

வென்றிச் சினவரவின் வெவ்வாய் இடைப்பட்டு
வன்துயராற் போயாவி மாள்கின்றேன்—இன்றுன்
திருமுகநான் காண்கிலேன் தேர்வேந்தே என்ருள்
பொருமுகவேற் கண்ணுள் புலர்ந்து. 301

காதுகளுடன் மோதிப் பொருதுகின்ற வேல்போன்ற கண்களையுடைய தமயந்தியானவள் வாட்டங்கொண்டு, ''தேர்வேந்தனே! அடங்காத சினத்தையுடைய பாம்பின் கொடிய வாயினிடத்தே அகப்பட்டுக் கொடிய துயரத்தினுலே உயிர்சோர்ந்து செத்துக் கொண்டிருக்கின்றேன்; இந்த நேரத்திற்கூடத் தங்கள் திருமுகத்தைக் காணும் பேறு பெற்றிலேனே!'' என்றும் புலம்பினுள்.

காண்குதிரோ மக்காள்!

மற்றெடுத்த தோள்பிரிந்து மாயாத வல்வினையேன்
பெற்றெடுத்த மக்காள் பிரிந்தேகும்—கொற்றவனை
நீரேனும் காண்குதிரோ என்றழுதாள் நீள்குழற்குக்
காரேனும் ஒவ்வாள் கலுழ்ந்து. 302

நீண்ட தன் கூந்தலுக்குக் கார்மேகமும் ஒவ்வாதபடியான தன்மையினைக் கொண்ட தமயந்தியானவள், "மற்போரிலே தொடர்பு கொண்ட தோள்களையுடைய என் நாயகனைப் பிரிந்தும் செத்தொழியாத தீவினையாட்டியேன் பெற்றெடுத்த மக்களே! அம் மன்னவனை நீங்களேனும் காண்பீர்களோ?" என்று அழுது புலம்பினாள்.

கை கூப்பினாள்!

அடையும் கடுங்கானில் ஆடரவின் வாய்ப்பட்
டுடையுமுயிர் நாயகனே ஓகோ - விடையெனக்குத்
தந்தருள்வாய் என்னாத்தன் தாமரைக்கை கூப்பினாள்
செந்துவர்வாய் மென்மொழியாள் தேர்ந்து. 303

சிவந்த பவளத்தினைப் போலும் வாயிதழ்களையும், மென்மையான சொற்களையும் உடைய தமயந்தியானவள் "நாயகனே! நாம் அடைந்திருக்கும் கடுமையான கானகத்திலே, ஆடுகின்ற மலைப்பாம்பின் வாயிற் சிக்கிக்கொண்டு என் உயிரோ உடைகின்றது; ஓகோ! எனக்கு, விடையேனும் இந்நேரத்திலே தந்தருளாயோ?" என்று, தன் தாமரைக் கைகளைக் கூப்பி நளனை நினைந்து வணங்கினாள்.

12. வேடன் எரிந்தான்

வேடன் கண்டான்!

உண்டோர் அழுகுரல்என் றெற்றி வருகின்ற
வெண்தோடன் செம்பங்கி வில்வேடன்—கண்டான்
கழுகுவாழ் கானகத்துக் காரரவின் வாயில்
முழுகுவாள் தெய்வ முகம். 304

"யாதோ ஓர் அழுகுரல் உண்டு" என்று தமயந்தியின் புலம்பலை உற்றுக் கேட்டு வருகின்ற வெண்மையான குழை

யினை அணிந்தவனும், செம்பட்டை மயிரையும் வில்லையும் உடையவனுமான வேடன் ஒருவன், கழுகினங்கள் வாழுகின்ற காட்டினிடத்தே, கருநிறமுடைய மலைப்பாம்பின் வாயிலே அகப்பட்டு மறைபவளாகிய, தமயந்தியின் தெய்வத் தன்மை பொருந்திய முகத்தினைக் கண்டான். [ஒற்றுதல்-ஒன்றியிருந்து கேட்டல்.]

அஞ்சி அரற்றினாள்!

வெய்ய அரவின் விடவாயின் உட்பட்டேன்
ஐயன்மீர் உங்கட் கபயம்யான்—உய்ய
அருளீரோ என்று அரற்றினாள் அஞ்சி
இருளீரும் பூணாள் எடுத்து. 305

வேடன் தன்னருகே வரவும், இருளினை ஓடச் செய்கின்ற ஒளியுடைய அணிகலன்களைப் பூண்டவளான தமயந்தி "ஐயன்மீர்! கொடிய பாம்பினது நச்சுப்பொருந்திய வாயினிடத்தே அகப்பட்டுக்கொண்டேன். உங்கட்கு நான் அடைக்கலம். நான் உயிர் பிழைக்குமாறு அருள் செய்ய மாட்டீர்களோ?" என்று, அச்சத்துடனே குரலெடுத்து அரற்றினாள்.

['அச்சம்' தான் பாம்பின் வாய்ப்பட்டு அழியும் நிலைமையிலிருந்ததனால் ஏற்பட்டது. அபயம் - அடைக்கலம். விடவாய்-நச்சுத் தன்மையுடைய வாய். விடம்-நஞ்சு.]

வேடன் மீட்டான்

சங்க நிதிபோல் தருசந் திரன்சுவர்க்கி
வெங்கலிவாய் நின்றுலகம் மீட்டாற்போல்—மங்கையைவெம்
பாம்பின்வாய் நின்றும் பறித்தான் பகைகடிந்த
காம்பின்வாய் வில்வேடன் கண்டு. 306

கொடிய விலங்குகளான தன் பகையினைக் கொன்று ஒழித்த, மூங்கிலினாற் செய்த வெற்றிவில்லினை ஏந்தி வந்த அந்த வேடன், நிகழ்ந்திருப்பதைக் கண்டான். சங்கநிதி என்னும் வற்றாப் பெருநிதிபோல வாரி வழங்கும் சந்திரன் சுவர்க்கி என்பவன், உலக மக்களை வெம்மையான கலியின் வாயிடத்தே நின்றும் மீட்டுக்காத்தாற்போல, அவ்வேடனும் தமயந்தியை அந்தக் கொடிய பாம்பின் வாயினின்றும் இழுத்துவிட்டு, அவள் உயிரினைக் காத்தான் [கலி வாயி

னின்று மீட்டலாவது, அவர் படும் வறுமைத் துயரினின்றும் அவருக்கு வழங்குதல் மூலம் அவரைக் காப்பாற்றி மீட்டல் இது கவிக் கூற்று.]

கைம்மாறு உளதோ?

ஆருயிரும் நானும் அழியாமல் ஐயாவிப்
பேரரவின் வாயிற் பிழைப்பித்தாய்—தேரில்
இதற்குண்டோ கைம்மா றெனவுரைத்தாள் வென்றி
விதர்ப்பன்றன் பெற்ற விளக்கு 307

"ஐயா! என் அருமையான உயிரும், அதனைக் கொண்டிருக்கும் நானாகிய இவ்வுடலும் அழிந்து போய்விடாமல் இந்தப்பெரும்பாம்பின் வாயினின்றும் பிழைக்கச் செய்தாய். எண்ணிப் பார்த்தால், இத்தகைய சிறந்த உதவிக்கு ஒரு கைம்மாறும் செய்வதற்கு உளதாமோ?" என்று, வெற்றி மிக்க விதர்ப்பராசன் பெற்றெடுத்த குலவிளக்கான தமயந்தி அந்த வேடனிடம் தன் நன்றியைத் தெரிவித்துக்கொண்டாள். [கை-உபகாரம்; மாறு-மாறுவது; பதிலுக்குச் செய்யும் உபகாரம் என்ற பொருள் தரும் சொல். ஆருயிரும் நானும் என்றது, உடல் உயிர் என்பவை இணைந்திருக்கின்ற தன்மைபற்றி. அன்றித் தான் அழியின் அத்துயர் தாளாது நளனும் அழிவான் என்று கொள்வதாயின், 'ஆருயிர்' நளனைக் குறித்ததும் ஆகலாம்.]

என்னுடன் வருக!

இந்து நுதலி எழில்நோக்கி ஏதோதன்
சிந்தை கருதிச் சிலைவேடன்—பைந்தொடிநீ
போதுவாய் என்னுடனே என்றான் புலைநரகுக்
கேதுவாய் நின்றான் எடுத்து. 308

நிலவினைப் போன்ற நெற்றியினை உடையவளான தமயந்தியின் அழகினை அந்த வேடன் தன் கண்களாலே பார்த்தான்; தன் உள்ளத்தில் ஏதேதோ கருதினான். வில் லேந்தியவனுகக் கீழான நரகத்திற்கு ஏதுவாக நின்றிருந்த அவன், "பசுமையான வளை அணிந்தவளே! நீ என்னுடனே புறப்படுவாயாக" என்றான் ["ஏதோ" என்றது அவன் கொண்ட காம மயக்கத்தை; 'என்னுடன் போதுவாய்' என்றது. தன்னோடு கூடி வாழ்ந்திருப்பதனைக் குறிப்பிட்டு அவன் அழைத்ததாகும். அந்தத் தீய எண்ணம் எழுதலால்

அவனைப் புலைநரகுக்கு ஏதுவாய் நின்றான் என்று கவி குறிப்பிடுகிறார்.]

அஞ்சி ஓடினாள்

வேடன் அழைப்ப விழிபதைத்து வெய்துயிரா
ஆடன் மயில்போல் அலமரா—ஓடினாள்
தூறெலா மாகச் சுரிகுழல்வேற் கண்ணினீர்
ஆறெலா மாக வழுது. 309

வேடன் அவ்வாறு தீய கருத்துடனே தன்னை அழைப்பவும், தமயந்தியின் கண்கள் கலங்கின. சுடுமூச்சும் எழுந்தது. ஆடுதலையுடைய மயில்போலத் துடிதுடித்தவளாயினாள். வேல்போன்ற தன் கண்களினின்றும் வடியும் நீர் வழியெல்லாம் வழிந்து ஓட அழுதுகொண்டே, புதர்களில் எல்லாம் தன் சுருண்ட கூந்தல் மயிர்கள் சிக்கிச் சிதையுமாறு, அவள் ஓடினாள்.

[அவனிடமிருந்து தப்பிக்க முயல்கின்றாள் தமயந்தி. அலமரல்-வருந்துதல். தூறு-புதர். கூந்தன் மயிர்கள் புதர்களிலே சிக்கிக்கொள்ளவும், வழியெல்லாம் கண்ணீர் வழிந்தோடவும் பதைபதைத்து அவள் ஓடினாள் என்க.]

நீறாய் விழுந்தான்

தீக்கட் புலிதொடரச் செல்லும் சிறுமான்போல்
ஆக்கை தளர வலமந்து—போக்கற்றுச்
சீறா விழித்தாள் சிலைவேடன் அவ்வளவில்
நீறாய் விழுந்தான் நிலத்து. 310

அழலுகின்ற கண்களுடைய புலி துரத்திவர, அதனின்றும் உயிர் பிழைக்க ஓடிச் செல்லும் இளமானைப்போல அவள் ஓடினாள். முடிவில், உடல் தளர்ச்சியடைய வருத்தமுற்று மீண்டும் போவதற்கும் வலிமையற்று நின்று, சீற்றத்துடனே அந்த வில்வேடனை நோக்கினாள். அந்த அளவிலே, அவன் எரிந்து சாம்பலாகி நிலத்திலே விழுந்தான். [கற்புடைய மாதரின் தெய்வசக்தியுடைமை இதன்கண் கூறப்பெற்றது. சிறுமான்-சிறுமை. பருவத்தின் இளமையைக் குறித்தது. தீக்கண்-அழலுகின்ற கொடிய கண்.]

தமிழறிஞரைப் பிழைத்த குடிபோல்!

வண்டமிழ்வா ணர்ப்பிழைத்த வன்குடிபோல் தீத்தழன்மீ
மண்டு கொடுஞ்சுரத்தோர் மாடிருந்து—பண்டையுள
வாழ்வெல்லாந் தானினைந்து மற்றழுதாள் மன்னிழைத்த
தாழ்வெல்லாம் தன்தலைமேற் றந்து. 311

வளமான தமிழிலே வல்லவர்களாகிய தமிழ்ச் சான்றோர்களைப் பிழைத்த கொடிதான குடியினர்கள் முற்றவும் கெட்டழிவதுபோல, நெருப்புக் கொழுந்துகள் மிகுதியாக எப்புறத்தும் மண்டியிருந்த அந்தக் கொடிய பாலைவனத்தின் ஒருபுறத்தே இருந்துகொண்டு, தன் நாயகன் செய்த தாழ்ச்சியான செயல்களையெல்லாம் தன் தலைவிதியின் மேல் சுமத்தியவளாக, முன்பிருந்த தம் சிறந்த வாழ்வு நலங்களையெல்லாம் எண்ணி எண்ணித் தமயந்தியும் அழுதுகொண்டிருந்தாள். [வேடனை எரித்த தீ சுரத்தினும் மண்டிற்று என்க. அல்லது, சுரத்தின் வெப்பக் கொடுமையைக் குறித்ததாகவும் கொள்க. நளனின் செயலுக்குத் தன் ஊழ்வினையே காரணம் எனக் கருதிய அவள் உள்ளத்து உயர்வையும் நினைக்க]

13. சேதிநாடு சேர்ந்தாள்

வணிகன் காணல்

அவ்வளவி லாதிப் பெருவழியி லாய்வணிகன்
இவ்வளவு தீவினையேன் என்பாள்தன்—மெய்வடிவைக்
கண்டானை யுற்றான் கமலமயி லேயென்றான்
உண்டாய தெல்லாம் உணர்ந்து. 312

அந்தச் சமயத்திலே, அந்தப் பழமையான பெருவழியூடே போய்க்கொண்டிருந்த வணிகன் ஒருவன், 'இத்தகைய தீய வினையின் பாரத்தை உடையவள் யான்' என்று புலம்பிக் கொண்டிருந்த தமயந்தியின் உண்மையான உருவத்தைக் கண்டான். 'அவள் யாவளோ?' என ஐயுற்றான். அவ்விடத்து உண்டாகியிருந்த நிலைமையை எல்லாம் உணர்ந்தவனாகித், "தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் போன்றவளே!" என்று தனக்குள் அவளைப்பற்றிச் சொல்லியும் கொண்டான். [உண்டாயது-வாட்டமும் சோர்வும் கண்ணீரும் துக்கத் தோற்றமும் ஆகியன. மெய்வடிவு-உண்மையான உடல்நிலை.]

வணிகன் வினவுதல்

எக்குலத்தாய் யார்மடந்தை யாதுன்னூர் யாதுன்பேர்
நெக்குருகி நீயழுதற் கென்னிமித்தம் – மைக்குழலாய்
கட்டுரைத்துக் காணென்றான் கார்வண்டு காந்தாரம்
விட்டுரைக்குந் தார்வணிகர் வேந்து. 313

கருமையான வண்டினங்கள் காந்தாரப் பண்ணினை வெளியிட்டு இசைக்கின்ற மாலையினை அணிந்திருந்தோனாகிய அந்த வணிகர் முதல்வன், "கருமையான கூந்தலினையுடையவளே! நீ எந்தக் குலத்தினளோ? யார் பெற்ற மகளோ? நின் ஊர் எதுவோ? நின் பெயர் என்னவோ? தளர்ந்து உளம் உருகி நீ அழுவதற்குத்தான் என்ன காரணமோ? இவற்றையெல்லாம் விளக்கமாகச் சொல்லுவாயாக" என்றான். [கட்டுரைத்தல்-திருத்தமுறத் தொடர்பாகச் சொல்லுதல். 'காண்' அசை.]

காணாது அழுகின்றேன்

முன்னை வினையின் வலியால் முடிமன்னன்
என்னைப் பிரிய இருங்கானில் — அன்னவனைக்
காணா தழுகின்றேன் என்றாள் கதிர்மைக்கும்
பூணாரம் பூண்டாள் புலர்ந்து. 314

ஒளிக்கதிர்களைச் சொரியும் முத்துமாலையினைப் பூண்டிருந்தவளான அவள், வணிகன் அங்ஙனம் கேட்பவும் வாட்டமுற்றவளாக, "முடியுடை மன்னவனாகிய என் கணவன், என் முன்வினையின் வலிமையினாலே என்னை இந்தப் பெரிய காட்டிடத்தே விட்டுப்பிரிந்து செல்ல, அவனைத் தேடியும் காணாது யான் இவ்வாறு அழுதுகொண்டிருக்கிறேன்" என்றாள். [பிரிவு, நளன் தவறன்று; தன் முன்வினைப் பயனே என்று கூறும் தமயந்தியின் உயர்வைக் கருதுக.]

சேதி நகரிற் சேர்ந்தாள்

சேதி நகர்க்கே திருவைச் செலவிட்டப்
போதிற் கொடைவணிகன் போயினான் — நீதி
கிடத்துவான் மன்னவர்தம் கீர்த்தியினைப் பார்மேல்
நடத்துவான் வட்டை நடந்து. 315

திருமகள் போன்ற தமயந்தியினைத் தன்னுடனேயே அழைத்துச் சென்று, சேதி நகரத்தினுள்ளாக அவளைப் போக

விட்டு, உலகிலே நீதியை நிலைபெறுத்துகின்ற சிறந்த மன்னவர்களது புகழினை உலகமெல்லாம் பரவச் செய்பவனாகிய அந்தக் கொடையாளனாகிய வணிகனும், அதன்பின், தன் தேரில் அமர்ந்தவனாகித் தன் வழி மேற்கொண்டு போய்விட்டான். [ஒரு நாட்டின் புகழ் பிற நாடுகளிலும் பரவ வேண்டுமாயின், அதற்குரிய சிறந்த சாதனம் வணிகத் தொடர்பே என்பதனைக் கவி எடுத்துக்கூறும் பண்பினை அறிக. 'நாணயமான வணிகர்கள் தாம் பொருள் தேடுவது மட்டுமன்றித் தம் நாட்டுப் புகழையும் பிற நாடுகளில் பரவச் செய்கின்றனர்' என்பது, என்றும் உண்மையாகும்.]

கண்டோம் ஒருத்தியை

அற்ற துகிலும் அருதொழுகு கண்ணீரும்
உற்ற துயரும் உடையவளாய் – மற்றொருத்தி
நின்றாளைக் கண்டோம் நிலவேந்தன் பொற்றேவி
என்றார் மடவார் எடுத்து. 316

[அரண்மனைச் சேடியர் சிலர் சேதி நகரத்தே யாருமற்று நின்றிருந்த தமயந்தியைக் கண்டனர். கண்டவர், தம் அரசியிடத்தே சென்று] "இந்நாட்டு வேந்தனின் பொன்னனைய தேவியே! பாதி அற்றுப் போயிருக்கும் ஆடையும், நீங்காது வழியும் கண்ணீரும், அடைந்திருக்கும் துயரமும் உடையவளாக, வேற்றுநாட்டுப் பெண்ணொருத்தி நின்றிருந்தாள்; அவளைக் கண்டோம்" என்று எடுத்துச் சொன்னார்கள். [எடுத்துச் சொல்லல்-குறிப்பிட்டுச் சென்று சொல்லல், பொன்-திருமகள்.]

'கொண்டு வா' என்றாள்

போயகலா முன்னம் புனையிழையாய் பூங்குயிலை
ஆய மயிலை யறியவே – நீயேகிக்
கொண்டுவா வென்றாள்தன் கொவ்வைக் கனிதிறந்து
வண்டுவாழ் கூந்தன் மயில். 317

வண்டுகள் நிலையாக வாழ்ந்திருக்கும் கூந்தலையும், மயில் போன்ற சாயலையும் உடைய அச் சேதிராசனின் மனைவியும், அதனைக் கேட்டதும் கொவ்வைக் கனிபோன்ற தன் வாயிதழ்களைத் திறந்து, "புனை இழையாய்! அந்தப் பூங்குயிலை, சிறந்த மயிலை, அவள் அங்கிருந்தும் அகன்று போய்விடா முன்னரே நீ சென்று, அவள் யாரென நாம் அறியுமாறு

உடனே இவ்விடத்திற்குக் கொண்டு வருவாயாக'' என்று ஏவினாள். [புனை இழை-புனைந்துகொண்டுள்ள அணிகலன்கள்; அதனைக் கொண்ட ஒருத்தியைக் குறித்தது. இப்படித் தன் சேடியருள் ஒருத்தியை அரசி ஏவினாள் என்க.]

வினை வலி காண்

ஆங்கவளும் ஏக அரசன் பெருந்தேவி
பூங்கழலின் மீதே புரண்டழுதாள்—தாங்கும்
இனவளையாய் உற்ற துயர்எல்லாம் எனது
வினைவலிகாண் என்றாள் மெலிந்து. 318

அந்த அரசியின் முன்பாகத் தமயந்தியும் சென்றாள். அரசமாதேவியான அவளுடைய மலரடிகளிலே வீழ்ந்து புரண்டு அழுதாள். 'பலவகை வளையல்களை அணிந்துள்ள வளே! நான் அடைந்த துயரம் எல்லாம் என்னுடைய தீவினையின் வலியினால் வந்தது' என்றும் உளம் நைந்து கூறினாள். [தாங்கும்-தரித்திருக்கும். மெலிந்து-சோர்ந்து; உளம் மெலிவுற்று.]

உள்ளவாறு உரைப்பாய்

அந்தா மரையி லவளேயென் றையுற்றுச்
சிந்தா குலமெனக்குத் தீராதால்—பைந்தொடியே
உள்ளவா றெல்லாம் உரையென்றாள் ஒண்மலரின்
கள்ளவார் கூந்தலாள் கண்டு. 319

ஒள்ளிய மலரின் மதுவானது ஒழுகிக் கொண்டிருக்கும் மலரணிந்த கூந்தலுடையுவளான சேதி நாட்டரசி, சேடி சென்று அழைத்துவந்த தமயந்தியைக் கண்டாள். 'அழகிய தாமரையிலே இருக்கும் திருமகளே போலும் அவள்' என்று ஐயுற்று, ''பைந்தொடியே! என் சிந்தைக் கலக்கம் எனக்குத் தீராதேயிருக்கின்றது. நின்னைப் பற்றிய உண்மைகளை எல்லாம் எனக்குச் சொல்லுவாயாக'' என்றாள், [சிந்தைக் கலக்கம், தமயந்தியின் சோகமான நிலைமையைக் கண்டதனால் ஏற்பட்டது. சிந்தாகுலம்-உள்ளக் கலக்கம்.]

இது என் வரவு

என்னைத் தனிவனத்திட் டெங்கோன் பிரிந்தேக
அன்னவனைக் காணா தலமருவேன்—இந்நகர்க்கே
வந்தே னிதுவென் வரவென்றாள் வாய்புலராச்
செந்தேன் மொழிபதறுச் சோர்ந்து. 320

''என் நாயகனுனவன் என்னைத் தனியாக வனத்திலே கைவிட்டுப் பிரிந்துபோக, அவனைக் காணுது வருந்துபவளான நான், இந்நகருக்கு வந்து சேர்ந்தேன். இதுவே என் வரவின் உண்மை'' என்று தமயந்தி, தன் வாய் ஈரம் புலரச், செவ்விய தேன் போன்ற சொற்கள் தடுமாறத், தன் நிலைமையை அரசிக்குக் கூறினுள். [வாயீரம் புலர்தலும் சொற்கள் தடுமாறலும் தான் அடைந்த துயரையும், தான் நின்ற நிலையையும் கருதிய தளர்ச்சியினுல் ஆகும்.]

இங்கே இருக்க

உன்றலைவன் தன்னை யொருவகையால் நாடியே
தந்து விடுமளவும் தாழ்குழலாய்—என்றனுடன்
இங்கே இருக்க இனிதென்ரு ளேந்திழையைக்
கொங்கேயுந் தாராள் குறித்து. 321

மணம் பொருந்திய மாலையணிந்தவளான அந்த அரசி தமயந்தியைக் குறிப்பிட்டு நோக்கியவாறு, ''தாழ்கின்ற கூந்தலை உடையவளே! உன் தலைவனை ஒரு வகையினுலே தேடிக் கண்டுபிடித்துக் கொடுத்து நின்னை யான் அவனுடன் அனுப்புகின்ற வரையிலும், என்னுடன் இவ்வரண் மனையிலேயே மகிழ்ச்சியுடன் நீ தங்கி இருப்பாயாக'' என்ருள்.

14. தேடிவந்த அந்தணன்

சென்று அறிவாயாக!

ஈங்கிவளிவ் வாறிருப்ப இன்னலுழந் தேயேகிப்
பூங்குயிலும் போற்வேற் புரவலனும்—யாங்குற்ருர்
சென்றுணர்தி என்று செலவிட்டான் வேதியனைக்
குன்றுறழ்தோள் வீமன் குறித்து. 322

இவ்வாறு தமயந்தி சேதி நாட்டரசியின் இடத்திலே இருந்துவருங் காலத்து, மலையை நிகர்த்த தோள்களையுடைய வீமராசன், 'அழகிய குயில்போன்ற தமயந்தியும், போர் செய்யும் வேற்படையுடைய புரவலனை நளனும் துன்புற்று வருந்திச் சென்று, எவ்விடத்தினை அடைந்துள்ளனர் என்பதனைச் சென்று அறிந்து வருவாயாக' என்று ஒரு வேதியனை அனுப்பி வைத்தான்.

அந்தணன் வந்தான்

ஓடும் புரவித்தேர் வெய்யோன் ஒளிசென்று
நாடும் இடமெல்லாம் நாடிப்போய்க்—கூடினுன்
போதிற் றிருநாடும் பொய்கைத் திருநாடாஞ்
சேதித் திருநாடு சென்று. 323

தமந்தியும், சேதி நாட்டரசியின் விருப்பப்படியே அவ்விடத்தே இருக்க எண்ணி நின்றிருக்கையிலே, ஓடுதலிற் சிறந்த குதிரைகள் பூட்டிய தேரினை உடைய வெய்யோனுகிய கதிரவனின் ஒளி சென்று பரவுகின்ற இடமெங்கணும் அவளைத் தேடிப்போய்க் கொண்டிருந்த அந்த அந்தணன் தாமரையில் குடிகொண்டிருக்கும் திருமகள் விரும்பி அடையும் பொய்கைகளையுடைய செல்வமிக்க நாடான அத் திருநாட்டினையும் சென்று சேர்ந்தான்.

அழுதான்! அழுதாள்!

தாமஞ்சே ரோதித் தமயந்தி நின்றுளை
ஆமென் றறியா அருமறையோன்—வீமன்
கொடிமேல் விழுந்தழுவான் கொம்புமவன் செம்பொன்
அடிமேல் விழுந்தாள் அழுது. 324

அப்படி வந்து சேர்ந்தோனுகிய அந்த அருமறையாளன் மாலை சேர்ந்த கூந்தலை உடையவளாக நின்றிருந்தவளைத் 'தமயந்தியே' என்று அறிந்துகொண்டு, அந்த வீமனின் திருமகள் மேல் விழுந்து வாய்விட்டு அழுவானுனன். பூங்கொம்பு போன்ற அவளும், தன்னுடைய துயர் தாங்காளாய் அவனுடைய செம்பொன் போன்ற திருவடிகளிலே வீழ்ந்து தானும் கதறினுள். [அந்தணனின் பேரன்பு, அவளைக் கண்டதும் தன் மகளாகப் பாவித்துக் கட்டி அழுமாறு செய்கின்றது.]

உடல்போலும் ஒத்தார் உயிர்

மங்கை விழிநீர் மறையோன் கழல்கழுவ
அங்கவன்றன் கண்ணீ ரவளுடன்மேற்—பொங்கக்
கடல்போலுங் காதலார் கையற்ருர் தங்கள்
உடல்போலும் ஒத்தார் உயிர். 325

மங்கையாம் தமயந்தியின் விழிகளினின்றும் வழிந்தோடிய கண்ணீர், அந்த மறையோனின் திருவடிகளை அலம்பிற்று. அவ்விடத்து, அவன் வடித்த கண்ணீரோ அவள்

உடல்மீது பெருகி வழிந்தது. கடல்போலும் பரந்த அன்பை உடையவர்களாகிய அவர்கள் மிகவும் வருத்தமுற்றுத் தளர்ந்தனர். தழுவியிருந்த தங்கள் உடல்களைப் போலவே தங்கள் உயிர்களும் துயரத்தினாலே ஒன்றுபட்டவராயினர். [பரப்பும் ஆழமுமுடைய கடல் அன்பின் மிகுதிக்கு உவமையாகக் கூறப் பெற்றது. உயிர் கலத்தலாவது, அன்பினாலேயும் துயரத்தாலேயும் ஒன்றுபடல்.]

கண்டாயோ மாதரசி?

மாரி பொருகூந்தன் மாதராய் நீபயந்த
காரிகைதான் பட்ட துயர் கண்டாயோ—சோர்குழலும்
வேணியாய் வெண்டுகிலும் பாதியாய் வெந்துயருக்
காணியாய் நின்று ளயர்ந்து. 326

அந்த அரசியை நோக்கி, அதன்பின் அந்த மறையோன் "மழைமேகத்தினைப்போல இருக்கின்ற கருமையான கூந்தலையுடைய மாதரசியே! நீ பெற்றெடுத்த இந்த அழகியாள் பட்ட துயரத்தினைக் கண்டாயோ? அவிழ்ந்து தொங்கும் கூந்தலும் சடையாய்ப் போனதே! வெள்ளையான துகிலும் பாதியாகப் போயிற்றே! கொடிதான துயரத்திற்கே அச்சாணிபோல அயர்ந்து நிற்கின்றாளே! இவளை நீயும் பார்த்தாயோ?" என்றான். [விதர்ப்பனின் உறவுடையாளாதல் பற்றித் தமயந்தியை 'அவள் மகள்' என்றான் அந்த மறையோன். வெண்துகில்-சிறப்பற்ற ஆடையெனினும் பொருந்தும்.]

தேவியும் அழுதாள்

தன்மக ளாவ தறியாத் தடுமாறுப்
பொன்வடிவின் மேலழுது போய்வீழ்ந்தாள் —மென்மலரைக்
கோதிப்போய் மேதி குருகெழுப்பும் தண்பணைசூழ்
சேதிக்கோன் தேவி திகைத்து. 327

மென்மையான நீர்ப்பூக்களைத் தம் கொம்புகளினாலே கோதிச்சென்று. எருமைகள் நீர்ப்பறவைகளை எழுந்தோடச் செய்கின்ற, தண்மையான வயல்கள் சூழ்ந்துள்ள சேதி நாட்டின் அரசனுடைய தேவியானவள், மறையவன் அவ்வாறு கூறியதனைக் கேட்டுத் தானும் திகைப்படைந்தாள். அவள் தன் மகளாயிருப்பதை அறிந்ததும், மனம் தடுமாற்றம்

கொண்டாள். அழுதுகொண்டே சென்று, திருமகள் வடிவாயிருந்த அந்தத் தமயந்தியின் மேலே வீழ்ந்து, தானும் புலம்பினுள்.

கண்டு துயர் தீர

கந்தனையும் கன்னியையும் கண்டாயி னுஞ்சிறிது
தன்துயரம் தீர்ந்து தனியாறத்—தந்தை
பதியிலே போக்கினுன் சேதியர்கோன் பண்டை
விதியிலே போந்தாளை மீண்டு. 328

சேதி நாட்டு அரசன், பண்டை ஊழ்வினை வசத்தினுலே தன் நாட்டிற்கு வந்தவளான தமயந்தியை, முருகனைப் போன்ற தன் மகனையும், குமரித்தெய்வம் போன்ற தன் மகளையும் கண்டாவது, அவள் தன் துயரம் சிறிதளவேனும் தீர்ந்து ஆறுதல் கொள்ளும்படியாக, அந்த அந்தணனுடன் அவளுடைய தந்தையாகிய வீமராசனின் நகருக்கு அனுப்பி வைத்தான்.

எல்லாம் மயங்கின

கோயிலும் அந்தப் புரமும் கொடிநுடங்கும்
வாயிலும் நின்று மயங்கியதே—தீயகொடும்
கானுள மக்களையும் கைவிட்டுக் காதலன்பின்
போனுள் புகுந்த பொழுது. 329

தான் பெற்றெடுத்த மக்களையும் கைவிட்டுத், தன் காதலனின் பின்னுக வெம்மை மிக்க கொடிய கானகத்தினை ஆள்வதற்குப் போனவளான தமயந்தியானவள், தன் தந்தையின் நகரிலே சென்று புகுந்த பொழுதிலே, அரண்மனையும், அந்தப்புரமும், கொடிகள் அசைந்தாடும் வாயிலும் எல்லாம் செயலற்று நின்று, அவள் நிலைகருதித் தாமும் மயக்கங் கொண்டவாயின! [கோயில்-அரண்மனையைச் சார்ந்தவர்; அந்தப்புரம்-பெண்கள் பகுதியினர்; வாயில்-ஏவலாளர்களும் காவலாளர்களும்.]

15. பிறந்தகம் அடைந்தாள்

அன்புக் கடல்

அழுவார் விழுவார் அயிர்ப்பார் உயிர்ப்பார்
தொழுவார் தமரெங்கும் சூழ்வார்—வழுவாக்
காமநீ ரோதக் கடல் கிளர்ந்தால் ஒத்தவே
நாமவேல் வீமன் நகர். 330

அழுவாரும், மயங்கி விழுவாரும், இஃது மாயமோ கனவோ என அயிர்ப்பாரும், உயிர்ப்பாரும், இங்ஙனமேனும் வந்தனளே எனத் தெய்வத்தை வணங்குபவருமாகத், தமயந்தியின் சுற்றத்தார் எல்லாரும் அவளைச் சூழ்ந்து கொள்வாராயினர். பகைவர்க்கு அச்சம் விளைக்கும் வேலினை ஏந்தியவனாகிய வீமனது நகர் முழுவதும், அப்போது பழுதற்ற அன்பு வெள்ளம் பொங்கி எழுகின்ற மக்கட்கடலானது மிக்கு எழுந்ததுபோல ஆரவாரத்துடனே திகழ்ந்தது.

தந்தையைக் கண்டாள்

தந்தையைமுன் காண்டலுமே தாமரைக்க ணீர்சொரியச்
சிந்தை கலங்கித் திகைத்தலமந்—தெந்தாயான்
பட்டதே என்னப்போய் வீழ்ந்தாள் படைநெடுங்கண்
விட்டநீர் மேலே விழ. 331

தன் தந்தையை எதிரே கண்டதும், தாமரை போன்ற தன் கண்கள் நீரினைச் சொரியச், சிந்தை கலங்கித் திகைப்புற்று வருந்தி, "எந்தாய்! யான் பட்ட துன்பம் என் சொல்வேன்" என்று கதறியவளாகச் சென்று, வேற்படை போன்ற தன் நெடுங்கண் சொரிந்த நீர் அவன்மீது வீழ, அவன்மீது வீழ்ந்து புலம்பினாள்.

கண்ணீரில் நீந்தினர்

செவ்வண்ண வாயாளும் தேர்வேந் தனுமகளை
அவ்வண்ணங் கண்டக்கா லாற்றுவரோ—மெய்வண்ணம்
ஓய்ந்துநா நீர்போய் உலர்கின்ற தொத்ததமர்
நீந்தினர் கண்ணீரி னின்று. 332

செவ்வண்ணம் பொருந்திய வாயினளான வீமராசனின் மனேவியும், தேர்வேந்தனுகிய அவனும், தம் மகளே அத்தகைய நிலையிலே கண்டபோது ஆறுதலுடன் இருப்பார் களோ? அவர்களும் தம் உடல் எல்லாம் சோர்ந்து, நாவின் நீரும் போய், நாவும் வறட்சியுற்ற தன்மையராகச் செயலற்று மயங்கி நின்றனர். பொருந்திய சுற்றத்தார் களோ கண்ணீர் வெள்ளத்தே நிலைபெற்றுத் துயரக்கடலிலே நீந்திக் கொண்டிருந்தார்கள்.

பெற்றவள் புலம்பினுள்

பனியிருளிற் பாழ்மண் டபத்திலே யுன்னை
நினையாது நீத்தகன்ற போது—தனியேநின்
றென்னினைந்து என்செய்தாய் என்னுப் புலம்பினுள்
பொன்னினைத்தாய் நோக்கிப் புலர்ந்து. 333

"மிகுதியான இருளிலே, பாழான மண்டபத்திலே, உன்னைப்பற்றி எண்ணிப் பாராமல் உன் கணவன் உன்னைக் கைவிட்டுச் சென்றபோது, தன்னந்தனியே அவ்விடத்தே நின்று என்னென்ன நினைத்தாயோ? என்னென்ன செய்தாயோ?" என்று, தமயந்தியின் தாயானவள் தன் மகளை நோக்கி வாட்டமுற்றுப் புலம்பினுள்.

3

கலி நீங்கு காண்டம்

1. நாகம் அளித்த பரிசு

அருளும் திருப்பாதம் !

மூலப் பழமறைக்கு முன்னேயும் காணலாம்
காலிக்குப் பின்னேயுங் காணலாம்—மால்யானை
முந்தருளும் வேத முதலே யெனவழைப்ப
வந்தருளும் செந்தா மரை. 334

பெரிதான கஜேந்திரன் என்னும் யானையானது, 'அடியார் வேண்டுவதற்கு முன்பாகவே தோன்றி அவர்க்கு அருள்கின்ற வேத முதல்வனே!' என்று அந்நாளிலே அழைக்க, அங்ஙனமே தோன்றி அதற்கு அருளுகின்ற திருமாலின் செந்தாமரை மலர்போன்ற திருவடிகளை, அனைத்துக்கும் மூலமான பழமறைக்கு முன்னாக நிலைபெற்று விளங்கவும் காணலாம்; பசுக்கூட்டங்கட்குப் பின்னாகச் சென்று கொண்டிருப்பவும் காணலாம். [உயர்வுக்கு உயர்வும், எளிமைக்கு எளிமையும் கொண்ட இணையற்ற திருப்பாதம் என்பது கருத்து.]

மனக்கோயில் கொண்டான் !

போதுவார் நீறணிந்து பொய்யாத ஐந்தெழுத்தை
ஓதுவார் உள்ளம் எனவுரைப்பார்—நீதியார்
பெம்மான் அமரர் பெருமான் ஒருமான்கை
அம்மானின் ருடும் அரங்கு. 335

''உரிய பொழுதுகளிலே நீண்ட திருநீற்றுச் சின்னங்களை அணிந்து, என்றும் பயன் தருவதிலே பொய்த்தலில்லாத பஞ்சாட்சர மந்திரத்தை ஓதுகின்றவர்களின் உள்ளமானது—நீதிமான்களுக்கெல்லாம் தலைவனும், தேவர்களுக்கு எல்லாம் பெருமானாகிய மாதேவனும், ஒப்பற்ற மானைக் கையிலே தரித்தவனுமாகிய, அந்தப் பெருமானாகிய சிவபிரான் நிலை பெற்று நின்று நடனஞ்செய்கின்ற அரங்கமே ஆகும்'' என்று ஆன்றோர்கள் உரைப்பார்கள்.

அபயம் என்ற அரவரசன்!

மன்னா உனக்கபயம் என்னா வனத்தீயிற்
பன்னக வேந்தன் பதைத்துருகிச்—சொன்ன
மொழிவழியே சென்ருன் முரட்கலியின் வஞ்சப்
பழிவழியே செல்கின்ருன் பார்த் து. 336

தன்னோடு மாறுபாடுகொண்ட கலிமகனின் வஞ்சகமான பழியொடுபட்ட வழியூடு சென்று கொண்டிருந்தான் நளன். அத்தகையவன், "மன்னவனே! உனக்கு அடைக்கலம் நான்" என்று சொல்லிக், காட்டுத் தீயிடையே சிக்கித் தவித்து உளம் பதைத்து உருகிய ஒரு நாகவேந்தன் சொல்லிய சொற்கள் வந்த வழியிலே, அதனைச் எதிர்பார்த்துச் சென்ருன். [பன்னுகம்-பல நாகங்கள். பழிவ்ழி-என்றது பழியொடு பட்டநெறி; அது தன் மனைவியைக் கைவிட்டுச் சென்றது. முரண்-மாறுபாடு.]

எரிவானைக் கண்டான்!

ஆரும் திரியா அரையிருளில் அங்ஙனே
சோர்குழலை நீத்த துயரோடும்—வீரன்
திரிவானத் தீக்கானிற் செந்தீயின் வாய்ப்பட்
டெரிவானைக் கண்டான் எதிர். 337

எவரும் திரிதலற்ற நள்ளிருளிலே, தாழ்ந்த கூந்தலையுடையவளைக் கைவிட்டு வந்த துயரத்தோடும், அங்ஙனமாகத் திரிந்துகொண்டிருந்த வீரனுகிய நளமன்னவன், அத் தீப்பட்ட வனத்திலே, செந்தீயினிடையே பட்டு எரிந்து கொண்டிருந்த நாகவேந்தனைத் தன் முன்னர்க் கண்டான். [அரையிருள்-இரவின் நடுவேளை. 'சோர்குழல்' என்றது தமயந்தியை. தீக்கான்-வெம்மை மிக்க கானமும் ஆம்.]

அரவரசை அடைந்தான்

தீக்கடவுள் தந்த வரத்தைத் திருமனத்தில்
ஆக்கி யருளால் அரவரசைப்—போக்கி
அடைந்தான் அடைதலுமே ஆரழலோன் அஞ்சி
உடைந்தான் போய்ப்புக்கான் உவந்து. 338

தீக்கடவுள் முன்னர்த் தனக்குத் தந்த வரத்தினைத் தன் சிறந்த மனத்திலே மேற்கொண்டவனுக, அருளினுலே, அந்த நாகவேந்தனை நோக்கி நடந்து சென்று அவனையும் நளன் அடைந்தான். அவ்வாறு நளன் சென்று சேர்தலும், மிகுதியான அழலுடையோனுகிய தீக்கடவுள், தன் வரத்தைப் பிழைத்தற்கு அஞ்சித், தன் வலியினைக் குறைத்துக் கொண்டவனுகி, மகிழ்வுடன் புறத்தே தான் அகன்று போய் விட்டனன். [நளனுக்கு முன்னர்த் தீக்கடவுள் வரமளித்த செய்தியினைச் சுயம்வர காண்டத்து 'அங்கியமுதம்' என்னும் செய்யுளிற் காண்க.]

காப்பாற்றுக என்றான்

வேத முனியொருவன் சாபத்தால் வெங்கானில்
ஆதபத்தின் வாய்ப்பட் டழிகின்றேன்—காதலால்
வந்தெடுத்துக் காவென்றான் மாலை மணிவண்டு
சந்தெடுத்த தோளானைத் தான். 339

தன் மாலையிலே கருமையான வண்டினம் மொய்த்து இசை எழுப்புகின்ற, தோளாற்றல் உடைய அந் நளனை நோக்கி, "வேத முனிவன் ஒருவனுடைய சாபத்தின் பயனாலே, இந்தக் கொடிய கானகத்தில், நெருப்பினிடையே சிக்கி அழிகின்றேன்; அன்புடனே வந்து என்னை இதனின்றும் எடுத்துக் காப்பாயாக" என்றான் அந்த நாகராசன். ["மாதர் முலைக்குவட்டின் சந்தெடுத்த தோளான்" எனவும் பாடம் கொள்வர்.]

கொண்டுபோய்ப் பாரில் விடுக

சீரியாய் நீயெடுப்பத் தீமை கெடுகின்றேன்
கூருந் தழலவித்துக் கொண்டுபோய்—பாரில்
விடுகென்றான் மற்றந்த வெந்தழலால் வெம்மைப்
படுகின்றான் வேல்வேந்தைப் பார்த்து. 340

அந்த வெம்மையான தழலினாலே எரிக்கப் படுகின்ற வனாகிய நாகராசன், வேல்வேந்தனான நளனைப் பார்த்துச் "சிறந்தோனே! நீ என்னை எடுத்துக் காப்பதனால் என் தீமை எல்லாம் நீங்கப் பெறுகின்றேன்; அதனால் மிகுதியான இந்த நெருப்பைப் அவித்து, என்னைக் கொண்டுபோய்ப் பூமியிலே விடுவாயாக" என்று வேண்டினான். ['பார்' என்றது, நெருப் பற்ற இடத்தை. கூரும் தழல்-மிக்க தழல்.]

அரவரசைக் கொண்டு அகன்றான்

என்றுரைத்த அவ்வளவி லேழுலகுஞ் சூழ்கடலும்
குன்றுஞ் சுமந்த குலப்புயத்தான்—வென்றி
அரவரசைக் கொண்டகன்றான் ஆரணியம் தன்னின்
இரவரசை வென்றான் எடுத்து. 341

நாகராசன் அப்படிச் சொன்ன அளவிலேயே, ஏழு உலகங்களையும் அவற்றைச் சூழ்ந்த ஏழு குலகிரிகளையும் தாங்கின மேன்மையான தோள்களை உடையவனான, இரவுக்கு அரசனாகிய சந்திரனையும் தன் முக காந்தியினாலே

வெற்றிகொண்ட அந் நளனும், தன் வேண்டுதலிலே வெற்றி கொண்ட நாகராசனைத் தூக்கிக்கொண்டு, அக் காட்டிலே நெருப்பினின்றும் அகன்று சென்றான்.

'தச' என்று சொல்லி இடுக

மண்ணின்மீ தென்றனைநின் வன்றாளால் ஒன்றுமுதல்
எண்ணித் தசவென றிடுகென்றான்—நண்ணிப்போர்
மாவலான் செய்த வுதவிக்கு மாறாக
ஏவலாற் றீங்கிழைப்பே னென்று. 342

பகைவரை நெருங்கிப் போரியற்றுதலிலே பெரு வல்லமை உடையவனாகிய நளன், தனக்குச் செய்த உதவிக்குக் கைம்மாறாக, 'அவன் ஏவலினாலேயே அவனுக்குத் தீங்கு செய்வேன்' என்று அந்த நாகராசன் உளங்கொண்டான். "நின்னுடைய வலிமையான திருவடியினாலே ஒன்று முதல் அடிவைத்து எண்ணித், தசவென்று சொன்னதும் என்னை மண்ணின்மீது இடுவாயாக" என்று நளனிடத்தே கூறினான். ['தச' என்னும் சொல் பத்து எனவும், 'கடி' எனவும் பொருள் படும். ஆகவே, நாகராசன் தந்திரமாக அப்படிச் செய்யச் சொன்னான் என்க.]

எயிறு வைத்தான்

ஆங்கவன்றான் அவ்வா றுரைப்ப அதுகேட்டுத்
தீங்கலியாற் செற்ற திருமனத்தான்—பூங்கழலை
மண்ணின்மேல் வைத்துத் தசவென்று வாய்மையால்
எண்ணினான் வைத்தான் எயிறு. 343

நாகராசனானவன் அந்தப்படியாகச் சொல்லவும், அதனைக் கேட்டுத் தீயவனாகிய கலியிலே ஆட்கொள்ளப்பெற்ற சிறந்த உள்ளமுடையவனாகிய நளனும், தன் மலர்போன்ற பாதத்தைத் தரையின் மேலே வைத்து, ஒன்று முதலாக எண்ணி வந்து, உண்மையாகவே தசவென்றும் பத்தாவது அடியினை எண்ணினான். 'தச' என்று சொல்லவும், நாகராசன் தன் பற்களை அவன்மீது பதித்தான். ['வாய்மை, என்றது நாகராசனுக்கு அளித்த வாக்கு. எயிறு வைத்தல்-பற்பதித்தல்; அதாவது கடித்தல்.]

காரணம் என்னவோ?

ஆற்ற லரவரசே யாங்கென் னுருவத்தைச்
சீற்றமொன் றின்றிச் சினவெயிற்றால்—மாற்றுதற்கின்

றென்கா ரணமென்றுன் ஏற்றமரிற் கூற்றழைக்கும்
மின்கா லயின்முகவேல் வேந்து. 344

போரிடையே பகையரசரை எதிரேற்றுக் கூற்றுவனை விருந்திடுவதற்கு அழைக்கின்ற, மின்னெளி பரப்பும் கூர்மையான முனையையுடைய வேலோனுகிய நளமன்னன், ''ஆற்றலுடைய அரவரசனே! என்பாற் சினம் எதுவுமில்லாமலே என் உருவத்தினை நின் உக்கிரமான பல்லினலே கடித்து இவ்வாறு மாற்றுவதற்கு என்ன காரணமோ?'' என்றுன். [உதவிய தனக்குக் கேடு செய்தது எதனுலோ என்று ஐயுறுகின்றுன் நளன். அதனுலேயே அரவரசனை நோக்கி, 'என்மேற் சினம் எதுவும் இல்லாதபோது இப்படிக் கடித்து என் உருவை மாற்றியது எதனல்?' என்று நளன் கேட்கின்றுன்.]

மேனி குறுகிற்று

வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா
வாம நெடுந்தோள் வறியோருக் - கேமங்
கொடாதார் ஆகம்போற் குறுகிற்றே மெய்ம்மை
விடாதான் திருமேனி வெந்து. 345

அரவரசன் அங்ஙனம் கடித்தான். அதனுல், சத்திய நெறியினின்றும் தவருத நளனின் அழகிய திருமேனியும் கருகிப்போயிற்று. வீமன் மகளான தமயந்தியின் விழிகளும் முற்றவும் கண்டறியாத அழகான நெடுந்தோள்கள், வறுமையாளருக்கு உதவி மகிழ்ச்சி கொடாதவர்களுடைய உள்ளத்தைப்போலக் குறுகியும் போயிற்று. ['விழிமுடிய'-என்பது கண்ணின் ஆர்வம் முற்றவும் தீர என்பதாம். பார்க்கப் பார்க்க ஆர்வம்மீளவும் அவட்கு எழுமாதலின், 'விழிமுடியக் கண்டறியா' என்றனர்.]

மறைந்துறைதல் காரணமாய்

காயும் கடகளிற்றுய் கார்க்கோ டகனென்பேர்
நீயிங்கு வந்தமை யானினைந்து – காயத்தை
மாருக்கிக் கொண்டு மறைந்துறைதல் காரணமா
வேருக்கிற் றென்றுன் விரைந்து. 346

''சினங்கொள்ளும் மதயானை போன்றுேனே! கார்க்கோடகன் என்பது என் பெயர். நீ இங்கு வந்ததனை யான் கருதினேன். நின் உருவத்தை மாறுபட்டதாக்கிக் கொண்டு மறைவாக நீ வாழ்வதன் காரணமாகவே, விரைந்து யான்

நின்னைக் கடித்து வேறுபடச் செய்தது'' என்றான் அந்த அரவரசன். ['நின் நன்மையைக் கருதியே, நினக்கு உதவும் பொருட்டாகவே நின்னைக் கடித்தேன் என்கிறான் அரவரசன். வந்தது-வந்ததான காரணம்.]

ஆடை கொள்வாய்

கூனிறால் பாயக் குவளை தவளைவாய்த்
தேனிறால் பாயுந் திருநாடா—கானில்
தணியாத வெங்கனலைத் தாங்கினாய் இந்த
அணியாடை கொள்கென்றான் ஆங்கு. 347

''வளைவான இறால்மீன்கள் பாய்வதனாலே, குவளை மலர்களினின்றும் மிக்க தேனானது தேனிறால் போலத் தவளைகளின் வாயிடத்தே பாய்கின்ற, வளநாட்டிற்கு உரியவனே! இந்தக் காட்டிலே, ஆறாத கொடிய நெருப்பினின்றும் என்னை எடுத்துக் காத்தாய். இந்த அழகிய ஆடைகளையும் பெற்றுக் கொள்வாயாக'' என்றான் அந்த அரவரசன்.

சாத்தினால் ஒளிக்கும்

சாதி மணித்துகில் நீ சாத்தினால் தண்கழுநீர்ப்
போதின்கீழ் மேயும் புதுவரால்—தாதின்
துளிக்குநா நீட்டுந் துறைநாடர் கோவே
ஒளிக்குநாள் நீங்கும் உரு. 348

''குளிர்ச்சியான செழுங்கழுநீர்ப் பூவின் கீழாக மேய்கின்ற புதிய வரால் மீன்கள், அப் பூக்களினின்றும் வீழ்கின்ற தேன் துளிக்கு நாவை நீட்டுகின்ற வளமான நீர்த்துறைகளையுடைய நாட்டினரின் கோமகனே! சாதி மாணிக்கம் போலச் சிறந்த இந்த ஆடைகளை நின்மேலே அணிந்து கொண்டனையானால், இந்நாளிலே மறைந்த நின் பழைய உருவம் மீண்டும் விளங்கப் பெறுவாய்'' என்றான் நாகராசன். [ஒளிக்கும்–ஒளி செய்யும்.]

தேர்த்தொழிலோன் ஆகுக

வாகு குறைந்தமையால் வாகுவனென் றுன்நாமம்
ஆக வயோத்தி நகரடைந்து – மாகனகத்
தேர்த்தொழிற்கு மிக்கானீ யாகென்றான் செம்மனத்தாற்
பார்த்தொழிற்கு மிக்கானைப் பார்த்து. 349

செம்மையான தன் உள்ளத்தினாலே நிலம் ஆளுகின்ற ஆட்சித் தொழிலுக்குச் சிறந்தோனாகிய நளனை நோக்கி, ''நின் கைகள் குறுகியமையால் 'வாகுவன்' என்று நின் பெயர் இனி ஆவதாக. அயோத்தி நகரத்தைச் சேர்ந்து, சிறந்த பொற்றேர் செலுத்தும் தொழிலுக்குச் சிறந்தவனாக நீ ஆவாயாக'' என்று, மீண்டும் கார்க்கோடகன் சொன்னான். [வாகு-கை. வாகுவன்-குட்டைக் கையன். தோள் குறுகிற்று என்றதை 342ஆவது செய்யுளாற் காண்க.]

2. அயோத்தி வாசம்

நளன் புறப்பட்டான்

இணையாரும் இல்லான் இழைத்த உதவி
புணையாகச் சூழ்கானிற் போனான்—பணையாகத்
திண்ணாக மோரெட்டுந் தாங்குந் திசையனைத்தும்
எண்ணாக வேந்த னெழுந்து. 350

பருத்த உடலுடையவான திக்குயானைகள் எட்டும் தாங்குகின்ற திசைகள் அனைத்தையும் சிந்திக்கும் உள்ளத்தினையுடைய வேந்தனான நளனும், கார்க்கோடகன் சொன்னவாறே அயோத்தி நகரினை நோக்கிப் புறப்பட்டான். தனக்கு ஒப்பவர் யாரும் இல்லாத சிறப்புடையோனாகிய அரவரசன் தனக்குச் செய்த உதவியே தனக்குத் துணையாகக் கொண்டு, எப்புறமும் சூழ்ந்துள்ள அக்காட்டின் வழியே, நளன் மேற்கொண்டு செல்பவனும் ஆயினான்.

கடற்கரை கண்டான்

நினைப்பென்னும் காற்றசைப்ப நெஞ்சிடையே மூளும்
கனற்புகைய வேகின்றான் கண்டான்—பனிக்குருகு
தண்படாம் நீழல் தனிப்பேடைப் பார்த்திரவு
கண்படா வேலைக் கரை. 351

சிந்தையிலே எழும் நினைவுகள் என்னும் சுழல்காற்றானது தன்னை அலைக்கழிப்ப அதனால் அந்நெஞ்சிடத்தே மூளும் துயரக்கனலும் புகையத் தொடங்க, அதனால் வேகின்ற தன்மையாளனாகச் சென்றுகொண்டிருந்த நளன், அஞ்சும் இயல்புடைய பறவையானது குளிர்ச்சியான பெருங்கொடியினது நிழலிலே தனித்திருக்கும் தன் பெண் பறவையினைப்

பார்த்து, இரவு முழுவதும் கண்மூடாது காத்திருக்கும் கடற்கரையினைக் கண்டான். [தன் பெடை உறங்குமாறு காவலிருக்கும் ஆண் பறவையைக் கண்ட நளன், தன் கொடுஞ் செயலை நினைவுகொண்டான் என்பதாம்.]

குருகே கூருதிருத்தியால்

கொம்பர் இளங்குருகே கூரு திருத்தியால்
அம்புயத்தின் போதை யறுகாலால் – தும்பி
திறக்கத்தே னூறுந் திருநாடன் பொன்னை
உறக்கத்தே நீத்தேனுக் கொன்று. 352

மரக்கொம்பின் மேலாக இருக்கும் இளமைப் பருவத்துப் பறவையே! தாமரையின் முகையினைத் தன் ஆறு கால்களினாலே வண்டு திறக்க, அதனின்றும் தேன்வழியும் சிறந்த விதர்ப்ப நாட்டரசனின் திருமகளை, உறக்கத்தே விட்டுப் பிரிந்த எனக்கு, நீயும் எதுவும் ஆறுதல் கூருது இருக்கின்றனை போலும்! [பிரிவுத் துயரினாலே நளன் இவ்வாறெல்லாம் விளித்துப் புலம்புகின்றான்.]

ஆவி அழிந்தான்!

புன்னை நறுந்தாது கோதிப் பொறிவண்டு
கன்னிப் பெடையுண்ணக் காத்திருக்கும்—இன்னருள்கண்
டஞ்சினா னாவி யழிந்தான் அறவுயிர்த்து
நெஞ்சினால் எல்லாம் நினைந்து. 353

புன்னையின் மணமுள்ள பூந்தாதினைக் கோதிப் புள்ளிகளையுடைய ஆண் வண்டானது, தன் காதலியாம் அழகிய பெண் வண்டு உண்ணுதற்குக் காத்திருக்கின்ற, இனிதான அருள் நோக்கத்தைக் கண்டான். தன் பழிச்செயலுக்கு அஞ்சினவனாக மிகவும் பெருமூச்செறிந்தவாறே தன் உள்ளத்திலே தான் செய்தவைகளை எல்லாம் நினைந்து நினைந்து தன் உயிர் சோரப்பெற்றான், நளன்.

நண்டே சொல்வாய்

காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றே—நாதம்
அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவ ஓடி
ஒளிக்கின்ற தென்னோ உரை. 354

''நண்டே! தன் காதலியை, மிக்க இருளிலே காட்டிடையே கைவிட்டு வந்த பாதகனுகிய என்னைப் பார்க்கவும் கூடாதென்றோ, ஒலியினை அளிக்கின்ற கடலிடத்தே நீ ஓடி ஒளிக்கின்றது? அன்றி அஃது எதனுலோவென்று எனக்குச் சொல்வாயாக!'' [அலவன்-நண்டு. நாதம்-ஒலி. ஆழி-கடல். பாதகச் செயலைச் செய்தவன் பாதகன். நண்டினை விளித்து நளன் இப்படிப் புலம்புகிருன்.]

என்ன நினைப்பாள்?

பானலே சோலைப் பசுந்தென்றல் வந்துலவும்
கானலே வேலைக் கழிக்குருகே -யானுடைய
மின்னிமைக்கும் பூணாரம் வீங்கிருள்வாய் யாங்குணர்ந்தால்
என்னினைக்குஞ் சொல்வீர் எனக்கு 355

''நீலோற்பல மலர்களே! சோலையிடத்துப் பசுமையான தென்றல் வந்து உலவுகின்ற கழிக்கானலே! கடலைச் சேர்ந்த கழியிடத்தே இருக்கும் நாரையே! யான் மனைவியாகவுடைய, மின்போல ஒளிரும் பூணுதற்குரிய மாலையினை உடையவளான அவள், மிகுதியான இருள்நடுவே துயில் உணர்ந்தாளானுல் என்னைப்பற்றி என்ன நினைப்பாள்? அதனை எனக்குச் சொல்வீராக.''

இரவகற்றி வந்தாய்கொல்?

போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவாய்
அரவகற்றும் என்போல ஆர்க்கடலே மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று. 356

ஒலிக்கும் ஆரவாரத்தையுடைய கடலே! போகின்றுய்; மீளவும் வருகின்றுய்; புரண்டு விழுந்து ஒலியுடனே நாவாய்களும் கவிழுமாறு நடுக்கமுறுகின்றுய்! நெருப்பினின்றும் பாம்பினை அகற்றிக் காத்த என்போலவே, நீயும் நின் மனைவியை இரவிலே விட்டு நீங்கி இன்று வந்துள்ளனை போலும்! [தன் நிலைக்குக் கடலின் அலைக்கழிவை ஒப்பிட்டுப் பேசுகிருன் நளன்.]

முறுவல் திரள்!

முந்நீர் மடவார் முறுவல் திரள்குவிப்ப
நன்னீர் அயோத்தி நகரடைந்தான்—பொன்னீர்

முருகுடைக்குந் தாமரையின் மொய்ம்மலரைத் தும்பி
அருகுடைக்கும் நன்னாட் டரசு. 357

பொன்னின் தன்மையுடைய அழகினையும் உடைந்து போகச் செய்யும் தாமரையின் செழுமையான பூவினை, வண்டுகள் அணுகிச் சென்று கட்டவிழ உடைக்கும் நலமிக்க நிடதநாட்டு அரசனான நளன், கடற்கரைப் பாக்கத்துப் பெண்கள் சிரிப்பொலியினைத் திரளாகக் குவித்துத் தன்னை வரவேற்கக் கடற்கரை வழியே நடந்துசென்று, நல்ல நீர் வளத்தினை உடைய அயோத்தி நகரினைச் சென்றும் சேர்ந் தான். [அவர்கள் சிரித்தது நளனின் கோரமான குறுகிப் போன உடலினைக் கண்டதனால் என்க.]

வரவு உரைமின்

மான்தேர்த் தொழிற்கும் மடைத்தொழிற்கும் மிக்கோனென்று
ஊன்தேய்க்கும் வேலான் உயர்நறவத்—தேன்தோய்க்கும்
தார்வேந்தற் கென்வரவு தானுரைமின் என்றுரைத்தான்
தேர்வேந்தன் வாகுவனாய்ச் சென்று. 358

தேர்வேந்தனான நளன், வாகுவனாக அயோத்தி அரசனின் அரண்மனைக்குச் சென்று, "குதிரைகள் பூட்டிய தேர்த்தொழிற்கும், மடைப்பள்ளித் தொழிற்கும் சிறந்தவன் யான்; பகைவர் உடலின் ஊனைச் சிதைத்தழிக்கும் வேலினான, உயரிய மணமுள்ள தேனிலே தோய்த்திருப்பது போல விளங்கும் தாரினையுடைய நும் வேந்தனுக்கு, என் வருகையினைச் சென்று சொல்வீராக" என்று, காவலரிடம் சொன்னான்.

அரசன்முன் சென்றான்

அம்மொழியைத் தூதர் அரசற்கு அறிவிக்கச்
செம்மொழியாத் தேர்ந்ததனைச் சிந்தித்தே—இம்மொழிக்குத்
தக்கானை இங்கே தருமினெனவுரைக்க
மிக்கானும் சென்றான் விரைந்து. 359

வாயிலர்கள் சென்று அந்தச் சொற்களைத் தம் அரசனுக்கு அறிவித்தனர். அரசனும் அதனைப்பற்றிச் சிந்தித்துச் செம்மையான பேச்சாகவே அதனைத் தெளிந்த

வனாக, இச்சொற்களுக்குத் தகுதியுடையவனை இவ்விடத்தே இட்டுத்தாருங்கள் என்று சொல்லவும், அவற்றில் சிறந்தோனாகிய நளனும் அம்மன்னனின் திருமுன்னர் விரைந்து சென்றான்.

அயோத்தி மன்னனின் வினா

பொய்யடையாச் சிந்தைப் புரவலனை நோக்கித்தன்
செய்ய முகமலர்ந்து தேர்வேந்தன்—ஐயாநீ
எத்தொழிற்கு மிக்கா னியாது பெயரென்றான்
கைத்தொழிற்கு மிக்கானைக் கண்டு. 360

தேர்வேந்தனை அயோத்தி மன்னன் கைவினையாகிய படைத்தொழிலிலே சிறந்தோனாகிய வாகுவனைக் கண்டான். பொய்ம்மை சென்று சேராத உள்ளத்தானாகிய அப் புரவலனான நளனை நோக்கித் தன் செவ்விய முகம் மலர்ச்சி கொண்டவனானான், "ஐயா! நீ எத்தொழிற்குச் சிறந்தவன்? நின் பெயர் யாது?" என்றும் வினவினான். [கைத்தொழில்—மேன்மையான தொழிலும் ஆம்; அதனைச் செங்கோலாட்சி எனவும் கொள்ளலாம்.]

வல்லவன் யான்

அன்னம் மிதிப்ப அலர்வழியும் தேறல்போய்ச்
செந்நெல் விளைக்குந் திருநாடர்—மன்ன
மடைத்தொழிலும் தேர்த்தொழிலும் வல்லன்யான் என்றான்
கொடைத்தொழிலின் மிக்கான் குறித்து. 361

ஈகையிலே சிறந்தோனாகிய நளன், தன்னைக் குறித்து "அன்னம் மிதிப்பதனாலே மலர்கின்ற தாமரை மலர்களினின்றும் வழியும் தேனானது பாய்ந்து செந்நெல்லை விளைவிக்கின்ற செல்வமிக்க நாட்டினரின் மன்னவனே! மடைத்தொழிலிலும் தேர்த்தொழிலிலும் வல்லவன் யான்" என்றான். [அங்ஙனமே அவ்விரு தொழிலுக்கும் உரியோனாக அவன் நியமிக்கப்பெற்றனன் என்க.]

3. தேடிய மறையோன்

வேந்தனை நாடுக!

என்னை இருங்கானில் நீத்த இகல்வேந்தன்
தன்னைநீ நாடுகெனத் தண்கோதை—மின்னும்
புரைகதிர்வேல் வேந்தன் புரோகிதனுக் கிந்த
உரைபகர்வ தானுள் உணர்ந்து. 362

தண்மையான மாலையினைச் சூடிய தமயந்தியானவள் தன்னைக் கவிந்திருந்த துயரத்தினின்றும் சற்றே தெளி வடைந்து, மின்னலை ஒத்து ஒளிசிதறும் வேல்வேந்தனை வீமராசனின் புரோகிதனுக்கு, என்னைப் பெரிதான கான கத்திலே கைவிட்டுப் பிரிந்து மனமாறிய வேந்தனை, நீ தேடிச் சென்று அறிவாயாக'' என்று இவ்வாறான ஒரு பேச்சினைச் சொல்வதானாள். [இகல்-மாறுபாடு; நளன் தன்னை நீத்தது ஏதோ மனமாறுபாடு கொண்டு என்று தமயந்தி கருது கிறாள்.

அறியும் வகை

காரிருளில் பாழ்மண் டபத்தேதன் காதலியைச்
சோர்துயிலின் நீத்தல் துணிவன்றே—தேர்வேந்தற்
கென்றுறைந்தால் நேர்நின் றெதிர்மாற்றம் தந்தாரைச்
சென்றறிந்து வாவென்றாள் தேர்ந்து. 363

"கருமையான இருளிலே, பாழும் மண்டபத்திலே, தன் காதலியை அவள் தளர்ந்து உறங்கியிருக்கும்போது கைவிட்டுப் பிரிதல் தேர்வேந்தனுக்குத் துணிவான செய லல்லவோ? என்று சொன்னால், அதனைக் கேட்டு நின் எதிரே நின்று மறுமொழி தந்தவரைச்சென்று அறிந்து வருவாயாக'' என்று, தமயந்தி நளனை அறியும் உபாயத்தையும் ஆராய்ந்து அந்தப் புரோகிதனிடம் கூறினாள்.

அயோத்தி அடைந்தான்

மின்னாடும் மால்வரையும் வேலையும் வேலைசூழ்
நன்னாடும் கானகமும் நாடினான்—மன்னு
கடந்தாழ் களியானைக் காவலனைத் தேடி
அடைந்தான் அயோத்தி நகர். 364

மின்னல் தவழ்கின்ற பெரிய மலைமுகடுகளும், கடல்களும், கடல்கள் சூழ்ந்த நல்ல நாடுகளும், காடுகளும் எல்லாம், அந்தப் புரோகிதனும், நிலைபெற்ற மதநீர் ஒழுக்கு உடைய களிப்புப் பொருந்திய யானைப்படையினை உடையவனாயிருந்த காவலனான நளனைத் தேடிச் சென்றான். முடிவில், அயோத்தி நகரினையும் சென்று அடைந்தான்.

வந்தான் எதிர்

கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ—தானென்று
சாற்றினான் அந்தவுரை தார்வேந்தன் தன்செவியில்
ஏற்றினான் வந்தான் எதிர். 365

“காட்டிடத்தே, தன் காதலியைக் கருமையான இருட்போதிலே கைவிட்டுப்போன செயலும், வேந்தனாகியவனுக்குப் பொருந்துவதாகுமோ?” என்று புரோகிதன் அயோத்தி வேந்தனிடம் கேட்டான். அந்தச் சொற்களைத் தார்வேந்தனான நளனும் தன் காதுகளினாலே கேட்டான்; அந்தப் புரோகிதனுக்கு முன்பாகவும் வந்தான்.

விதியின் பயனே!

ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும்
பண்டை விதியின் பயனேகாண்—தண்டரளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்தே
நீத்தான்என் றையுறேல் நீ. 366

“ஒள்ளிய தொடியணிந்தவளை உறக்கத்திலே விட்டுப் பிரிந்ததுவும் பண்டைவிதியின் பயனாக நிகழ்ந்ததே என்று நீ அறிவாயாக. குளிர்ச்சியான முத்துக்களின் அழகிய மாலைகள் தொங்கும் வெண்கொற்றக் குடையுடையவனின் திருமகளை, வெம்மையான காட்டினிடத்தே, அவனாகவே மாறுபாடு கொண்டு கைவிட்டுச் சென்றான் என்று நீ ஐயங் கொள்ளாதே” என்றான் நளன்.

தலைப்பட்டவாறு உண்டோ?

எங்க ணுறைந்தனைகொல் எத்திசைபோய் நாடினைகொல்
கங்கைவள நாட்டார்தங் காவலனை—அங்குத்
தலைப்பட்ட வாறுண்டோ சாற்றென்றாள் கண்ணீர்
அலைப்பட்ட கொங்கையா ளாங்கு. 367

அங்ஙனம் உரைத்த எதிர்மாற்றத்தைக் கேட்ட புரோகிதன் நேராகத் தமயந்திபால் திரும்பிவிட்டான். அவனைக் கண்ட அவள்—கண்ணீர் அலையலையாகப் பட்டிருக்கும் மார்பகங்களை உடையவள்—அவ்விடத்தே அவனை நோக்கி, "எவ்விடமெல்லாம் தங்கினாய்? எத்திசை எல்லாம் கங்கைவள நாட்டாரின் காவலனைச் சென்று தேடினாய்? அவ்விடத்தே எங்காவது அவனைச் சந்தித்ததுண்டோ? சொல்வாயாக" என்றாள்.

புரோகிதன் உரைத்தது!

வாக்கினால் மன்னவனை ஒப்பான் மறித்தொருகால்
ஆக்கையே நோக்கின் அவனல்லன்—பூக்கமழும்
கூந்தலாய் மற்றக் குலப்பாகன் என்றுரைத்தான்
ஏந்துநூல் மார்பன் எடுத்து. 368

பூணூல் தங்கிய மார்பனான அப் புரோகிதன், "மலர் மணம் கமழும் கூந்தலை உடையவளே! வாக்கினாலே நம் மன்னவனைப் போன்றோனாகவே உள்ளான்! மீண்டும் ஒரு முறை அவன் உடலினைப் பார்த்தோமானால் நம் மன்னவன் அல்லன், எனக்கு விடை சொன்ன அந்தச் சிறந்த தேர்ப்பாகன்" என்று எடுத்து உரைத்தான். [குரலும் பேச்சும் நளனாகத் தோன்றுகிறது; ஆனால் உருவம் மாறுபட்டிருக்கின்றது என்று, தான் கண்டறிந்ததைப் புரோகிதன் சொன்னான்.]

4. இரண்டாம் சுயம்வரம்

மீண்டோர் சுயம்வரம்!

மீண்டோர் சுயம்வரத்தை வீமன் திருமடந்தை
பூண்டாளென் றந்தணநீ போயுரைத்தால்—நீண்ட
கொடைவேந்தற் கித்தூரம் தேர்க்கோலம் கொள்வான்
படைவேந்தன் என்றாள் பரிந்து. 369

புரோகிதன் உரைத்ததைக் கேட்ட தமயந்தி, "அந்தண! வீமன் திருமகள் மீண்டும் ஒரு சுயம்வரத்தினை மேற்கொண்டாள் என்று நீ போய் அயோத்தியிற் சொன்னால், மிகுந்த கொடைச் சிறப்புடைய அம் மன்னவனுக்கு, இவ்வூர் வரையும் நம் படைவேந்தன் தேர்க்கோலம் கொள்வான்"

என்று, தன் காதலன்பால் அன்பு கொண்டவளாகி, அவனிடம் சொல்லிச் செல்ல விடுத்தாள். [வாகுவனைப் பற்றிய உண்மையினை அறிதற்குத் தமயந்தி செய்த சூழ்ச்சி இது.]

நாளை சுயம்வரம்

எங்கோன் மகளுக் கிரண்டாஞ் சுயம்வரமென்
றங்கோர் முரசம் அறைவித்தான்—செங்கோலாய்
அந்நாளும் நாளை யளவென்றான் அந்தணன்போய்த்
தென்னாளுந் தாரானைச் சேர்ந்து. 370

தமயந்தி சொன்னபடியே அந்தப் புரோகிதனும் மீண்டும் அயோத்தி நோக்கிச் சென்று, அழகு ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற தாரணிந்தவனாகிய அயோத்தி மன்னனை யும் அடைந்தான். "செங்கோன்மையாளனே; எம் கோமானின் மகளுக்கு இரண்டாவது சுயம்வரம் என்று அவ் விடத்தே ஒப்பற்ற முரசமும் அறைவித்துள்ளனன்; அச் சுயம்வர நாளும் நாளை அளவிலே நடைபெறவிருக்கின்றது" என்று சொன்னான். [அந்த நாளிலே இப்படி இரண்டாம் சுயம்வரம் நடப்பதும் அருகிய வழக்கமாக இருந்திருத்தல் வேண்டும். இல்லை என்றால், அதனை அயோத்தி மன்னன் உண்மையெனக் கொள்ளவும், உடனே வீமனின் நகர் நோக்கி அதற்காகப் புறப்படுவதும் பொருந்தாததாகும். ஆனால், தமயந்தி அதனைச் சூழ்ச்சியாகவே கொண்டனள் என்பதனையும் மறத்தல் கூடாது. தென்–அழகு.]

என் செய்வோம்?

வேத மொழிவாணன் மீண்டும் சுயம்வரத்தைக்
காதலித்தாள் வீமன்றன் காதலியென்—றோதினான்
என்செய்கோ மற்றிதனுக் கென்றான் இகல்சீறும்
மின்செய்த வேலான் விரைந்து. 371

"வேத மொழிகளிலே வல்லவனான இந்தப் புரோகிதன் வந்து, வீமராசனது அன்பிற்குரிய மகளான தமயந்தி மீண்டும் சுயம்வரத்தை விரும்பினாள் என்று சொன்னான். இதற்கு நாம் என்ன செய்வோம்?" என்று பகைவரைச் சினந்து அழிக்கின்ற மின்னல்போல ஒளிசெய்யும் வேற்படை யினனான அந்த அயோத்தி மன்னன், அந்தப் பொழுதிலேயே நளனிடம் கேட்டான். [நாளை சுயம்வரம் என்றதனால்

எப்படிப் போய்ச் சேருவதென்பது குறித்துத் தன் தேர்ப்பாகனாக இருந்த நளனிடத்தே அயோத்திராசன் கேட்டான் என்று கொள்க]

சொல்லப்படுமோ?

குறையாத கற்பினுள் கொண்டானுக் கல்லால்
இறவாத வேந்திழையாள் இன்று—பறிபீறி
நெல்லிற் பருவரால் ஓடும் நெடுநாடா
சொல்லப் படுமோவிச் சொல்? 372

"மீன் பிடிப்பவர் இட்டுவைத்துள்ள பறியினைக் கிழித்துக் கொண்டு பருத்த வரால்மீன்கள் நெற்பயிரினிடையே ஓடுகின்ற பெரிய நாட்டிற்கு உரியவனே! குறைவு எதுவுமில்லாத கற்பினை உடையவள்; தன்னைக் கொண்டவனுக்கு அல்லாமல் பிறனிடத்தே தன் மனத்தைச் செலுத்தாத ஏந்திழையாள், அந்தத் தமயந்தி. அவள், இந்நாள் இத்தகைய சொல்லினைச் சொல்லுதலும் கூடுமோ?'' என்று, நளன் அரசனுக்குத் தன் கருத்தைக் கூறினான். [தமயந்தி அவ்வாறு கூறியிருக்கவே மாட்டாள் என்பதே நளனின் கருத்தாதலை அறிக. பறி-மீன் பிடிக்கும், குடலைபோன்ற ஒரு சாதனம்.]

என்மேல் எறிகின்ற மாலை!

என்மேல் எறிகின்ற மாலை எழில்நளன்தன்
தன்மேல் விழுந்ததுகாண் முன்னுளில்—அன்னதற்குக்
காரணந்தான் ஈதன்றே என்றான் கடாஞ்சொரியும்
வாரணந்தான் அன்னான் மறித்து. 373

மதநீரினைச் சொரிகின்ற யானையைப் போன்றவனான அயோத்தி மன்னன், புரோகிதனின் சொற்களை வாய்மை எனவே மதித்தான். "முன்னர்ச் சுயம்வரம் நடந்த நாளிலே அவள் என்மேல் எறிந்த பூமாலை தவறிப்போய் எழிலுடைய நளனது மேலாக விழுந்துவிட்டது என்பதனை நீ அறிவாயாக. அங்ஙனம் பிழைபட நேர்ந்ததற்குக் காரணந்தான் இத்தகைய இரண்டாம் சுயம்வரம் அல்லவோ?'' என்று, அரசன் தன் முடிவையும் நளனுக்குத் தெரிவித்தான்.

நளனின் கலக்கம்

முன்னை வினையான் முடிந்ததோ மொய்குழலாள்
என்னைத்தான் காண விசைந்ததோ—தன்மரபுக்

கொவ்வாத வார்த்தை யுலகத் துரைப்பட்ட
தெவ்வாறு கொல்லோ விது? 374

''முன் செய்த தீவினையின் காரணமாக எல்லாமே இங்ஙனம் வந்து நிறைவேறுவதாயிற்றே? அல்லது, வண்டினம் மொய்க்கும் கூந்தலுடையாள், என்னைத்தான் கண்டு பிடிப்பதற்காக இங்ஙனம் செய்கின்றனளோ? குலமரபுக்குப் பொருந்தாத பேச்சு உலகத்திலே இந்நாளிற் சொல்லப்பட்டு விட்டதே! இது எவ்வகையினாலே ஏற்பட்டதோ?'' [மொய் குழல்-நெருங்கிய கூந்தலும் ஆம். 'உலகில் பொருந்தாத சொல்லாக இரண்டாம் சுயம்வரம் என்றதொரு பேச்சும் எழலாயிற்றே' என, நளன் எண்ணி வருந்துகின்றான்.]

கடமை உணர்ந்தான்

காவலனுக் கேவற் கடன்பூண் டேன் மற்றவன்றன்
ஏவன் முடிப்பன் இனியென்று — மாவிற்
குலத்தேரைப் பூட்டினான் கோதையர்தங் கொங்கை
மலர்த்தேன் அளிக்குந்தார் மன். 375

''இந்த அரசனுக்கு ஏவலானதொரு கடமையினை யான் மேற்கொண்டேன். அதனால், அவன் ஏவலையே இனி நிறைவேற்றுவேன்'' என்று மனந்தேறியவனாக, பெண்களுடைய மார்பகங்களிலே தன் தாரினின்றும் பூந்தேன் துளித்து விழும்படியான தாரினைப் பூண்டவனாகிய நளமன்னன், நல்ல சாதிக் குதிரைகளோடு, தேரினையும் புறப்படுவதற்கு ஆயத்தமாகப் பூட்டினான்.

5. தேர் சென்ற சிறப்பு

தேர் ஏறுக!

ஒற்றைத் தனியாழித் தேரென்ன ஓடுவதோர்
கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன்—மற்றிதற்கே
போந்தேறு கென்றுரைத்தான் பொம்மென் றளிமுரலத்
தீந்தேறல் வாக்குந்தார்ச் சேய். 376

''பொம்'' என்னும் ஒலியோடு வண்டினம் ஒலிசெய்ய, இனிதான தேறலை ஒழுக்கிக் கொண்டிருக்கின்ற தாரினை

அணிந்தோனான நளன், 'ஒன்றாகிய ஒப்பற்ற சக்கரத்தை உடையதான கதிரவனின் தேர்' என்றாற்போல விரைந்து ஓடத்தக்கதொரு வெற்றிபொருந்திய உயர்ந்த தேரினைப் பூட்டிக்கொண்டு வந்துள்ளேன்; இதனிடத்தே வந்து ஏறி யமர்க'' என்று, அயோத்தி மன்னனிடத்தே கூறினான்.

சிந்தையினும் கடுகச் சென்றது

முந்தை வினைகுறுக மூவா மயல்கொண்டான்
சிந்தை யினுங்கடுகச் சென்றதே—சந்தவிரைத்
தார்குன்று மெல்லோதி தன்செயலைத் தன்மனத்தே
தேர்கின்றான் ஊர்கின்ற தேர். 377

அழகும் மணமும் உள்ள மாலைகளிற் குறையாத, மென்மையான கூந்தலையுடையவளான தமயந்தியின் செயலினைத் தன் உள்ளத்தே ஆராய்கின்ற நளன் செலுத்திய அந்தத் தேரானது, தன் பழவினை வந்து நெருங்கினதனாலே, தமயந்தியின் மீது தேயாத மையல்கொண்ட அயோத்தி மன்னனின் சிந்தையைக் காட்டினும் விரைவாகவே சென்று கொண்டிருந்தது. [இருதுபர்ணன் என்பது அயோத்தி மன்னனின் பெயர். அவன் மயல் கொண்டது வினைப்பயன் என்றார், பிறர் மனைவியின்பால் மயல் கொண்ட தன்மை பற்றியும், அவன் பின்னர் அடையப்போகும் ஏமாற்றத்தைக் கருதியும் ஆம்.]

வீழ்ந்தது எடு!

மேலாடை வீழ்ந்த தெடுவென்றான் அவ்வளவில்
நாலாறு காதம் நடந்ததே—தோலாமை
மேல்கொண்டான் ஏறிவர வெம்மைக் கலிச்சூதில்
மால்கொண்டான் கோல்கொண்ட மா. 378

பகைவர்க்குத் தோல்வி உறாமையினையே மேற்கொண்டு விளங்குபவனாகிய அயோத்திராசன் அவ்வாறு தேரேறி வருகையிலே, 'என் மேலாடை வீழ்ந்துவிட்டது; அதனை எடுக்க' என்றான். அப்படிச் சொல்வதற்குள், வெம்மையாளனான கலியின் சூதினாலே மயக்கங்கொண்ட நளன் கோல் கைக்கொண்டு செலுத்திய குதிரைகள், நாலாறுகாத தூரத்தினைக் கடந்துவிட்டன. [தேர் சென்ற விரைவு இவ்வாறு கூறப் பெற்றது. தேர்த் தொழிலிலே வல்லவன் நளன் என்பதனைக் கவி இவ்வாறு காட்டுகின்றார்.]

எண்ணிப் பார்

இத்தாழ் பணையில் இருந்தான்றிக் காயெண்ணிற்
பத்தா யிரங்கோடி பாரென்ன—உய்த்ததனில்
தேர்நிறுத்தி எண்ணினன் தேவர் சபைநடுவே
தார்நிறுத்துந் தோள்வேந்தன் தான். 379

தேர் அவ்வாறு மிக வேகத்துடனே சென்று கொண்டிருந்தது. அப்போது, 'தாழ்ந்த இடமாகவுள்ள இந்தத் தோட்டத்திலே இருக்கும் பெரிய தான்றிக்காய்களை எண்ணினுல் அவை பத்தாயிரம் கோடியாகும்; நீ சோதித்துப் பார்' என்ருன் அயோத்தி மன்னன். தேவர்கள் கூடியிருந்த சுயம்வர அவையின் நடுவே, தமயந்தியின் மணமாலையினைத் தாமே தாங்கிக்கொண்ட தோள்களையுடைய வேந்தனுன நளனும், அவ்வாறே தேரை நிறுத்தி, உய்த்து எண்ணிப் பார்த்து, அத் தொகை சரியாயிருக்கவும் கண்டான்.

தொழில் மாற்றுதியோ?

ஏரடிப்பார் கோலெடுப்ப இன்தேன் தொடைபீறிக்
காரடுத்த சோலைக் கடனுடன்—தேரடுத்த
மாத்தொழிலும் இத்தொழிலும் மாற்றுதியோ என்றுரைத்தான்
தேர்த்தொழிலின் மிக்கானைத் தேர்ந்து. 380

ஏரடிக்கும் உழவர்கள் தம் கைக்கோலை உயர எடுக்கையிலே, இனிதான தேன் பூங்கொத்துக்களைப் பீறிக்கொண்டு ஒழுகும், மேகங்கள் தவழ்கின்ற சோலைகளையுடைய கடற்கரை நாட்டிற்குரியவனுன அயோத்தி மன்னன், தேர் செலுத்தும் தொழிலிலே சிறந்தவனுன நளனை மதித்துத், "தேரிற் பூட்டிய குதிரைகளைச் செலுத்தும் நின் தொழிலையும், இங்ஙனம் எண்ணிக் காணும் என் தொழிலையும், என்னுடன் மாற்றிக் கொள்ளுகின்ருயோ?" என்று கேட்டான். [அங்ஙனமே இருவரும் தம் கலைத்திறனை ஒருவருக்கொருவர் கற்பித்தனர் என்பதனை உய்த்து உணர்க.]

கலி நீங்கிற்று

வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்

பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கலி. 381

வண்டுகள் ஆர்ப்பரிக்கும் வளமான வயல்கள் சூழ்ந் திருக்கும், உழவர் நாட்டை ஆளுகின்ற எம் மன்னவனுன தண்மையான தாரினைச் சூடுகின்ற சந்திரன்சுவர்க்கி என்பவன் போற்றுகின்ற பாவலனிடத்தே, அதற்குமுன் நிலைபெற்றிருந்த பசிநோயினைப்போல, காவலனும் நள னிடத்தே நிலைபெற்றிருந்த கலியும் அப்போது அவனைவிட்டு நீங்கிப்போயிற்று. [இருதுபர்ணன் நளனுக்குக் கற்பித்த வித்தை அட்ச இருதயம் என்பது, அது பிறர் எண்ணத்தை அறிதலும், கண்டவற்றை எண்ணிக்காணலும் ஆகிய சக்தி உடையது. இந்த வல்லமை நளனுக்கு வந்ததும் சொக்கட் டான் ஆட்டத்தில் அவன் வென்றுவிடுவான் என்பதனுல் கலிபுருஷன் அவனைவிட்டு நீங்கினுன் என்று கொள்க.]

6. வீமன் நகரில்

வீமன் நகரம் சேர்ந்தனர்

ஆமை முதுகில் அலவன் துயில்கொள்ளும்
காமர் நெடுநாடு கைவிட்டு—வீமன்தன்
பொன்னகரி சென்றடைந்தான் போர்வெட் டெழுங்கூற்றம்
அன்னகரி யொன்றுடையான் ஆங்கு. 382

போர்க்களத்தினை விரும்பி உயிருண்ண எழுகின்ற கூற்றத்தைப் போன்ற களிற்றியானையினேடு ஒப்புமை உடையவனுன அயோத்தி மன்னன், ஆமைகளின் முதுகிலே நண்டுகள் துயில் கொள்ளுகின்ற அழகான பெரிய தன் நாட் டினைக் கைவிட்டு, வீமராசனது அழகிய நகரத்தினையும் சென்று சேர்ந்தான்.

வீமன் அரண்மனையில்

வெற்றித் தனித்தேரை வீமன் பெருங்கோயின்
முற்றத் திருத்தி முறை செய்யும் —கொற்றவர்க்குத்
தன்வரவு கூறப் பணித்துத் தனிப்புக்கான்
மன்விரவு தாரான் மகிழ்ந்து. 383

வெற்றிச் சிறப்புடைய ஒப்பற்ற தேரினை வீமராசனின் பெரிய அரண்மனை முற்றத்தே நிறுத்தி, முறைநடாத்தும் வெற்றி வேந்தனுக்குத் தன் வரவினைக் கூறுமாறு வாயிலர்க்குக் கட்டளையிட்டுவிட்டுப், பெருமைசேர்ந்த தாரினனுன இருதுபர்ணன், தனியாகவே மகிழ்வுடன் அரண்மனையுள்ளே சென்றான். [தனிப்புக்கான் என்றது நளனுகிய பாகனை வெளியே விட்டுவிட்டுச் சென்றான் என உணர்த்துவதற்காகும்.]

வர விரும்பியது ஏனோ?

கன்னி நறுந்தேறல் மாந்திக் கமலத்தின்
மன்னித் துயின்ற வரிவண்டு—பின்னையும்போய்
நெய்தற் கவாவும் நெடுநாட நீயென்பால்
எய்தற் கவாவியவா றென்? 384

"புதிதான மணமுள்ள தேனை நிறையக் குடித்துவிட்டுத், தாமரைமலரிற் சேர்ந்திருந்து உறங்கிய வரிகளையுடைய வண்டானது மறுபடியும் எழுந்து, கருநெய்தற் பூவினை விரும்பிச் செல்லுகின்ற பெரிதான நாட்டை உடையவனே! நீ என்னிடத்தே வருவதற்கு விரும்பியதற்கான காரணம் தான் என்னவோ?'' என்று, வீமராசன் இருதுபர்ணனை விசாரித்தான்.

காணும் ஆசையால் வந்தேன்

இன்றுன்னைக் காண்பதோ ராதரவால் யானிங்ஙன்
மன்றல் மலர்த்தாராய் வந்தடைந்தேன்—என்றான
ஒளியார்வேற் கண்ணாள்மேல் உள்ளம் துரப்பத்
தெளியாது முன்போந்த சேய். 385

ஒளிநிறைந்த வேற்படைபோன்ற கண்ணினளான தமயந்தியின்மேல் தன் உள்ளம் செலுத்துவதான காரணத்தினாலே உண்மையினைத் தெளிந்து கொள்ளாது, புரோகிதனின் பேச்சை நம்பி வந்து வீமராசனின் முன்சென்றஇருதுபர்ணன், "இன்று உன்னைக் காணும்படியான ஓர் ஆசையினாலே. மணமுள்ள மலர்மாலை உடையவனே! நின்னிடத்தே வந்துள்ளேன்'' என்று சொல்லித் தன்னைக் காட்டாது மறைத்துக்கொண்டான்.

7. மக்களும் தந்தையும்

மடைப்பள்ளி புகுந்தான்

ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவையாற்றிக்
கோதில் அடிசிற் குறைமுடிப்பான்—மேதிக்
கடைவாயிற் கார்நீலம் கண்விழிக்கும் நாடன்
மடைவாயிற் புக்கான் மதித்து. 386

எருமைகளின் வாய்க்கடையிலே கருநெய்தற்பூக்கள் மலர்ந்து கொண்டிருக்கும் வளமான நிடதநாட்டிற்கு உரிய வனுகிய நளன், முதன்மையான நெடியதேரிலே பூட்டியிருந்த குதிரைகளை அவிழ்த்து, அவைகளைக் களைப்பாறச் செய்து விட்டுக், குற்றமறச் சோறுக்குவதாகிய தன் கடமையினை முடிப்பதனைக் கருதியவனுக மடைப்பள்ளியினுள்ளே சென்று புகுந்தான். [வீமனின் விருந்தாளியாக இருதுபர்ணன் இருந்தபோதும், அவன் உணவினை அவனுடைய சமையற் காரனே சமைக்கச் சென்றதன் தன்மையினைக் காண்க. இது அக்காலத்து அரசர் கொண்டிருந்த ஒரு பாதுகாப்புமரபு போலும்!]

நிரப்பாமல் நிரம்பிற்று

ஆதி மறைநூல் அனைத்தும் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல்—யாதும்
நிரப்பாமல் எல்லாம் நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புக்க மனை. 387

ஆதியாகிய மறைநூல்கள் அனைத்தையும் ஆராய்ந் தறிந்த நீதி நெறியாளர்களான சான்றோர்களின் உள்ளத் தைப் போலப் பொன்மயமான தேரின் சிறந்த பாகனுகிய நளன் புகுந்த அந்த வீடும், எதனையும் எவரும் கொண்டு நிரப்பாமலே எல்லாம் நிரம்பியதாக அமைந்து இருந்தது. [இது நளனுக்குத், தேவர்கள் முன் தந்த வரத்தின் பயனினு லேயாகும். இந்த வரத்தைப்பற்றிய செய்தியை 'அங்கி யமுதம்' என்ற செய்யுளாற் காண்க]

தெரிந்து வா!

இடைச்சுரத்தில் தன்னை இடையிருளில் நீத்த
கொடைத் தொழிலான் என்றயிர்த்த கோமான்—

மடைத்தொழில்கள்

செய்கின்ற தெல்லாம் தெரிந்துணர்ந்து வாவென்றாள்
நைகின்ற நெஞ்சாள் நயந்து. 388

துயரத்தினாலே நைந்துபோகின்ற நெஞ்சினளான தமயந்தி, உண்மை அறிதலை விரும்பித், தன் சேடியருள் ஒருத்தியை அழைத்துப் பாலைவழியினடியிலே இரவின் இடைச்சாமவேளையிலே தன்னைக் கைவிட்டுப்போன கொடை தொழிலானே என்று தான் ஐயுற்ற தன் கோமான், சமைக்கும் தொழில்கள் செய்கின்ற வகையினை எல்லாம் தெரிந்து அவற்றின் தன்மையினை அறிந்து வருக என்று ஏவினாள். [நளன் சமைக்கும் தொழிலில் தலைசிறந்தவன்; அதனால் அதனை அறிந்துவர இங்ஙனம் தமயந்தி சேடியை அனுப்பினாள் என்று உணர்க.]

குமரனையும் குமரியையும் அனுப்புதல்

கோதை நெடுவேற் குமரனையும் தங்கையையும்
ஆதி அரசன் அருகாகப்—போத
விளையாட விட்டவன் மேற்செயல்நா டென்றாள்
வளையாடுங் கையாள் மதித்து. 389

வளையல்கள் குலுங்கிக் கொண்டிருக்கும் கைகளை உடைய வளான தமயந்தியானவள் மேலும் எண்ணமிட்டுக், 'கோதை சூடிய நெடிய வேலேந்தும் என் குமரனையும், அவன் தங்கை யான என் குமரியையும், ஆதியிலே அரசனான அந்தச் சமையல் செய்வோனின் அருகாகப் போகவும் விளையாடவும் விட்டு, மேற்கொண்டு அவனிடத்தே அதனால் நிகழும் செயல் களையும் நீ அறிந்து வருவாக'' என்றாள்.

யார் மக்கள்?

மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காள்நீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்க ளென்றுரைத்தான்
வன்மக் களியானை மன். 390

பகைக்குணமுள்ள மதயானைகளையுடைய மன்னனான நளன், தன் மக்களைத் தன் எதிரே கண்டதும் உளம் நடுங் கினான். சுடுமூச்சு எறிந்தவனாகி, அவர்களைப்போய் எடுத்துத் தன் வீரஞ்செறிந்த புயத்தோடு அணைத்துக் கொண்டான். ''மக்களே! நீங்கள் என் மக்களைப்போலவே தோன்றுகிறீர் கள்; நீங்கள் யார் மக்களோ?'' என்றும் கேட்டான்.

மக்கள் சொன்னது

மன்னு நிடதத்தார் வாள்வேந்தன் மக்ள்யாம்
அன்னேதனேக் கான்விட் டவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்ருேம் எங்கள் வளநாடு மற்ெருருவன்
ஆள்கின்ருன் என்ருர் அழுது. 391

"வளஞ்செறிந்த நிடதநாட்டினரின், வாளாற்றல் உடைய வேந்தனுயிருப்போனின் மக்கள் யாங்கள். அவன், எங்கள் அன்னேயைக் காட்டிலே கைவிட்டுப் போய்விட்ட தனுல், இந்த நகரத்திலேயே வாழ்ந்து வருகின்ருேம். எங்களுக்குரிய வளநாட்டினே மற்ெருருவன் ஆண்டுகொண் டிருக்கின்ருன்'' என்று அழுதுகொண்டே, அந்தக் குழந்தை கள் தம்மைப்பற்றிச் சொன்னுர்கள்.

நீங்கா உயிரோடு நின்ருன்

ஆங்கவர் சொன்ன வுரைகேட் டழிவெய்தி
நீங்கா உயிரோடு நின்றிட்டான்—பூங்காவில்
வள்ளம்போற் கோங்கு மலருந் திருநாடன்
வெள்ளம்போற் கண்ணீர் உகுத்து. 392

பூந்தோட்டங்களிலே கிண்ணங்களேப்போலக் கோங்கம் பூக்கள் மலர்ந்திருக்கும் செழிப்பான நிடதநாட்டிற்கு உரிய வனுன நளன், அவ்விடத்தே அம்மக்கள் சொன்ன பேச்சைக் கேட்டான். உள்ளம் நைந்துபோய், வெள்ளம்போலக் கண்ணீரை வழியவிட்டவனுகித் தன்னேவிட்டுப் போகாத உயிரோடும் செயலிழந்து நின்றுவிட்டான். ['உள்ளம்போற் கண்ணீர்' எனவும் பாடம். உள்ளத்துச் சிதறல் போலச் சிதறிய கண்ணீர்த்துளிகள் என அப்பாடத்திற்குப் பொருள் கொள்க. 'நீங்கா உயிரோடு' என்றது, உயர் நீங்கவில்லேயே தவிரப் பிறவகையினுல் எல்லாம் உயிர்போயினவனேப் போன்றே செயலிழந்து நின்ருன் நளன் என்பதாம்.]

தாழ்ச்சி அல்லவோ?

உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிப்போந்து
இங்கண் உறைதல் இழுக்கன்ருே—செங்கை
வளவரசே என்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து. 393

பெரும் தவப் பேற்றினுலே தான் பெற்ற இளவரசனே நோக்கி, ''சிவந்த கைகளேயுடைய வளமான அரசகுமரனே!

உங்களுடைய அரசினை மற்றொருவன் ஆட்சிசெய்துகொண்டிருக்க, நீங்கள் உங்கள் நாட்டைவிட்டு ஓடிவந்து இவ்விடத்தே வாழ்தல் உங்களுக்குத் தாழ்ச்சி உடையதல்லவோ'' என்று வினவினான் நளன்.

வாய்மையே வலி!

நெஞ்சாலிம் மாற்றம் நினைந்துரைக்க நீயல்லால்
அஞ்சாரோ மன்னர் அடுமடையா—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலாய் எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி. 394

''சோறடுகின்ற மடைப்பள்ளிக்கு மட்டும் உரியவனே! குறைவின்றித் தீமையினையே உளங்கொண்ட சிறு செயலாளனே! தம் நெஞ்சினாலே இத்தகைய ஒரு பேச்சினை எண்ணிச் சொல்வதற்கு நின்னையல்லாமல் மன்னவராவார் எவரும் அஞ்சமாட்டார்களோ? எம்கோமானாகிய தந்தைக்கு வாய்மை ஒன்றே வலிமையானது என்பதனை நீ அறிவாயாக'' என்றான் இளவரசன். [நாடுவிட்டது ஆண்மைக் குறைவினாலே அன்று, வாக்கினைப் பேணும் உறுதியினால் என்று கூறும் இளவரசன் நளனின் பொருந்தாத பேச்சினைக் கேட்டுச் சினமும் கொள்கின்றான்.]

அடியிற் காணும் வடு!

எந்தை கழலிணையில் எம்மருங்கும் காணலாம்
கந்து கடியும் கடாக்களிற்றின்—வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள்
மணிமுடியிற் றேய்ந்த வடு. 395

''தம்மைக் கட்டியிருக்கும் தறிகளோடு சினங்கொள்ளுகின்ற மதகளிறுகளின்மீது ஏறிவந்த, ஆதிசேடனாகிய பாம்பின் தலைமீதுள்ள இந்த நிலத்தினைக் காத்துவரும் பார்வேந்தர்களது மணிமுடிகளினாலே தேய்வுற்றதனால் விளங்கும் வடுக்களை, எம் தந்தையின் இருபாதங்களிலும் எவ்விடத்துங் காணலாமே!'' [இப்படித் தந்தையின் பெருமையினை இளவரசன் எடுத்துக் கூறினான். நளனின் உள்ளம் அப்போது பெருமிதத்தாலும் துயரத்தாலும் ஒருங்கே கலக்கமுற்றது.]

முடிசாய்த்து நின்றான்

மன்னர் பெருமை மடையர் அறிவரோ
உன்னை அறியாது உரைசெய்த—என்னை

முனிந்தருளல் என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண். 396

''மன்னர்களின் பெருமையினை என்னைப்போலும் மடைத் தொழில் செய்பவர் அறிவார்களோ? உன்னைப்பற்றி அறியாமல் பேசிவிட்ட என்னைக் கோபித்துக்கொள்ளாதே'' என்று இளவரசனைக் கேட்டுக்கொண்டு. உள்ளம் கனிந்து உருகி, கண்கள் நீர் சொரியத் தன் தலையினைக் கவிழ்ந்தவாறே நளன் நின்றான்.

தமயந்தி உண்மை அறிதல்

கொற்றக் குமரனையும் கோதையையும் தான்கண்டு
மற்றவன்றான் ஆங்குரைத்த வாசகத்தை—முற்றும்
மொழிந்தாரம் மாற்றம் மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தாள் அழுது. 397

வெற்றிச் சிறப்புடைய தன் குமரனையும் குமரியையும் அந்தப் பாகன் கண்டதனையும், அவ்விடத்தே அவன் சொன்ன சொற்களையும், சேடியர் வந்து முற்றவும் தமயந்திக்கு எடுத்துக் கூறினர். அதற்கொரு பதிலையும் சொல்வதற்கு முன்பாகவே, அவனே நளன் என உணர்ந்து, தன் மனம் அழிந்தவளாகி, அழுதுகொண்டு நிலத்திற் சாய்ந்து விட்டாள் அவள்.

பதைத்து அழுவாள்

கொங்கை யளைந்து குழல்திருத்திக் கோலஞ்செய்
அங்கை யிரண்டும் அடுபுகையால்—இங்ஙன்
கருகியவோ என்றழுதாள் காதலனை முன்னாள்
பருகியவேற் கண்ணாள் பதைத்து. 398

முன் நாட்களிலே தன் காதலனின் அழகையெல்லாம் பருகிய வேல்போலும் கண்களையுடைய தமயந்தியானவள், அவனிருக்கும் தோற்றத்தை அறிந்து பதைபதைத்தாள்; ''என் கொங்கைகளை அளைந்தாடியும், என் கூந்தலைத் திருத்தியும், எனக்கு அழகு செய்கின்ற நின் அழகிய கைகள் இரண்டும், சமைத்தலினாலே எழும் புகையினால் இவ்வாறு கருகிப் போயிற்றோ?'' என்று சொல்லி மேலும் புலம்பினாள். [கொங்கை வருடக் குழைதிருத்தி' எனவும் பாடம் கொள்வர். குழை-காதணி.]

8. ஒன்றுபட்ட குடும்பம்

அவனே மன்னவன்!

மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத்தனித் தேரும் கொண்டணைந்து—மற்றும்
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்கா ணெங்கள்
கொடைத்தொழிலான் என்றுள் குறித்து. 399

தன் தாய் தந்தையரை அணுகித் தமயந்தி, "இந்தச் சிறந்த நகருக்கு வந்துசேர்ந்த அயோத்தி மன்னனுக்கு, வெற்றிமிக்க ஒப்பற்ற தேரினையும் செலுத்திக்கொண்டு வந்து மேலும் மடைத்தொழிலும் செய்கின்ற மன்னவனே எங்கள் கொடைத் தொழிலோன் ஆகிய நளமன்னவன்" என்று அவனைக் குறிப்பிட்டுத் தான் அறிந்துணர்ந்ததனையும் சொன்னாள்.

வீமன் திகைத்தான்

போதலருங் கண்ணியான் போர்வேந்தர் சூழப்போய்க்
காதலிதன் காதலனைக் கண்ணுற்றான்—ஓதம்
வரிவளைகொண் டேறும் வளநாடன் தன்னைத்
தெரிவரிதா நின்றான் திகைத்து. 400

மொட்டுக்கள் மலர்ந்துகொண்டிருக்கும் கண்ணியைச் சூடியவனான வீமராசன், போர்வல்ல வேந்தர்கள் தன்னைச் சூழ்ந்துவரச் சென்று, தன் மகளின் அன்பிற்கு உரியவனைப் பார்த்தான். கடலானது வரிகளையுடைய சங்குகளைக் கொண்டு கரைமீது ஏறிவருகின்ற வளமான நிடதநாட்டு மன்னனைத் தெரிவது அரிதாகப்போக, அதனால் திகைப்புற்றும் நின்றான்.

வாக்கினால் அறிந்தான்

செவ்வாய் மொழிக்கும் செயலுக்கும் சிந்தைக்கும்
ஒவ்வாது கொண்ட உருவென்று—எவ்வாயும்
நோக்கினான் நோக்கித் தெளிந்தான் நுணங்கியதோர்
வாக்கினான் தன்னை மதித்து. 401

"செவ்விதாக இவன் பேசும் பேச்சுக்கும் செயலுக்கும், இவனுடைய செவ்வையான உள்ளத்திற்கும் பொருத்தமின்றி இவன் கொண்டிருக்கும் உருவம் என்னவோ?" என்று

வீமராசன் ஐயுற்று, எல்லாவற்றையும் கருதிப் பார்த்தான்; பார்த்து, நுட்பமான ஒரு பேச்சினாலே, அவனே நளனென்று உறுதிசெய்து தெளிந்தும கொண்டான்.

ஒளியாது உருக்காட்டு

பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை ஐயுற்று—மந்தி
தெளியா திருக்கும் திருநாடா! உன்னை
ஒளியாது காட்டுன் உரு. 4(2

"பாக்கு மரத்தின் அழகிய தலைப்பினையுடைய பாளையினைக் கண்டு, பசுமையான தலையுடைத்தான பாம்பின் படமெ ..று ஐயமுற்று, மந்திகள் அதன் உண்மைத் தன்மையினைத் தெளியாதே இருக்கும் சிறந்த நாட்டிற்கு உரியவனே! நின்னை இவ்வாறு எல்லாம் ஒளித்துக்கொள்ளாது, நின் உண்மை உருவைக் காட்டுவாயாக" என்று, வீமராசன் அந்தப் பாகனிடம் சொன்னான்.

பாம்பரசன் தந்த துகில்

அரவரசன் தான்கொடுத்த அம்பூந் துகிலின்
ஒருதுகிலை வாங்கி உடுத்தான்—ஒருதுகிலைப்
போர்த்தான் பொருகலியின் வஞ்சனையாற் பூண்டளிக்கும்
கோத்தாயம் முன்னிழந்த கோ. 403

தன்னோடு பொருதிய கலிமகனின் வஞ்சனையினாலே, உரிமை பூண்டு காத்துவருகின்ற அரசியல் உரிமையினை முன்னாளிலே இழந்துவிட்ட நளராசன், நாகராசன் தனக்குக் கொடுத்த அழகான பூப்போலும் மென்மையான ஆடைகளுள் ஒன்றினைப் பிரித்து உடுத்துக் கொண்டான்; எஞ்சிய ஒன்றினைப் பிரித்துத் தன் மேலே போர்த்துக் கொண்டான். [தாயம்-வழிவழிவரும் உரிமை; தாய்வழியே முக்காலத்து அமைந்த மரபினாலே 'தாயம்' ஆயிற்று.]

பாகன் வடிவு நீங்கிற்று

மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோர் அருவினைபோற் போயிற்றே—அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு. 404

அவ்வாறு அவன் ஆடைகளை அணிந்துகொண்ட அந்த வேளையிலே, காட்டிடத்தே காதலியைக் கைவிட்டு மறைந்து வாழும் பெரிதான மலையொத்த தேரினைச் செலுத்தும் பாகனுடைய வடிவமானது, மேலோனான திருமாலின் உலகளந்த மெய்ப்பாதங்களே துணையாக மேற்கொண்டோர் களது அருவினைகள் எல்லாம் நீங்கிப் போதலைப்போல நீங்கிப்போயிற்று. [நளன் தன் உண்மை உருவுடன் அங்கே நின்றான்.]

தாதை கண்டார்

தாதையைமுன் காண்டலுமே தாமரைக்கண் நீரரும்பப்
போதலரும் குஞ்சியான் புக்கணைந்து—கோதிலாப்
பொன்னடியைக் கண்ணிற் புனலாற் கழுவினான்
மின்னிடையா ளோடும் விழுந்து. 405

தந்தையை எதிரே கண்டதும், தாமரை மலர்போன்ற தன் கண்களிலே நீர் துளிக்க, அரும்புகள் மலர்கின்ற குடுமியினையுடைய இளவரசன், மின்னலைப்போன்ற இடையுடையாளான தன் தங்கையோடும் போய்ச்சேர்ந்து, தன் தந்தையின் குற்றமற்ற பொன்னடிகளிலே வீழ்ந்து அவற்றைத் தன் கண்ணீரினாலே கழுவினான்.

தமயந்தி வந்த நிலை

பாதித் துகிலோடு பாய்ந்திழியும் கண்ணீரும்
சீதக் களபதனம் சேர்மாசும்—போத
மலர்ந்ததார் வேந்தன் மலரடியில் வீழ்ந்தாள்
அலர்ந்ததே கண்ணீர் அவற்கு. 406

பாதி ஆடையோடு பாய்ந்து வழியும் கண்ணீரும், குளிர்ச்சியான கலவைச் சாந்து அணிவதற்குரிய மார்பகங்களிலே சேர்ந்துள்ள புழுதியுமாகச் சென்று, தமயந்தியும் மலர்ந்த தாரணிவோனாகிய நளமன்னனின் மலரடிகளிலே வீழ்ந்தாள்; அப்போது நளனுக்கும் கண்ணீர் பெருகி வழிந்தது. [பாதித்துகில் என்றது, அன்று அவன் அரிந்து பிரிந்துபோன போது தான் உடுத்திருந்த ஆடை.]

நீரான் மறைத்தன

வெவ்விடத்தோ டொக்கும் விழியிரண்டும் வீழ்துயில்கொள்
அவ்விடத்தே நீத்த அவரென்றே—இவ்விடத்தே

வாரார் முலையாளம் மன்னவனைக் காணமல்
நீரால் மறைத்தனவே நின்று. 407

வெம்மையான விடத்தோடு பொருத்தமுடையதான விழிகளிரண்டும் சோர்ந்து துயில்கொள்ளலான அவ்விடத்தே விட்டுப் போனவர் என்று கருதியே, இவ்விடத்தே கச்சு விளங்கும் முலையாளான தமயந்தி, அந்த மன்னவனைக் காணமற்படிக்கு, இடை நின்று நீரினலே மறைத்துக் கொண்டிருந்தன அவள் கண்கள். [கண்ணீர் நிறைந்திருந்த தன்மையினைக் கவி இப்படியாகக் கூறுகிறார். முன் தன்னை வஞ்சித்த அவனைக் கண்கள் இப்போது வீமன் மாளிகையிலே பழி தீர்த்துக் கொள்ளுகின்றன என்கின்றார்.]

பூமாரி பெய்தார்

உத்தமரின் மற்றிவனை ஒப்பார் ஒருவரிலை
இத்தலத்தில் என்றிமையோர் எம்மருங்கும்—கைத்தலத்தில்
தேமாரி பெய்யுந் திருமலர்த்தார் வேந்தன்மேற்
பூமாரி பெய்தார் புகழ்ந்து. 408

'இப் பூமியிலேயுள்ள உத்தமர்களுக்குள்ளாக இவனைப் போன்றோர் மற்று ஒருவருமே இல்லை' என்று சொல்லித் தேவர்கள் புகழ்ந்து, தேன்மழை பெய்யும் அழகிய மலர்மாலை அணிந்துள்ளோனுகிய நளமன்னனின் மேலே, தம் கையினிடத்தே கொணர்ந்த பூக்களை மழைபோலப் பெய்து வாழ்த்தி நின்றார்கள்.

கலியின் வேண்டுகோள்

தேவியிவள் கற்புக்கும் செங்கோன் முறைமைக்கும்
பூவுலகில் ஒப்பார்யார் போதுவார்—காவலனே
மற்றென்பால் வேண்டும் வரங்கேட்டுக் கொள்ளென்றான்
முற்றன்பாற் பாரளிப்பான் முன். 409

முழுதும் நிறைந்த அன்பினலே உலகத்தைக் காக்கின்ற நளனின் முன்பாகக் கலியும் வந்து தோன்றினன். "காவலனே நின் தேவியாகிய இவளுடைய கற்புடைமைக்கும் நின் செங்கோன் முறைமைக்கும் இப் பூவுலகிலே ஒப்புடையவராக இனி வருபவர்தாம் யாவர்? எவருமில்லை. மேலும் என்னிடத்தே நீ விரும்பும் வரங்களையும் கேட்டுக் கொள்வாயாக" என்றான்.

நீ அடையேல்!

உன்சரிதம் செல்ல உலகாளும் காலத்து
மின்சொரியும் வேலாய் மிகவிரும்பி—என்சரிதம்
கேட்டாரை நீயடையேல் என்றான் கிளர்மணிப்பூண்
வாட்டானை மன்னன் மதித்து. 410

ஒளி சிதறும் மணிகளிழைத்த பூண்களையும், வாள்வீரர்களைக் கொண்ட தானையினையும் உடைய மன்னவன், கலியின் சொற்களைப் போற்றி, "மின்னொளி சொரியும் வேலினை உடையோனே! உன் சரிதம் செல்ல நீ உலகினை ஆளுகின்ற அந்தக் காலத்திலே, என் வரலாற்றினை மிகவும் விருப்பமுடனே கேட்டு அறிந்தவர்களை நீ ஒருபோதும் சேர்ந்து வருத்தாதிருப்பாயாக" என்று வேண்டினான். [கலியின் சரிதம் செல்ல அவன் உலகாளும் காலமாவது, கலியுகம் என்பர். அஃது இந்தக் காலம்.]

கலியின் வாக்குறுதி

என்காலத் துன்சரிதம் கேட்டாரை யானடையேன்
மின்கால் அயில்வேலாய் மெய்யென்று—நன்காவி
மட்டிறைக்குஞ் சோலை வளநாடன் முன்னின்று
கட்டுரைத்துப் போனான் கலி. 411

"மின்னலைப்போல ஒளிரும் கூர்மையான வேலாயுதத்தை உடையவனே! என் காலமாகிய கலியுகத்திலே உன் சரிதத்தைக் கேட்டவர்களை யான் அடையவே மாட்டேன்: இது சத்தியம்" என்று, நல்ல நீலோற்பல மலர்கள் தேனைச் சொரிந்துக்கொண்டிருக்கும் சோலைகளையுடைய வளநாட்டிற்கு உரியவனான நளனின் முன்பாக நின்று, கலிமகன் உறுதி மொழி சொல்லிவிட்டுச் சென்றான்.

விருந்து செய்தான்

வேத நெறிவழுவா வேந்தனையும் பூந்தடங்கண்
கோதையையும் மக்களையும் கொண்டுபோய்—தாது
புதையத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலை வேலி
விதையக்கோன் செய்தான் விருந்து. 412

மகரந்தங்கள் புதையுண்டு போமாறு தேன்பாய்ந்து ஒழுகிக்கொண்டிருக்கும் பூக்களையுடைய சோலைகளாகிய வேலி சூழ்ந்த விதர்ப்பநாட்டு மன்னனாகிய வீமராசன், வேத

நெறியினின்றும் வழுவாத வேந்தனான நளனையும், பூப்பூத்த குளம்போல விளங்கும் கண்களையுடைய தன் மகளையும், அவர்கள் மக்களையும் அழைத்துக் கொண்டுபோய், அவர்கட்கு விருந்து செய்தான். [பூந்தடங்கண்-அழகிய அகன்ற கண்களும் ஆம்.]

அயோத்தி மன்னன் வேண்டுதல்

உன்னையான் ஒன்றும் உணரா துரைத்தவெலாம்
பொன்னமருந் தாராய் பொறுவென்று—பின்னைத்தன்
மேனீர்மை குன்றா வெறுந்தேர் மிசைக்கொண்டான்
மானீர் அயோத்தியார் மன். 413

பெரிய நீர்வளமுடைய அயோத்தி நாட்டாரின் அரசனான இருதுபர்ணன், 'பொன்வண்டுகள் பொருந்தும் தாரினை உடையோனே! யான் ஒன்றும் அறியாது உன்னைக் குறித்துச் சொன்னதெல்லாம் பொறுப்பாயாக'' என்று கூறி விடை பெற்றும், பின்னர்த் தன் மேன்மையான பண்பினின்றும் குன்றாத நளனின்றி வெறுமையாயிருந்த தன் தேரின்மீது அமர்ந்தும், தன் நாடு நோக்கிச் சென்றான்.

9. வாழ்வு பெற்றான்

தேர் ஏறினான்

விற்றானை முன்செல்ல வேல்வேந்தன் பின்செல்லப்
பொற்றேர்மேற் றேவியொடும் போயினான்—முற்றும்பல்
தேனீர் அளித்தருகு செந்நெற் கதிர்விளைக்கும்
மாநீர் நிடதத்தார் மன். 414

முற்றிய ஆம்பற்பூக்கள் தேனாகிய நீரினைப் பாய்ச்சி அருகிலுள்ள செந்நெற்பயிரின் கதிர்களை விளைவிக்கும் மிக்க நீர்வளத்தினையுடைய நிடத நாட்டாரின் மன்னவன், வில்லேந்திய படையானது தன் முன்னே செல்லவும், வேலேந்திய வேந்தர்கள் தன் பின்னே செல்லவுமாகப் பொற்றேரின்மேல் அமர்ந்தவனாகித், தன் தேவியோடும் கூடித் தன் நாட்டிற்குப் புறப்பட்டான்.

தூரம் எவ்வளவோ?

தானவரை வெல்லத் தரித்தநெடு வைவேலாய்
ஏனைநெறி தூரமினி எத்தனையோ—மானேகேள்
இந்த மலைகடந் தேழுமலைக் கப்புறமா
விந்தமெனும் நம்பதிதான் மிக்கு. 415

"அசுரரை வெல்லும் பொருட்டாக ஏந்திய நெடிதான கூரிய வேலினை உடையோனே! மற்றை வழியின் தொலைவு இனியும் எவ்வளவோ?" என்று தமயந்தி நளனை முருகனுகக் குறிப்பிட்டுக் கேட்க, "மானே! கேட்பாயாக! இந்த மலையினைக் கடந்து இதன்பின் ஏழு மலைகளுக்கு அப்புறமாக நம்முடைய மாவிந்தமென்னும் நகரந்தான் மேன்மையுடன் இருக்கின்றது" என்று நளனும் சொன்னுன்.

கதிரவனின் உதயம்

இக்கங்குல் போக இகல்வேல் நளனெறிநீர்
செய்க்கங்கு பாயுந் திருநாடு—புக்கங்கு
இருக்குமா காண்பான்போல் ஏறினன் குன்றிற்
செருக்குமான் தேர்வெய்யோன் சென்று. 416

இந்த இருளானது கழிந்துபோக, மறங்கொண்ட வேலினையுடைய நளன், அலையெறிந்து வருகின்ற நீர் வயல் களுக்கு அங்கங்கே பாய்ந்துகொண்டிருக்கும் சிறந்த நிடத நாட்டிலே புகுந்து அங்கே அரசு வீற்றிருக்கும் தன்மையைக் காண்பவனேபோல, வேகத்தினுற் செருக்கிய குதிரைகளைப் பூட்டிய தேரினையுடைய கதிரவனும் தன் உதயகிரியின் மேலாகச் சென்று ஏறினன். ['இக் கங்குல்-என்றது இரவினைக் குறித்தது; பொழுது விடிந்ததென்பார் இப்படிக் கூறு கின்றூர்.]

சென்று அடைந்தான்

மன்றலிளங் கோதையொடு மக்களுந் தானுமொரு
வென்றி மணிநெடுந்தேர் மேலேறிச்—சென்றடைந்தான்
மாவிந்த மென்னும் வளநகரஞ் சூழ்ந்ததொரு
பூவிந்தை வாழும் பொழில். 417

மணம்பொருந்திய இளம்பூக்களால் தொடுத்த கோதை யினைச் சூடிய தமயந்தியோடு தன் மக்களும் தானுமாக, ஒரு

வெற்றிச் சிறப்புடைய அழகிய பெரிய தேரின்மேல் ஏறிச் சென்று, மாவிந்தமென்னும் வளமான தன் நகரத்தைச் சூழ்ந்திருப்பதான திருமகள் தங்கியிருப்பது போன்றதொரு அழகிய பொழிலினை, நளன் அப்போது அடைந்தான்.

தூதரை விடுத்தான்

மற்றவனுக் கென்வரவு சொல்லி மறுசூதுக்
குற்ற பணையம் உளதென்று—கொற்றவனைக்
கொண்டணைவீ ரென்று குலத்தூ தரைவிடுத்தான்
தண்டெரியல் தேர்வேந்தன் தான். 418

குளிர்ச்சியான மாலையினை அணிந்த தேர்வேந்தனாகிய நளன், "மற்றவனாகிய புட்கரனுக்கு என் வரவினைச் சென்று சொல்லி மறுமுறையும் ஆடும் சூதிற்குத் தகுதியான பணயப் பொருள் என்பால் உளதென்றும் சொல்லி அந்த மன்னவனை இங்கே அழைத்து வந்து சேருங்கள்" என்று, சிறந்த தூதுவர் களைப் புட்கரனிடத்தே அனுப்பி வைத்தான். [குலத்தூதர்-வழிவழித் தூதுரைக்குந் தொழிலிலே சிறந்துவரும் குடியினைச் சார்ந்தோரான தூதர்.]

புட்கரன் கண்டான்

மாய நெடுஞ்சூதில் வஞ்சித்த வன்னெஞ்சன்
தூய நறுமலர்ப்பூஞ் சோலைவாய்—ஆய
பெருந்தானை சூழப் பெடைநடையா ளோடும்
இருந்தானைக் கண்டான் எதிர். 419

வஞ்சகமான பெரிய சூதிலே நளனை வஞ்சித்த கடினமான உள்ளத்தையுடைய புட்கரன், தூய நறுமலர்கள் நிறைந்த பூஞ்சோலையிடத்தே அமைந்த பெரும்படையினர் சூழ்ந்திருக்கப், பெண்ணன்னத்தின் நடையுடையாளான தமயந்தியோடும் இருந்த நளனைத் தன் எதிரே கண்டான். [தூதர் சொற்படி புட்கரன் சோலைக்கு வந்து நளனைக் கண்டான் என்பது இது.]

நலம் விசாரித்தல்

செங்கோல் அரசன் முகம்நோக்கித் தேர்ச்சியிலா
வெங்கோல் அரசன் வினவினன்—அங்கோலக்
காவற் கொடைவேந்தே காதலற்கும் காதலிக்கும்
யாவர்க்கும் தீதிலவே என்று. 420

செங்கோன்மையாளனாகிய நளமன்னனின் முகத்தை நோக்கி, அறிவிலே தேர்ச்சியற்ற கொடுங்கோல் அரசனான புட்கரன், "அழகான தன்மையுடனே நாடு காவல் செய்யும் கொடை வேந்தனே! காதலனான உனக்கும் நின் காதலிக்கும் நின் மக்கள் முதலியவர்க்கும் தீங்குகள் எதுவும் இல்லையே?" என்றும் கேட்டான். [நளன் மறுசூதாட அழைத்ததனால் புட்கரன் இவ்வாறு கேட்டான் எனவும் கருதலாம்.]

கையாழி வைத்தான்

தீது தருகலிமுன் செய்ததனை யோராதே
யாது பணயம் எனவியம்பச்—சூதாட
மையாழி யிற்றுயிலும் மாலனையான் வண்மைபுனை
கையாழி வைத்தான் கழித்து. 421

தீமை தரும் கலி முன்னாளில் செய்த வஞ்சத்தினை அறியாதே புட்கரன் சூதாடுதற்குத் துணிந்து, "பணயம் யாது?" என்று கேட்க, நீலக்கடலிலே துயிலும் திருமாலைப் போன்ற நளனும், வளமான புனைதற்றொழிலினையுடைய தன் கைக்கணையாழியைக் கழற்றிப் பணயமாக வைத்தான்.

வென்றானை வென்றான்!

அப்பலகை யொன்றின் அருகிருந்தார் தாமதிக்கச்
செப்பரிய செல்வத் திருநகரும்—ஒப்பரிய
வன்றானையோடு வளநாடும் வஞ்சன்யால்
வென்றானை வென்றானவ் வேந்து. 422

அந்த நளனும், தன் அருகே இருந்தவர் தன்னைப் புகழும் படியாக, அந்தச் சொக்கட்டான் பலகை ஒன்றினாலேயே, சொல்லுவதற்கு அரிய தன் செல்வத் திருநகரையும், உவமித்தற்கும் அரிய வலிமையுள்ள பகைளோடு கூடிய தன் வள நாட்டையும் வஞ்சனையினாலே முன்பு வென்ற புட்கரனிடத்திருந்து மீண்டும் வெற்றிகொண்டான். ['பலகை ஒன்றின்' என்றது, ஒரே ஆட்டத்திலேயே என்றதாம்]

புட்கரன் போனான்

அந்த வளநாடும் அவ்வரசும் ஆங்கொழிய
வந்த படியே வழிக்கொண்டான்—செந்தமிழோர்
நாவேய்ந்த சொல்லான் நளனென்று போற்றிசைக்கும்
கோவேந்தற் கெல்லாம் கொடுத்து. 423

செந்தமிழ் வாணர்கள் தம் நாவினுலே பொருத்தமுறச் சொல்லிய சொற்களினுலே நளன் என்று புகழ்ந்துபாடும் அரசனுக்கு, அந்த வளமான நாடும், அந்த அரசும் அவ்விடத் தேயாகித் தன்னை விட்டுப் போகத், தான் முன் வந்தபடியே புட்கரனும் தன் பழைய இடத்தை நோக்கிப் புறப்பட்டுப் போயினுன்.

நளன் நகர் அடைந்தான்

ஏனை முடிவேந்தர் எத்திசையும் போற்றிசைப்பச்
சேனை புடைசூழத் தேரேறி—ஆனபுகழ்ப்
பொன்னகரம் எய்தும் புரந்தரனைப் போற்பொலிந்து
நன்னகரம் புக்கான் நளன். 424

மற்றைய முடிவேந்தர்கள் எத்திசைக் கண்ணுமிருந்து தன் புகழைப் பாட, தன் சேனை தன்னைப் புடைசூழ்ந்துவரத் தேர்மீது ஏறியமர்ந்து, பொருந்தின புகழ் உடையதான பொன்னகரமாம் அமராபதியினைச் சென்றடையும் தேவேந்திரனைப்போல விளங்கியவனுக, நளனும், தன்னுடைய நல்ல மாவிந்த நகரத்திலே புகுந்தான். ['ஏனை' என்றது புட்கரன் அல்லாத பிறர் என்பதற்காம்.]

ஏதோ உரைப்பன் எதிர்

கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மாதோடும் மன்னன் வரக்கண்ட மாநகருக்கு
ஏதோ உரைப்பன் எதிர்? 425

தன் நாட்டினை மீளவும் அடைந்து, தன் தேவியோடும் மன்னன் வருவதனைக் கண்ட அந்த மாவிந்தமாகிய மாநகருக்கு, மேகத்தைக் காணப் பெற்ற மயிலையோ, கண்ணொளி வரப்பெற்ற ஒளியுடைய முகத்தையோ, நீரினைப் பெற்று உயர்ந்த விளைவு நிறைந்த விளைநிலத்தையோ, வேறு எதனையோ ஒப்பாகச் சொல்லுவேன் யான்? [எந்த உவமையினையும் கடந்ததாயிருந்தது மக்களின் களிப்பு என்பது கருத்து.]

வாழ்த்திச் சென்றனன் வியாசன்

வென்றி நிடதத்தார் வேந்தன் சரிதையீ
தென்றுரைத்த வேத வியல்முனிவன்—நன்றிபுனை

மன்னு பருவரலை மாற்றுதியென் றுசிமொழி
பன்னு நடந்திட்டான் பண்டு. 426

பண்டைக் காலத்திலே வேதங்களின் அமைதியினை ஒழுங்குபடுத்தியவன் வேதவியாச முனிவன். ''நல்லொழுக்கமே மேற்கொள்ளும் தருமராசனே! வெற்றியுடைய நிடதத்தார்களின் வேந்தனான நளனின் சரிதை இது. அதனால் நின் துன்பத்தையும் மாற்றிக் கொள்க'' என்று கூறியபின், தருமனுக்கு ஆசிமொழிகளும் சொல்லிவிட்டு அவன் சென்றனன். [தருமனும், அதன்பின் ஒருவாறாக மனத் தெளிவு அடைந்தான்; துயரத்தைத் துணிவுடன் ஏற்று, முடிவில பாரதப் போரினாலே தன் நாட்டையும் பெற்று இன்புற்றான்.]

வாழி! வாழி

வாழி யருமறைகள் வாழிநல் அந்தணர்கள்
வாழிநளன் காதை வழுத்துவோர்—வாழிய
மள்ளுவநாட் டாங்கண் வருசந் திரன்சுவர்க்கி
தெள்ளுறமெய்க் கீர்த்தி சிறந்து. 427

அரிதான வேதங்கள் நான்கும் வாழ்க! நல்ல ஒழுக்கமுடைய அந்தணர்கள் வாழ்க! நளன் கதையினைக் கூறுவோர் கேட்போர் அனைவரும் வாழ்க! மள்ளுவ நாட்டினிடத்தே தோன்றி ஆண்டுவரும் சந்திரன்சுவர்க்கி என்னும் கோமானுடைய தெளிவுற்ற புகழ் சிறந்து வாழ்வதாக!

புகழேந்தியாரின் நளவெண்பாவும்
புலியூர்க்கேசிகன் தெளிவுரையும்
முற்றுப்பெற்றன.

வெண்பா முதற் குறிப்பு அகரவரிசை

[எண்-செய்யுள் எண்]

அங்கண் விசும்பின் 299
அங்கவர்கள் வேண்டும் 100
அங்கி அமுதம்நீர் 99
அங்கை நெடுவேற்கண் 156
அங்கை வரிவளையாய் 154
அங்கைவேல் மன்னன் 203
அஞ்சல் மடவனமே 24
அஞ்சனந்தோய் கண்ணில் 255
அஞ்சாயல் மானே 147
அடற்கதிர்வேல் மன்னன் 215
அடையும் கடுங்கானில் 303
அந்த நெடுஞ்சுரத்தின் 267
அந்த வளநாடும் 423
அந்தா மரையி 319
அப்பலகை ஒன்றின் 422
அம்பொற் கயிலைக்கே 13
அம்மொழியைத் தூதர் 359
அரவரசன் தான்கொடுத்த 403
அலர்ந்த மலர் சிந்தி 188
அல்லியந்தார் மார்பன் 296
அவ்வளவில் ஆதிப் 312
அழகு சுமந்திளைத்த 79
அழல்வெஞ் சிலைவேடன் 291
அழுவார் விழுவார் 330
அள்ளிக் கொளலாய் 120
அறத்தைவேர் கல்லும் 218
அறம் கிடந்த நெஞ்சும் 54
அறம் பிழைத்தார் பொய்த் 265
அறையும் பறையரவம் 238
அற்ற துகிலும் 316
அன்றில் ஒருகண் 124
அன்னக் குலத்தின் 69
அன்னங்காள் நீங்களுமவ் 110
அன்னம் உரைத்த 46
அன்னம் தனைப்பிடித்தங் 33
அன்னம் துயிலெழுப்ப 150
அன்னம் மிதிப்ப 361
அன்னம் மொழிந்த 37
அன்னமே நீஉரைத்த 43
ஆங்கவர் சொன்ன 392
ஆங்கவளும் ஏக 318
ஆங்கவன்ருன் அவ்வா 343
ஆடி வரிவண் 116
ஆண்டிரண்டா றெல்லை 209
ஆதித் தனிக்கோலம் 3
ஆதி நெடுந்தேர்ப் 386
ஆதி மறைநூல் 387
ஆமை முதுகில் 382
ஆயம் பிடித்தாரும் 220
ஆரும் திரியா 137
ஆருயிரின் தாயே 233
ஆருயிரும் நானும் 307
ஆவ துரைத்தாய் 85
ஆழிவடி யம்பலம்ப 144
ஆற்றல் அரவரசே 345
இக்கங்குல் போக 416
இசைமுகந்த வாயும் 87
இடைச்சுரத்தில் தன்னை 388
இணையாரும் இல்லான் 350
இத்தாழ் பணையில் 379
இந்து நுதலி 308
இயமரம்நின் றூர்ப்ப 95
இருவர் உயிரும் 255
இவ்வளவிற் செல்லுங்கொல் 47
இற்றது நெஞ்சம் 45
இனிச்சூ தொழிந்தோம் 230
இன்றுன்னைக் காண்ப 385
இன்னுயிர்க்கு நேரே 171

ஈங்கிவளிவ் வாறிருப்ப 322
ஈங்குவர வென்னென் 165
ஈர மதியே 117
உங்கள் அரசொருவன் 393
உடுத்த துகிலரிந்த 289
உடைய மிடுக்கெல்லாம் 129
உண்டோர் அழுகுரல் என் 304
உத்தமரில் மற்றிவனை 408
உய்ஞ்சு கரையேற 90
உருவழிக்கும் உண்மை 219
உள்ளம்போய் நாண்போய் 102
உன்சரிதம் செல்ல 410
உன் தலைவன் தன்னை 321
உன்னையான் ஒன்றும் 413
ஊக்கிய சொல்லர் 121
ஊழி பலவோர் 115
ஊன்தின் றுவகையால் 123
எக்குலத்தாய் யார்மடந் 314
எங்கண் உறைந்தனைகொல் 367
எங்காம் புகலிடம்என் 269
எங்கோன் மகளுக் 370
எண்ணிய எண்ணம் 281
எந்தை கழல் இணையின் 395
எழுந்திருக்கும் ஏமாந்து 127
எழுவடுத்தோள் மன்னு 38
எற்றித் திரைபொரநொந் 262
என்காலத் துன்சரிதம் 411
என்மேல் எரிகின்ற 373
என்றும் நுடங்கும் 41
என்றுரைத்த அவ்வளவில் 341
என்னுரையை யாதென் 94
என்னை இருங்கானில் 362
என்னைத் தனிவனத்திட் 320
ஏந்தும் இளமுலையால் 286
ஏரடிப்பார் கோலெடுப்ப 380
ஏழுலகும் சூழிருளாய் 125
ஏற்ற முலையார்க் 187
ஏனை முடிவேந்தர் 424
ஏன்றோம் இதுவாயின் 216
ஒண்டொடி தன்னை 366
ஒருவர் உடலில் 174
ஒற்றைத் தனியாழித் 376
ஒற்றைத் துகிலும் 282
ஓடாத தானை 25
ஓடும் புரவித்தேர் 328
கடப்பார் எவரே 232
கணிமொழிந்த நாளில் 172
கண்ணிமைத்த லாலடிகள் 160
கண்ணிழந்து மாயக் 17
கந்தனையும் கன்னியையும் 328
கருங்குழலார் செங்கையி 60
கருவிக்கு நீங்காத 126
கலாப மயிலிருந்த 4
கற்பின் மகளிர்பால் 228
கன்னி நறுந்தேறல் 384
கன்னியர்தம் வேட்கையே 199
கன்னிறத்த சிந்தைக் 258
காண்டா வனம்தீக் 14
காதலவர்மேலே 256
காதலியைக் காரிருளில் 354
காதல் இருவரையும் 243
காதல் கவருடல் 217
காமர் கயல்புரளக் 19
காயும் கடகளிற்றுய் 346
காரிகைதன் வெந்துயரம் 280
காரிருளிற் பாழ்மண்ட 363
காரேயும் கூந்தலார் 224
கார்பெற்ற தோகையோ 425
காவலரைத் தன் சேடி 157
காவலனுக் கேவற் 375
காவலன் தன் தூதர் 73
காவல்கடந் தெங்கள் 92

காவற் குடைவேந்தைக் 82
காவி பொருநெடுங்கண் 197
காவிபோல் கண்ணிக்கும் 264
கானகத்துக் காதலியை 265
கானும் தடங்காவும் 112
குழைமேலும் கோமான் 175
குறையாத கற்பினுள் 372
குற்றமில் காட்சிக் 244
கூட்டுமை போற்சிறந்த 109
கூந்தல் இளங்குயிலும் 298
கூனிறுல் பாயக் 347
கூன்சங்கின் பிள்ளை 152
கெட்ட சிறுமருங்குல் 74
கேடில் விழுச்செல்வம் 20
கேட்ட செவிவழியே 71
கைதவந்தான் நீக்கிக் 245
கொங்கை அளைந்து 398
கொங்கை இளநீரால் 51
கொங்கை முகங்குழையக் 177
கொங்கை முகத்தணையக் 189
கொம்பார் இளங்குருகே 352
கொய்த குவளை 190
கொய்த மலரைக் 188
கொழுநன்
கொழுந்தாரை 191
கொள்ளைபோகின்ற 113
கொற்றக் கயற்கண் 261
கொற்றக் குமரனையும் 397
கொற்றவன்தன்ஏவலினுல் 70
கொற்றவன் தன்தேவிக்கு 66
கொற்றவன்பால் செல் 240
கொற்றவேல் தானைக் 10
கோதை சுமந்த 61
கோதை சுயம்வரநாள் 72
கோதை நெடுவேல் 389
கோதை மடவார்தம் 20
கோயிலும் அந்தப் 329
கோல நிறம் விளர்ப்பக் 208
சங்க நிதிபோல் 306
சடைச்செந்நெல் பொன் 75
சந்தக் கழல்தா 241
சந்திசெயத்
தாள்விளக்கத் 210
சாதி மணித்துகில்நீ 348
சாதுரங்கம் வென்றேன் 227
சிந்துரத்தாள் தெய்வ 284
சில்லரிக் கிண்கிணிமென் 202
சிறுக்கின்ற வாள்முகமும் 194
சினக்கதிர்வேல் கண்மட 249
சீத மதிக்குடைக்கீழ்ச் 26
சீரியாய் நீயெடுப்பத் 340
சூதகி கனியூறல் 205
செக்கர் நெடுவானில் 160
செங்கண் மதயானைத் 83
செங்கோலாய் உன்றன் 251
செங்கோல் அரசன் 420
செந்தடையும் வண்டுறை 65
செந்திருவின் கொங்கை 172
செந்தேன் மொழியாள் 41
செப்பிளங்கொங்கைமீர் 113
செம்மனத்தான் தண்ணளி55
செய்தபிழை ஏதென்னும்295
செய்யக் கமலத் 33
செருக்கதிர்வேல் கண்ணி 169
செவ்வண்ண வாயாளும் 332
செவ்வாய் மொழிக்கும 401
செழுநீலம்
நோக்கெறிப்பச் 193
சேதி நகர்க்கே 315
சேமங் களிறுபுகத் 122
சேமவேல் மன்னனுக்குச் 18
சேலுற்ற வாவித் 257
சேவல் குயிற்பெடைக்குப் 48
சொன்ன கலையின் 247
சோர்புனலின் மூழ்கி 195
தங்கள் புலவி 210
தந்தை திருமுகத்தை 253
தந்தையைமுன் காண்ட 331
தவளத் தனிக்குடையின் 181
தன் மகள் ஆவ 327

தன்வாயின்மென்மொழி 239
தாங்கு நிலவின் 118
தாதையைமுன் காண்ட 405
தாமம்சேர் ஓதித் 324
தாருஎனப் பார்மேல் 287
தானவரை வெல்லத் 415
திசைமுகந்தவெண்கவிகை 36
திண்டோள் வயவேந்தர் 162
தீக்கடவுள் தந்த 338
தீக்கண் புலிதொடரச் 310
தீக்கா னகத்துறையும் 285
தீது தருகலிமுன் 421
தீது வருக 274
தீய வனமும் 271
தீராத காமத் 93
தூதுவந்த காதலனைச் 101
தூயவன் மக்கள் 242
தெரியில்இவன்கண்டாய் 146
தெரிவன நூல் என்றும் 23
தேங்குவளை தன்னிலே 88
தேமருதார்க் காளை 145
தேரின் துகளைத் 29
தேவர் பணிதலைமேல் 84
தேவியிவள் கற்புக்கும் 409
தேன்பிடிக்கும் தண் 259
தையல் தளிர்க்கரங்கள் 178
தையல் துயர்க்குத் 293
தொண்டைக் கனிவாய் 200
நறையொழுக வண்டுறை 198
நன்னெறியில் சூதால் 212
நாடிமட அன்னத்தை 32
நாட்டின்கண் வாழ்வை 9
நாராய ணய 211
நாற்குணமும்
நாற்படையா 39
நித்திலத்தின்
பொற்றேடு 136
நிறையில் கவருடல் 222
நினைப்பென்னும் காற்ற 351
நின்று புயல்வானம் 21
நீண்ட கமலத்தை 89
நீல நெடுங்கொண்மூ 5
நீலம் அளவே 288
நீள்நிறத்தால் சோலை 30
நெஞ்சால்இம் மாற்றம் 394
நெற்றித் தனிக்கண் 76
நேசரிதங் கூர...ஈசன் 1
நேசரிதங் கூர...பேசரிய 2
பண்டை வினைப்பயனைப் 272
பல்லா யிரம்பரியும் 226
பனியிருளில் பாழ்மண்ட 333
பாண்டவரின் முன்தோன் 8
பாதித் துகிலோடு 406
பாரார் நிடத 7
பாவையர் கை தீண்டப் 180
பானலே சோலைப் 355
பானு நெடுந்தேர் 268
புண்டரிகம் தீயெரிய 151
புல்லும் வரிவண்டைக் 185
புள்ளின் மொழியினொடு 55
புள்ளுறையும்சோலைகளும் 66
புற்கென்றூர் அந்தி 107
புன்கண்கூர் யாமத்துப் 275
புன்னை நறுந்தாது 353
புன்னை நறுமலரின் 213
பூசுரர்தம் கைம்மலரும் 132
பூணுக் கழகளிக்கும் 158
பூமனைவாய் வாழ்கின்ற 44
பூவின்வாய் வாளி 102
பெய்ம்மலர்ப்பூங்
கோதை 278
பேதை பிரியப் 252
பேதை மடமயிலை 137
பேதை மடவன்னம் 31
பேரரசும் எங்கள் 15
பேரழகு சோர்கின்ற 62
பைந்தலைய நாக 202
பைந்தெரியல் வேல்வேந் 81
பைந்தொடியாள் ஆவி 108
பொய்கையும் வாசப் 207

பொய்தற் கமலத்தின் 192
பொய்யடையாச் சிந்தை 360
பொற்புள் அதனைப் 290
பொன்னி அமுதப் 141
பொன்னுடையரேனும் 246
பொன்னுடைய வாசப் 193
போதரிக்கண் மாதராள் 60
போத லரும்கண்ணியாள் 490
போதுவார் நீரணிந்து 335
போயகலா முன்னம் 317
போய்ஒருகால் மீளும் 283
போர்வாய் வடிவேலால் 142
போவாய் வருவாய் 356
போற்றரிய செல்வம் 248
மக்களைமுன் காணு 390
மங்கை ஒருத்தி 184
மங்கை சுயம்வரநாள் 63
மங்கையர்கள் வாச 182
மங்கை விழிநீர் 325
மண்ணின்மீ தென்றனை 342
மயங்கும் தெளியும் 130
மலைல் மறுகின் 163
மல்லிகையே வெண்
சங்கா 106
மறைமுதல்வ நீயிங்கே 11
மற்றவனுக் கென்வரவு 418
மற்றித் திருநகர்க்கே 399
மற்றெடுத்த தோள்
பிரிந் 302
மனைக்குரியார் அன்றே 229
மன்றலந்தார் மன்னர் 135
மன்றலிளங் கோதை
யொடு 417
மன்றல் இளங் கோதை 236
மன்னராய் மன்னர் 250
மன்னவரில் வைவேல் 166
மன்னர் குலமும் 140
மன்னர் பெருமை 396
மன்னர் விழித்தா 138
மன்னன் நிடதத்தார் 391
மன்னன் புயநின் 58
மன்னன் மனத்தெழுந்த 56
மன்னன் விடுத்த 52
மன்னு உனக்கபயம் 336
மன்னுகத் துள்ளமுந்தி 91
மாநீர் நெடுங்கயத்து 155
மாமனுநூல் வாழ 24
மாமுத்த வெண்
குடையான் 64
மாய நெடுஞ்சூதில் 419
மாயிரு ஞாலத் 105
மாரி பொருகூந்தல் 326
மால்வரையை
வச்சிரத்தால் 80
மான்தேர்த்
தொழிற்கும் 358
மிக்கோன் உலகளந்த 404
மின்னுடு மால்வரையும் 364
மின்னுந்தார் வீமன்றன் 159
மீண்டோர் சுயம்
வரத்தை 369
முகம்பார்த் தருள்
நோக்கி 68
முந்தை மறைநூல் 179
முந்தை வினைகுறுக 377
முரைசெறிந்த
நாளேமும் 134
முன்றில்தனில்
மேற்படுக்க 276
முன்னீர் மடவார் 357
முன்னை வினையான் 374
மூரி இரவும்போய் 270
மூலப் பழமறைக்கு 334
மெய்த்திருவந் துற்றுலும் 12
மென்கால் சிறையன்னம் 231
மேலாடை விழ்ந்த 378
மையிட்ட கண்ணருவி 119
மோட்டிளங் கொங்கை 40
வஞ்சக் கலிவலியான் 279

வடங்கொள்
வனமுலையாள் 139
வடியேறு கூரிலைவேல் 235
வண்டாடும் தார்நளனை 237
வண்டார் வளவயல்சூழ் 381
வண்ணக் குவளை 148
வண்தமிழ்வா
ணர்ப்பிழை 311
வழிமேல் விழிவைத்து 67
வாகு குறைந்தமையான் 349
வாக்கினுன் மன்னவனை 368
வாங்குவளைக் கையார் 27
வாய்மையும் செங்கோல் 168
வாரணியும் கொங்கை 50
வார்வெஞ் சிலையொழிய 86
வாவி உறையும் 57
வாழி அருமறைகள் 427
வாளரவின் வாய்ப்பட்டு 300
வான நெடுவீதி 294
வானவர்கோன் ஏவல் 97
வான்தோய
நீண்டுயர்ந்த 206
வான்முகிலும் மின்னும் 292
விடக்கதிர்வேல் காளை 149
விட்டொளிர்வில் வீசு 223
விண்ணரசர் எல்லாரும் 161
விண்ணரசர் நிற்க 167
விண்ணவர்தம்
ஏவ்லுடன் 98
விரிகின்ற மெல்லமளி 128
விரைமலர்ப்பூ
மெல்லணை 273
வில்லி கணையிழப்ப 133
விழுது படத்திணிந்த 131
விற்றூனை முன்செல்ல 414
வீமன் திரு...மென்முலை 46
வீமன் திரு...விண்ண 177
வீமன் மடந்தை
மனத்தின் 78
வீமன் மடந்தை
விழிமுடி 344
வீரர் விறல்வேந்தர் 77
வீரனக லசிசெறுவின் 179
வெங்கட் சினவிடையின் 214
வெங்கதிரோன் தன்னை 114
வெங்கதிரோன் தானும் 170
வெஞ்சிலையே கோடுவன 22
வெந்தறுகண் வேழத்தை 6
வெய்ய அரவின் 305
வெய்ய தரையென்னும் 290
வெவ்விடத்தோ
டொக்கும் 407
வெள்வாளைக் காளைமீன் 153
வெறித்த
இளமான்கள் 297
வெற்றித் தனித்தேரை 083
வென்றிச் சின அரவின் 301
வென்றி நிடதத்தார் 426
வென்றி நிலமடந்தை 143
வென்றி மதவேடன் 282
வேடன் அழைப்ப 009
தேட்ட கரியை 398
வேத நெறிவழுவா 412
வேதமுனி ஒருவன் 339
வேத மொழிவாணன் 371
வேரி மழைதுளிக்கும் 204
வேலை கரைஇழந்தால் 34
வேலை பெருவமுதம் 164
வைத்த மணியாரம் 225
வையம் உடையான் 271
வையம் துயர்உழப்ப 266
வையம் பகல்இழப்ப 104

Jacket Printed at Neo Art Press, Madras-2.